සේවා නියුක්තයන්ගේ භාර අරමුදල් මණ්ඩලය
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை
Employees' Trust Fund Board

# Persistent COMMITMENT

වාර්ෂික වාර්තාව
வருடாந்த அறிக்கை
ANNUAL REPORT
2023

# அயராத அர்ப்பணிப்பு

பல்லாயிரக்கணக்கான உழைக்கும் மக்களுக்கு, உன்னதமான சேவையை வழங்கும் பொருட்டு ஸ்தாபிக்கப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை, தரமான மற்றும் நேர்மறையான எண்ணப்பாடுகளைக் கொண்ட பணிக்குழுவின் கடுமையான அர்ப்பணிப்பு, புத்தாக்கத்தினூடாக அறிவை வழிநடாத்தல், நவீன சிந்தனைகளுக்கு இடமளித்தல் போன்ற காரணிகள் இந்த விரைவான வெற்றிப் பாதையை நோக்கிப் பயணிப்பதற்கு பேருதவியாக அமைந்ததென்றால் அது மிகையாகாது.

சபையின் கடமைப் பொறுப்புக்கள், கௌரவமான மற்றும் சிறந்த செயற்பணி எனும் நோக்கத்தின் அடிப்படையில் தொழில் வழங்குநர், தொழிலாளர் ஆகிய இரு தரப்பினரதும் நம்பிக்கையை வென்ற விசேட திருப்புமுனையை நாம் அடைந்துள்ளோம் என்ற திருப்தி எமக்கு உண்டு.

நேர்மையான நிதி மற்றும் செயற்படுத்தல் செயன்முறை சபையின் வெற்றிப் பாதைக்கு உந்துசக்தியாக இருப்பதோடு, அது எமது "நோக்கிற்கு" அமைய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையை நிலையான முன்னணி சமூகப் பாதுகாப்பு நிதியமாகத் திகழ்வதற்கு வழியமைத்து "**அயராத அர்ப்பணிப்பின்**" மூலம் பல சவால்களை வெற்றிகொண்டு தொடர்ந்தும் முன்னோக்கிப் பயணிக்கின்றது.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை
வருடாந்த அறிக்கை 2023

© ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை

19 - 23 ஆம் மாடி, ‘மெஹைவர பியச’,
தா.பெ. இல. 807, கிருள வீதி, நாராஹேன்பிட்ட, கொழும்பு 05.
தொ.பேசி.: 011 7747201 | தொ.நகல்: 011 2503917
மின்னஞ்சல்: finance@etfb.lk
இணையம்: www.etfb.lk

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| எமது 43 ஆவது வருடாந்த அறிக்கைப் பற்றிய அறிமுகம் | 167 |
| நாம் யாவர் | 168 |
| நிதிசார் சிறப்பம்சங்கள் | 169 |
| பிரதான மைல்கற்கள் | 170 |
| பெறுமதி உருவாக்க மாதிரி | 172 |
| சபையின் பிரிவுகள், அலகுகளின் தொழிற்பாடுகள் | 174 |
| செயலாற்றுகை மீளாய்வு | 176 |
| தவிசாளரின் மீளாய்வு | 178 |
| பணிப்பாளர்களின் அறிக்கை | 182 |
| முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு | 186 |
| பணிப்பாளர் சபை | 208 |
| சிரேஸ்ட முகாமைத்துவக் குழு | 220 |
| முகாமைத்துவக் குழு | 227 |
| நிறுவன ஆளுகை | 229 |
| துணைக் குழுக்கள் | 235 |
| இடர் முகாமைத்துவம் | 241 |
| **நிதிக் கூற்றுக்கள்** | |
| விரிவான வருமானக் கூற்று | 251 |
| நிதி நிலமைப் பற்றிய கூற்று | 253 |
| அமைப்பு மாற்றம் பற்றிய கூற்று | 254 |
| காசுப் பாய்ச்சல் கூற்று | 256 |
| திறைசேரி பிணைமுறி தொகுப்பின் சந்தைப் பெறுமதி | 257 |
| பட்டியலிடப்பட்ட கடன்பத்திர அமைப்பின் சந்தைப் பெறுமதி | 258 |
| அமைப்பு முதலீட்டுக் கூற்று | 260 |
| முக்கிய கணக்கியல் கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 264 |
| **மேலதிக தகவல்கள்** | |
| கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை 2023 | 302 |
| கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை தொடர்பில் சபையின் அவதானிப்புகள் | 310 |
| பத்து வருட கால சாராம்சம் | 469 |
| நிதி நிலமைப் பற்றிய கூற்று | 470 |
| புள்ளிவிபரவியல் பின்னிணைப்புகள் | 471 |
| எமது அடைவுகள் | 474 |



# அறிக்கையின் உள்ளடக்கம்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் சமர்ப்பிக்கப்படும் **43 ஆவது வருடாந்த அறிக்கை** இதுவாகும். 2023 ஆம் ஆண்டில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் நலன்பெறுநர்களுக்கும் ஏனைய பங்குதாரர்களுக்கும் முக்கியமான பெறுமானத்தை தாபனம் எவ்வாறு உருவாக்கியது என்பதற்கான விரிவான அறிக்கையொன்று இதன் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையின் உள்ளடக்கம் 2023 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் தலைமை அலுவலகம் மற்றும் கிளை வலையமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கியுள்ளன. மிக அண்மைய வருடாந்த அறிக்கையான 2022 ஆம் ஆண்டின் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த அறிக்கையுடன் இவ்வறிக்கை ஒப்புநோக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் உள்ளடக்கம் நிறுவனத்திற்கும் அதன் முக்கிய பங்குதாரர்களுக்கும் முக்கியத்துவம்மிக்க அம்சங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

## அறிக்கையின் நோக்கம்

இவ்வறிக்கையானது தாபனத்தின் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால தனித்துவமிக்க பெறுமான உருவாக்கத்தினை தமது பிரபலமிக்க பங்குதாரர்களுடன் பகிர்ந்துகொள்வதனை நோக்காகக் கொண்டுள்ளது. அதன் மூலம் நிதியத்தின் தந்திரோபாயம், ஆளுகை மற்றும் நிதி முகாமைத்துவம் குறித்து சுருக்கமான தொடர்பாடலையும் இது வழங்குதுடன் அதன் நிதிசார் செயலாற்றுகை மற்றும் தாபனத்தினால் உருவாக்கப்பட்ட சமூகத்தடங்கள் ஆகியவற்றுக்கு இடையிலான உறவினையும் நிரூபணஞ் செய்கின்றது.

இவ்வறிக்கையானது அளவு மற்றும் தர ரீதியான தரவுகளைக் கொண்டுள்ளதுடன், ஒப்புநோக்கு மற்றும் மேலதிக பகுப்பாய்வினை எளிதாக்குவதற்கு முடியுமான அளவு ரீதியான தரவுகளை வழங்குவதே எமது நோக்காகும். நிதிக் கூற்றுக்களும் அதனுடன் தொடர்பான குறிப்புக்களும் அரசாங்க கணக்காய்வாளர் அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளதுடன் உத்தரவாத அறிக்கையும் இவ்வறிக்கையில் உள்ளது

## அறிக்கையின் இணக்கம்

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆளுகை அறிக்கையானது பொது தொழில் முயற்சிகளுக்கான கூட்டு ஆளுகை மீதான சிறந்த நடைமுறைக்கான விதி மற்றும் 1980 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டம் என்பவற்றுடன் நிறுவனம் எவ்வாறு இணங்கி ஒழுகுகின்றது என்பது குறித்து கலந்துரையாடுகின்றது

## மூலோபாய நோக்கு

வருடம் பூராகவும் செயலாற்றுகைக்கு கவனம் செலுத்தி இந்த வருடாந்த அறிக்கை பங்குதாரர்களின் வளர்ச்சிக்காக சபையின் தற்போதைய மற்றும் எதிர்காலப் பணிகள் தொடர்பில் புரிந்துணர்வை வழங்குகின்றது.


**தொடர்புகொள்ள வேண்டிய உத்தியோகத்தர்**

**திரு. எம்.ஏ.கே. அலுத்கமகே**
பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) ப.க.

**திரு. கே.டி.ஏ.பி. கருணாரத்ன**
உதவிப் பொது முகாமையாளர் (நிதி)

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை
தொலைப்பேசி : +94 11 7747250
தொலைநகல் : +94 11 7747209
மின்னஞ்சல் : finance@etfb.lk

# நாம் யாவர்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்புநிதியமானது 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டு 1981 ஆம் ஆண்டு மார்ச் 1 ஆம் திகதி செயற்பாடுகளை ஆரம்பித்தது. இது தொழில் அமைச்சின் கீழ் நிறுவப்பட்டு, தற்போது நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றது. அரசாங்க இளைப்பாற்றுச் சம்பளத்திற்கு உரித்தாகாத எல்லா அரச துறை ஊழியர்களும் மற்றும் தனியார் துறை ஊழியர்களும் இந்நிதியத்தில் அங்கத்தவர்களாவதுடன், அவர்களது தொழில் வழங்குநர்கள் அவ்வூழியர்களின் மொத்த உழைப்பிலிருந்து 3% இனை நிதியத்திற்கு மாதாந்தம் அனுப்ப வேண்டியுள்ளனர். எனவே ஊழியர் சேமலாப நிதியத்தைப் போலன்றி, தொழில் வழங்குநர் மாத்திரமே ஊழியர்/ அங்கத்தவர் சார்பாகப் பங்களிப்பொன்றை மேற்கொள்வதுடன் அங்கத்தவர்கள் பங்களிப்புச் செய்யாத ஒரு நலனாகும். நாட்டின் பொருளாதாரத்திற்கு கணிசமான பங்களிப்பை வழங்கும் சுயதொழில் முயற்சியாளர்களினதும் புலம்பெயர் தொழிலாளர்களினதும் தன்னார்வ அங்கத்துவத்தினை அதிகரிப்பதற்கு விசேட கவனஞ் செலுத்தப்படுகின்றது.

## சபையின் குறிக்கோள்கள்

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 07 ஆம்

அ) நிதியிடல் மற்றும் முதலீட்டில் பங்குபெறுவதன் ஊடாக ஊழியர் உடைமையாண்மை, ஊழியர் நலன்புரி, பொருளாதார சனநாயகம் ஆகியவற்றை ஊக்குவித்தல்

ஆ) தொழில் முயற்சிகளில் உரிமை பங்கினைப் பெற்றுக் கொள்வதன் மூலம் முகாமைத்துவத்தில் ஊழியர் பங்களிப்பினை ஊக்குவித்தல்

இ) ஊழியர்கள் ஓய்வு பெறும் போது தான் பங்களிப்புச் செய்யாத நலன்களை பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்தல் மற்றும்

ஈ) மேலே (அ), (ஆ) மற்றும் (இ) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களிற்குத் தேவையான ஏனைய செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.

## எமது பொறுப்புக்கள்

### நோக்கு

நிறுவன ரீதியான திறமையினூடாக அனைத்து பங்குதாரர்களுக்கும் செயலூக்கமிக்க மற்றும் சாத்தியமிக்க முதன்மையான நம்பிக்கைப் பொறுப்பாக திகழ்தல்.

### செயற்பணி

நிதிசார் உறுப்பினர் நலன்கள் மற்றும் சிறந்த வாடிக்கையாளர் சேவைகளை பரந்த அளவில் வழங்குவதில் மிகவும் அக்கறையுள்ள மற்றும் விவேகமுள்ள நம்பிக்கைப் பொறுப்பாக விளங்குதல்.

### பெறுமானங்கள்

- ஆக்கத்திறனமிக்க, புத்தாக்கமிக்க மற்றும் அர்ப்பணிப்புமிகு பணிக்குழாம்
- மக்கள் நேயமிகு வேலைச் சூழல்
- ஆதரவுமிக்க கொள்கைகள் மற்றும் செயன்முறைகள்
- சிறந்த அமைப்புக்கள் மற்றும் நடைமுறைகள்
- நிறைவான நிதி ஸ்தீரத்தன்மை மற்றும்
- மகிழ்ச்சிமிக்க வாடிக்கையாளர்கள்

# நிதிசார் **சிறப்பம்சங்கள்**

| | 2023<br>இ.ரூபா ´000 | 2022<br>இ.ரூபா ´000 | வித்தியாசம் |
|---|---|---|---|
| **தொழிற்பாடுகள்** | | | |
| மொத்த வருமானம் | 67,792,678 | 46,121,938 | 46.99% |
| மொத்த வட்டி வருமானம் | 64,380,505 | 46,316,209 | 39% |
| மொத்தச் செலவினம் | 2,833,648 | 2,694,206 | (5.18%) |
| தொழிற்பாட்டுச் செலவினம் | 1,640,882 | 1,648,344 | 0.45% |
| வரிக்கு முன்னரான இலாபம் | 64,959,030 | 43,427,732 | 49.58% |
| வரிச் செலவினம் | 9,016,645 | 6,449,427 | (39.81%) |
| வரிக்கு பின்னரான இலாபம் | 55,942,384 | 36,978,305 | 51.28% |
| **நிதி நிலமைப் பற்றிய கூற்று** | | | |
| காசும் காசுக்கு சமமானவையும் | 898,585 | 584,266 | 53.80% |
| நிதிச் சொத்துக்கள் FVTPL | 4,463,977 | 2,887,168 | 54.61% |
| நிதிச் சொத்துக்கள் FVTOCI | 10,764,966 | 8,646,578 | 24.50% |
| கடன் தீர்ப்புச் செலவின் மீதான நிதிச் சொத்துக்கள் | 499,504,778 | 444,308,492 | 12.42% |
| அங்கத்துவர் நிதியம் மற்றும் ஒதுக்குகள் | 518,804,839 | 460,561,415 | 12.65% |
| **அங்கத்தவர் நோக்கு** | | | |
| அங்கத்தவர் நிதியம் | 504,434,709 | 459,630,606 | 9.75% |
| வட்டி மற்றும் பங்கிலாபம் | 45,861,319 | 36,981,107 | 24.01% |
| வட்டி மற்றும் பங்கிலாபம (%) | 10% | 8.75% | 1.25% |
| அங்கத்தவர் நலன்கள் | 549,153 | 477,055 | 15.11% |
| முதலீட்டின் மீதான நலன்கள் ROI | 13.82% | 10.01% | 3.81% |
| பங்கின் மீதான நலன்கள் ROE | 11.61% | 8.05% | 3.56% |
| சொத்துக்கள் மீதான நலன்கள் ROA | 11.31% | 7.95% | 3.36% |

**மொத்த சொத்துக்கள்**
(ரூ.மில்.)
**524,511**
464,997 (2022)

**வருடத்தில் இலாபம்**
(ரூ.மில்.)
**55,942**
36,978 (2022)

**அங்கத்தவர் நதியம்**
(ரூ.மில்.)
**504,435**
459,631 (2022)

# பிரதான மைல்கற்கள்

**1986**

மரண நலத்திட்டம்
100,000/-

**1989**

மரண நலத்திட்டம்
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் :
200,000/-

**1991**

மரண நலத்திட்டம்
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம்
இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி:
300,000/-

**1992**

மரண நலத்திட்டம்
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம்
இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி
கண் வில்லை செலவிற்கான மீளளித்தல் ரூபா
18,000/=

**1994**

மரண நலத்திட்டம்
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம்
இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி
கண் வில்லை பொருத்தும் செலவிற்கான மீளளித்தல்
5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் ரூ. 15,000/=
9,000 புலமைப் பரிசில்கள்

**1997**

மரண நலத்திட்டம்
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம்
இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி
கண் வில்லை செலவிற்கான மீளளித்தல்
5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்
"சிரமசுவ ரெக்கவரண" சிகிச்சைத் திட்டம் (ரூ.25000 வீதம் ஒரு வருடத்திற்கு உச்சமாக ரூ.50,000 சேவைக்காலத்திற்குள்)

## 2002

மரண நலத்திட்டம்
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம்
இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி
கண் வில்லை செலவிற்கான மீளளித்தல்
5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் “சிரமசுவ ரெக்கவரண” சிகிச்சைத் திட்டம்
“வியன” வீட்டுக் கடன் திட்டம்

## 2006

மரண நலத்திட்டம்
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம்
இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி
கண் வில்லை செலவிற்கான மீளளித்தல்
5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்
“சிரமசுவ ரெக்கவரண” சிகிச்சைத் திட்டம்
“வியன” வீட்டுக் கடன் திட்டம்
சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு நிதியுதவி ரூ. 300,000/=

## 2010

மரண நலத்திட்டம்
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம்
இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி
கண் வில்லை செலவிற்கான மீளளித்தல்
5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்
“சிரமசுவ ரெக்கவரண” சிகிச்சைத் திட்டம்
“வியன” வீட்டுக் கடன் திட்டம்
சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு நிதியுதவி
கபொத (உ/த) மாணவர்களுக்கான நிதியுதவி ரூபா 12,000/=
5,000 புலமைப் பரிசில்கள்

## 2016

மரண நலத்திட்டம்
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம்
இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி
கண் வில்லை செலவிற்கான மீளளித்தல்
5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்
“சிரமசுவ ரெக்கவரண” சிகிச்சைத் திட்டம்
“வியன” வீட்டுக் கடன் திட்டம்
சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு நிதியுதவி
கபொத (உ/த) மாணவர்களுக்கான நிதியுதவி
கண் வில்லை செலவிற்கான மீளளித்தல் ரூபா 30,000/=

## 2022

மரண நலத்திட்டம்
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம்
கண் வில்லை செலவிற்கான மீளளித்தல்
5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்
“சிரமசுவ ரெக்கவரண” சிகிச்சைத் திட்டம்
“வியன” வீட்டுக் கடன் திட்டம்
கபொத (உ/த) மாணவர்களுக்கான நிதியுதவி
கண் வில்லை செலவிற்கான மீளளித்தல்
சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு நிதியுதவி ரூ. 350,000/-
இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி: 350,000/-

## 2023

மரண நலன் திட்டம்
நிரந்தர அங்கவீன நலன் திட்டம்
இருதய சத்திர சிகிச்சை நிதியுதவி
உள்ளக கண் வில்லைப் பொருத்தும் செலவுகளை மீளளிப்புச் செய்தல்
ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் பிள்ளைகளுக்கு நிதியுதவி
சிரமசுவ ரெகவரண வைத்தியசாலை அனுமதி மருத்துவ காப்புறுதித்திட்டம்
“வியண” குறைந்த வட்டி வீடமைப்புக் கடன்
சிறுநீரகம் பொருத்தல் நிதியுதவி
க.பொ.த. உயர்தரம் பரீட்சைக்குத் தோற்றும் பிள்ளைகளின் தொழிற் பயிற்சி பாடநெறிக்கு நிதியுதவி “நிபுணதா சவிய” ரூ. 50,000/-

## பெறுமதி இயலுமைகள் (உள்ளீடுகள்)

# பெறுமதி உருவாக்க மாதிரி

### முதலீட்டு மூலதனம்

- அங்கத்தவர் நிதியம் - 460 பில்லியன்

### அங்கத்துவ மூலதனம்

- மொத்த தொழில் வழங்குநர்கள் 75,485
- மொத்த அங்கத்தவர் கணக்குகள் 2.5 மில்.
- சுயதொழில் மற்றும் குடிப்பெயர் ஊழியர்கள் 42,753

### ஊழியர் மூலதனம்

- மொத்த ஆளணி 882
- சபையில் 40% க்கும் மேலான ஆளணி 20 வருடத்திற்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டவர்கள்
- திறமை தகுதி மற்றும் தகைமைப்பெற்ற ஆளணி

### பங்குடமை மூலதனம்

- பிரிவின் பிரகாரம் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
- ஊழியர் சேமலாப நிதியம் (EPF)
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை (ICTA)

### சமூக மற்றும் சமுதாய மூலதனம்

- தொழிலாளர் சனத்தொகை

## பெறுமதி உருவாக்கம் (செயன்முறை)

### தொலைநோக்கு, செயற்பணி மற்றும் பெறுமானங்கள்

### இலக்குகள் மற்றும் நோக்கங்கள்

### மூலோபயங்கள் மற்றும் செயற்பாடுகள்

### அடிப்படையான செயற்பாடுகள்

- சேகரிப்பு
- இணக்கம் மற்றும் செயற்படுத்தல்
- தொழிற்வழங்குநர் தொடர்புகள்
- அங்கத்துவ சேவைகள்
- முதலீடுகள

### இரண்டாம் நிலை செயற்பாடுகள்

- நிதியீட்டம்
- தகவல் தொழில்நுட்பம்
- மனிதவளம்
- உள்ளக கணக்காய்வு

### 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க சட்டம்

- நிறுவன நல்லாட்சி
- நிறுவன இடர் முகாமைத்துவம்

## உருவாக்கப்பட்ட பெறுமதி (வெளியீடுகள்)

### முதலீட்டாளர்கள்

- அங்கத்தவர் நிதியம் 504 பில்.
- முதலீட்டின் மீதான நலன்கள் 13.82%

### அங்கத்தவர்கள்

- வட்டி 3%
- பங்கிலாபம் 7%

### ஊழியர்கள்

- தனிப்பட்ட செலவினம் 1.3 பில்லியன்
- பயிற்சி மற்றும் அபிவிருத்திச் செலவு 6.2 மில்லியன்
- ஆளணிப் புரள்வு 5% க்கு குறைவு

### சமூகம்

- கோரிக்கை கொடுப்பனவு 38 பில்லியன்
- இருதய சிகிச்சை 142 மில்லியன்
- மரண நலன்கள் 157 மில்லியன்
- ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் 193மில்லியன்
- உயர் கல்வி நிதி 74மில்லியன்
- சிரமசுவ திட்டம் 20மில்லியன்
- நிரந்தர அங்கவீனம் 23மில்லியன்
- சிறுநீரகம் மாற்றுதல் 5மில்லியன்
- கண்வில்லை பொருத்தல் 7மில்லியன

# சபையின் திணைக்களங்கள்/ பிரிவுகள்/ அலகுகள்
## ஆகியவற்றின் தொழிற்பாடுகள்

### சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் தொடர்புகள் பிரிவு

01

தனியார் நிறுவனங்களிலும் இளைப்பாற்றுச் சம்பளம் கிடைக்கப் பெறாத அரச நிறுவனங்களிலும் பணிபுரியும் ஊழியர்களின் மொத்த வருவாயில் 3% இனைப் பங்களிப்புச் செய்வது கட்டாயமாகும். தொழில்தருநர்களிடமிருந்து உரிய நேரத்தில் பங்களிப்புக்களைச் சேகரித்தல், மேலதிக கட்டண அறவீடுகளைச் சேகரித்தல், தவறுபவர்களை/ பங்களிக்காதோரை அடையாளங்காணுதல், தவறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுத்தல் போன்றன பங்களிப்புச் சேகரித்தல் படிமுறையுடன் தொடர்புடைய முக்கியமான செயற்பாடுகளாகும். சபையின் சேகரிப்பு இலக்குகளை அடைவதே சேகரிப்பு மற்றும் தொழில்தருநர் தொடர்புப் பிரிவின் பொறுப்பு ஆகும்.

### முதலீட்டுப் பிரிவு

02

சபையின் பல்வேறு முதலீட்டு நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கு அமைக்கப்பட்டுள்ள முதுலீட்டுப் பிரிவு நிறுவனத்தின் முக்கிய வர்த்தக அலகாகும். முதலீடுகள் மற்றும் திரவத்தன்மையின் பாதுகாப்பினைப் பேணும் அதே வேளையில் உச்ச வருவாயை ஈட்டுவதே இவ்வலகின் முக்கிய நோக்கமாகும். முதலீட்டுத் தீர்மானங்களுக்கான வழிகாட்டியாக விரிவான முதலீட்டுக் கொள்கை ஒன்று உள்ளது.

### அங்கத்தவர் சேவைகள் பிரிவு

03

இப்பிரிவின் பிரதான தொழிற்பாடுகளாவன, அங்கத்தவர் கணக்குகளை இற்றைப்படுத்தல் மற்றும் பேணுதல், அங்கத்தவர்களுக்கு வருடாந்த அங்கத்தவர் கூற்றுக்களை வெளியிடுதல், பொது நலன்களின் (சாதாரண மற்றும் மரண நலன் கோரல்கள்) துரித செயலாக்கம் மற்றும் செயற்படு அங்கத்தவர்களுக்கான ஏனைய நலன்புரித் திட்டங்களைப் பேணுதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன. இப்பிரிவின் செயற்பாடுகளை மேலும் வலுவூட்டுவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கான போதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### நிதிப் பிரிவு

04

நிதிப் பிரிவின் முக்கிய தொழிற்பாடுகளாவன, மாதாந்த மற்றும் வருடாந்த கணக்குகள், வருடாந்த வரவு செலவுதிட்டம் மற்றும் பணிக்குழாத்தினரதும் ஏனையவற்றினதும் கொடுப்பனவுகள் ஆகியவற்றை அரச வரிகளுக்கு உட்பட்டவாறு தயாரித்தல், அரச கணக்காய்வு விடயங்களை ஒருங்கிணைத்தல், கூட்டிணைந்த திட்டம் மற்றும் ஏனைய முகாமைத்துவ தகவல் அறிக்கைகள் ஆகியவற்றைத் தயாரித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.

## நிர்வாகம் மற்றும் மனித வளப் பிரிவு

05

தற்போதைய போட்டிமிக்க வர்த்தகச் சூழலில் இன்றியமையாத நவீன மனித வள நுட்பங்கள் மற்றும் சிறந்த அலுவலக நடைமுறைகள் ஆகியவற்றை பின்பற்றுவதன் தேவை அறியப்பட்டுள்ளது. ஒரு சேவை நிறுவனமான நுவுகு சபை மக்கள் மீது (ஊழியர்கள்) தங்கியிருக்கும் தன்மையானது மிகவும் உயர்வானது. எனவே, நிர்வாகம் மற்றும் மனித வளப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை அபிவிருத்தி மற்றும் விருத்தி செய்வதற்கு உயர் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே நிர்வாகம் மற்றும் மனித வளப் பிரிவினால் பின்பற்றப்படும் வழிமுறைகள் மற்றும் காணப்படும் முறைமைகளை இற்றைப்படுவதற்கும் விருத்தி செய்வதற்கும் மற்றும் பணிக்குழாத்தினருக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## தகவல் தொழில்நுட்பப் பிரிவு

06

தகவல் தொழில்நுட்பப் பிரிவானது பிரதானமாக அங்கத்தவர் நிர்வாக மென்பொருள் முறைமையினை முகாமை செய்வதற்கும் பேணுவதற்கும் பொறுப்பாயுள்ளது. இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவராண்மை நிறுவனத்துடன் இணைந்து தொழில்நுட்பப் பிரிவை மறுசீரமைப்பதற்கு தேவையான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## உள்ளக கணக்காய்வுப் பிரிவு

07

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது போதிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் நிறுவப்பட்டுள்ளன எனவும் அவ்வாறான முறைமைகள் தொடர்ச்சியாகவும் பொருத்தமாகவும் பிரயோகிக்கப்படுகின்றன எனவும் உறுதிப்படுத்தவதற்கு பொறுப்பாயுள்ளது. பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு) நேரடியாகவே தலைவருக்கு அறிக்கையிடுவார். உள்ளகக் கணக்காய்வின் ஏற்கனவே உள்ள முறைமைகள் மற்றும் நடைமுறைகளின் நம்பகத்தன்மையை மீள்மதிப்பீடு செய்வதற்கு ஓர் ஆய்வினை மேற்கொள் வேண்டும் என்றும் நிறுவனத்தின் தீர்மானம் எடுக்கும் செயன்முறையில் பயனுறுதிமிக்க கருவியொன்றாக உள்ளகக் கணக்காய்வின் வகிபங்கினை வலுவூட்டுவதற்கும் முகாமைத்துவம் கருத்திற் கொண்டுள்ளது.

## சட்டப் பிரிவு

08

சட்டப்பிரிவானது சபையின் அனைத்து சட்ட விவகாரங்களுக்கும் ஆலோசனை சேவைகளை வழங்கும் அலகொன்றாகச் செயற்படுகின்றது. பிராந்திய அலுவலக வலையமைப்பு விரிவாக்கத்துடன் பிராந்திய மட்டத்திற்கு சட்ட நடவடிக்கைகள் பரவலாக்கப்பட்டுள்ளன. சட்டப் பிரிவானது பிரதிப் பொது முகாமையாளரின் (சட்டம்) கண்காணிப்பின் கீழ் இயங்குகின்றது.

# செயலாற்றுகை மீளாய்வு




## பெறுமதி சேர்க்கப்பட்ட வெளிப்படுத்தல்

சபையின் பெறுமதியை உருவாக்குதல் தொடர்பிலான பகுப்பாய்வு மற்றும் குழுமத்தின் பிரதான தரப்பினர்களுக்கு மத்தியில் உள்ள வேறாக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

| | 2023 | 2022 | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூ.மில்லியன். | ரூ.மில்லியன். | % |
| **சேர்க்கப்பட்ட பெறுமதி** | | | |
| பிரதான வியாபார முயற்சிகள் மூலம் உழைக்கும் வருமானம் | 67,118.20 | 45,677.35 | 46.94 |
| சேவை கிரயம் | (357.33) | (292.05) | (22.35) |
| **பிரதான வியாபார முயற்சிகள் மூலம் சேர்க்கப்பட்ட பெறுமதி** | **66,760.87** | **45,385.29** | **47.10** |
| வேறு வருமானங்கள் | 674.48 | 444.59 | 51.71 |
| கடன் மற்றும் வேறு நட்டங்களுக்கான அறவீடுகள் | (51.45) | 76.82 | 166.97 |
| **பெறுமதியை சேர்த்தல்** | **67,383.90** | **45,906.70** | **46.78** |
| | | | |
| **ஊழியர்களுக்கு பெறுமதியை வேறாக்கல்** | | | |
| சம்பளம், வேதனம் மற்றும் வேறு நலன்கள் | 1,392.11 | 1,392.35 | 0.02 |
| | | | |
| **அங்கத்தவர்களுக்கு** | | | |
| அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்ட வட்டி | 13,758.50 | 12,679.22 | (8.51) |
| அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்ட பங்கிலாபம் | 32,102.82 | 24,301.89 | (32.10) |
| | | | |
| **அரசுக்கு** | | | |
| வரிச் செலவினம் | 9,016.65 | 6,449.43 | (39.81) |

| | 2023 | 2022 | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூ.மில்லியன். | ரூ.மில்லியன். | % |
| **சமூகத்திற்கு** | | | |
| அங்கத்தவர் நலன்கள் | 549.15 | 477.05 | (15.11) |
| | | | |
| **விரிவாக்கல் மற்றும் விருத்திக்காக** | | | |
| தடுத்துவைக்கப்பட்ட இலாபம் | 210.12 | 570.70 | (63.18) |
| தேய்மானம் மற்றும் கடன்கழிப்பு | 40.55 | 36.06 | (12.45) |
| ஈவுத்தொகை சமநிலை ஒதுக்கு நிதி | 10,314 | - | 100 |
| | | | |
| **வேறாக்கப்பட்ட மொத்தப் பெறுமதி** | **67,383.90** | **45,906.70** | **46.78** |

## சேர்க்கப்பட்ட பொருளாதாரப் பெறுமதி (EVA)

சேர்க்கப்பட்ட பொருளாதாரப் பெறுமதி நிறுவனமொன்றின் உண்மையான பொருளாதார இலாபத்தை எடுத்துக்காட்டும். சேர்க்கப்பட்ட பொருளாதாரப் பெறுமதி என்பது குறிப்பிடத்தக்க ஆபத்தான பங்குதாரர்களுக்கு தேவையான ஆகக் குறைந்த நலன்களை விஞ்சும் அல்லது குறையும் உழைப்பின் அளவு பற்றிய மதிப்பீடாகும்.

| | 2023 | 2022 |
|---|---|---|
| | ரூ.மில்லியன். | ரூ.மில்லியன். |
| **முதலீட்டு மூலதனம்** | | |
| பொதுவான அங்கத்தவர் நிதியம் | 482,032.66 | 432,959.75 |
| சேர்க்க : கடன் மற்றும் வேறு நட்டங்களுக்கான திரண்ட இழப்பீட்டு ஒதுக்கம் | 35.02 | 86.47 |
| | **482,067.68** | **433,046.22** |
| **முதலீட்டு மூலதனம் மீதான நலன்கள்** | | |
| வரிக்குப் பின்னரான இலாபம் | 55,942.38 | 36,978.31 |
| சேர்க்கப்பட்ட கடன் மற்றும் வேறு நட்டங்களுக்கான திரண்ட இழப்பீட்டு ஒதுக்கம் | (51.45) | 76.82 |
| **முதலீட்டு மூலதனத்தின் மீதான மொத்த நலன்கள்** | **55,890.93** | **37,055.13** |
| | | |
| முதலீட்டு மூலதனத்தின் சூழ்நிலை கிரயம் | (79,824.61) | (108,218.25) |
| **சேர்க்கப்பட்ட பொருளாதாரப் பெறுமதி** | **(23,933.68)** | **(71,163.12)** |

*2023 சாதாரண பாரமில் – 16.56% 12 மாத பொதுத் திறைசேரிப் பட்டியல் மீது கணக்கிடப்பட்டுள்ளது. (2022 - 24.99%)



# தவிசாளரின் மீளாய்வு

இன்னல்களை எதிர்கொண்ட போதிலும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை அதன் அசைக்க முடியாத வலிமையை நிரூபித்துள்ளது. முன்பை விட வலிமையாகவும் மேலும் நெகிழ்ச்சியுடனும் செயற்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் காணப்பட்ட இருண்ட காலத்தைப் பற்றி நாம் சிந்திக்கும்போது, எமது பங்குதாரர்களின் அசைக்க முடியாத ஒத்துழைப்பால் வலுவூட்டப்பட்ட நம்பிக்கையுடன் நாம் முன்னோக்கிப் பயணித்துள்ளோம். ஸ்திரத்தன்மை, சுபீட்சம் மற்றும் நிலையான வெற்றி ஆகியவற்றால் வரைவிலக்கணப்படுத்தப்படும் எதிர்காலத்தை நோக்கிய பாதையில் நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளோம்.

## அன்புள்ள பங்குதாரர்களே,

2023 ஆம் ஆண்டிற்கான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் வருடாந்த அறிக்கையை அதன் பணிப்பாளர் குழு சார்பாக சமர்ப்பிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். சவால்மிக்க பின்னணியில் பொருளாதாரம் தொடர்ச்சியாக மீண்டுவரும் இந்தச் சந்தர்ப்பத்தில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் அடையப்பெற்ற பாராட்டுக்குரிய நிதிச் செயலாற்றுகையை முன்வைப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

முன் எப்போதும் இல்லாதவாறு நிலவிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை தனது பணியை அசைக்க முடியாத அர்ப்பணிப்புடன் நிறைவேற்றி அதற்கு வலுவான முறையில் முகம்கொடுத்தது. கொந்தளிப்பான சூழ்நிலைக்கு முன்னால் காணப்பட்ட பாரிய தடைகளுக்கு மத்தியிலும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை அதன் அங்கத்தவர்கள் மீதான கரிசனை மற்றும் அர்ப்பணிப்பை பரந்த பொருளாதார தாக்கத்தை தொடர்ந்து மேலும் உறுதியாக பேணிவந்துள்ளது.

## பொருளாதார கொந்தளிப்பை சமாளித்தல்

2023 ஆம் ஆண்டு சொல்லொணாப் பொருளாதார சவால்களினால் நாட்டின் நிதி நிலப்பரப்பில் நிச்சயமற்ற தன்மை காணப்பட்டது. ஒருபுறம் பணவீக்கம் அதிகரித்தது. மறுபுறம் வட்டி விகிதம் அதிகரித்தது. ரூபாயின் விரைவான மதிப்பிழப்பு பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. கொந்தளிப்பை மீட்டெடுப்பதற்கும் நிலைப்படுத்துவதற்கும் செயற்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் கடுமையானவையாக இருந்தன. எனினும் அவை அவசியமானவையாக காணப்பட்டன. இறுதியில் மீட்சிக்கான அடித்தளத்தை அமைக்க முடியுமாகியது.

2023 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியில் பிரதிபலித்த 2.3% என்ற எதிர்மறை மதிப்பு, தற்போதுள்ள நிதிச் சூழலில் நெருக்கடியின் விளைவுகளை மேலும் எதிரொலிக்கச் செய்தது. ஆயினும், இந்த மோசமான சூழ்நிலை இருந்தபோதிலும், நம்பிக்கையின் ஒளிக்கீற்றும் தென்பட்டது. மொத்த உள்நாட்டு அபிவிருத்தியின் (GDP) வளர்ச்சி விகிதங்கள், எதிர்மறையாக ஒருமுறை குறைத்து, படிப்படியாக மீண்டும் ஒரு நம்பிக்கையான திசையில் திரும்பியது. முதல் காலாண்டில் 1.5% ஆக காணப்பட்ட ஒரு மிதமான சுருக்கம், நான்காவது காலாண்டில் ஊக்கமளிக்கும் 4.5% வளர்ச்சியை பதிவுசெய்தது.

இன்னல்களை எதிர்கொண்ட போதிலும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்புநிதியச்சபைஅதன்அசைக்கமுடியாத வலிமையைநிரூபித்துள்ளது. முன்பை விட வலிமையாகவும் மேலும் நெகிழ்ச்சியுடனும் செயற்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் காணப்பட்ட இருண்ட காலத்தைப் பற்றி நாம் சிந்திக்கும்போது, எமது பங்குதாரர்களின் அசைக்க முடியாத ஒத்துழைப்பால் வலுவூட்டப்பட்ட நம்பிக்கையுடன் நாம் முன்னோக்கிப் பயணித்துள்ளோம். ஸ்திரத்தன்மை, சுபீட்சம் மற்றும் நிலையான வெற்றி ஆகியவற்றால் வரைவிலக்கணப்படுத்தப்படும் எதிர்காலத்தை நோக்கிய பாதையில் நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளோம்.

2023 ஆம் ஆண்டில் உள்நாட்டுக் கடனை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை முக்கிய பங்கு வகித்தது. அங்கத்துவ நிதியின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்யும் அதே வேளையில், அரசாங்க கடனின் நிலைத்தன்மைக்கு சபையினால் பங்களிப்புச்செய்ய முடிந்த காரணத்தினால் இந்த ஈடுபாடு குறிப்பிடத்தக்கதாக காணப்பட்டது. அரசாங்கக் கடன் விடயத்தில் தொடர்புடைய நிலைபேர்தன்மை இலக்குகளை திறம்பட நிலைப்படுத்தி நிர்வகிப்பதை நோக்கமாகக் கொண்ட தேசியப் பொருளாதாரக் கொள்கைகளில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை செயலூக்கத்துடன் பங்கேற்பதை இது பிரதிபலிக்கின்றது.

## நிதிச் செயலாற்றுகை

2023 ஆம் ஆண்டில் பல வெற்றிகளை அடைந்துகொண்ட எமது நிதியமானது குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்துள்ளது. சபையின் நிர்வாகத்தின் கீழ் உள்ள சொத்துக்கள் 525 பில்லியன் ரூபாயை எட்டியிருப்பது தெளிவாகின்றது. அங்கத்தவர் நிதி 504 பில்லியன் ரூபாவாக அதாவது, 9.7% அதிகரித்தது. அவ்வாறே, அதன் முதலீட்டுப் பங்கு 12.9% அதிகரித்து 212 பில்லியன் ரூபாவாக காணப்பட்டது. அதற்கமைய 2023 நிதியாண்டின் இறுதியில் வலுவான ஸ்திரத்தன்மை மற்றும் மதிப்பு முன்மொழிவு நிரூபிக்கப்பட்டது.

மொத்த வருமானம் குறிப்பிடத்தக்க வகையில் 47% அதிகரித்து 67.8 பில்லியனாக காணப்பட்டது. எனவே, இந்த நிதியம் சிறப்பாக செயற்பட்டிருப்பது அவதானிக்கப்படுகின்றது. மேலும், 2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் 65 பில்லியனாக உயர்ந்துள்ளது. உழைப்புக்காக செலுத்தும் வரிக்கு முன்னரான இலாபத்தில் ஏற்பட்ட 50% குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது சந்தை விகிதங்களைச் சாதகமாகப் பயன்படுத்தி பயனுள்ள முகாமைத்துவம் மற்றும் மூலோபாய ரீதியில் முடிவெடுப்பதன் மூலம் சபை அடைந்த வெற்றியாகும்.

சராசரியாக 5% அதிகரிப்புடன் அரசாங்கத்தின் செலவின எல்லை வழிகாட்டுதல்களுக்குள் மொத்த செலவினங்களை பராமரிக்கும் சபையின் திறன் அதன் விவேகமான நிதி நிர்வாகத்தைப் பிரதிபலிக்கின்றது. ஒழுங்குமுறை தேவைகளுக்கு இணங்கும்போது இந்த அணுகுமுறை வளங்களின் வினைத்திறன்மிக்க ஒதுக்கீட்டை உறுதி செய்கின்றது.

அதன் அங்கத்தவர்களுக்கு உகந்த வருமானத்தை வழங்குவதற்கான நிதியத்தின் அர்ப்பணிப்பு, 10% மொத்த வருவாயை அதன் அங்கத்தவர்களுக்கு பங்கிலாபமாகவும் வட்டியாகவும் விநியோகிப்பதில் நன்கு

பிரதிபலிக்கின்றது. இந்த நலன்களின் விநியோகம், நிதியத்தின் மீதான அங்கத்தவர்களின் நம்பிக்கைக்கு வெகுமதி அளிப்பது மட்டுமல்லாமல் ஒரு முன்னணி சமூக பாதுகாப்பு நிதியாக அதன் நம்பகத்தன்மையை வலுப்படுத்துகின்றது.

ஆண்டு முழுவதும் 549 மில்லியன் ரூபா அங்கத்தவர் நலன்களை வழங்கியதன் மூலம் அதன் அங்கத்தவர்களுக்கான பொறுப்புக்களை ஆதரிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் நிதியத்தின் அர்ப்பணிப்பு எடுத்துக்காட்டுகின்றது.

தொழில்நுட்பக் கல்வியில் தனது தொழில்துறையை விருத்தி செய்துகொள்வதற்காக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு நிதியுதவி வழங்கும் பொருட்டு 2023 ஆம் ஆண்டு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் **"நிபுணதா சவிய"** என்ற புதிய நலன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய தொழில் தகுதி (NVQ) நிலை 3, 4 மற்றும் 5 அங்கீகாரத்துடன் தெரிவுசெய்யப்பட்ட 100 வெவ்வேறு பாடநெறிகளுக்கு அதன் மூலம் ரூபா 50,000 நிதியுதவி வழங்கப்படும்.

ஒட்டுமொத்தமாக, இந்த நடவடிக்கைகள் சபையின் நிதியை நம்பகமான மற்றும் நம்பிக்கைக்குரிய சமூகப் பாதுகாப்பு நிதியாக நிலைநிறுத்துகின்ற அதேநேரம், பொறுப்பான மற்றும் அங்கத்தவர் திருப்தி மற்றும் ஒழுங்குமுறை தரங்களுடன் இணங்குதல் ஆகியவற்றுக்கான அதன் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

## நிர்வகிக்கப்படும் நிறுவனங்களின் செயலாற்றுகை

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் துணை நிறுவனமான லங்கா சோல்ட் லிமிடெட், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் செயல்திறனில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வெற்றிகரமான ஆண்டை நிறைவு செய்துள்ளது. அதன் பங்கிலாபத் தொகை 315 மில்லியன் ரூபா ஆகும். இதன் மூலம் லங்கா சோல்ட் லிமிடெட் அந்தக் காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க வருமானத்தையும் இலாபத்தையும் ஈட்டியதைக் காட்டுகின்றது. பங்கிலாபம் என்பது பங்குதாரர்களுக்கு அறிவிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் பொது நிதியின் பாதுகாப்பு மற்றும் இலாபத்தை பிரதிபலிக்கும் நிறுவனமொன்றின் வருவாயின் ஒரு பகுதியாகும். இந்தப் பங்களிப்பின் மூலம் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் ஒட்டுமொத்த நிதி நிலைமை மற்றும் செயலாற்றுகை மேலும் வலுப்பெற்றுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

## டிஜிட்டல் எதிர்காலத்துடன் இணைந்த செயற்பாடுகளை விருத்திசெய்தல்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையானது, அதன் செயற்பாட்டுத் திறனை மேம்படுத்தி, எதிர்காலத்திற்குத் தயாரான அமைப்பாகத் தன்னை நிலைநிறுத்துவதற்காக டிஜிட்டல் மயமாக்கலை ஏற்றுக்கொண்டிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. வர்த்தக செயல்முறைகளை நெறிப்படுத்தவும் ஒத்துழைக்கவும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம், நிதியமானது அதன் சேவைகளின் வேகத்தை மேம்படுத்தி செலவுகளைக் குறைக்க நடவடிக்கை எடுத்து அதன் பங்குதாரர்களுக்கு சிறப்பாகச் சேவை செய்ய முடியும்.

புதிய அமைப்பு, அங்கத்தவர்களை மனதில் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்தோடு, அவர்களின் அனுபவத்தை மேம்படுத்தும் மற்றும் தொழில் வழங்குநரின் பங்களிப்புச் செலுத்துதல்கள் மற்றும் நலன் கொடுப்பனவுகளின் செயலாக்கத்தை எளிதாக்கும் இணையவழி போர்ட்டலைக் கொண்டிருக்கும். இது தொடர்பான செயற்திட்டம் தற்போது இறுதிக் கட்டத்தில் உள்ளது. புதிய அமைப்பு 2024 ஆம் ஆண்டின் இறுதியில் செயற்பாட்டுக்கு வரும். அவ்வாறே, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் சேவை வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக அது அமையும்.

## எமது மனிதவளம்

நிறுவனத்தின் முன்னேற்றம் மற்றும் அதன் வெற்றிக்கு வழிநடாத்தலில் மனிதவள அபிவிருத்தியின் முக்கிய பங்களிப்பை சபை அடையாளம் கண்டிருப்பது அனைவரும் அறிந்த விடயமாகும். சபை அதன் ஊழியர்களின் பல செயற்பாட்டுத் திறன்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துவதன் மூலமும் அதன் நிர்வாகக் கட்டமைப்பில் ஏற்படுத்தும் மாற்றங்களோடு ஒத்துப்போவதையும் உறுதி செய்வதன் மூலம் அதன் நிறுவன திறன்களை மேம்படுத்துவதற்கான வலுவான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளமை இங்கு குறிப்பிடுதல் வேண்டும்.

2023 ஆம் ஆண்டு மிகவும் சவாலான ஆண்டாக காணப்பட்டது. ஏனெனில் பல சிரேஷ்ட ஊழியர்கள் ஓய்வு பெற்றனர் மற்றும் அவர்களில் சிலர் சிறந்த வேலை வாய்ப்புகளுக்காக இராஜினாமா செய்தனர். இத்தகைய சூழ்நிலையில், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை கடுமையான பணியாளர் பற்றாக்குறையின் கீழ் அதன் செயற்பாடுகளை நிர்வகிக்க வேண்டியிருந்தது.

ஊழியர்களுக்கான பயிற்சித் திட்டங்களை செயற்படுத்துவதன் மூலம் தொடர்ச்சியான கற்றல் மற்றும் திறன் மேம்பாட்டிற்கான சபையின் அர்ப்பணிப்பை நிரூபிக்கின்றது. பலதரப்பட்ட அனுபவங்கள் மற்றும் இலக்குகளுக்கு ஊழியர்களை தயார்படுத்துவதன் மூலம் அவர்களின் வாழ்க்கையை வளப்படுத்துவதற்கும் திறமையான மற்றும் தகவமைக்கக்கூடிய பணியாளர்களை உருவாக்குவதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

மனித மூலதனத்தின் விரிவான பாதுகாப்புடன் வினைத்திறன்மிக்க மற்றும் பயனுள்ள மனிதவள முகாமைத்துவ அமைப்புகளை மேம்படுத்த மனித வள தகவல் அமைப்பை (HRIS) செயற்படுத்த ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

மேலும், இது புத்தாக்க மற்றும் சிறந்த கலாச்சாரத்தை வளர்ப்பதற்கான அர்ப்பணிப்பை வலியுறுத்துகின்றது. அத்தோடு, செயன்முறை மேம்பாடுகள், தொழில்நுட்ப விருத்தி மற்றும் பயிற்சி அபிவிருத்தி செயற்பாடுகள் மூலம் தற்போதைய பணியாளர்களின் அறிவு, திறன்கள் மற்றும் செயல்திறனை விருத்திசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

ஒட்டுமொத்தமாக, மனிதவள அபிவிருத்திக்காக சபையின் முன்முயற்சியான அணுகுமுறை மற்றும் வேகமாக மாறிவரும் சூழலில் அதன் பங்குதாரர்களிடம் பரவலாக வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பொருத்தமான திறனைக் கொண்டிருப்பதற்கு நிறுவனத்தின் அர்ப்பணிப்பு உறுதிசெய்யப்படுகின்றது.

## விருதுகள் மற்றும் பாராட்டுக்கள்

இலங்கை பட்டய கணக்காளர்கள் சங்கத்துடன் இணைந்த நிறுவனமான இலங்கை அரச நிதிக் கணக்காளர்கள் சங்கத்தினால் (APFASL) ஏற்பாடு செய்யப்பட்டு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்ட அரச நிறுவனங்களுக்கிடையிலான சிறந்த வருடாந்த அறிக்கை 2022 போட்டிக்கான பிரிவில் தங்க விருதை வென்றது.

இந்த விருதுப் போட்டியானது, அரசாங்கத்துறை நிறுவனங்களுக்கான, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், சமூகப் பொறுப்பு மற்றும் பெருநிறுவன ஆளுகை ஆகியவற்றின் மிக உயர்ந்த தரத்தை அவர்களின் வருடாந்த அறிக்கையிடல் மற்றும் பெருநிறுவன வெளிப்பாடுகளை வெளிப்படுத்தும் வகையிலான நாட்டின் மிகவும் மதிப்புமிக்க விருது விழாவாக காணப்படுகின்றது. நியதிச்சட்ட சபைகள், அதிகாரசபைகள், மற்றும் ஆணைக்குழுக்கள் பிரிவில் **"வெற்றியாளர்"** என்ற ரீதியில் **"தங்க விருது"** மற்றும் ஒட்டுமொத்த அரசாங்கத்துறை நிறுவனங்களின் பிரிவில் **"வெண்கல விருதையும்"** சபை வென்றது.

## எதிர்கால செயற்பாடுகள்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை, அதன் அனைத்து அங்கத்தவர்களும் தரமான ஓய்வூதியத்தை அனுபவிப்பதை உறுதிசெய்ய வேண்டியது அதன் நெறிமுறைப்பொறுப்புஎன்பதைஅதன்பணிக்கூற்றின்மூலம் தெளிவுபடுத்தியுள்ளது. தற்போது எமது நிறுவனம் அதன் முக்கிய வர்த்தக டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்தை 2024 ஆம் ஆண்டுக்குள் நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கின்றது. அதன் மூலம் இலத்திரனியல் கட்டுப்பாட்டு முறையை நோக்கி காலடி எடுத்துவைக்க முடியும். இந்த மாற்றமானது வினைத்திறன் மற்றும் சேவை வழங்கலை மேம்படுத்த தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கான வலுவான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றது.

மேலும், சவாலான பொருளாதார நிலைமைகளுக்கு முகங்கொடுக்கும் திறனை மேம்படுத்துவதற்கான அதன் மூலோபாயத்தை மீள்வரைவிலக்கணப்படுத்துவதற்கு சபை திட்டமிட்டுள்ளது. பாரம்பரிய முறைகளுக்கு அப்பால் புத்தாக்கங்களை உருவாக்கவும், அதன் செயற்பாடுகள் மற்றும் உத்திகளை ஸ்திரத்தன்மை மற்றும் செயல்திறனைப் பேணுவதற்கு மாற்றியமைக்கவும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை தயாராக உள்ளதென்பதை இந்த செயலூக்கமான அணுகுமுறை மூலம் தெளிவுபடுத்தப்படுகின்றது. இந்த முன்முயற்சிகளை ஏற்றுக்கொள்வதன் மூலம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் நோக்கம் மற்றும் செயற்பணி, அதன் அங்கத்தவர்களின் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கான திறன் பலப்படுத்தப்படுவதை உறுதி செய்வதாகும்.

## நன்றி நவிலல்

தனது ஓய்வூதியச் செல்வத்தை சிறந்த முறையில் முகாமை செய்வதற்கு எமது சபையின் செயற்திறனில் அவர்கள் வைத்துள்ள அசைக்க முடியாத நம்பிக்கைக்கு எனது மனமார்ந்த நன்றியை அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் மீது அவர்கள் வைத்திருக்கும் அதீத நம்பிக்கை, சேவைச் சிறப்பிற்காக தொடர்ந்தும் பாடுபட எம்மை அது ஊக்குவிக்கின்றது.

உற்சாகத்துடனும் அர்ப்பணிப்புடனும் சவால்களுக்கு முகம்கொடுத்து வலுவான பிணைப்பு மற்றும் சேவை ஊக்கத்துடன் செயற்பட்ட எமது பணியாளர் குழு தொடர்பில் நான் மிகவும் பெருமைப்படுகின்றேன். அவர்களின் கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் எமது அங்கத்தவர்களுக்கு சிறந்த சேவை அனுபவத்தை வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

எமக்கு வழங்கிய விலைமதிப்பற்ற ஆதரவிற்காக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு எனது விசேட நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். சவாலான ஆண்டு முழுவதும் தங்களின் அசைக்க முடியாத வழிகாட்டல் மற்றும் ஒத்துழைப்பிற்காக நிதியமைச்சின் செயலாளர் மற்றும் அவரது உத்தியோகத்தர்கள் குழாத்திற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எமது வெற்றிக்கு முக்கிய பங்காற்றிய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பணிப்பாளர்கள் குழுவின் புத்திசாலித்தனமான ஆலோசனைகள் மற்றும் மூலோபாய வழிகாட்டுதலுக்காக மதிப்பிற்குரிய எனது சக சபை அங்கத்தவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**டி.எல்.பி. ரோஹன அபயரத்ன**
தவிசாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி



# பணிப்பாளர்களின் அறிக்கை

எமது நிறுவனம் அதன் முக்கிய வணிக டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்தை 2024 ஆம் ஆண்டிற்குள் நிறைவுசெய்ய எதிர்பார்க்கின்றது, இதன் மூலம் மின்னணு இ-நிர்வாகத்திற்கு அடுத்த காலடியை எடுத்து வைக்க முடியும். இந்த மாற்றத்தின் மூலம் வினைத்திறன் மற்றும் சேவை வழங்கலை மேம்படுத்த தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான வலுவான அர்ப்பணிப்பு பிரதிபலிக்கின்றது.

## செயற்பாட்டு சிறப்பம்சம்

வருடம் முழுவதும் சவால்கள் இருந்தபோதிலும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை அதன் அங்கத்தவர்களின் தேவைப்பாடுகளை வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்கு மற்றும் அவர்களின் வேலை திருப்திக்கு முன்னுரிமை அளிப்பதில் கவனம் செலுத்தியுள்ளது. எனவே, அங்கத்தவர்கள் எதிர்பார்த்த சேவைத் தரங்களைப் பேணுவதற்கும் தடையில்லா சேவை வழங்கலை உறுதி செய்யவும் முடியுமாகியது. இந்த அணுகுமுறை மூலம் நேர்மறையான அங்கத்தவர் அனுபவங்களுடன் வெளிப்புறச் சிக்கல்கள் இருந்தபோதிலும் தொடர்ச்சியான செயற்பாடுகளுக்கு பங்களிப்புச் செய்ய இயலுமாகியது.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அதன் முதலீட்டுப் பங்கினை திறம்பட நிர்வகிப்பதன் மூலம் வாடிக்கையாளர் சேவைமற்றும்உள்ளகவினைத்திறனைமேம்படுத்துவதற்கு டிஜிட்டல் மயமாக்கலை வலுப்படுத்துவதன் மூலம் தனது அங்கத்தவர்களுக்கு முதலீட்டில் கவர்ச்சிகரமான வருமானத்தை வழங்குவதற்கு முன்னுரிமை அளித்துள்ளதாகத் அவதானிக்கப்படுகின்றது. இந்த இரண்டு வகையான மூலோபாய உத்திகள் செயற்பாடுகளை மேம்படுத்துவதையும், அங்கத்தவர்கள் தங்களது முதலீடுகளில் திருப்திகரமான வருமானத்தைப் பெறுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் நாட்டிலுள்ள சமூகப் பாதுகாப்பு நிதியத்தில் ஒரு தனித்துவமான நிறுவனமாக நிலைநிறுத்துதல் மற்றும் அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சரியான வழிகாட்டுதலை வழங்கி, நிறுவனத்தின் அடிப்படை குறிக்கோள்களாக வாடிக்கையாளர் சேவை திருப்தி மற்றும் அவர்களின் நன்மைகளை அதிகரிப்பதை



அடிப்படைக் கொள்கைகளாக பணிப்பாளர் சபையினால் வலியுறுத்தப்படுகின்றது.

சந்தேகத்திற்கு இடமின்றி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை, அதன் அங்கத்தவர்களுக்கான சமூகப் பாதுகாப்பு வலையமைப்பாக, கவனமாகவும் திறமையாகவும் ஆண்டைக் கடக்கும் முக்கியமான மற்றும் தீர்க்கமான பணிக்கு மிகச் சிறந்த முறையில் முகம்கொடுத்தது. இந்த அணுகுமுறை தமது அங்கத்தவர்களின் பொறுப்பில் வைத்திருக்கும் நிதிகளின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியை உறுதி செய்யும் அதே வேளையில் சந்தை முன்னேற்றங்களுக்கு திறம்பட பதிலளிக்கும் வகையில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அங்கத்தவர்கள், தொழில் வழங்குநர்கள் மற்றும் பிற தொடர்புடைய பங்குதாரர்கள் உட்பட அனைத்து பங்குதாரர்களுக்கும் மதிப்பை உருவாக்குவதன் மூலம், சமூகப் பாதுகாப்பு கட்டமைப்பிற்குள் நம்பகமான மற்றும் பயனுள்ளநிறுவனமாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்புநிதியம் அதன் கட்டாயப் பாத்திரத்தை பராமரிக்க இயலுமாகியது. காணப்பட்ட வாய்ப்புகளைப் பயன்படுத்தி, அதன் பணியை திறம்பட நிறைவேற்றுவதற்கான முன்முயற்சியுடன் கூடிய இடர் முகாமைத்துவ சமநிலைப்படுத்தல் இந்த மூலோபாயத்தில் உள்ளடக்கப்பட்டது.

2023 ஆம் ஆண்டில் சபையின் செயல்திறனை ஒரு ‘பேண்தகு பணி’ என விவரிப்பதன் மூலம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது சபையின் செயல்முறைகள், வளங்கள் மற்றும் பணியாளர்களின் பின்னடைவு மற்றும் சவாலான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் சேவைகளின் ஏற்புத்திறனை வலியுறுத்துகின்றது. கொந்தளிப்பு மற்றும் நிச்சயமற்ற நிலை இருந்தபோதிலும், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அதன் செயற்பாடுகளை திறம்பட நிலைநிறுத்த முடிந்ததென்பதை இந்தத் தலைப்பின் மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றது. அங்கத்தவர்கள் மற்றும் தொழில் வழங்குநர்கள் உட்பட அதன் பங்குதாரர்களுக்கு ஸ்திரத்தன்மை மற்றும் ஒருமைப்பாட்டை உறுதிசெய்து, ஆண்டு முழுவதும் அதன் பணி மற்றும் நோக்கங்களை நிலைநிறுத்தும் சபையின் திறனை இது எடுத்துக்காட்டுகின்றது. தற்போதைய மற்றும் எதிர்கால பங்குதாரர்களுக்கு பயனளிக்கும் நிலையான நடைமுறைகளுடன் இணைந்த நீண்ட கால இருப்பு மற்றும் பொறுப்பான நிர்வாகத்திற்கான அர்ப்பணிப்பையும் இந்தத் தலைப்பு எடுத்தியம்புகின்றது.

நிலையற்ற சூழலை எதிர்கொண்ட போதிலும், ஊழியர்களின் விதிமுறைகளின்படி குறைந்தபட்ச வட்டி விகிதத் தேவையான 3% உடன் 7% பங்கிலாபத்தை நிறுவனம் அறிவிக்க முடியுமாக இருந்த காரணத்தினால் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் 2023 ஆம் ஆண்டில் நியாயமான வலுவான செயல்திறனை அடைவதன் மூலம் தொடர்புடைய நிலைமைகளைத் தாங்கும் திறனை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் வெளிக்காட்டியது. அங்கத்தவர்களின் நிதிப் பொறுப்புக்களை நிறைவேற்றும் போது சவாலான சூழ்நிலைகளுக்குச் சென்று அவற்றைத் தணிக்கும் சபையின் திறனை இந்த சாதனை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது. குறிப்பாக எதிர்பாராத பொருளாதார சூழ்நிலைகளில் அங்கத்தவர்களின் சேவை திருப்தி மற்றும் நம்பிக்கையைப் பேணுவதில் முக்கியமானதாக காணப்படும் நிறுவனத்தின் முதலீட்டு நடைமுறைகளில் திருப்திகரமான வருமானத்தை வழங்குவதற்கான சபையின் உறுதிப்பாட்டை இது பிரதிபலிக்கின்றது.

## அரசாங்கத்தின் உள்நாட்டுக் கடனை மேம்படுத்துவதில் பங்களிப்புச் செய்தல்

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டுக் கடன் மேம்படுத்தல் முயற்சிகள் மீதான அரசாங்கக் கொள்கை 2023 ஜூலை மாதத்தில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் வெளியிடப்பட்டது. பொருந்தக்கூடிய பரிவர்த்தனை ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்த திறைசேரிப் பிணைமுறி பரிமாற்றத் திட்டத்திற்குத் தகுதியான நிறுவனமாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அடையாளம் காணப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்ட பரிமாற்றத்தின்படி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அதன் வரிக்குட்பட்ட வருமானத்தின் மீது ஆண்டுக்கு 14% என்ற விகிதத்தில் அரசாங்கத்திற்கு வரி செலுத்தும்.

தற்போதுள்ள 14% வரி விகிதத்துடன் பிணைமுறிகளை மாற்றுவது அல்லது அவற்றை மாற்றாமல் 30% அதிக வரி விகிதத்தில் வருமான வரி செலுத்துவது போன்ற விருப்பங்களை கவனமாக ஆய்வு செய்த ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், பிணைமுறிப் பத்திரங்களின் பரிமாற்றத்தை மிகவும் சாத்தியமானதாக தெரிவுசெய்தது. அங்கத்தவர் நிதியின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்யும் அதே வேளையில் அரசாங்கத்தின் கடன் நிலைத்தன்மை முயற்சிகளுக்கு பங்களிப்பதில் முக்கிய பங்கு வகிப்பதற்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு இயலுமாகியது 2023 ஆம் ஆண்டில் நாம் அடைந்த முக்கிய மைல்கல்லாகும்.

## டிஜிட்டல்மயமாக்கல்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துடன் இணைந்த பிரதான வணிகத்தின் டிஜிட்டல் பயணம் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இது தொழில் வழங்குநர்கள் மற்றும் அங்கத்தவர்கள் போன்ற முக்கிய பங்குதாரர்களுக்கு வசதியான டிஜிட்டல் தளத்தை நிறுவுவதில் கவனம் செலுத்துகின்றது. பொருளாதார சிக்கல்கள் இருந்தபோதிலும், இந்த முயற்சி குறிப்பிடத்தக்க வளர்ச்சி மற்றும் வெற்றிக்கு வழிவகுத்தது. இந்த அமைப்பு ஒரு அதிநவீன நிறுவன வள திட்டமிடல் (ERP) அடிப்படையிலான தரவுத்தளத்தைச் சூழ கட்டமைக்கப்பட்டுள்ளது. அத்தோடு, வாடிக்கையாளர் சேவையை மேலும் மேம்படுத்தும் முதன்மை நோக்கத்துடன் அங்கத்தவர்களை மையமாகக் கொண்ட சூழலில் செயற்படுவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்டுள்ள கணினி அமைப்பு ஏனைய பயன்பாடுகளுடன் இடைமுகங்களையும் உள்ளடக்கியுள்ளது. மீளாய்வு செய்யப்பட்ட காலத்தில் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தி மற்றும் வினைத்திறன் மேம்பாடுகளுக்கு பங்களிப்புச் செய்தது. இந்த ஒருங்கிணைப்பு, தடையற்ற செயற்பாடுகளை எளிதாக்குவதற்கும், பங்குதாரர்களுக்கான அணுகலை மேம்படுத்துவதற்கும் உதவும். மேலும் அதன் அங்கத்தவர் மற்றும் செயற்பாட்டுச் சிறப்பியல்புக்காக தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் அர்ப்பணிப்பு மேலும் வலுப்படும்.

## எதிர்கால நோக்கு

பின்வரும் பிரதான செயற்பாடுகள் பிரிந்து செல்லும் விதத்திற்கு அமைய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் மூலோபாய திசை தெளிவாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது :

**இலாபம் மற்றும் முதலீட்டுப் பங்கின் வளர்ச்சி:** இலாபத்தின் அதிகரிப்பு மற்றும் முதலீட்டுப் பங்கின் வளர்ச்சியை இலக்காகக் கொண்டு, வருவாயை மேம்படுத்துதல் மற்றும் நிதியின் சொத்துக்களை விரிவுபடுத்துதல் ஆகியவற்றில் மூலோபாய கவனம் செலுத்துதல். முதலீட்டுக் கொள்கை வழிகாட்டுதல்கள் மற்றும் அதன் செயல் சட்டகத்திற்கு இணங்க செயல்திறனை மேம்படுத்தல், விவேகமான முதலீட்டு உத்திகள் மற்றும் ஆபத்தை முகாமைசெய்தல் என்பன இவற்றில் உள்ளடங்கும்.

**வினைத்திறன்மிக்க மற்றும் அங்கத்தவர் மைய அனுபவத்தை வழங்குதல்:** வினைத்திறன் மற்றும் அங்கத்தவர் மையத்தன்மைக்கு முன்னுரிமை அளித்து செயன்முறைகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம் அங்கத்தவர் தேவைகள் மற்றும் நலன்களைப் பூர்த்தி செய்வதன் முக்கியத்துவத்தை இது வலியுறுத்துகின்றது. தனிப்பயனாக்கப்பட்ட சேவையை வழங்குதல், கணக்கு முகாமைத்துவம் நடைமுறைகளை எளிதாக்குதல் மற்றும் வாடிக்கையாளர் ஒத்துழைப்பை உறுதி செய்தல் என்பன இதில் அடங்கும்.

**செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு பூரண டிஜிட்டல் மயமாக்கல்:** செயற்பாடுகளின் அனைத்து அம்சங்களிலும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம், வினைத்திறனை அதிகரித்தல், செலவுகளைக் குறைத்தல் மற்றும் சேவை வழங்கலை மேம்படுத்தல், கையினால் மேற்கொள்ளும் செயல்முறைகளை தானியக்கமாக்குதல், பரிவர்த்தனைகள் மற்றும் அங்கத்தவர் தொடர்புகளுக்கான டிஜிட்டல் தளங்களை செயல்படுத்துதல் மற்றும் முடிவெடுப்பதற்கான தரவுப் பகுப்பாய்வுகளை மேம்படுத்துதல் ஆகியவை இதில் அடங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**அரசாங்கத்தின் நிதிக் கொள்கைகளுடன் இணைந்துசெல்லல்:** அண்மைக்கால அரசாங்க நாணயக் கொள்கை மாற்றங்கள், பரந்த பொருளாதார நோக்கங்களுடன்

ஒழுங்குமுறை கட்டமைப்பிற்குள் செயல்படுவதற்கான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் அர்ப்பணிப்பும் பொறுப்பும் எடுத்துக்காட்டப்படுகின்றன.

ஒட்டுமொத்தமாக, இலாபத்தை மேம்படுத்துவதற்கும் நிதி நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கும் டிஜிட்டல் கண்டுபிடிப்புகளைத் தழுவுவதற்கும், அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கும், அங்கத்தவர்களின் சேவை திருப்தியை மேம்படுத்துவதற்கும், ஒழுங்குமுறை இணக்கத்தைப் பேணுவதற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையில் காணப்படும் இந்த முக்கிய செயன்முறைப் பிரிவுகள் ஊடாக மூலோபாய முன்னுரிமைகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

நாம் பணியாற்றும் அங்கத்தவர்களுக்கு அவர்களது அபிலாஷைகளுடன் உள்ளார்ந்த தொடர்பைக் கொண்ட ஒரு அமைப்பாக, அவர்களுக்கு நிலையான மதிப்பை வழங்குவதற்காக எமது நிதியை மிகுந்த கவனத்துடன் கையாள்வதில் வலுவான பொறுப்புணர்வுடன் பணியாற்றுவதற்கு ஆர்வமாக உள்ளோம்.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், அதன் அனைத்து அங்கத்தவர்களும் தரமான ஓய்வூதியத்தை அனுபவிக்க முடியும் என்பதை உறுதிப்படுத்துவது அதன் நெறிமுறைப் பொறுப்பாகும் என்பதை அதன் பணிக்கூற்றின் மூலம் அவதானிப்புச் செய்யப்படுகின்றது. தற்போது, எமது நிறுவனம் அதன் முக்கிய வணிக டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்தை 2024 ஆம் ஆண்டிற்குள் நிறைவுசெய்ய எதிர்பார்க்கின்றது, இதன் மூலம் மின்னணு இ-நிர்வாகத்திற்கு அடுத்த காலடியை எடுத்து வைக்க முடியும். இந்த மாற்றத்தின் மூலம் வினைத்திறன் மற்றும் சேவை வழங்கலை மேம்படுத்த தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான வலுவான அர்ப்பணிப்பு பிரதிபலிக்கின்றது.

மேலும், சவாலான பொருளாதார நிலைமைகளுக்கு முகங்கொடுக்கும் திறனை மேம்படுத்துவதற்கான அதன் மூலோபாயத்தை மீள் வரைவிலக்கணப்படுத்துவதற்கு சபை திட்டமிட்டுள்ளது. பாரம்பரிய முறைகளுக்கு அப்பால் புத்தாக்கங்களை உருவாக்குவதற்கும் அதன் செயற்பாடுகள் மற்றும் உத்திகளை ஸ்திரத்தன்மை மற்றும் வினைத்திறனுடன் பேணுவதற்குத் தகவமைத்துக் கொள்ளவும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை தயாராக இருப்பதாக இந்தச் செயலூக்கமான அணுகுமுறை மூலம் தெளிவாகின்றது. இந்த முன்முயற்சிகளை ஏற்றுக்கொள்வதன் மூலம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை அதன் நோக்கத்தையும் அதன் அங்கத்தவர்களின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கான திறனையும் வலுப்படுத்துவதற்கும் விரும்புகின்றது. மேலும் நிலையான நலன்கள் மற்றும் ஓய்வூதியத் திட்டங்களுக்கான ஒத்துழைப்பை அங்கத்தவர்களுக்கு உறுதி செய்வதும் அதன் பொறுப்பாகும்.

## நன்றி நவிலல்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அதன் செயற்பாடுகள் மூலம் அதன் அங்கத்தவர்கள் மற்றும் பங்குதாரர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தி அவர்களுக்கான கூட்டாண்மை பெறுமானத்தை உருவாக்குவதற்கு உறுதிபூண்டுள்ளது. இந்த நோக்கங்களை அடைந்துகொள்வதில் நிறுவனத்தின் சேவையில் ஈடுபட்டுள்ள அதன் அர்ப்பணிப்புள்ள ஊழியர்கள் வகிக்கும் முன்னணி வகிபாகம் மெச்சப்படுகின்றது. விரைவாக உருவாகி வரும் செயற்பாட்டுச் சூழலுக்கு மூலோபாயரீதியாக கடின உழைப்புடன் கருமமாற்றிய பணியாட்கள் தொடர்பில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் பெருமிதம் கொள்கின்றது.

நிதியத்தின் அங்கத்தவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு இடையறாத அர்ப்பணிப்புடன் செயலாற்றிய பொது முகாமையாளர் உட்பட சிரேஷ்ட நிர்வாகத்தினருக்கும் மற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அங்கத்தவர்களின் திருப்திக்காகவும், சவால்களை வெற்றிகொள்வதற்காகவும் நிதியத்தின் தொடர்ச்சியான வெற்றிக்கு பங்களிப்புச் செய்த ஒட்டுமொத்த ஊழியர்களின் கூட்டு முயற்சியும் அர்ப்பணிப்பும் இந்த பாராட்டுக்கு அடிப்படையான தனித்துவ அம்சமாகும்.



**டி.எல்.பி. ரோஹன அபயரத்ன**
தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி

# முகாமைத்துவ
## கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு

### 2023 ஆம் ஆண்டுக்கான கண்ணோட்டம்

சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாற்றில் ஏற்பட்ட மிக மோசமான பொருளாதார வீழ்ச்சியைக் கடந்து 2023 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் படிப்படியாக மீண்டு வந்தது. பொருளாதாரம் குறுகிய கால சிரமங்களை அனுபவித்த போதிலும், அரசாங்கத்தால் செயற்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்க கொள்கை மாற்றங்கள் மற்றும் கட்டமைப்பு மாற்றங்கள் நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை பெருமளவில் மீட்டெடுக்க உதவியது. பணவீக்கம் 2022 ஆம் ஆண்டில் பதிவுசெய்த உச்சநிலையிலிருந்து 2023 ஆம் ஆண்டின் இறுதியில் ஒற்றை இலக்க நிலையை எட்டியது. இது நிதிக் கொள்கையை இயல்பாக்குவதற்கு உதவியது. 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் பொருளாதார விரிவாக்கம் பதிவு செய்யப்பட்டது. ஒட்டுமொத்த அரசாங்க வரவுசெலவுத் திட்டத்தில் தொடர்ச்சியான இரட்டைப் பற்றாக்குறையும், பொருளாதாரச் சரிவுக்கு மூல காரணமான வெளி நடைமுறைக் கணக்கும் 2023 காலகட்டத்தில் முன்னேற்றத்தின் அறிகுறிகளைக் காட்டின. 2023 ஆம் ஆண்டில், அரசாங்கத்தின் ஆரம்ப இருப்பும் மிகையைக் காட்டியது. அவ்வாறே, வெளி நடைமுறைக் கணக்கும் மிகையைப் பதிவுசெய்தது.

2023 ஆம் ஆண்டு மற்றும் 2024 ஆம் ஆண்டின் முற்பகுதி முழுவதும் இலங்கை ரூபாயின் விலை உயர்வடைந்துள்ளது. அதே நேரத்தில், உள்நாட்டுக் கடன் மேம்படுத்தல் திட்டம் வெற்றிகரமாக நிறைவடைந்ததைத் தொடர்ந்து, நிதிக் கொள்கை தளர்த்தப்பட்டது. அத்தோடு, அரசாங்கப் பிணையங்களின் உழைப்புப் பயன் மற்றும் அதனோடு தொடர்புடைய தவணைக் கட்டணம் குறைந்தது, இது உள்நாட்டுச் சந்தையில் வட்டி விகிதங்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. சந்தை வட்டி விகிதங்களின் கட்டமைப்பில் இந்த கீழ்நோக்கிய செம்மையாக்கல், உயர்ந்த சந்தை உணர்திறன்களுடன் இணைந்து, 2023 ஜூன் மாதம் முதல் தனியார் துறைக்கு கடன் வழங்குவதில் உள்ள சுருங்கும் போக்கை ஓரளவு மாற்றியமைத்தது. மேலும், அரசாங்கம் அவ்வப்போது அறிமுகப்படுத்திய முன்முயற்சிகள் மற்றும் விவேகமான கொள்கைகள் காரணமாக நிதித் துறையில் தாக்குப் பிடிக்கும் நிலை தெளிவாகத் தெரிந்தது.

2023 மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தின் கீழ் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காரணமாக, 2023 ஆம் ஆண்டில் இலங்கையின் வெளித்துறை வலுவான மீட்சி மற்றும் ஸ்திரத்தன்மையை அனுபவித்தது. குறைக்கப்பட்ட வர்த்தக மீதி நிலுவை மற்றும் சேவைகள், ஏற்றுமதிகள் மற்றும் பணியாளர்கள் பணம் அனுப்புதல் ஆகியவற்றில் இருந்து குறிப்பிடத்தக்க பரிமாற்ற வரவு காரணமாக வெளி நடைமுறைக் கணக்கில் மிகையொன்று பதிவு செய்யப்பட்டது. ஏற்றுமதி வருவாயுடன் ஒப்பிடுகையில் இறக்குமதி செலவினங்களில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சியின் காரணமாக வர்த்தகப் பற்றாக்குறை 2010 க்குப் பிறகு மிகக் குறைவாக காணப்பட்டது. மேம்பட்ட சுற்றுலா வருவாயின் காரணமாக சேவைகள் கணக்கின் மிகை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்தது. அத்தோடு, வெளிநாட்டில் வேலை வாய்ப்புகளுக்காக அதிகமானோர் வெளியேறியதால் தொழிலாளர்களின் பணம் அனுப்பும் செயற்பாடும் அதிகரித்தது.

## பணவீக்கம்

2022 செப்டம்பர் மாதத்தில் பணவீக்கம் உச்சத்தை எட்டியது. மேலும் 2023 ஆம் ஆண்டின் இறுதியில், இது விரைவான பணவீக்க விகிதத்தை அடைந்து குறைந்த ஒற்றை இலக்கத்தை எட்டியது. இதற்கு முக்கியமாக கடுமையான நிதி நடவடிக்கைகளுடன் இணைந்த இறுக்கமான பண ஒழுக்கத்தின் மத்தியில் கேள்வி தொடர்பான வீழ்ச்சி காரணமாக அமைந்தது. மேலும், உள்நாட்டு விநியோகத்தை இயல்பாக்குதல், உலகளாவிய பொருட்களின் விலைகளை மிதப்படுத்துதல் மற்றும் இலங்கை ரூபாயின் மதிப்பு அதிகரிப்பு போன்ற காரணிகள் இந்த பணவீக்கத்திற்கு பங்களித்தன. குறைந்த கேள்வி நிலைமைகளுக்கு மத்தியில் வழங்கல் பக்க விலகல்கள் காரணமாக தொடர்ச்சியான ஏற்ற இறக்கங்கள் இருந்தபோதிலும், பணவீக்கம் நடுத்தர காலத்தில் இலக்கு நிலைக்குள் நிலைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட பணவீக்கம் (வருடாந்த புள்ளி)**




*மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை*

## வட்டி வீதம்

2023 ஆம் ஆண்டில், சந்தை வட்டி விகிதங்கள் 2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க உயர் மட்டங்களுடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை பதிவுசெய்தன. 2023 ஜூன் மாதத்திலிருந்து இறுக்கமான நிதிக் கொள்கை நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டதாலும், மேலும் சில சாதகமான காரணிகளின் தாக்கத்துடன் நிலைமை கடந்து சென்றதாலும் சந்தை வட்டி விகிதங்களின் வீழ்ச்சி முதன்மையாக காணப்பட்டது. இலங்கை மத்திய வங்கியானது 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தின் முதல் பாதியில் நாணயக் கொள்கையை தளர்த்தத் தொடங்கியது. 2023 ஆம் ஆண்டில் நான்கு சந்தர்ப்பங்களில் கொள்கை வட்டி விகிதங்கள் 650 அடிப்படை புள்ளிகளால் குறைக்கப்பட்டு நிலையான வைப்பு வசதி விகிதம் (SDFR) மற்றும் நிலையான கடன் வசதி விகிதம் (SLFR) 2023 ஆம் ஆண்டின் இறுதியில், இது முறையே 9.00% மற்றும் 10.00% ஆக அதிகரிக்க அனுமதிக்கப்பட்டது. மேலும், அதிகப்படியான சந்தைக் கடன் விகிதங்களைக் குறைப்பதற்கு பல நிர்வாக முடிவுகள் செயல்படுத்தப்பட்டன. அதனுடன் தொடர்புடைய பரந்த வழிகாட்டுதல்களுடன், ஆண்டின் இறுதியில் அந்தக் கடன் விகிதங்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டது. அதற்கிணங்க, குறியீட்டு வட்டி விகிதங்களில் ஒன்றாக இருந்த எடையிடப்பட்ட சராசரி முதன்மை கடன் விகிதம் (AWPR) 2023 ஆம் ஆண்டில் கணிசமாக 15.11% குறைக்கப்பட்டது.

**கொள்கை வட்டி விகிதம்**




*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

2023 ஜூலை மாதத்தில் உள்நாட்டுக் கடன் மேம்படுத்தல் திட்டம் தொடர்பான முன்முயற்சிகளின் அறிவிப்புக்குப் பின்னர் நாணயக் கொள்கை தளர்த்தப்பட்ட காரணத்தினால் அரசாங்கப் பிணையப் பத்திரங்கள் மூலம் வருவாய் ஈட்டும் நடவடிக்கை குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது. குறைந்த பணவீக்கம், குறைந்த பணவீக்க எதிர்பார்ப்புகள் மற்றும் அதிக சந்தை உணர்வுகள் அரசாங்கப் பிணையப் பத்திரங்களின் வருவாய் ஈட்டை மிதப்படுத்த உதவின. அதற்கமைய, 2023 ஆம் ஆண்டில் திறைசேரி பிணைமுறிகள் மீதான வருவாய் ஈட்டல் 16.34% வீதத்தால் 18.13% வரை குறைந்துள்ளது, அதேவேளை திறைசேரிப் பிணைமுறிகளின் வருவாய் ஈட்டல் எதிர்மறையாக காணப்பட்டது. அதற்கிணங்க, உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பான சில சந்தேகங்கள் மற்றும் அதிகரித்த அரசாங்கக் கடன் தேவைகள் காரணமாக 2022 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் முதல் அசாதாரண நிலைகளை வெளிப்படுத்திய இரண்டாம் நிலை சந்தை வருவாய் ஈட்டல் வட்டத்திற்குள் 2023 ஆம் ஆண்டு முழுவதும் இரட்டை-தலைகீழ் வருவாய் ஈட்டல் வளைவு தொடர்ந்தும் வெளிப்பட்டது.

### 2023 ஆம் ஆண்டில் திறைசேரி உண்டியல்களில் வருமானம் ஈட்டல் (ஆரம்ப சந்தை)




*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

### அரசாங்கப் பிணைகயங்களுக்கு இரண்டாம் நிலைச் சந்தையில் வருவாய் ஈட்டல்




*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

### இலங்கையின் பொருளாதாரம்

2022 ஆம் ஆண்டில் பதிவாகிய 7.3% என்ற குறிப்பிடத்தக்க பொருளாதாரச் சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டில் இலங்கைப் பொருளாதாரம் 2.3% மிதமான மத்தியதர சுருக்கத்துடன் மீட்சிக்கான அறிகுறிகளைக் காட்டியது. 2023 ஆம் ஆண்டில் ஒரு படிப்படியான எனினும் நிலையான மீட்சி குறிப்பாக ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் தெளிவாகத் தெரிந்தது. அங்கு, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) நேர்மறையான வளர்ச்சி விகிதம் பதிவு செய்யப்பட்டது. பணவீக்கத்தைத் தளர்த்துவதற்கும், வெளித் துறையில் அழுத்த நிலைமைகளைத் தளர்த்துவதற்கும் மத்தியில் புதிய பேரினப் பொருளாதார ஸ்திரத்தன்மை இந்த முன்னேற்றத்திற்கு துணைப்புரிந்தது.

அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ கையிருப்பு (GOR) 2022 ஆம் ஆண்டின் இறுதியில் 1,898 மில்லியன் ரூபாவிலிருந்து 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 4,392 மில்லியன் ரூபா வரை உயர்ந்துள்ளது. இது 2023 ஆம் ஆண்டில் வெளிநாட்டுத் துறையில் காணப்பட்ட சாதகமான முன்னேற்றங்களைப் பிரதிபலிக்கின்றது. அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ கையிருப்பில் அதிகரிப்புக்கு முக்கிய காரணங்களாக, உள்நாட்டு அந்நியச் செலாவணி சந்தையில் இருந்து மத்திய வங்கியால் அந்நிய செலாவணியைப் பெற்றுக்கொள்ளல், சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் தற்போதைய திட்டத்தின் கீழ் முதல் மற்றும் இரண்டாவது தவணைகளுக்கு சொந்தமான நிதி கிடைக்கப்பெறுதல் என்பன அமைந்திருந்தன. அத்தோடு, உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெறுதல் மற்றும் பிற அந்நியச் செலாவணி ஏற்பாடுகள் போன்றவையும் அந்த அதிகரிப்புக்கு காரணமாக அமைந்தன.

# முதலீட்டுப் பிரிவு

## முதலீட்டின் நோக்கங்கள்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையானது இலங்கையின் இரண்டாவது பெரிய சமூகப் பாதுகாப்பு நிதியமாகும். அத்தோடு, பாதுகாப்பு, நலன்கள் மற்றும் பணப்புழக்கம் ஆகிய முக்கிய முதலீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க சபை இயங்குகின்றது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் முதலீட்டுக் கொள்கைக்கு இணங்க, முதலீட்டின் முக்கிய ஆதாரமாக நிலையான வருமானப் பிணையங்களை வழங்குவதாகும். இது அரசாங்கப் பிணையங்களில் குறிப்பிடத்தக்க பகுதியைக் கொண்டுள்ளது.

முதலீட்டுக் கொள்கை வழிகாட்டுதல்களின் பிரகாரம் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது எல்லா சந்தர்ப்பங்களிலும் நிலையான வருமானப் பிணையப் பத்திரங்களில் 94% க்கு குறையாத சொத்து ஒதுக்கீட்டை எப்போதும் பராமரித்தல் வேண்டுமென்பதோடு, பங்கு முதலீடுகளில் 6% க்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது மொத்த முதலீட்டில் 93.30.% ஆன அரசாங்கப் பிணையங்களில் 480 பில்லியன் ரூபாயை முதலீடு செய்துள்ளது. மேலும் 15 பில்லியன் ரூபா பங்குச் சந்தையில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. அந்த தொகையானது 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3.99 பில்லியன் ரூபா அதிகரிப்புடன் நிறுவனத்தின் மொத்த முதலீட்டு பங்கின் 3.01% ஆகும். மீளாய்வுக்குரிய ஆண்டில் சபை அரசாங்கப் பிணையங்களில் 480 பில்லியன் ரூபாயை முதலீடு செய்துள்ளதோடு, 2022 ஆம் ஆண்டில் இறுதியில் காணப்பட்ட 431 பில்லியன் ரூபாவோடு ஒப்பிடும் போது அது 11.37% வளர்ச்சியாகும்.




## 2023.12.31 ஆம் திகதிக்கு முதலீட்டுப் பங்கு மற்றும் விநியோகம்

2023.12.31 ஆம் திகதிக்கு முதலீட்டுப் பங்குகளின் அமைப்பு




2023.12.31 ஆம் திகதிக்கு முதலீட்டுப் பங்குகளின் விநியோகம்




## நிலையான வருமான முதலீடுகள்

நிலையான வருமானப் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்ட நிதிகளின் அளவு, 2023 டிசம்பர் 31 ஆம் திகதிய நிலவரப்படி மொத்த முதலீட்டுத் தொகுப்பில் 95.32% எனும் 498.5 பில்லியன் ரூபாயை குறிக்கின்றது. சந்தை வட்டி விகிதங்கள் 2022 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க உச்சத்திலிருந்து 2023 ஆம் ஆண்டில் கடுமையாக வீழ்ச்சியடைந்தன. சந்தை வட்டி விகிதங்களில் பரந்த அடிப்படையிலான வேறுபாடு என்ற தலைப்பில், விரைவான பணவீக்க செயன்முறை மற்றும் பணவீக்க எதிர்பார்ப்புகளை மிதப்படுத்துதல் மற்றும் அதிகப்படியான சந்தை வட்டி விகிதங்களைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்ட நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் உள்நாட்டுக் கடன் மேம்படுத்தல் செயல்பாட்டைத் தொடர்ந்து அரசாங்கப் பிணையப் பத்திரங்களின் வருவாய் செயல்திறனுடன்

தொடர்புடைய இடர் தவணைகளின் குறைப்பு என்பன ஏனைய முக்கிய பங்களிக்கும் காரணிகளாக காணப்பட்டன. நீண்ட காலக் கண்ணோட்டத்துடன், நிலையான சராசரி வருவாய் ஈட்டைப் பராமரிக்க பல்வேறு காலகட்டங்களின் கீழ் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி பிணைமுறிகளில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் முதலீடு செய்ய முடிந்தது.

2023 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் நிலையான வருமானம், 2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட 46 பில்லியன் ரூபா அளவிலிருந்து 64 பில்லியன் ரூபா வரையில் அதிகரித்துக்கொள்வதற்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்கு இயலுமாகியது. அது 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 39% குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும்.




## பங்கு முதலீடுகள்

2023 ஆம் ஆண்டில் தொடர்ச்சியான சந்தை ஏற்ற இறக்கங்கள் இருந்தபோதிலும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் முதலீடுகளிலிருந்து பெற்றுக்கொண்ட வருமானம் வலுவான வளர்ச்சியைப் பதிவு செய்தது. 2023 மார்ச் மாதத்தில் சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் மட்ட உடன்படிக்கையில் ஈடுபட்டதன் மூலம், மேம்பட்ட பேரினப் பொருளாதார முன்னேற்றங்களின் பின்னணியில், 2023 இன் முதல் அரையாண்டில் அனைத்து பங்கு விலைச் சுட்டெண் (ASPI) 11% சதவீதத்தை இலங்கை அடைந்தது. இது 2022 நிதியாண்டில் அடையப்பெற்ற சராசரி தினசரி விற்றுமுதல் 2,972 மில்லியன் ரூபாயை விட குறைவாக காணப்பட்டது. அது 1,478 மில்லியன் ரூபாவாக காணப்பட்டது. எவ்வாறாயினும், இலங்கை தனது இருதரப்பு மற்றும் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுடன் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு மற்றும் உள்நாட்டுக் கடன் மேம்படுத்தல் செயற்பாடுகள் காரணமாக வங்கித் துறையில் அது தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்ட காரணத்தினால் முதலீட்டாளர்கள் எச்சரிக்கையுடன் இருந்தனர்.

அதனைத் தொடர்ந்து, 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் கொழும்பு பங்குச் சந்தை செயல்திறன் உச்சத்தை எட்டியது. அத்தோடு, 2023 ஆம் ஆண்டின் இரண்டாவது அரையாண்டில், வங்கி மற்றும் காப்புறுதித் துறைகளைத் தவிர, இலங்கை அரசாங்கத்தின் தலைமையிலான உள்நாட்டு கடன் மேம்படுத்தல் திட்டத்தின் உத்தியோகபூர்வ அறிவிப்புடன் ஏனைய துறைகளின் செயல்திறன் வளர்ச்சி கண்டது. 2023 ஆம் ஆண்டின் இறுதியில், அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 25%வளர்ச்சியுடன் 10,654 இல் நிலைநிறுத்தப்பட்டதனால் இது சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றது. 2023 ஆம் ஆண்டில் வெளிநாட்டு பங்கேற்பு 8% இலிருந்து 10% ஆக அதிகரித்துள்ளது. இது அனைத்து பங்கு விலைச் சுட்டெண்ணையும் சாதகமாகப் பாதித்தது. அத்தோடு, நிகர அந்நியச் செலாவணி 4,436 மில்லியன் ரூபாவைப் பதிவு செய்துள்ளது. பணவீக்கத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு 2022 ஆம் ஆண்டில் கடுமையான பண இறுக்கத்தை அறிமுகப்படுத்திய பின்னர், இலங்கை மத்திய வங்கி 2023 ஆம் ஆண்டில் கொள்கை வட்டி விகிதத்தை 650 அடிப்படை புள்ளிகளால் குறைத்தது. 2023 ஆம் ஆண்டின் 2 ஆவது காலாண்டில் இருந்து வட்டி விகிதங்களில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி சந்தை வளர்ச்சியின் பதிவை மேலும் பாதித்தது.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை 2023 ஆம் ஆண்டின் இறுதியில் அதன் மொத்த நிதியில் 2.36% அளவில் பங்குகளில் முதலீட்டை பராமரிக்க முடிந்தது. கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட பெரும்பாலான நிறுவனங்கள் வணிகச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் பெரும் பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதன் மத்தியில் சிறப்பாகச் செயற்பட்டன. 2023 ஆம் ஆண்டில் பல நிறுவனங்கள் பங்கிலாபத் தொகையை அறிவித்தன. 2023 நிதியாண்டில், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அதன் பங்கு முதலீடுகளில் பங்கிலாபத் தொகை மற்றும் மூலதன ஆதாயங்கள் மூலம் 1,861 மில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியது.




## முதலீட்டுப் பங்கின் நிலைமை

2022 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட 456 பில்லியன் ரூபாயுடன் ஒப்பிடுகையில் 13.89% வளர்ச்சியைக் காட்டியுள்ள ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் மொத்த முதலீட்டுப் பங்கு 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 515 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

சவாலான பொருளாதார காலப் பிரிவுகளை கடந்து செல்லும் போது, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அதிக வருமானம் ஈட்டுவதற்காக, அதிக வருவாய் ஈட்டும் பங்கு முதலீடுகளை நோக்கி தனது நிதி முதலீட்டை மூலோபாய ரீதியாக மாற்றியுள்ளது. வெவ்வேறு கால எல்லைகள் மற்றும் பங்கு வகைகளில் உள்ள முதலீட்டுக் கலவையை விகிதாசாரத்தில் செம்மையாக்குவதன் மூலம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் எதிர்வரும் ஆண்டுகளில் நிலையான பங்குச் செயல்திறனைப் பராமரிப்பதற்கு எதிர்பார்க்கின்றது.

## எதிர்கால நோக்கு

இலங்கைப் பொருளாதாரம் அதன் மீட்சியைத் தொடரும் என்றும் புதுப்பிக்கப்பட்ட உயர் பேரினப் பொருளாதார ஸ்திரத்தன்மையால் மேம்படுத்தப்பட்டு, எதிர்வரும் ஆண்டுகளில் அதன் முழு ஆற்றலை அடையும் என்றும் எதிர்வுகூறப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) விரிவாக்கப்பட்ட நிதி வசதி (EFF) திட்டத்தின் ஆதரவுடன் தொடர்ச்சியான இலட்சிய சீர்திருத்தங்கள் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களை அனுமானித்து இலங்கை தனது பொருளாதாரத்தை பல முனைகளிலும் பல அம்சங்களிலும் ஸ்திரப்படுத்த முயல்கின்றது. விரைவான பணவீக்க செயல்முறைக்குப் பின்னர் குறைந்த கேள்வி நிலைமைகளுக்கு மத்தியில் வழங்கல் பக்க அதிர்ச்சிகள் காரணமாக அவ்வப்போது ஏற்ற இறக்கங்கள் இருந்த போதிலும் பணவீக்கம் 2024 முழுவதும் சராசரியாக 5% என்ற இலக்கை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது, நடுத்தர காலத்தில், பணவீக்க நிலைமை பொருத்தமான கொள்கை நடவடிக்கைகளுடன் அந்தந்த இலக்கைச் சுற்றி ஸ்திரப்படுத்தப்படும் என எதிர்வுகூறப்படுகின்றது.

கிடைக்கப்பெறும் தரவுகளால் பிரதிபலிக்கும் சாதகமான பணவீக்க நிலைமைகளின் அடிப்படையில், இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலைப்பாடு, அண்மைக் காலத்தில் நிலையானதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது பொருளாதார நடவடிக்கைகளை அதிகரிக்க உதவும். நாணயக் கொள்கை நடவடிக்கைகளை எளிதாக்குதல், உள்நாட்டு நாணயச் சந்தை பணப்புழக்க நிலைமைகளை மேம்படுத்துதல் மற்றும் அரசாங்கப் பிணையங்களுடன் தொடர்புடைய ஆபத்து தவணைக் கட்டணத்தைக் குறைத்தல், சந்தை வட்டி விகிதங்களை மேலும் இயல்பாக்குதல், குறிப்பாக கடன் விகிதங்களை இயல்பாக்குதல் என்பன தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வணிகங்கள் மற்றும் குடும்பங்களுக்கான குறைந்த நிதிச் செலவுகளின் அடிப்படையில் தேவையான நிவாரணங்களை வழங்குவதற்கு இந்த இயல்பாக்கம் காரணமாக அமையும்.

பேரினப் பொருளாதார ஏற்ற இறக்கங்களின் தாக்கம் காரணமாக நிதித்துறை மேலும் மேம்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பண நியதிகள் தளர்த்தப்படுவதால், 2023 ஆம் ஆண்டில் பொருளாதாரச் சுருக்கத்திற்குப் பிறகு 2024 ஆம் ஆண்டில் தனியார் துறைக்கு கடன் வசதிகள் வழங்கப்படும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. இந்தச் சாதகமான சூழல் அங்கத்தவர் பங்களிப்புகளில் இருந்து வரும் பணப்புழக்கத்தை அதிகரிப்பதற்கும் அங்கத்தவர்கள் பணத்தை மீளப் பெறுவதை உறுதிப்படுத்துவதற்கும் துணைபுரியும் என எதிர்பார்க்கப்படுகின்றது, இவ்வாறான நிலைமைகள் எதிர்வரும் ஆண்டுகளில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் முதலீடுகளின் வளர்ச்சியை சாதகமாக பாதிக்கும் எனலாம்.



# பங்களிப்புத் தொகை சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள்

பங்களிப்புத் தொகை சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள் பிரிவு, தொழில் வழங்குநர்களின் பங்களிப்புகளை சரியான நேரத்தில் சேகரித்தல், தாமதமான பங்களிப்புகள் மற்றும் அறவீடுகள் மீது மேலதிகக் கட்டணம் அறவிடுதல் உள்ளிட்ட இணக்க செயல்பாடுகளுக்கு பொறுப்பாகும். சுயதொழிலாளர்களிடத்திலும் தொழில் வழங்குநர்களிடத்திலும் விழிப்புணர்வையும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் அங்கத்துவத்தை ஊக்குவிப்பதற்கும் இந்தப் பிரிவு பொறுப்பாகும். பின்வரும் முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்ளும் பொருட்டு பிராந்திய கிளைகள் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் வலையமைப்புடன் இப்பிரிவு இணைந்து செயல்படுகிறது:

| | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|---|
| **தொழில் வழங்குநர்கள்** | | | | | |
| முனைப்பான தொழில் வழங்குநர்கள் | 83,777 | 75,731 | 69,094 | 64,026 | 75,485 |
| **ஊ.ந.பொ.நி. அங்கத்தவர்கள்** | | | | | |
| அங்கத்தவர்கள் (முனைப்பான மற்றும் பங்களிப்புத் தொகை செலுத்துகின்ற தொழில் வழங்குநர்கள்) | 2,800,000 | 2,680,000 | 2,430,091 | 2,445,609 | 2,592,923 |
| சுயதொழிலில் ஈடுபட்டுள்ள அங்கத்தவர்கள் | 41,989 | 41,867 | 41,517 | 41,113 | 43,640 |
| குடிப்பெயர் ஊழியர் அங்கத்தவர்கள் | 231 | 220 | 228 | 241 | 274 |

## இணக்கம் தெரிவிக்கும் தொழில் வழங்குநர்கள்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையானது இலங்கையின் முழு வேலைவாய்ப்பிலுள்ள மக்களையும் உள்ளடக்கும் தெளிவான மூலோபாயத்துடன் செயல்படுகின்றது. மத்திய வங்கி மற்றும் தொழில் திணைக்களத்தின் புள்ளிவிபரங்களின் பிரகாரம் வேலையில் உள்ளவர்களின் எண்ணிக்கைக்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு தொழில் வழங்குநர்கள் பங்களிப்புச் செலுத்த வேண்டிய நபர்களின் எண்ணிக்கைக்கும் இடையே தெளிவான வேறுபாடு காணப்படுகின்றது. அனைத்து தொழில் வழங்குநர்களையும் பதிவு செய்வதன் மூலம் மட்டுமே இந்த இடைவெளியைக் குறைக்க முடியும். 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிரந்தரப் பணியாளர்கள் மட்டுமின்றி, தற்காலிகப் பணியாளர்கள், ஒப்பந்தப் பணியாளர்கள், துண்டு விகிதப் பணியாளர்கள், தினக்கூலிப் பணியாளர்கள், ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோருக்கும் தொழில் வழங்குநர்கள் அவர்களது அடிப்படைச் சம்பளத்தில் 3 சதவீதம் பங்களிப்புத் செய்தல் வேண்டும். அது உரிய அமைப்பு முறையில் சேர்க்கப்படல் வேண்டும்.

## பங்களிப்புத் தொகை செலுத்தும் தொழில் வழங்குநர்களுக்கிடையிலான இணக்க வீதம்

12 மாத காலப்பகுதியில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அந்தந்த தொழில் வழங்குநர்களால் தொடர்ந்து பங்களிப்பு செய்த ஊழியர்களுக்கு மட்டுமே அங்கத்துவ நலன்கள் வழங்கப்படுகின்றன. எனவே, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பை தொடர்ந்து வழங்குவதை உறுதி செய்வதில் எமது பங்களிப்பு அத்தகைய அடையாளம் காணும் பணிக்கு அப்பாற்பட்டது.

## கிளை அறவீட்டு செயற்திறன்

தொற்றுநோய்க்கு முன்னர், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய நிதிகள் காலாவதியான, தவறிய அல்லது பங்களிப்புகளைச் செலுத்தத் தவறிய தொழில் வழங்குநர்களிடமிருந்து சபையினால் மீட்டெடுக்கும் கொடுப்பனவுகளின் நிலைகளுக்கு ஏற்ப இது அமையப்பெற்றுள்ளது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை, தகுதியான தொழில் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கும் ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட தொழில் வழங்குநர்களின் இணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கும் அதன் கிளைகளின் வலையமைப்பின் மூலம் 40,000 முதல் 45,000 வருகைகளை மேற்கொண்டுள்ளது. சராசரியாக, இவற்றில் சுமார் 70 சதவிகிதம் பங்களிப்புத் தொகையை புறக்கணித்த தொழில் வழங்குநர்களுக்கான வருகைகள் ஆகும். ஒவ்வொரு ஆண்டும் 3,000 புதிய தொழில் வழங்குநர்கள் பதிவு செய்யப்படுகின்றனர்.

2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்த புலனாய்வுகளின் எண்ணிக்கை 23,703 ஆகும். அவர்களில் பங்களிப்புச் செய்யாதவர்கள் 4,010 பேரும் புதிய ஊழியர்கள் 19,227 பேரும் உள்ளடங்குவர்.

## இ - கொடுப்பனவு முறை

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை அதன் உறுப்பினர்களை எரிபொருள் பற்றாக்குறை போன்றவற்றினால் நேரடியாக வருகைத்தந்து கொடுப்பனவு செய்யும் முறையை இலகுபடுத்தும் பொருட்ட இலத்திரனியல் - பொறிமுறைக்கு மாறுமாறு வலியுறுத்தியது. இதனால் 70% பெரிய துறைகள் இலத்திரனியல் பயன்முறையில் உள்ளன. 2021 ஆம் ஆண்டில், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் இணைய வழிமுறையிலான பொறிமுறையில் வர விரும்பாத வாடிக்கையாளருக்கு நேரடி வைப்பு வசதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த அமைப்பின் மூலம் இலங்கையில் உள்ள எந்தவொரு வங்கி வலையமைப்பு மூலமாகவும் பணம் செலுத்த முடியும். கோவிட் -19 தொற்றுநோய் தாக்கப்பட்ட காலத்தில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக பங்களிப்புத் தொகைகயை செலுத்துவதற்கு சலுகைக் காலமும் வழங்கப்பட்டது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியின் சமூகப் பாதுகாப்பு நிதியானது தற்போதைய சூழலில் மிகவும் முக்கியமானது, ஏனெனில் அது அங்கத்தவர்களுக்கு நிதிப் பாதுகாப்பு கட்டமைப்பை வழங்குகின்றது.

2022 டிசம்பர் மாதத்தில், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் மேலதிக விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது, அதற்கமைய, ஒவ்வொரு தொழில் வழங்குநரும் தனக்கு கீழ் குறைந்தபட்சம் பதினைந்து (15) ஊழியர்கள் வேலையில் ஈடுபட்டிருந்தால் 2023.02.01 ஆம் திகதி முதல் இணையவழியில் பங்களிப்புத் தொகை செலுத்துவது கட்டாயமாகும். இந்த புதிய அபிவிருத்தியின் விளைவாக, இணைய முறையில் பணம் செலுத்தும் தொழில் வழங்குநர்களின் எண்ணிக்கை 70% அதிகரித்துள்ளது.

# அங்கத்துவ சேவைகள்

அங்கததவர் உரிமைகோரல்களைச் செயலாக்குவதற்கும் 10 நியதிச்சட்டமல்லாத நலன் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் அங்கத்தவர் சேவைகள் பிரிவு பொறுப்பாகும். அங்கத்தவர் கணக்குகளை புதுப்பித்தல், ஆண்டு அங்கத்தவர் அறிக்கைகளை வழங்குதல் மற்றும் ஒதுக்கப்படாத அங்கத்துவக் கணக்குகளை நீக்குதல் ஆகியவற்றிற்கும் இந்தப் பிரிவு பொறுப்பாகும்.

## அங்கத்தவர் உரிமைக் கோரல்களைத் தயாரித்தல்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை 2023 ஆம் ஆண்டில் இறப்பு உரிமைகோரல்கள் உட்பட 240,888 மீளளிப்பு கோரிக்கைகளை செயல்படுத்தி மொத்தம் 39 பில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது. மீளாய்வுக்குறிய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் 195,212 மீளளிப்புக் கோரிக்கைகளுக்காக 25 பில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது.

| | 2023 டிசம். 31 | 2022 டிசம். 31 | 2023 ஆம் ஆண்டுக்குள் வித்தியாசம் |
|---|---|---|---|
| **மீளளிக்கப்பட்ட உரிமைக்** | | | |
| தாயனிக்கப்பட்ட அங்கத்தவர் உரிமைக் | 240,888 | 195,212 | 23.09% |
| கோரல்கள் செலுத்தப்பட்ட தொகை (ரூ.பில்) | 39 | 25 | 56% |

## அங்கத்தவர் நலன்கள்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையில் எமது உறுப்பினர்களின் நலனுக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. 1986 ஆம் ஆண்டு முதல் நாம் எமது அங்கத்தவர்களுக்கு பல்வேறுபட்ட நியதிச்சட்டமல்லாத சலுகைகளை வழங்கி வருகின்றோம். தற்போது, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் அங்கத்தவர்கள் 10 விதமான நியதிச்சட்டமல்லாத நலத் திட்டங்களின் பயன்களை அனுபவித்து வருகின்றனர். அவற்றின் மூலம் அவர்களுக்கு பங்களிப்பு இல்லாத நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன.

இதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மற்றும் உள்விழி லென்ஸ்கள் மற்றும் நிரந்தர ஊனம் மற்றும் இறப்புக்கான நலன்கள் மற்றும் சிரமசு ரெகவரன வைத்தியசாலை அனுமதிச் செலவுள் மீளளிப்பு என்பவற்றின் கீழ் உள்ள நலன்களுக்காக 2023 ஆம் ஆண்டில் அங்கத்தவர்களுக்கு 352 மில்லியன் ரூபா வரை பணப் பங்களிப்பு இல்லாத இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

தனிப்பட்ட ஊழியர்கள் என்ற அடிப்படையில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அங்கத்தவர்களுக்கு நேரடியாக வழங்கப்படும் சலுகைகளுடன் எமது அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் நாம் நலன்களை வழங்குகின்றோம். ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த (உயர் தரப்) பரீட்சை மற்றும் அங்கத்தவர்களின் பிள்ளைகளினது கல்வி சாதனைகளுக்காக ஆண்டுதோறும் நிதி உதவி வழங்கி அவர்களுடன் இணைந்து மகிழ்ச்சியைக் கொண்டாடுகின்றோம்.

## அங்கத்தவர் கணக்குகளைப் பேணிவரல்

ஆண்டின் இறுதியில், நிதியத்துடன் செயல்வலுவில் உள்ள மற்றும் செயலற்ற கணக்குகளின் எண்ணிக்கை அண்ணளவாக 18.95 மில்லியனாக காணப்பட்டது. மேலும் அந்த அங்கத்தவர் கணக்குகளில் 98 சதவீதம் 2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள் புதுப்பிக்கப்பட்டன. இந்த அங்கத்தவர் கணக்குகளில் 16.45 மில்லியன் செயலற்றதாகவும், 2.5 மில்லியன் அங்கத்தவர் கணக்குகள் செயலில் இருப்பதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது. மீளாய்வுக்குரிய ஆண்டில் செயல்பாட்டில் உள்ள கணக்குகளுக்கான வருடாந்த அங்கத்தவர் அறிக்கைகள் உரிய தொழிற்வழங்குநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை தற்போது தனது சொந்த நிதிக்காக ஒரு சிறந்த அங்கத்தவர் நோக்குநிலையுடன் இணையவழி கணினி போர்ட்டலைத் தொடங்குவதற்கான செயல்பாட்டில் உள்ளது. (உரிய தகவல் தொழில்நுட்ப பிரிவின் கீழ் தரப்பட்டுள்ளன.)





| ஊ.ந.பொ.நி. சபையின் அங்கத்தவர்களுக்கான நியமிச்சட்டமல்லாத நலத்திட்டங்கள் | | |
|---|---|---|
| **நலத்திட்டம் (ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு)** | **2023 பயனாளிகள் எண்ணிக்கை (ரூ. '000)** | **2022 பயனாளிகள் எண்ணிக்கை (ரூ. '000)** |
| இலவசமாக வழங்கப்படும் ஆயுட் காப்புறுதி (1986) | அங்கத். 1,574<br>ரூ.மில். 156,593 | அங்கத். 1,502<br>ரூ.மில். 149,236 |
| நிரந்தர அங்கவீன காப்புறுதித் திட்டம் (1989) | அங்கத். 99<br>ரூ.மில். 22,799 | அங்கத். 52<br>ரூ.மில். 8,762 |
| இருதய சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி (1991) | அங்கத். 471<br>ரூ.மில். 141,660 | அங்கத். 359<br>ரூ.மில். 98,048 |
| உள்ளக கண் வில்லைப் பொருத்தும் செலவு மீளளிப்பு (1992) | அங்கத். 328<br>ரூ.மில். 7,281 | அங்கத். 294<br>ரூ.மில். 4,231 |
| ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் நிதியுதவி (1994) நிரந்தர அங்கவீனர்களின் பிள்ளைகளும் உட்பட (2010) | அங்கத்.*12,856<br>ரூ.மில். 196,840 | மாணவர். *5,778<br>ரூ.மில். 86,670 |
| 'சிரமசுவ' வைத்தியசாலை அனுமதி மருத்துவக் காப்புறுதித் திட்டம் (1997) | அங்கத். 868<br>ரூ.மில். 19,758 | அங்கத். 1,365<br>ரூ.மில். 23,477 |
| வியன வீட்டுக்கடன் திட்டம் (2002 ஜுன்) | - | - |
| சிறுநீரகம் பொருத்துவதற்கான சத்திரசிகிச்சை நிதியுதவி (1991) | அங்கத். 16<br>ரூ.மில். 5,112 | மாணவர். 17<br>ரூ.மில். 3,646 |
| க.பொ.த. (உயர் தரம்) பரீட்சையில் சித்தியடையும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை அங்கத்தவரக்ளின் பிள்ளைகளுக்கு உயர் கல்விக்கான புலமைப் பரிசில் (2010 ஆம் ஆண்டு முதல்) | அங்கத்.*6,148<br>ரூ.மில். 73,776 | *3,859<br>ரூ.மில். 46,308 |
| **செலுத்தப்பட்ட மொத்த நியதிச்சட்டமல்லாத அங்கத்தவர் நலன்கள்** | **LKR.623,819** | **LKR.420,378** |

** 2023 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் தொகை மற்றும் புலமைப் பரிசில்களின் எண்ணிக்கை*

# நிர்வாகம் மற்றும் மனித வளம்

ஓய்வுபெறுகை மற்றும் பதவி விலகல் காரணமாக 2022 ஆம் ஆண்டில் 924 ஆக இருந்த ஆளணி எண்ணிக்கை சிறு மாற்றத்துடன் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் ஆளணி எண்ணிக்கை 882 ஆகும்.

| மட்டம் | தோழில் தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சிரேஸ்ட | பொது முகாமையாளர் | 1 | - | 1 |
| | மேலதிக பொது முகாமையாளர் | - | - | - |
| | பிரதிப் பொது முகாமையாளர் | 5 | - | 5 |
| | உதவிப் பொது முகாமையாளர் | 2 | 2 | 4 |
| | முகாமையாளர் | 24 | 18 | 42 |
| | **மொத்தம்** | **32** | **20** | **52** |
| மூன்றாம் நிலை | கனிஸ்ட முகாமையாளர் | 28 | 31 | 59 |
| | முகாமைத்துவ உதவியாளர் | 80 | 113 | 193 |
| | **மொத்தம்** | **108** | **144** | **252** |
| இரண்டாம் நிலை | முகாமைத்துவ உதவியாளர் 2-2 | - | 1 | 1 |
| | முகாமைத்துவ உதவியாளர் 1-2 | 158 | 274 | 432 |
| | **மொத்தம்** | **158** | **275** | **433** |
| ஆரம்பநிலை | ஆரம்ப மட்டம் | 120 | 25 | 145 |
| | **மொத்தம்** | **120** | **25** | **145** |
| **மொத்தம்** | | **444** | **438** | **882** |

### ஆளணி வயது அடிப்படையில்

| ஆளணி வயது அடிப்படையில் (2023.12.31 திகதிக்கு) வயதுப் பிரிவு வருடங்கள் | | |
|---|---|---|
| 21-25 | 3 | 1% |
| 26-30 | 92 | 10% |
| 31-35 | 129 | 15% |
| 36-40 | 152 | 17% |
| 41-45 | 119 | 13% |
| 46-50 | 99 | 11% |
| 51-55 | 169 | 19% |
| Above 55 | 119 | 14% |
| **மொத்தம்** | **882** | **100%** |

### ஆளணி தொழில் தரம் அடிப்படையில்

| | தொழில் தரம் | மொத்தம் | % |
|---|---|---|---|
| சிரேஸ்ட | பொது முகாமையாளர் | 1 | 0.12% |
| | மேலதிக பொது முகாமையாளர் | 5 | 0.56% |
| | பிரதிப் பொது முகாமையாளர் | 4 | 0.45% |
| | உதவிப் பொது முகாமையாளர் | 42 | 4.76% |
| | **மொத்தம்** | **52** | **5.88%** |
| மூன்றாம் நிலை | கனிஸ்ட முகாமையாளர் | 59 | 6.68% |
| | முகாமைத்துவ உதவியாளர் 4 | 193 | 21.88% |
| | **மொத்தம்** | **252** | **28.68%** |
| இரண்டாம் நிலை | முகாமைத்துவ உதவியாளர் 2-2 | 1 | 0.12% |
| | முகாமைத்துவ உதவியாளர் 1-2 | 432 | 48.97% |
| | **மொத்தம்** | **433** | **48.97%** |
| ஆரம்ப நிலை | ஆரம்ப மட்டம் | 145 | 16.43% |
| | **மொத்தம்** | **145** | **16.43%** |
| **மொத்தம்** | | **882** | **100%** |

### ஆளணி பாலினம் அடிப்படையில்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் ஆளணி ஆண் மற்றும் பெண் வீதம் 2023 ஆம் இறுதியில் 50.4:49.6 ஆக காணப்பட்டது.

| ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|
| 444 | 438 | 882 |
| 50.4% | 49.6% | 100% |

### ஆளணி வயதின் அடிப்படையில்

| | |
|---|---|
| பிரதான அலுவலகம் | 365 |
| கிளை அலுவலகங்கள் | 417 |
| மொத்தம் | 882 |

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் ஊழியர்கள் 882 பேரில் 505 பேர் பிரதான அலுவலகத்திலும் 337 பேர் கிளை அலுவலகங்களிலும் பணியாற்றுகின்றனர்.

| விபரம் | நிறைவேற்றுத் தரம் | நிறைவேற்றுத் தரம் அல்லாத | மொத்தம் |
|---|---|---|---|
| ஓய்வு பெறகை | 4 | 18 | 22 |

### ஊழியர் இடமாற்றங்கள்

ஊழியர்களின் வேண்கோளின் பேரில் அவர்களின் வசதிக்காக வருடத்திற்குள் சில இடமாற்றங்கள் செய்யப்பட்டன.

### சம்பளம் மற்றும் நலன்கள்

சபையின் அனைத்து ஊழியர்களும் நிரந்தரப் பதவி வகிக்கின்றனர். நியதிச்சட்ட நிறுவனமொன்றில் ஊழியர்கள் என்ற ரீதியில் அவர்கள் தமது அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக பல நலன்களை அனுபவிக்கின்றனர்.

| | 2023 ரூ. '000 | 2022 ரூ. '000 | வித்தியாசம் % |
|---|---|---|---|
| சம்பளம் | 499,389 | 598,118 | (16.5)% |
| வாழ்க்கைச் செலவுப் படி | 82,056 | 87,785 | (6.5)% |
| உணவுக் கொடுப்பனவு | 12,854 | 13,649 | (5.8)% |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 23,582 | 21,587 | 9.2% |
| லீவுக்கான சம்பளம் | 11,940 | 9,546 | 25% |
| **மொத்தம்** | **629,822** | **730,685** | **(13.8)%** |

## நலன்கள்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் ஊழியர்கள் வழங்கப்படும் பல சலுகைகளுக்கு தகுதியுடையவர்கள். தரம் அடிப்படையிலான ஊக்கத்தொகை, மருத்துவக் கட்டணத் திருப்பிச் செலுத்தும் வசதிகள், வருடாந்த போனஸ் மற்றும் பல்வேறு கடன்கள், உயர் கல்வித் தகுதிகளுக்கான சம்பள உயர்வுப் நலன்கள் மற்றும் நிரந்தர ஊனம் அல்லது ஊழியரின் இறப்புக்கான இழப்பீடு ஆகியவை உள்ளடங்கும்.

| | 2023 ரூ. '000 | 2022 ரூ. '000 | வித்தியாசம் % |
|---|---|---|---|
| ஊக்குவிப்புக் கொடுப்பனவு | 131,941 | 137,573 | (4)% |
| சீருடைகள் மற்றும் தையல் செலவுகள் | 16,801 | 17,664 | (4.8)% |
| விசேட ஓய்வூதிய போனஸ் கொடுப்பனவு | 900 | 1,406 | (36)% |
| தேனீர் மற்றும் ஏனைய ஆளணி நலன்புரிச் செலவினங்கள் | 16,019 | 10,241 | 56% |
| லீவு தினங்களுக்கான கொடுப்பனவு | 28,144 | 33,775 | (17)% |
| வருடாந்த போனஸ் கொடுப்பனவு | 80,801 | 103,408 | (22)% |
| மருத்துவச் செலவினங்களை மீளளித்தல் | 128,197 | 119,713 | 7% |
| வீட்டுக் கடனுக்கான வட்டி | 8,963 | 9,805 | (8.5)% |
| வட்டிச் செலவினம் | 38,786 | 24,872 | 56% |
| தற்போதைய சேவைச் செலவு | 9,548 | 46,018 | (79)% |
| ஊ.சே.நி | 95,466 | 97,249 | (1.8)% |
| ஊ.ந.பொ.நி. | 19,157 | 19,450 | (1.5)% |
| தோலைப்பேசிப் பட்டியல்களை மீளளிப்புச் செய்தல் | 4,007 | 4,187 | (4.3)% |
| **மொத்தம்** | **578,730** | **625,361** | **(7.5%)** |

## ஊக்குவிப்புக் கொடுப்பனவு

தரங்களின் அடிப்படையில் ஊக்குவிப்புக் கொடுப்பனவுக்கு மாதாந்த அடிப்படையில் வழங்கப்படும் வருகைத்தரு மற்றும் செயலாற்றுகை ஊக்குவிப்புக் கொடுப்பனவு உள்ளடக்கப்பட்டுள்ளது.

## மருத்துவ வசதிகள்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் ஊழியர்களின் மருத்துவ வசதிகளுக்கு பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றன.

- ஒரு ஊழியருக்கு ரூ. 60இ000.00 வரை வருடாந்த வெளி நோயாளர் வைத்திய சேவைகளுக்கான நிதி மீளளிப்பு
- ஒரு ஊழியருக்கு வருடாந்தம் ரூ. 100,000.00 வரையில் வைத்தியசாலை அனுமதிக்கான செலவுகள் மீளளிப்பு.

## ஊழியரின் நிரந்தர அங்கவீனம் அல்லது மரணத்திற்கான நட்டஈடு

| சம்பவம் | தரம்/ பதவி | நட்டஈட்டின் அளவு |
|---|---|---|
| ஊழியரின் மரணம் | தவிசாளர் / செயற்பாட்டுப் பணிப்பாளர் | 1,500,000.00 |
| | உயர் முகாமைத்துவம் (2-1), | - |
| | உயர் முகாமைத்துவம் (2-1), (1-3) மற்றும் (1-1) | 1,450,000.00 |
| | நடுத்தர முகாமைத்துவம் (1-3) | 1,350,000.00 |
| | கனிட்ட முகாமைத்துவம் (1-1) | 1,250,000.00 |
| | முகாமைத்துவ உதவியாளர் (4) | 1,125,000.00 |
| | முகாமைத்துவ உதவியாளர் (2-2), (1-2) | 1,000,000.00 |
| | ஆரம்ப மட்டம் (1), (2), (3) | 875,000.00 |

| சம்பவம் | தரம்/ பதவி | நட்டஈட்டின் அளவு |
|---|---|---|
| நிரந்தர அங்கவீனம் | தவிசாளர் / செயற்பாட்டுப் பணிப்பாளர் | 1,750,000.00 |
| | உயர் முகாமைத்துவம் (2-1), (1-3) மற்றும் (1-1) | 1,700,000.00 |
| | நடுத்தர முகாமைத்துவம் (1-3) | 1,650,000.00 |
| | கனிட்ட முகாமைத்துவம் (1-1) | 1,500,000.00 |
| | முகாமைத்துவ உதவியாளர் (4) | 1,350,000.00 |
| | முகாமைத்துவ உதவியாளர் (2-2), (1-2) | 1,200,000.00 |
| | ஆரம்ப மட்டம் (1), (2), (3) | 1,050,000.00 |

### வருடாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு

டிசம்பர் மாதத்தில் வழங்கப்படும் வருடாந்த போனஸ் கொடுப்பனவு, வாழ்க்கைச் செலவுப் படி உள்ளடங்களாக இரண்டு மாதகால அடிப்படைச் சம்பளத்திற்கு சமனாக வழங்கப்படும்.

### கடன்

**விசேட கடன் அட்டவணை**

| | |
|---|---|
| கடன் தொகை | ரூ. 100,000.00 |
| மீளமைக்கப்பட்ட காலப் பகுதி | தவணைகள் 60 |
| வட்டி | வருடாந்த 4.2% |

**வீட்டுக் கடன்**

| | |
|---|---|
| கடன் தொகை | ரூ. 3,000,000.00 |
| மீளமைக்கப்பட்ட காலப் பகுதி | 25 வருடங்ள் அல்லது 60 வயது பூர்த்தியடைதல் |
| வட்டி | 1 ஆவது ரூ. 2,000,000 வருடத்திற்கு 4.2% |
| | மீதி ரூ. 1,000,000 வருடத்திற்கு 7.0% |

**வாகனக் கடன்**

எந்தவொரு ஊழியருக்கும் துவிச்சக்கர வண்டிக் கடன், வாகனக் கடன், முச்சக்கர வண்டிக் கடன் மற்றும் மோட்டார் சைக்கிள் கடன் ஆகியவற்றில் ஒரு கடனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

| | | |
|---|---|---|
| மோட்டார் வாகனம் | கடன் தொகை | ரூ 1,250,000.00 (MA 1-2 மற்றும் அதற்கு மேல்) |
| | | ரூ. 2,500,000.00 (MA 4 மற்றும் அதற்கு மேல்) |
| | மீளமைக்கப்பட்ட காலப்பகுதி | 15 வருடங்கள் |
| | வட்டி | வருடாந்தம் 4.2% |
| முச்சக்கர வண்டி | கடன் தொகை | ரூ. 900,000.00 |
| | மீளமைக்கப்பட்ட காலப்பகுதி | 15 வருடங்கள் |
| | வட்டி | வருடாந்தம் 4.2% |
| மோட்டார் சைக்கிள் | கடன் தொகை | ரூ. 500,000.00 |
| | மீளமைக்கப்பட்ட காலப்பகுதி | 10 வருடங்கள் |
| | வட்டி | வருடாந்தம் 4.2% |

| | | |
|---|---|---|
| துவிச்சக்கர வண்டி | கடன் தொகை | ரூ. 25,000.00 |
| | மீளமைக்கப்பட்ட காலப்பகுதி | 36 தவணைகள் |
| | வட்டி | வருடாந்தம் 4.2% |

**இடர் கடன்**

| | |
|---|---|
| கடன் தொகை | 12 மாத சம்பளம் |
| மீளமைக்கப்பட்ட காலப் பகுதி | 120 தவணைகள் |
| வட்டி | வருடாந்தம் 4.2% |

### மேலதிக சம்பள ஏற்றங்கள் - உயர் கல்வித் தகைமைகள்

உயர் கல்வித் தகைமைகளுக்கு மேலதிக சம்பள ஏற்ற நன்மை வழங்கப்படுவது தொழில் உயர் கல்வித் தகைமைகளுக்கு மேலதிக சம்பள ஏற்ற நன்மை வழங்கப்படுவது தொழில் தரத்தின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் தகைமைகளின் அடிப்படையிலாகும்.

| தொழில் வகை | தகைமை | விசேட சம்பள ஏற்றங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| முகாமைத்துவ உதவியாளர் (1-2) மற்றும் (4) | டிப்ளோமா | 01 |
| | பட்டம் | 02 |
| | முதுமாணிப் பட்டம் | 03 |
| எந்தவொரு தரத்திற்கும் | முதுமாணிப் பட்டம் | 03 |

### உயர் கல்விக்கான செலவுகள் மீளளிப்பு

விடயத்துறைக்கு ஏற்புடைய கல்விக் கட்டணங்கள், உரிய நியம நிபந்தனைகளுடன் ரூ. 400,000/- வரை மீளளிப்புச் செய்ய முடியும்.

| ரூ. | 2023 | 2022 | 2021 |
|---|---|---|---|
| உயர் கல்வித் தகைமைகளுக்கான செலவுகள் மீளளிப்பு | 6,163,469 | 3,515,594 | 2,358,826 |

**மனிதவள நடவடிக்கைகள்**

பின்வரும் விடயங்கள் உட்பட 2023 ஆம் ஆண்டில் நாம் எமது அன்றாட சாதாரண மனித வள செயற்பாடுகள் சிலவற்றை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்துள்ளோம்.

- ஊழியர்களுக்கு ஆளணிக் கடன் வழங்குதல்
- மருத்துவ மீளளிப்பு வசதிகள்

- சபையின் வருடாந்த சொத்துக்கள் சரிபார்ப்பு சாதாரண அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.
- தவறிழைக்கும் ஊழியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## பயிற்சி மற்றும் அபிவிருத்தி

செயலாற்றுகை மட்டங்களை உயர்த்துவதற்கான திறனை வளர்க்கும் நோக்கத்துடன் 2023 ஆம் ஆண்டில் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் திட்டமிடப்பட்டன. இதன் விளைவாக, 2022 ஆம் ஆண்டில் செலவழிக்கப்பட்ட ரூ. 425,222.50 உடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டில் ரூ.5,947,739.41 தொகை பயிற்சி மற்றும் அபிவிருத்தி முதலீட்டிற்காக செலவிடப்பட்டது. அங்கத்தவர்களை மையப்படுத்திய அமைப்பிற்கு மாற்றுவதற்கு வசதியாக ICTA தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் கருத்திட்டப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் மற்றும் வெளிப்புறப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களிலும் பணியாளர்கள் பங்குகொண்டனர்.

### பயிற்சிகள் - 2023

| | பயிற்சி வகை | நிறுவனம் | பங்கேற்றவர்களின் எண்ணிக்கை/ பெயர் | செலவினம் |
|---|---|---|---|---|
| 1 | நலன்கள் தொடர்பான | அங்கத்தவர் சேவைகள் | 80 | 112,890.00 |
| 2 | அலுவலகத்தின் கணினிப் பாவனை | பட்டய கணக்காளர் நிறுவனம் | 7 | - |
| 3 | UAT புதிய அமைப்பு - Employer Management | ICTA | 36 | 38,065.00 |
| 4 | UAT புதிய அமைப்பு - Employer Management | ICTA | 36 | 38,065.00 |
| 5 | புதிய தொழில் சட்டங்கள் | தொழிற் கல்வி நிலையம் | 1 | 2,500.00 |
| 6 | SLPSAS 11-20 நிகழ்ச்சித்திட்டம் | பட்டய கணக்காளர் நிறுவனம் | 1 | - |
| 7 | புதிய ICTA நிகழ்ச்சித்திட்ட அறிமுகம் | | 37 | 26,688.00 |
| 8 | புதிய அமைப்பு UAT - அங்கத்தவர் முகாமைத்துவம் | ICTA | 65 | 113,530.00 |
| 9 | புதிய அமைப்பு UAT - அங்கத்தவர் உறவுகள் | ICTA | 69 | 108,710.00 |
| 10 | புதிய அமைப்பு UAT - அங்கத்தவர் முகாமைத்துவம் | ICTA | 55 | 99,000.00 |
| 11 | புதிய அமைப்பு UAT - அங்கத்தவர் உறவுகள் | ICTA | 50 | 90,810.00 |
| 12 | புதிய அமைப்பு UAT - சுய தொழில் | ICTA | 50 | 95,060.00 |
| 13 | புதிய அமைப்பு UAT - பங்களிப்புத் தொகை | ICTA | 55 | 279,802.00 |
| 14 | புதிய அமைப்பு UAT - பங்களிப்புத் தொகை சீராக்கம் | ICTA | 49 | 89,930.00 |
| 15 | புதிய அமைப்பு UAT - வேறுபடுத்தல் | ICTA | 34 | 68,560.00 |
| 16 | புதிய அமைப்பு ருயுவு - அழைப்பு நிலையம் | ICTA | 63 | 96,755.00 |
| 17 | புதிய அமைப்பு UAT -செயற்படுத்தல் 1 | ICTA | 69 | 208,320.00 |
| 18 | புதிய அமைப்பு UAT -செயற்படுத்தல் 2- | ICTA | 60 | 233,400.00 |
| 19 | புதிய அமைப்பு UAT - சட்டம் | ICTA | 70 | 113,405.00 |
| 20 | புதிய அமைப்பு UAT மேலதிகக் கட்டணம் | ICTA | 50 | 90,810.00 |
| 21 | அடிப்படை அமைப்பு பற்றி அறிவூட்டல் - வலயம் 03 அலுவலகம் | ஹம்பாந்தோட்டை | 100 | 88,090.00 |
| 22 | புதிய அமைப்பு ருயுவு பங்களிப்புத் தொகை திருத்தங்கள் | INOVA & ICT | 55 | 187,890.00 |
| 23 | Enadoc ஆவண முகாமைத்துவ அமைப்பு (மென்பொருள் ஸ்கேன் செய்தல்) | 1/2 நாள் | 60 | 64,620.00 |
| 24 | புதிய அமைப்பு UAT - நலன் பொது மீள எடுத்தல் | INOVA & ICT | 63 | 211,235.00 |
| 25 | செலவினம் மற்றும் கொடுப்பனவு நடவடிக்கைமுறை பற்றிய கருத்தரங்கு | ஒருநாள் பயிற்சி | 2 | 24,000.00 |
| 26 | புதிய அமைப்பு ருயுவு - நலன் பொது மீள எடுத்தல் | INOVA & ICT | 55 | 220,020.00 |

| | பயிற்சி வகை | நிறுவனம் | பங்கேற்றவர்களின் எண்ணிக்கை/ பெயர் | செலவினம் |
|---|---|---|---|---|
| 27 | புள்ளி விபரங்களுக்கான கணினித் தரவுகள் தொடர்பான செயலமர்வு | புள்ளிவிபரத் திணைக்களம் | 1 | - |
| 28 | அடிப்படை அமைப்பு பற்றி அறிவூட்டல் - வலயம் 01 அலுவலகம் | நீர்கொழும்பு | 60 | 120,000.00 |
| 29 | புதிய அமைப்பு ருயுவு - கொடுப்பனவுகளை விடுவித்தல் | INOVA & ICT | 25 | 66,110.00 |
| 30 | NPC 2020 விருதுவென்றவர்களைப் பாராட்டுதல் | நிர்வாகப் பிரிவு | 110 | 56,860.00 |
| 31 | புதிய அமைப்பு UAT - ஆவண முகாமைத்துவ அலகு | INOVA & ICT | 50 | 90,220.00 |
| 32 | புதிய அமைப்பு UAT - பொது போர்டல் தொழில் வழங்குநர் | INOVA & ICT | 45 | 85,230.00 |
| 33 | புதிய அமைப்பு UAT - பொது போர்டல் அங்கத்தவர் | INOVA & ICT | 49 | 96,440.00 |
| 34 | தேசிய மனிதவள சம்மேளனம் | CIPM Sri Lanka | 3 | 59,850.00 |
| 35 | அடிப்படை அமைப்பு பற்றி அறிவூட்டல் - வலயம் 02 அலுவலகம் | கண்டி | 55 | 83,800.00 |
| 36 | புதிய அமைப்பு ருயுவு - பொதுப் போர்டல் பிரதிநிதி | INOVA & ICT | 23 | 64,454.00 |
| 37 | புதிய அமைப்பு ருயுவு - நலன் உரிமைகள் | INOVA & ICT | 50 | 90,810.00 |
| 38 | புதிய அமைப்பு ருயுவு - புலமைப் பரிசில் உரிமைகள் | INOVA & ICT | 50 | 104,710.00 |
| 39 | அடிப்படை அமைப்பு பற்றி அறிவூட்டல் - வலயம் 03 அலுவலகம் | அநுராதபுரம் | 38 | 78,900.00 |
| 40 | HRIS | நிர்வாகம் மற்றும் மனிதவளப் பிரிவு | 41 | - |
| 41 | HRIS | நிர்வாகம் மற்றும் மனிதவளப் பிரிவு | 62 | - |
| 42 | க.பொ.த. உயர் தரம் நலன் பற்றி அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | அங்கத்தவர் சேவைகள் | 120 | 12,500.00 |
| 43 | CCNA அடிப்படையிலான தொழில்முயற்சி வலையமைப்பை நடைமுறைப்படுத்தல் | இலங்கை டெலிகொம் | 2 | - |
| 44 | அரசாங்க கொள்முதல் நடவடிக்கை | நிதி அமைச்சு | 45 | 17,390.00 |
| 45 | க.பொ.த. உயர் தரம் நலன் பற்றி அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | அங்கத்தவர் சேவைகள் | 100 | 12,000.00 |
| 46 | AAT கருத்தரங்கு 2023 | AAT | 5 | 74,250.00 |
| 47 | HRIS - லீவுப் பொதி | நிர்வாகம் மற்றும் மனிதவளப் பிரிவு | 350 | 17,500.00 |
| 48 | வாடிக்கையாளர் சேவை | நிர்வாகம் மற்றும் மனிதவளப் பிரிவு | 40 | 12,830.00 |
| 49 | முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் | நிர்வாகம் மற்றும் மனிதவளப் பிரிவு | 50 | 106,670.00 |
| 50 | பட்டய கணக்காளர் நிறுவனத்தின் தேசிய மாநாடு - 2023 | CA Sri Lanka | 3 | 90,000.00 |
| 51 | அரசாங்க கொள்முதல் அமைப்பு | நிதி அமைச்சு | 45 | 12,500.00 |
| 52 | முகாமைத்துவ மற்றும் கோவையிடல் அமைப்பு | SLIDA | 40 | 138,611.11 |
| 53 | முகாமைத்துவ மற்றும் கோவையிடல் அமைப்பு | SLIDA | 40 | 138,611.11 |
| 54 | போக்குவரத்து முகாமைத்துவம் | SDFL | 2 | 12,000.00 |
| 55 | HRIS பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | நிர்வாகம் மற்றும் மனிதவளப் பிரிவு | 47 | - |
| 56 | HRIS பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | நிர்வாகம் மற்றும் மனிதவளப் பிரிவு | 37 | - |
| 57 | HRIS பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | நிர்வாகம் மற்றும் மனிதவளப் பிரிவு | 30 | - |
| 58 | கொள்முதல் திட்டம் 2024 ஐ தயாரித்தல் பற்றிய கருத்தரங்கு | PRAG Service(Pvt) Ltd | 2 | 27,000.00 |

# தகவல் தொழில்நுட்பம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளில் முதலீடு

## "மெஹவர பியஸ" வளாகத்தில் வைபை (WI-FI) வலைத்தள வசதிகள் அபிவிருத்தி

முப்பதுக்கும் (30) மேற்பட்ட சேவைப் பெறுநர்கள் ஒரு குறிப்பிட்ட இணைய அணுகல் அலகுடன் இணைந்திருந்தால், அத்தகைய இடம் அதிக அடர்த்தியான சூழலாக வகைப்படுத்தப்படும். பிரதான அலுவலகம் இணைய சேவையின் அதிக அடர்த்தியான சூழலாக அடையாளம் காணப்பட்டுள்ளது. உயர் - அடர்த்தி கம்பி இணைப்பற்ற சேவைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக, நிறுவன தர அணுகல் புள்ளிகள் வானலை அதிர்வெண்களைக் கண்காணிப்பதற்கு பிரத்தியேக வானலை வலையமைப்புடன் அமைக்கப்பட்டு, அதிக அடர்த்தியான சூழலைக் கையாள அணுகல் வசதிகளுக்கு இடமளிக்கின்றது. வலையமைப்பு சேவையின் செயல்திறனைப் புரிந்துகொள்வதற்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் பயன்படுத்த முடியுமான அந்த வலையமைப்பின் செயல்திறன், பாதுகாப்பு மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் வலையமைப்பு சேவை போக்குவரத்து நடத்தை பற்றிய சிறந்த புரிதலைப் பெற்றுக்கொள்ள சபை அனுமதிக்கும் நேரடி அணுகுமுறை இந்த தொடர்புடைய வலையமைப்பு சேவையினால் வழங்கப்படுகின்றது. "Mehewara Piyasa" (Wi-Fi) வலையமைப்பு சேவைகள் தொடர்பான உட்கட்டமைப்பு மேம்பாட்டை செயல்படுத்தும் செயல்முறை ஏற்கனவே திட்டமிட்டபடி வெற்றிகரமாக நிறைவு செய்யட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்க வலையமைப்புச் சேவைக்கான (LGN) தொடர்பு, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் பிரதான அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

## ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் வரையறுக்கப்பட்ட பரந்த பிரதேச வலையமைப்பு (SD-WAN)

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையில் உள்ள பெரும்பாலான கட்டமைப்புகள் இணைய அடிப்படையிலான தீர்வுகள் என்பதால் தலைமை அலுவலக வலையமைப்புச் சேவை மற்றும் பிராந்திய அலுவலக வலையமைப்புச் சேவைகளை ஒன்றோடொன்று இணைக்க மென்பொருள் வரையறுக்கப்பட்ட பரந்த பகுதி வலையமைப்பை (SD-WAN) செயற்படுத்த வேண்டியது அவசியமாகும். மென்பொருள் வரையறுக்கப்பட்ட பரந்த பகுதி வலையமைப்புச் சேவையை செயற்படுத்துவதன் மூலம், பயர்வோல் பாதுகாப்பு முறைகள் மற்றும் மையமாக நிர்வகிக்கப்படும் கொள்கைகளை பிராந்திய அலுவலகங்களுக்கும் பயன்படுத்திக்கொள்ளலாம். மென்பொருள் வரையறுக்கப்பட்ட பரந்த பகுதி வலையமைப்புச் சேவையை அறிமுகப்படுத்துவதன் மூலம், விலையுயர்ந்த மெய்நிகர் தனியார் வலையமைப்பு (VPN) இணைப்புகளுக்குப் பதிலாக குறைந்த விலை இணைய இணைப்புக்களை ஸ்தாபிக்க முடியும். மென்பொருள் வரையறுக்கப்பட்ட பரந்த பகுதி வலையமைப்புச் சேவையானது இணைய வழி தொடர்பான முடிவுகளுடன் பல இணைப்பு வகைகளுக்கு ஒத்துழைக்கும் வகையில் நன்கு நிலைநிறுத்தப்பட்டுள்ளது. 4G / 5G தொழில்நுட்பம் மற்றும் புரோட்பேண்ட் முறையின் தெரிவு பல்வேறு சூழ்நிலைகளில் அர்த்தமுள்ள ஒரு பரிமாற்ற வழிமுறையாக மாற்றமடைகின்றது. கிடைக்கக்கூடிய சிறந்த இணைப்பின் அடிப்படையில், எங்களால் சமநிலையை ஏற்றவோ அல்லது அவற்றைப் பகிரவோ முடியும். மென்பொருள் கட்டுப்பாட்டின் தன்மை என்பது, வணிகத் தொடர்ச்சியை உறுதி செய்வதற்காக பயன்பாடு மற்றும்/அல்லது பயனர் முறைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் இடர் மீட்பு (DR) திட்டங்களைச் செயல்படுத்துவதாகும். மென்பொருள்-வரையறுக்கப்பட்ட பரந்த பகுதி வலையமைப்பு, சேவை வழங்குநர்கள், பயன்பாடு மற்றும் பயனர் நடத்தை பற்றிய தரவுகளை எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய நுணுக்கத்துடன் முன்பை விட வலையமைப்பில் அதிகத் தெரிவுநிலையை வழங்குகின்றது. இந்த மென்பொருள் வரையறுக்கப்பட்ட பரந்த பகுதி வலையமைப்புச் சேவை திட்டத்தை செயல்படுத்துவதற்கான செயல்முறை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்தக் கருத்திட்டத்தை 2024 ஆம் ஆண்டில் நிறைவுசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

## பிராந்திய அலுவலகங்களை அண்டிய சேவை வலையமைப்பிலுள்ள பிரச்சினைகளைத் தீர்த்தல்

பிராந்திய அலுவலகங்களை மையப்படுத்தி நிர்வகிக்கப்படும் இணையச் சேவை எதுவும் இல்லை மற்றும் அந்த அலுவலகங்களில் பயர்வோல் பாதுகாப்பு அமைப்பும் செயற்படுத்தப்படவில்லை. எனவே, தேவையற்ற இணைய அணுகலைத் தடுப்பது மற்றும் பாதுகாப்பு தொடர்பான அச்சுறுத்தல்களைக் கட்டுப்படுத்துவது பிராந்திய அலுவலக வலையமைப்பில் செய்ய முடியாது. எனவே, பிராந்திய அலுவலகங்களின் வலையமைப்புச் சேவைகள் அந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் மையப்படுத்தப்பட்ட முறை விரைவில் அமுல்படுத்தப்பட உள்ளது.

பிராந்திய அலுவலகங்களில் உள்ள இணைய வலையமைப்புக்களை தொழில்முயற்சி மட்டத்தில் பரந்த வலய புரோட்பேண்ட் இணைப்புகளாக மேம்படுத்துதல் வேண்டும். பிராந்திய அலுவலக வலையமைப்புச் சேவைகள் ஒரு மென்பொருள் வரையறுக்கப்பட்ட பரந்த பகுதி வலையமைப்பு (SD-WAN) மூலம் தலைமை அலுவலகத்துடன் இணைக்கப்படல் வேண்டும். பிராந்திய அலுவலக வலையமைப்புச் சேவைகளை மேம்படுத்துதல் மற்றும் அந்த சேவைகளை மென்பொருள் வரையறுக்கப்பட்ட பரந்த பகுதி வலையமைப்புக்களுடன் இணைக்கும் செயல்முறை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 2024 ஆம் ஆண்டில் அதனை நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## தகவல் மற்றும் சைபர் பாதுகாப்பு கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்

இணைய அச்சுறுத்தல்களிலிருந்து அரசாங்க நிறுவனங்களின் தரவு மற்றும் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பைப் பாதுகாப்பதற்காக 2022 ஆகஸ்ட் மாதம் அரசாங்க நிறுவனங்களுக்கான தகவல் மற்றும் சைபர் பாதுகாப்புக் கொள்கைக்கு அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் 'பொது அதிகாரிகள்' என வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து பொது நிறுவனங்களிலும் இந்தக் கொள்கை செயல்படுத்தப்பட உள்ளது. இந்தக் கொள்கையைச் செயல்படுத்துவதற்காக 2023 மே மாதம் 02 ஆம் திகதி தொழில்நுட்ப அமைச்சினால் சுற்றறிக்கையொன்று (சுற்றறிக்கை இல். MOT/2023/01) வெளியிடப்பட்டது. அமைச்சரவையின் வழிகாட்டுதலின்படி, இலங்கை கணினி அவசரநிலைப் பதிலளிப்புக் குழு (Sri Lanka CERT) மேற்படி கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக அரசாங்க நிறுவனங்களுக்கு ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்கும் அதன் செயல்திறனை மதிப்பிடுவதற்கும் தொழில்நுட்ப அமைச்சின் மேற்பார்வையின் கீழ் பணியாற்றும். 2022 ஆம் ஆண்டின் இல 9 தரவுப் பாதுகாப்புச் சட்டத்துக்கு இணங்குவதை உறுதி செய்வது உட்பட, அங்கீகரிக்கப்படாத அணுகல், சைபர் அச்சுறுத்தல்கள் மற்றும் இடைமறிப்பு ஆகியவற்றிலிருந்து அரசாங்க நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் தரவு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைப்புகளைப் பாதுகாப்பதே இக்கொள்கையின் முதன்மை நோக்கமாகும். சுற்றறிக்கை இலக்கம் MOT/2023/01 இன் பிரகாரம் அரசாங்க நிறுவனங்களின் தலைவர்கள் இந்தக் கொள்கையை அந்தந்த நிறுவனங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை கணினி அவசரநிலைப் பதிலளிப்புக் குழுவுடன் கலந்தாலோசித்து வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் அதற்கான நிதியை ஒதுக்குமாறும் பணிக்கப்பட்டுள்ளனர். ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை வழங்கும் சேவைகளின் சுமையின் அடிப்படையில், இலங்கை கணினி அவசரநிலைப் பதிலளிப்புக் குழுவினால் இக்கொள்கையை முதல் சுற்றில் நடைமுறைப்படுத்துவதற்காக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிச் சபை அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்கான தகவல் மற்றும் இணையப் பாதுகாப்புக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவாக இலங்கை கணினி அவசரநிலைப் பதிலளிப்புக் குழு அனுப்பிய முன்மொழிவை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை ஏற்றுக்கொண்டது. அரசாங்க நிறுவனங்களுக்கான தகவல் மற்றும் இணையப் பாதுகாப்புக் கொள்கைகளைச் செயல்படுத்தும் செயல்முறை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது 2024 ஆம் ஆண்டளவில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## என்டோக் (Enadoc) ஆவண முகாமைத்துவ கட்டமைப்புடன் நேரடியாக தொடர்புபடுத்தல்

Enadoc என்பது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் தகவல் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான ஒரு புதுமையான, கிளவுட் அடிப்படையிலான ஆவண முகாமைத்துவ அமைப்பாகும். 24x7 செயல்பாடு மற்றும் பராமரிப்பு ஒத்துழைப்பை வழங்கும் இலங்கை டெலிகொம் (SLT) தரவு மையங்களின் ஹோஸ்டிங் மூலம் இந்த அமைப்பு நிறுவப்பட்டது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையில் ஆவணங்களை ஸ்கேன் செய்யும் பணியை பாதுகாப்பான மற்றும் பயனுள்ள வகையில் ஆரம்பித்து குறுகிய காலத்தில் இத்திட்டத்தை செயல்படுத்த தேவையான ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். தொடர்புடைய தரவுகளின் பரிமாற்ற செயன்முறையை வெற்றிகரமாக முடித்த பிறகு, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை 2023 ஆம் ஆண்டில் Enadoc அமைப்புடன் நேரடியாக இணைக்கப்பட்டது.

## ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் மத்திய அமைப்பு

ஊழியர்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் மத்திய அமைப்பில் பயனர் பயிற்சி மற்றும் தொடர்புடைய பயிற்சியாளர்களுக்கான பயிற்சி (TOT) 2023 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் மத்திய அமைப்புத் திட்டத்தால், 'வணிக செயல்முறை ஆய்வு', 'விண்ணப்ப மேம்பாடு', 'பயனர் ஏற்பு பரிசோதனை (UAT)', 'பயனர் ஏற்பு பரிசோதனை கட்டத்தில் அடையாளம் காணப்பட்ட வளர்ச்சி மாற்ற கோரிக்கைகள்' மற்றும் 'பயனர் பயிற்சி' ஆகிய மைல்கற்கள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

**பாதுகாப்பு**

அங்கத்தவர் நிர்வாக மென்பொருள் அமைப்பின் (MASS) பாதுகாப்பை வலுப்படுத்தல்.

**பிரதான நோக்கங்கள் பின்வருமாறு :**

இரகசியத்தன்மை, தொடர்ச்சி மற்றும் பெற்றுக்கொள்ளும் இயலுமையை வழங்குவதற்கு தகவல் மற்றும் அங்கத்தவர் நிர்வாக மென்பொருள் அமைப்பில் முறைகேடாக உள்நுழைதல், பயன்படுத்தல், வெளிப்படுத்தல், தடையேற்படுத்தல், மாற்றுதல் அல்லது அழித்தல் போன்ற விடயங்களிலிருந்து பாதுகாத்தல்.

**பயிற்சியளிப்பு**

**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் மத்திய அமைப்பு அபிவிருத்தி தொடர்பில் அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்**
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மத்திய அமைப்பு பற்றிய அறிவை வழங்கும் முறையொன்று அவசியமென கண்டறியப்பட்டது. இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி, தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களின் அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கி நடத்தப்பட்டது. இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் ஊழியர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது.

**வேறு பயிற்சிகள்**

அ. தகவல் தொழில்நுட்ப ஆளணிக்கு பயர்வோல கணனிப் பாதுகாப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
ஆ. இணையத்தள செயலிகள் மற்றும் நடமாடும் பாதுகாப்பு பற்றிய செயலமர்வு – (கணினி அவசர பதிலளிப்புக் குழு - CERT)
இ. சைபர் பாதுகாப்புக் கொள்கை பற்றிய விழிப்புணர்வு அமர்வு
ஈ. MS 365 பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
உ. என்டொக் (Enadoc) பயனர் பயிற்சி

**எதிர்காலத் திட்டங்கள்**

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை தற்போது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் (ICTA) நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் அதன் மத்திய வணிகச் செயல்பாட்டிற்கான உறுப்பினர்களை மையமாகக் கொண்ட விண்ணப்பத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. புதிய முறை அமுலுக்கு வந்த பிறகு, தொழில் வழங்குநர்கள் தங்களது பங்களிப்பையும், பணியாளரின் விவரங்களையும் தங்களது தொழில் வழங்குநர் போர்டல் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் வழங்கப்படும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப வசதிகளை பாதுகாப்பாகவும் எளிதாகவும் அணுகுவதற்கான முறைகள் இல்லாத தொழில் வழங்குநர்களுக்கு நிலையான தீர்வைக் கண்டறிவதற்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை செயற்பட்டு வருகின்றது.

இந்தச் சிக்கலைத் தணிக்கும் முயற்சியாக, தபால் சேவைகள் மூலம் தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்க தொழில் வழங்குநர்களை அனுமதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்ப பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் வீட்டுக்கு வீடு ஒப்படைக்கும் திறன் கொண்ட அஞ்சல் சேவைகள் எமது தொழில் வழங்குநர்களுக்கு வசதியான மாற்று வழியாக இருக்கும் என நாங்கள் நம்புகின்றோம். தற்போதைய நிலையில், இந்தப் பணியில் அஞ்சல் துறையுடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு அவர்களைத் தேர்ந்தெடுத்துள்ளோம்.



# நிதி

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் நிதிப் பிரிவு ஒரு பரந்த மற்றும் முக்கிய பங்கை வகிக்கின்றது. ஆதனை சுருக்கமான குறிப்பிடுவதற்கு அதன் பிரதான செயற்பாடுகளை பின்வருமாறு சாராம்சப்படுத்த முடியும் :

**கணக்குகளைத் தயாரித்தல்:** நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய அனைத்து நிதி நடவடிக்கைகளும் முறையாக ஆவணப்படுத்தப்பட்டு பதிவு செய்யப்படுவதை உறுதிசெய்யப்படுவதோடு, மாதாந்த மற்றும் வருடாந்த நிதிநிலமை அறிக்கைகளைத் தயாரிக்கும் பணி அவர்களால் கையாளப்படுகின்றது.

**வருடாந்த வரவுசெலவுத்திட்டம்:** வருமானம் மற்றும் செலவினங்களை முன்னறிவித்தல் மற்றும் நிதி ஆதாரங்கள் வினைத்திறனுடன் ஒதுக்கப்படுவதை உறுதி செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய வருடாந்த வரவுசெலவுத்திட்ட செயற்பாட்டை மேம்படுத்துதல், பராமரித்தல் மற்றும் நிர்வகித்தல் ஆகியவற்றுக்கு அவர்கள் பொறுப்பாக உள்ளனர்.

**கொடுப்பனவு முகாமை:** அரசாங்கத்திற்கு வரி செலுத்துதல் மற்றும் நிதி விதிமுறைகளுக்கு இணங்குவதை உறுதி செய்தல் உட்பட ஊழியர்கள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு பணம் செலுத்துவதை முகாமை செயதல் மற்றும் செயலாக்குதல் ஆகியவற்றில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

**அரசாங்க கணக்காய்வு ஒருங்கிணைப்பு:** தேவையான மற்றும் தொடர்புடைய அனைத்து தகவல்களும் வழங்கப்படுவதையும், கணக்காய்வு தரநிலைகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குவதையும் உறுதி செய்வதன் மூலம் அரசாங்க கணக்காய்வுகளுக்கு வசதியளித்தல் மற்றும் ஒருங்கிணைப்புப் பணி அவர்களால் மேற்கொள்ளப்படுகின்றது.

**நிறுவனத் திட்டத்தைத் தயாரித்தல்:** நிறுவனத்தின் மூலோபாய திசையை மற்றும் இலக்குகளை கோடிட்டுக் காட்டும் நிறுவனத் திட்டத்தின் அபிவிருத்திப் பணிக்கு அவர்கள் பங்களிப்புச் செய்கின்றனர்.

**முகாமைத்துவ தகவல் அறிக்கைகள்** : நிதிச் செயல்திறன் பற்றிய சிறந்த புரிதலை வழங்குவதற்கும் நிறுவனத்தில் முடிவெடுக்கும் செயற்பாட்டை ஆதரிப்பதற்கும் பல்வேறு முகாமைத்துவத் தகவல்களையும் அறிக்கைகளையும் தயாரிப்பதில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஒட்டுமொத்தமாக, நிதி ஒருமைப்பாட்டை பராமரிப்பதிலும், மூலோபாய திட்டமிடலை ஒத்துழைப்பு வழங்குவதிலும் மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதிலும் அவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

2023 டிசம்பர் 04 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைப்பெற்ற இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் அரசாங்கத்துறைப் பிரிவான இலங்கையின் பொது நிதிக் கணக்காளர்களின் சங்கத்தினால் வழிநடாத்தப்பட்ட இலங்கையின் அரசாங்கத் துறையில் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை விருதுப் போட்டியில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிச் சபை வெற்றி பெற்றது. இலங்கையின் அரச நிதிக் கணக்காளர்களின் சங்கத்தினால் வருடாந்த அறிக்கை பிரிவில் நியதிச்சட்ட சபைகள், அதிகாரசபைகள் மற்றும் ஆணைக்குழுக்களுக்கான பிரிவில் தங்க விருதையும் ஒட்டுமொத்த போட்டிக்கான வெண்கல விருதையும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்கு வழங்கப்பட்டது. இந்தப் போட்டியில் தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்கு விருது கிடைத்தது. பெருநிறுவன அறிக்கையிடல் மற்றும் நிதி வெளிப்படுத்தல் துறையில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், சமூகப் பொறுப்பு மற்றும் பெருநிறுவன நிர்வாகத்தின் மிக உயர்ந்த தரத்தை வெளிப்படுத்திய பொதுத்துறை நிறுவனங்கள் இந்த விருதுகள் மூலம் பாராட்டப்படுகின்றன.









# சட்டம்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் சட்டப் பிரிவு, சபையின் அனைத்து சட்ட விடயங்களுக்கும் ஆலோசனைச் சேவைப் பிரிவாகச் செயல்படுகிறது. அத்தோடு, 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் விதிகளுக்கு இணங்கத் தவறும் தொழில் வழங்குநர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கின்றது. சட்டப் பிரிவு தற்போது பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்) / (பதில் கடமை) மேற்பார்வையின் கீழ் செயல்படுகிறது. உதவிப் பொது முகாமையாளர் (சட்ட), சட்ட முகாமையாளர்கள் மற்றும் சட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் அதன் துணைப் பணியாளர்களைக் கொண்டுள்ளது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் தவிசாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு சட்டப் பிரிவு நேரடியாக அறிக்கை அளிக்கின்றது. பிராந்திய அலுவலக வலையமைப்பு நிறுவப்பட்ட பின்னர் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் கீழ் நிலுவைத் தொகையை வசூலிப்பது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் பிரதேச மட்டத்திற்கு பரவலாக்கப்பட்டன.

உரிய அதிகாரிகளிடமிருந்து தேவையான தகவல்களைப் பெற்று கள ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்ட திரட்டப்பட்ட பங்களிப்புகள் / மேலதிகக் கட்டணங்களைச் செலுத்தத் தவறிய தொழில்வழங்குநரகளுக்கு எதிரான சட்ட அமலாக்கத்தின் மூலம் தொடர்புடைய நிலுவைத் தொகையை மீட்டெடுப்பதை உறுதி செய்வதே சட்டத் துறையின் முக்கிய நோக்கமாகும். குழு ஊழியர்களின் அறிவை மேம்படுத்துவதற்காக சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் தொழிலாளர் சட்டத்தின் புதிய போக்குகள் குறித்த பயிற்சி அமர்வுகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் சட்டப் பிரிவினால் நடத்தப்படுகின்றன

# கணக்காய்வு மற்றும் உத்தரவாதம்

உள்ளக கணக்காய்வு என்பது நிர்வாகத்திற்கான ஒரு சேவையாக செயற்பாடுகளை மதிப்பாய்வு செய்வதற்கு ஏற்கனவே உள்ள நிறுவனத்திற்குள் ஒரு சுயாதீனமான மதிப்பீட்டுச் செயற்பாடாகும். இது ஒரு நிறுவனத்திலுள்ள வளங்களை திறமையான மற்றும் பயனுள்ள பயன்பாட்டிற்கு பங்களிக்கும் செயல்பாடாக, உள்ளக கட்டுப்பாடுகள், நிதி மற்றும் பிற விடயங்களின் செயல்திறனை அளவிடுவதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் அறிக்கையிடுவதற்கும் ஒரு ஒழுங்குமுறை அமைப்பாக காணப்படுகின்றது.

பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு) கணக்காய்வு மற்றும் உத்தரவாதப் பிரிவின் தலைவராக கணக்காய்வுக் குழுவின் மூலம் சபைக்கு அறிக்கையிடுகின்றார். மேலும் அனைத்து நிர்வாக விடயங்களுக்கும் அவர் சபையின் தவிசாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு மட்டுமே அறிக்கை அளிக்கிறார். பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு) கணக்காய்வுக் குழுவுடன் இணைந்து பணிகளுக்கு முன்னுரிமை அளித்து, கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்து, கணக்காய்வுக் குழு மூலம் கண்டறியப்பட்ட முக்கிய கண்டுபிடிப்புகள் மற்றும் தகவல்களைத் கணக்காய்வுக் குழுவின் மூலம் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுகின்றார்.

ஒரு நிறுவனத்திற்குள் நிலையான மற்றும் திறமையான அமைப்புகள் மற்றும் கட்டுப்பாடுகள் இருப்பதை உறுதி செய்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். உள்ளக நிர்வாகம் என்பது நிதி, சொத்துக்கள் மற்றும் முதலீடுகளைப் பாதுகாத்தல் பதிவுகளின் நம்பகத்தன்மையை உறுதி செய்தல், செயற்பாட்டுத் திறனை மேம்படுத்தல், கொள்கைகள், விதிமுறைகள், ஒப்பந்தங்கள் மற்றும் உத்தரவுகளுக்கு இணங்குவதைக் கண்காணித்தல் உள்ளிட்ட மொத்த செயன்முறையையும் உள்ளடக்கியது.

# சபையின் 43வது ஆண்டு நிறைவையொட்டி பிரித் பாராயனம்








## நத்தார் கெறொல் பாடல்கள் 2023



## வெசக் அன்னதானம் 2023



## சபையின் 43வது ஆண்டு நிறைவையொட்டி இரத்த தானம்






## பொசொன் பக்திப் பாடல்கள் 2023





## தலைமைத்துவம் மற்றும் மூலோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2023





# பணிப்பாளர்கள் சபை 2023

## திரு. டி.எல்.பி. ரோஹண அபயரத்ன

தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்.

சபையின் தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியான திரு. டி.எல்.பி. ரோஹண அபயரத்ன அவர்கள் அரசாங்க சேவையில் 30 வருடங்கள் சேவையாற்றியுள்ளார். ஆவர் களணிப் பல்கலைக்கழகத்தில் வர்த்தகம் மற்றும் முகாமைத்துவம் பற்றி சிறப்பு பட்டம் மற்றும் சமூக விஞ்ஞான பற்றிய முதுகலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார். மேலும், அவர் சர்வதேச தொடர்புகள் பற்றிய டிப்ளோமைப் பெற்றுள்ளார். குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் உதவிக் கட்டுப்பாட்டாளராக திரு அபயரத்ன அவர்கள் தனது அரசாங்க சேவையில் பணியை ஆரம்பித்துள்ளார்.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையுடன் இணைவதற்கு முன்னர் பின்வரும் பதவிகளை திரு. அபயரத்ன அவர்கள் வகித்துள்ளார்.

முன்னைய நியமிப்புக்கள்

- தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
- தேசிய சேமிப்பு வங்கியின் முகாமைத்துவ நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
- சமூகப் பாதுகாப்புச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
- அரச சேவை சேமலாப நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
- தபால் திணைக்களத்தின் தபால்மா அதிபர் (இலங்கை நிர்வாக சேவை - விசேட தரம்)
- ஏற்றுமதி விவசாய அமைச்சின் செயலாளர்
- இலங்கை ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம்
- பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழிருந்த பிராந்திய பிணக்குகள் மற்றும் பாதிப்புக்களுக்கு உள்ளானவர்களை மீள்குடியேற்றும் கருத்திட்டத்தின் (ADB) விசேட நிபுணர்
- பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (சுற்றுலா)
- இலங்கை தேசிய மாணிக்ககற்கள் மற்றும் தங்க ஆபரணங்கள் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம்
- மினுவாங்கொடை பிரதேச செயலாளர்
- நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் (கருத்திட்ட ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை)
- குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் உதவிக் கட்டுப்பாட்டாளர் (குடிவரவு மற்றும் குடியகல்வு)

அத்தோடு, அவர் இலங்கை சனாதிபதி சிரேஷ்ட மேலதிக செயலாளர் உள்ளிட்ட பல பதவிகளை வகித்துள்ளார். அவர் களணிப் பல்கலைக்கழகத்தின் வர்த்தகம் மற்றும் முகாமைத்துவ பீடத்தின் குழு அங்கத்தவராகவும் அந்தப் பல்கலைக்கழகத்தின் வர்த்தக மற்றும் முகாமைத்துவ திணைக்களத்தின் ஆலோசனைக் குழுவின் வெளிவாரி உறுப்பினராகவும் சேவையாற்றியுள்ளார். மேலும், திரு. அபயரத்ன அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மனிதவள அபிவிருத்தி நிலையத்தின் வெளிவாரி விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.



## திரு. நீல் உமகிலிய

பணிப்பாளர்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

திரு. உமகிலிய அவர்கள் பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் உறுப்பினராவார். அத்தோடு, பிரித்தானிய முகாமைத்துவ நிறுவனத்தின் உறுப்பினருமாவார்.

அவர் இலங்கை வங்கியின் முன்னால் தவிசாளர் ஆவார். அத்தோடு, டயல் டெக்ஸ்டைல் இன்டஸ்ரீஸ் (தனியார்) கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளர் பதவியை வகித்துள்ளார். அவரது முன்னைய சேவை விபரங்கள் பின்வருமாறு,

- இலங்கை நிதிச் சபையின் உறுப்பினர்
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
- இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
- விஜய குமாரணதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் பதில் தவிசாளர் மற்றும் உறுப்பினர்

## திரு. ஆரியசேன கால்லகே

பணிப்பாளர்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

திரு. ஆரியசேன கால்லகே அவர்கள் சட்டத்தரணியாக 28 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டிருப்பதுடன் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டமாணிப் பட்டம் பெற்றுள்ளார். இவர் இதற்கு முன்னர் மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் வடமத்திய மாகாணத்தின் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார். இந்தப் பதவிக்கு முன்னர், அவர் பின்வரும் பல்வேறுபட்ட சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகளை வகித்துள்ளார் :

- பணிப்பாளர் ஜனதா பொஹொர கம்பனி
- பணிப்பாளர் தென்னை ஆராய்சி நிறுவனம்

அவ்வாறே, வரையறுக்கப்பட்ட பொலனறுவை மாவட்ட கூட்டுறவு வங்கிச் சங்கத்தின் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

# பணிப்பாளர்கள் சபை 2023



## திரு. உதேஷ் ஐ.டபிள்யு. செனெவிரத்ன

பணிப்பாளர்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைள் அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

திரு. செனெவிரத்ன அவர்கள் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தராவார். ஆவர் தற்போது பொதுத் திறைசேரியின் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களத்தின் (ITMD) மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (கொள்கை மற்றும் அபிவிருத்தி) ஆக கடமையாற்றுகின்றார். ஆவர் இலங்கை கண் வங்கிப் பொறுப்பின் பணிப்பாளர் சபை உறுப்பினராவார். அவர் இதற்கு முன்னர் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும், இலங்கை அரச, தனியார் கூட்டுடமை தேசிய முகவர் நிறுவனத்தின் (NAPPP) பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் பணியாற்றியுள்ளார்.

இதற்கு முன்னர் அவர் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (அபிவிருத்தி), ஜனாதிபதி சிரேஷ்ட உதவிச் செயலாளர், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பல பதவிகளில் கடமையாற்றியுள்ளார். வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் அவர் வகித்த பதவிகளாக, பணிப்பாளர் (கிழக்காசிய மற்றும் பசுபிக் பிராந்தியம்) மற்றும் பணிப்பாளர் (தெற்காசிய மற்றும் சார்க் பிராந்தியம்) என்பன உள்ளடங்கும். அதற்கு, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் இருந்த போதிலும், அவர் வகித்த சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்) பதவியும் உள்ளடங்கியிருந்தது. திரு. செனெவிரத்ன அவர்கள் இலங்கைக்கான கொன்சியுலர் ஜெனரல் பென்க்பேர்ட் ஜேர்மனி அமைச்சர் அந்தஸ்துடன் இராஜதந்திரியாக மூன்று வருடகாலம் சேவையாற்றியுள்ளார்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் சேவையாற்றுவதற்கு முன்னர் அவர் ஜனாதிபதி செயலகத்தில் கொள்கை ஒருங்கிணைப்பாளர் மற்றும் மேற்பார்வை பிரிவில் ஜனாதிபதி அலுவலகத்தின் உதவிச் செயலாளர் பதவியை வகித்துள்ளார். இலங்கை நிர்வாக சேவையில் தனது முதல் நியமனத்தைப் பெற்ற அவர் கைத்தொழில், சுற்றுலாத்துறை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் உதவிப் பணிப்பாளர் (முதலீட்டு ஊக்குவிப்பு), உதவிப் பணிப்பாளர் (பிரதேச கைத்தொழில் அபிவிருத்தி) மற்றும் கைத்தொழில் அமைச்சின் முகாமைத்துவ தகவல் அமைப்பு மற்றும் கைத்தொழில் பதிவு உதவிப் பணிப்பாளர் பதவியையும் வகித்துள்ளார்.

திரு. செனவிரத்ன கொழும்பு 07, ரோயல் கல்லூரியில் கல்வி கற்று கொழும்பு பல்கலைக்கழகத்தில் பௌதீகவியலில் பட்டம் பெற்றார். மேலும், அவரது கல்வித் தகுதிகளில் சர்வதேச உறவுகள், பொருளாதாரம் மற்றும் பொது முகாமைத்துவம் ஆகியவற்றில் முதுகலை டிப்ளமோ, அத்துடன் ஜப்பான் எக்ஸ லன்ஸ் விருதில் இருந்து முகாமைத்துவம் மற்றும் தகவல் அறிவியலில் முதுகலைப் பட்டம் ஆகியவை அடங்கும்.

இவர் இலங்கை கணினி சங்கத்தின் (CSSL) உதவி செயலாளராக உள்ளார். கொழும்பு பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கத்தின் முதல் செயலாளர், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பழைய மாணவர் சங்கத்தின் உதவிப் பொருளாளர் மற்றும் இலங்கை நிர்வாக சேவைகள் சங்கத்தின் (SASA) பிரதிச் செயலாளர் போன்ற தன்னார்வ பதவிகளையும் அவர் வகித்துள்ளார்.



**செல்வி. கே.எஸ். தயாரத்ன**
பணிப்பாளர்
திறைசேரிப் பிரதிநிதி

**திருமதி. ஈ.ஏ. ஏக்கநாயக்க**
பணிப்பாளர்
வர்த்தக, வாணிப அலுவல்கள் அமைச்சரின் பிரதிநிதி

திருமதி தயாரத்ன இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினராவார். அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வர்த்தக நிர்வாகத்தில் விஞ்ஞானமாணி பட்டத்தையும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் நிதி மற்றும் பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

தற்போது, அவர் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் கீழ் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளராக உள்ளார், மேலும் புனர்வாழ்வு பணியகத்தின் இயக்குநர்கள் குழுவின் பார்வையாளராகவும் உள்ளார். கடந்த காலத்தில், அவர் இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழு மற்றும் இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு தரநிலைகள் மேற்பார்வைச் சபை ஆகியவற்றின் பணிப்பாளர் சபைகளில் திறைசேரிப் பிரதிநிதியாகச் செயற்பட்டுள்ளார். மேலும், லங்கா சோல்ட் லிமிடெட் நிறுவனத்தின் பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார்.

திருமதி ஏகநாயக்க அவர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிக புள்ளிவிபரத்தில் கலைமாணிப் பட்டம் பெற்றுள்ளார். மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் செயற்பாட்டு ஆராய்ச்சியில் விஞ்ஞானமாணிப் பட்டம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் முதுகலைப் பட்டம், பல்கலைக்கழகத்தில் தரவு பகுப்பாய்வில் முதுகலைப் பட்டம். களனி, மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர். கொழும்பு பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம், பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்தில் முதுகலைப் பட்டம் மற்றும் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் கிராமிய அபிவிருத்தியில் முதுகலை டிப்ளோமாவும் பெற்றுள்ளார். அவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தில் கணக்கியல் மற்றும் வணிகத்தில் தரம் 2 சான்றிதழையும் முடித்துள்ளார்.

திருமதி ஏகநாயக்க தற்போது வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் உதவிச் செயலாளராகப் பணியாற்றி வருகின்றார். முன்னதாக, அவர் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் உதவிப் பணிப்பாளராக பதவி வகித்தார்.



# பணிப்பாளர்கள் சபை 2023

### திரு. ஜுட் டினால் பீரிஸ்
பணிப்பாளர்
இலங்கை சேவை சம்மேலனத்தின் சட்டத்தரணி

திரு. டினால் பீரிஸ், இங்கிலாந்து இலண்டன் வியாபாரக் கல்லூரியில் வணிக நிர்வாகத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற எந்திரவியல் பொறியியலாளர் ஆவார். அவர் சிலோன் சர்வீஸ் / பெடரேக்ஷன் கவுன்சிலில் உறுப்பினராக உள்ளார். அத்தோடு, பல நிறுவனங்களில் பணிப்பாளர் பதவிகளை வகிக்கின்றார்.

### திரு. எல்.எஸ். தேவேந்திர
பணிப்பாளர்
தொழிற்சங்கப் பிரதிநிதி

திரு. தேவேந்திரா ஒரு சிரேக்ஷ்ட தொழிற்சங்க ஆர்வலர் ஆவார், அவர் ஜனாதிபதியின் தேசிய விருதுகளில் மதிப்புமிக்க தேக்ஷபந்து பட்டத்துடன் கௌரவிக்கப்பட்டார். தற்போது இலங்கை சுதந்திர ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக பதவி வகித்து வருகின்றார. அவர், சர்வதேச போக்குவரத்து தொழிலாளர் சம்மேளனத்தின் நிர்வாக சபை உறுப்பினராகவும் உள்ளார். அத்தோடு, தெற்காசிய பிராந்திய தொழிற்சங்கத்தின் துணைத் தலைவராகவும் பணியாற்றுகிறார்.

தொழிலில் ரீதியாக அவர் ஒரு வழக்கறிஞர், திரு. தேவேந்திரா இளங்கலை சட்டப் பட்டம் பெற்றவர். மேலும், அவர் சர்வதேச தொழிலாளர் அமைப்பில் (ILO) தொழிலாளர் கொள்கை மேம்பாட்டில் டிப்ளோமா, ஐக்கிய இராச்சியத்தில் தொழில்துறை உறவுகளில் டிப்ளமோ மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பில் பயிற்சி முறைகளில் டிப்ளோமா ஆகியவற்றைப் பெற்றுள்ளார்.

வகித்த பதவிகள்:

- தேசிய சம்பள ஆணைக்குழுவின் உறுப்பினர்
- வர்த்தக முகாமைத்துவ நிறுவனத்தின் பணிப்பாளர்
- தேசிய பத்திரிகைப் பேரவையின் உறுப்பினர்
- தேசிய தொழிலாளர் ஆலோசனைக் குழு உறுப்பினர்
- இலங்கை மன்ற நிறுவனத்தின் உறுப்பினர்



## திரு. டபிள்யு.எம். நுராஜித் சிங்

பணிப்பாளர்

தொழிற்சங்கப் பிரதிநிதி

திரு. நுராஜித் சிங் அவர்கள் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதி மனிதவள முகாமையாளர் மற்றும் மத்திய போக்குவரத்துச் சபையின் (CTB) பணிப்பாளர் சபை உறுப்பினராவார். அவர் இலங்கை பொதுஜன போக்குவரத்து ஊழியர் சம்மேலனத்தின் தவிசாளராகவும் கடமையாற்றுகின்றார்.

# பணிப்பாளர்கள் சபை 2024



**திரு. டி.எல்.பி. ரோஹண அபயரத்ன**

தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்.

சபையின் தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியான திரு. டி.எல்.பி. ரோஹண அபயரத்ன அவர்கள் அரசாங்க சேவையில் 30 வருடங்கள் சேவையாற்றியுள்ளார். அவர் களணிப் பல்கலைக்கழகத்தில் வர்த்தகம் மற்றும் முகாமைத்துவம் பற்றி சிறப்பு பட்டம் மற்றும் சமூக விஞ்ஞான பற்றிய முதுகலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார். மேலும், அவர் சர்வதேச தொடர்புகள் பற்றிய டிப்ளோமைப் பெற்றுள்ளார். குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் உதவிக் கட்டுப்பாட்டாளராக திரு அபயரத்ன அவர்கள் தனது அரசாங்க சேவையில் பணியை ஆரம்பித்துள்ளார்.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையுடன் இணைவதற்கு முன்னர் பின்வரும் பதவிகளை திரு. அபயரத்ன அவர்கள் வகித்துள்ளார்.

முன்னைய நியமிப்புக்கள்

- தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
- தேசிய சேமிப்பு வங்கியின் முகாமைத்துவ நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
- சமூகப் பாதுகாப்புச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
- அரச சேவை சேமலாப நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
- தபால் திணைக்களத்தின் தபால்மா அதிபர் (இலங்கை நிர்வாக சேவை - விசேட தரம்)
- ஏற்றுமதி விவசாய அமைச்சின் செயலாளர்
- இலங்கை ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம்
- பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழிருந்த பிராந்திய பிணக்குகள் மற்றும் பாதிப்புக்களுக்கு உள்ளானவர்களை மீள்குடியேற்றும் கருத்திட்டத்தின் (ADB) விசேட நிபுணர்
- பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் சிரேக்ஷ்ட உதவிச் செயலாளர் (சுற்றுலா)
- இலங்கை தேசிய மாணிக்ககற்கள் மற்றும் தங்க ஆபரணங்கள் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம்
- மினுவாங்கொடை பிரதேச செயலாளர்
- நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் (கருத்திட்ட ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை)
- குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் உதவிக் கட்டுப்பாட்டாளர் (குடிவரவு மற்றும் குடியகல்வு)

அத்தோடு, அவர் இலங்கை சனாதிபதி சிரேக்ஷ்ட மேலதிக செயலாளர் உள்ளிட்ட பல பதவிகளை வகித்துள்ளார். அவர் களணிப் பல்கலைக்கழகத்தின் வர்த்தகம் மற்றும் முகாமைத்துவ பீடத்தின் குழு அங்கத்தவராகவும் அந்தப் பல்கலைக்கழகத்தின் வர்த்தக மற்றும் முகாமைத்துவ திணைக்களத்தின் ஆலோசனைக் குழுவின் வெளிவாரி உறுப்பினராகவும் சேவையாற்றியுள்ளார். மேலும், திரு. அபயரத்ன அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மனிதவள அபிவிருத்தி நிலையத்தின் வெளிவாரி விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.



## திரு. கே.ஜீ.எம். ஹரீந்திர

பணிப்பாளர்
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

திரு. ஹரீந்திர அவர்கள் அமெரிக்காவில் சர்வதேச பல்கலைக்கழகத்தின் (IUA) வியாபார நிர்வாகம் பற்றிய (சிறப்பு) பட்டத்தைப் பெற்றுள்ளார். அவர் பல டிப்ளோமா சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்,

- இலண்டனில் உள்ள லேடன் கல்லூரியில் வணிக நிர்வாகத்தில் டிப்ளோமா
- இலண்டன் காலேஜ் ஆ.்ப் பிசினஸ் மேனேஜ்மென்ட் அண்ட் கம்ப்யூட்டிங் நிறுவனத்தில் இருந்து தகவல் தொழில்நுட்பத்தில் டிப்ளோமா
- இலண்டனில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரியில் வணிக நிர்வாகத்தில் டிப்ளோமா
- அபுதாபி ஏயார்லைன்ஸ் (UAE) இல் இருந்து விமானப் பயணத்தில் மனித காரணிகளில் டிப்ளோமா.

திரு. ஹரீந்திரா அவர்கள் மாண்புமிகு துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான சேவைகள் மற்றும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை மாண்புமிகு அமைச்சரின் ஒருங்கிணைப்பு செயலாளராக பணியாற்றியுள்ளார்.

முன்னைய நியமனங்கள் :

- பணிப்பாளர் - மார்லின்ஸ் கட்டுமான கம்பனி - இலங்கை (2019 முதல் இன்று வரை )
- பிரதம நிறைவேற்று அதிகாரி - ஆர்ச்சர் பிரைம் இன்டர்நெஷனல் (பிரைவேட்) லிமிடெட் - இலங்கை (புதுப்பிக்கத்தக்க ஆற்றல் - சூரியகலம்) 2022 முதல் இன்று வரை
- பணிப்பாளர் இயக்கம் - கிளவுட் அட்லாண்டிக் (பிரைவேட்) லிமிடெட் - இலங்கை (கட்டுமான நிறுவனம்) 2015 முதல் 2020 வரை
- பணிப்பாளர் இயக்கம் - பெர்ஹரன் குழும நிறுவனம் – டெக்சாஸ் -அமெரிக்கா – (2014)
- நிர்வாக முகாமையாளர் - Bauer Media நிறுவனம் - மெல்போர்ன் அவுஸ்திரேலியா
- விமானப் பொறியியல் ஒருங்கிணைப்பாளர் அபுதாபி விமான சேவை - அபுதாபி - UAE – (2011 முதல் 2014 வரை)
- வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சின் வாடிக்கையாளர் சேவை முகாமையாளர் (செலாசினே) - இலங்கை 2009 முதல் 2011 வரை)
- பிரதி முகாமையாளர் - Ladbrokes Ltd (UK); – (2006 முதல் 2009 வரை)
- பங்குக் கட்டுப்பாட்டாளர்- டெஸ்கோ லிமிடெட் (UK) நிர்வாகம் - (2004 முதல் 2006 வரை)

# பணிப்பாளர்கள் சபை 2024





**திரு. எஸ்.எப்.எச். பெர்னாந்து**
பணிப்பாளர்
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

தொழில்ரீதியாக ஒரு கணக்காளர். இலங்கை, இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவில் வெளிநாடுகளில் தனியார் மற்றும் பொதுத் துறைகளில் பல உயர் பதவிகளை வகித்துள்ளார். பொது பட்டியலிடப்பட்ட நிறுவனமான பார்ட்லீட் பைனான்ஸ் லிமிடெட் நிறுவப்பட்ட போது அதன் முகாமைத்துவப் பணிப்பாளராக இருந்துள்ளார். Mallory Stockbrokers Ltd, Bartleet and Company Ltd Bartlet, Transcapital Ltd உட்பட பார்ட்லீட் குழுமத்தில் உள்ள பல நிறுவனங்களின் குழு உறுப்பினராக இருந்துள்ளார்.

முன்னைய நியமனங்கள்

- தவிசாளர் – இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் (SLBF)
- தவிசாளர், தேசிய வர்த்தக மற்றும் முகாமைத்துவ நிறுவனம் (NIBM)
- தவிசாளர், ஜெயா கொள்கலன் டெர்மினல்ஸ் லிமிடெட், இலங்கை துறைமுக அதிகாரசபை (SLPA)
- பணிப்பாளர் – இலங்கை மாநாட்டு பணியகம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரின் ஆலோசகர்
- நிதிக் கட்டுப்பாட்டாளர் BDS கூட்டுத்தாபனம், அவுஸ்திரேலியா.
- குழும கணக்காளர், Ictrohating Group of Companies, UK
- தொழில் ஆலோசனைக் குழு (NLAC) உறுப்பினர்
- களுத்துறை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் தலைவர்

**திரு. எம். பார்தீபன்**
பணிப்பாளர்
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்.

திரு. எம். பார்த்தீபன் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விவசாயப் பொருளாதாரத்தில் நிபுணத்துவத்துடன் விவசாயத்தில் இளங்கலை விஞ்ஞானப் பட்டத்தையும் (சிறப்பு) மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொது முகாமைத்துவத்தில் வணிக நிர்வாக முதுகலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இலங்கை நிர்வாக சேவையின் உறுப்பினரான இவர், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் பொது நிர்வாகத்தில் டிப்ளோமா பட்டம் பெற்றவர்.

அவர் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் உதவிச் செயலாளராக கடமையாற்றுகின்றார். ஆவர் காணி அமைச்சின் உதவிப் பணிப்பாளர் (காணி கையகப்படுத்துதல் மற்றும் சுயவிருப்பமின்றி இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றம் செய்யும் தேசிய கொள்கை NIRP) ஆக கடமையாற்றியுள்ளார். மேலும், எஸ்ஜீஎஸ்எஸ்ஏ / எஸ்ஜீஎஸ் லங்கா (தனியார்) கம்பனியின் வியாபார அபிவிருத்தி நிறைவேற்று அதிகாரியாகவும் லங்கெம் சிலோன் பிஎல்சி நிறுவன முகாமைத்துவப் பயிற்சியாளரகவும் தனியார் துறையில் அனுபவம் பெற்றுள்ளார்.



**செல்வி. கே.எஸ். தயாரத்ன**
பணிப்பாளர்
திறைசேரிப் பிரதிநிதி

செல்வி. தயாரத்ன இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினராவார். அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வர்த்தக நிர்வாகத்தில் விஞ்ஞானமாணி பட்டத்தையும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் நிதி மற்றும் பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

தற்போது, அவர் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் கீழ் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளராக உள்ளார், மேலும் புனர்வாழ்வு பணியகத்தின் இயக்குநர்கள் குழுவின் பார்வையாளராகவும் உள்ளார். கடந்த காலத்தில், அவர் இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழு மற்றும் இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு தரநிலைகள் மேற்பார்வைச் சபை ஆகியவற்றின் பணிப்பாளர் சபைகளில் திறைசேரிப் பிரதிநிதியாகச் செயற்பட்டுள்ளார். மேலும், லங்கா சோல்ட் லிமிடெட் நிறுவனத்தின் பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார்.

**திருமதி. கே.ஏ.பி. டி சில்வா**
பணிப்பாளர்
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

திருமதி. டி சில்வா, களனிப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டத்தையும், கொழும்புப் பல்கலைக்கழகத்தில் வணிகவியல் இளங்கலைப் பட்டத்தையும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவத்தில் முதுகலைப் டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். அவர் இலங்கையின் பட்டய நிதிக் கணக்காளர்கள் நிறுவனத்தில் (CPFA) தகுதி பெற்றுள்ளார்.

அவர் வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் தலைமை நிதி அதிகாரி ஆவார். அவர் தற்போது நிர்மாண மற்றும் பொறியியல் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் தலைவராக பணியாற்றி வருகின்றார். அவர் வெளிநாட்டு அமைச்சு, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் விவசாயத் திணைக்களம் ஆகியவற்றில் தலைமை கணக்காளராக பணியாற்றியுள்ளார். திருமதி டி சில்வா, நெல் சந்தைப்படுத்தல் சபையின் நிதி பிரதிப் பொது முகாமையாளராகவும் பொதுச் சேவை ஆணைக்குழுவின் பிரதிச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

# பணிப்பாளர்கள் சபை 2024



**திரு. ஜுட் டினால் பீரிஸ்**
பணிப்பாளர்
இலங்கை சேவை சம்மேலனத்தின் சட்டத்தரணி

திரு. டினால் பீரிஸ், இங்கிலாந்து இலண்டன் வியாபாரக் கல்லூரியில் வணிக நிர்வாகத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற எந்திரவியல் பொறியியலாளர் ஆவார். அவர் சிலோன் சர்வீஸ் / பெடரேக்ஷன் கவுன்சிலில் உறுப்பினராக உள்ளார். அத்தோடு, பல நிறுவனங்களில் பணிப்பாளர் பதவிகளை வகிக்கின்றார்.



**திரு. எல்.எஸ். தேவேந்திர**
பணிப்பாளர்
தொழிற்சங்கப் பிரதிநிதி

திரு. தேவேந்திரா ஒரு சிரேக்ஷ்ட தொழிற்சங்க ஆர்வலர் ஆவார், அவர் ஜனாதிபதியின் தேசிய விருதுகளில் மதிப்புமிக்க தேக்ஷபந்து பட்டத்துடன் கௌரவிக்கப்பட்டார். தற்போது இலங்கை சுதந்திர ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக பதவி வகித்து வருகின்றாா. அவர், சர்வதேச போக்குவரத்து தொழிலாளர் சம்மேளனத்தின் நிர்வாக சபை உறுப்பினராகவும் உள்ளார். அத்தோடு, தெற்காசிய பிராந்திய தொழிற்சங்கத்தின் துணைத் தலைவராகவும் பணியாற்றுகிறார்.

தொழிலில் ரீதியாக அவர் ஒரு வழக்கறிஞர், திரு. தேவேந்திரா இளங்கலை சட்டப் பட்டம் பெற்றவர். மேலும், அவர் சர்வதேச தொழிலாளர் அமைப்பில் (ILO) தொழிலாளர் கொள்கை மேம்பாட்டில் டிப்ளோமா, ஐக்கிய இராச்சியத்தில் தொழில்துறை உறவுகளில் டிப்ளமோ மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பில் பயிற்சி முறைகளில் டிப்ளோமா ஆகியவற்றைப் பெற்றுள்ளார்.

வகித்த பதவிகள்:
- தேசிய சம்பள ஆணைக்குழுவின் உறுப்பினர்
- வர்த்தக முகாமைத்துவ நிறுவனத்தின் பணிப்பாளர்
- தேசிய பத்திரிகைப் பேரவையின் உறுப்பினர்
- தேசிய தொழிலாளர் ஆலோசனைக் குழு உறுப்பினர்
- இலங்கை மன்ற நிறுவனத்தின் உறுப்பினர்



**திரு. டபிள்யு.எம். நுராஜித் சிங்**
பணிப்பாளர்
தொழிற்சங்கப் பிரதிநிதி

திரு. நுராஜித் சிங் அவர்கள் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதி மனிதவள முகாமையாளர் மற்றும் மத்திய போக்குவரத்துச் சபையின் (CTB) பணிப்பாளர் சபை உறுப்பினராவார். அவர் இலங்கை பொதுஜன போக்குவரத்து ஊழியர் சம்மேலனத்தின் தவிசாளராகவும் கடமையாற்றுகின்றார்.

# சிரேஸ்ட முகாமைத்துவக் குழு



**திரு. ஆர்.கே. ஜயலத்**
பொது முகாமையாளர் (பதில் கடமை)

பொது முகாமையாளர் (பதில் கடமை) திரு. ஆர்.கே. ஜயலத் அவர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் மனித வள முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளங்கலை (சிறப்பு) மற்றும் களனி பல்கலைக்கழகத்தில் முதுகலைப் (பொருளாதாரம்) பட்டம் பெற்றுள்ளார். பின்னர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முதுகலை முகாமைத்துவ நிறுவனத்தில் பொது நிர்வாகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார். திரு. ஜயலத் அவர்கள் அரச கணக்குகள் மற்றும் நிதி நிறுவனத்தில் வியாபார நிர்வாகத்தில் டிப்ளோமா பெற்றுள்ளார். அத்தோடு, தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் மனித வள முகாமைத்துவத்தில் 20 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைப் பெற்றுள்ளார்.



**கே.எஸ். திரு. வெலிவிட்ட**
பிரதிப் பொது முகாமையாளர்
(உள்ளக கணக்காய்வு)

திரு. கே.எஸ். வெலிவிட்ட அவர்கள் பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு) பதவியை வகிக்கின்றார். அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பிரயோக கணக்கியலில் இளங்கலை விஞ்ஞானமானி பட்டம் பெற்றுள்ளார். அவர் இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம், கணக்கியல் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் மற்றும் இலங்கையின் நிதிக் கணக்காளர்கள் நிறுவனம் ஆகியவற்றின் இணை உறுப்பினராக உள்ளார். மேலும், அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் நிதியியல் வணிக நிர்வாகத்தில் முதுகலைப் பட்டத்தையும், இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தில் தகவல் அமைப்புகள் பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாட்டு கணக்காய்வில் டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். தனியார் மற்றும் பொது நிறுவனங்களில் நிதி மற்றும் கணக்காய்வுத் துறையில் 30 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார். திரு. வெலிவிட்ட அவர்கள் தான் தெரிவுசெய்த துறையில் ஒரு திறமையான நிறைவேற்று அதிகாரி ஆவார்.



**திரு. டபிள்யூ.ஜி.கே. ரத்நாயக்க**

பிரதிப் பொது முகாமையாளர்
(அங்கத்தவர் சேவைகள்)

பிரதிப் பொது முகாமையாளர் (அங்கத்தவர் சேவைகள்) திரு. டபிள்யு.ஜீ.கே. ரத்நாயக்க ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் மனித வள முகாமைத்துவத்தில் இளங்கலை விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றுள்ளார். அவர் இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் மற்றும் இலங்கையின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனம் ஆகிய இரண்டிலும் இணை உறுப்பினராக உள்ளார். மேலும், அவரது பதவிக்கு மேலதிகமான பெறுமதியைச் சேர்த்துள்ளார். அவர் இங்கிலாந்தில் உள்ள பட்டய முகாமைத்துவக் கணக்காளர்களின் இரண்டாம் II கட்டத்திற்கு பகுதியளவு தகுதி பெற்றுள்ளார்.



**திரு. ஜே.கே.பி. ரஞ்சித்**

பிரதிப் பொது முகாமையாளர் (சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள்) 2024.01.15 ஆம் திகதி ஓய்வு பெற்றுள்ளார்.

2024 ஜனவரி 15 ஆம் திகதி தனது பணியில் இருந்து ஓய்வு பெற்ற திரு. ஜே.கே.பி. ரஞ்சித் அவர்கள் சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகளின் பிரதிப் பொது முகாமையாளராகப் பணியாற்றினார். அவர் பரந்த அளவிலான கல்வி மற்றும் தொழில்முறைத் தகுதிகளைக் கொண்டவர். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முதுகலை முகாமைத்துவ நிறுவனத்தில் வணிக நிர்வாகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர். மேலும், அவர் ஐக்கிய இராச்சியத்தில் உள்ள பட்டய முகாமைத்துவ கணக்காளர்களின் (CIMA) உறுப்பினராக உள்ளார். திரு. ரஞ்சித் அவர்கள் சர்வதேச கணக்காளர் சங்கத்தின் உறுப்பினராகவும், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் இறுதிச் சான்றிதழைக் கொண்டவராகவும் உள்ளார். அவரது தொழில்முறை உறுப்பினர் தகுதிகளில் சான்றளிக்கப்பட்ட வணிகக் கணக்காளர் (CBA) சான்றிதழ் மற்றும் அமெரிக்காவில் உள்ள பட்டய உலகளாவிய முகாமைத்துவக் கணக்காளர் (CGMA) சான்றிதழ் என்பன அவரது துறையியல் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றது.

# சிரேஸ்ட முகாமைத்துவக் குழு





**திரு எம்.ஏ.கே. அளுத்கமகே**
பிரதிப் பொது முகாமையாளர் (முதலீடு) / பதில் பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)

திரு. எம்.ஏ.கே. அலுத்கமகே தற்போது பிரதிப் பொது முகாமையாளர் (முதலீடு) மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) ஆகிய பதவிகளில் கடமையாற்றுகின்றார். அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிகவியல் இளங்கலை (சிறப்பு) பட்டத்தையும், களனி பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாக முதுகலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார். மேலதிகமாக, இலங்கை கணக்கியல் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் மற்றும் இலங்கை முகாமைத்துவ நிறுவகத்தின் உறுப்பினரான திரு. அலுத்கமகே, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் மையப் பகுதியொன்றை கண்காணிக்கும் அதிகாரியாக காணப்படுகின்றார்.

**திரு. எச்.எம்.ஏ. ஜயந்த குமார**
பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்)

திரு. எச்.எம்.ஏ. ஜயந்த குமார தற்போது பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்) பதவியில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் சட்டப் பணிகளை மேற்கொண்டு வருகின்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை விஞ்ஞானப் பட்டமும் (சிறப்பு) கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச உறவுகளில் முதுகலைப் பட்டமும் பெற்ற திரு. ஜயந்த குமார அவர் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் சட்டப் பட்டமும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்ட இளங்கலைப் பட்டமும் பெற்றுள்ளார். திரு. ஜெயந்த குமார இலங்கை உச்ச நீதிமன்றத்தின் வழக்கறிஞர், பிரசித்திபெற்ற நொத்தாரிசு மற்றும் சத்தியப்பிரமாண ஆணையாளர் ஆவார். கம்பனி செயலாளராகவும் பதிவு செய்துள்ளார்.



**திரு. ஆர்.ஜே.சி.எஸ். சம்பத் குணவர்தன**
பிரதிப் பொது முகாமையாளர்
(நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்)

திரு. ஆர்.ஜே.சி.எஸ் சம்பத் குணவர்தன அவர்கள் நிருவாகம் மற்றும் மனித வளங்களின் பிரதிப் பொது முகாமையாளராகப் பணிபுரிகின்றார். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திக்கான டிப்ளோமா பட்டம் பெற்றவர். மேலும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் தொழில் கல்வியில் பட்டமும் பெற்றுள்ளார். திரு. குணவர்தன களனிப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் மற்றும் வணிகக் கற்கைகளில் முதுமாணிப் பட்டம் பெற்று தனது திறமைகளை மேலும் வெளிக்காட்டியுள்ளார். அவர் தான் பணிபுரியும் நிறுவனத்தில் பிரதான பிரிவொன்றுக்கு மிகவும் பொருத்தமானவராக காணப்படுகின்றார்.



**திருமதி. வஜிரா ஜயரத்ன**
உதவிப் பொது முகாமையாளர் (பங்களிப்பு சேகரிப்புகள் மற்றும் மேலதிக் கட்டணம்)

திருமதி. வஜிரா ஜயரத்ன அவர்கள் ஒரு முக்கிய பணியில் தீவிரமாக ஈடுபட்டு, உதவிப் பொது முகாமையாளர் (பங்களிப்பு சேகரிப்பு மற்றும் மேலதிகக் கட்டணங்கள்) பதவியில் தனது சேவைகளை ஆற்றிவருகின்றார். அவர் களனி பல்கலைக்கழகத்தில் வணிகவியல் இளங்கலை (சிறப்பு) பட்டத்தையும், அவுஸ்திரேலிய முகாமை வணிகக் கல்லூரியில் வணிக நிர்வாக முதுகலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

# சிரேஸ்ட முகாமைத்துவக் குழு





**திருமதி பி.எல்.சி.பி. அல்விஸ்**
உதவிப் பொது முகாமையாளர்
(அமுலாக்கல் வலயம் III) பிரதிப் பொது முகாமையாளர்
(சேகரிப்புகள் மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள்)
பதவியில் கடமைகளை மேற்கொள்ளல்

திருமதி. பி.எல்.சி.பி. அல்விஸ் பிரதிப் பொது முகாமையாளர் (சேகரிப்புகள் மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள்) பதவிக்கான மேலதிக பொறுப்புகளுடன் உதவிப் பொது முகாமையாளராக (அமுலாக்கல் வலயம் III) பணியாற்றுகின்றார். அவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் முதல் தரப் விஞ்ஞானமாணி இளங்கலைப் பட்டத்தையும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உயிரியல் தொழில்நுட்பத்தில் நிபுணத்துவத்துடன் முதுமாணிப் பட்டத்தையும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் பொது முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். மேலும், அவர் இலங்கை பிரயோக புள்ளிவிபர நிறுவனத்தில் பிரயோக புள்ளிவிபரவியல் டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். தற்போது, திருமதி அல்விஸ் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டத்தில் இளங்கலைப் பட்டப்படிப்பை மேற்கொண்டு தனது தொழில்முறைத் தகைமைகளை மேலும் வலுப்படுத்திக் கொண்டுள்ளார்.

**திரு. கே.ஜி.என். ரத்நாயக்க**
உதவிப் பொது முகாமையாளர்
(நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்)

திரு. கே.ஜி.என். ரத்நாயக்க அவர்கள் உதவிப் பொது முகாமையாளராக நிர்வாக மற்றும் மனித வள மேற்பார்வையைச் சிறப்பாகச் செய்து வருகின்றார். அவர் களனிப் பல்கலைக்கழகத்தில் வணிகவியல் இளங்கலை (சிறப்பு) பட்டம் பெற்றவர் மற்றும் ஆள் முகாமை பட்டய நிறுவனத்தின் இணை உறுப்பினராகவும் உள்ளார்.





**திரு. புஷ்பரங்க வீரசேகர**
உதவிப் பொது முகாமையாளர்
(தகவல் தொழில்நுட்பம்)

**திரு. எச்.ஜி.டி. நிஹால் பிரசன்ன**
உதவிப் பொது முகாமையாளர்
(அங்கத்தவர் சேவைகள்)

திரு.புஷ்பரங்க வீரசேகர அவர்களின் பெயருக்கு முன்னால் நிறைய தகுதிகள் உள்ளன. தற்போது உதவிப் பொது முகாமையாளராக (தகவல் தொழில்நுட்பம்) பணியாற்றி வருகின்றார். இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கணினி பொறியியலில் நிபுணத்துவத்துடன் பொறியியல் தொழில்நுட்பத்தில் பட்டம் பெற்றவர். மேலும், அவர் ஐக்கிய இராச்சியத்தில் UK Staffordshire பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்பட்ட பொறியியல் கணினித் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார். திரு.வீரசேகர இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தின் இணை உறுப்பினராகவும் ஐக்கிய இராச்சியத்தில் உள்ள பிரிட்டிக்ஷ் கணினி சங்கத்தின் உறுப்பினராகவும் உள்ளார். திரு. வீரசேகர அவர்கள் இலங்கை பொறியியல் சபையினால் பதிவு செய்யப்பட்ட பொறியியல் நிபுணராகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளார். மேலும், அவர் செயற்கை நுண்ணறிவு அமைப்பு திட்டத்தில் டிப்ளோமா மற்றும் ஜாவா கம்ப்யூட்டர் அப்ளிகேக்ஷன் டிப்ளோமையும் நிறைவு செய்துள்ளார்.

திரு. எச்.ஜி.டி. நிஹால் பிரசன்ன அவர்கள் உதவிப் பொது முகாமையாளராக (அங்கத்தவர் சேவைகள்) செயற்படுகின்றார். அவர் ருஹுனு பல்கலைக்கழகத்தில் இளங்கலை விஞ்ஞானப் பட்டத்தையும், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் பொது முகாமைத்துவ முதுகலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார். மேலும், அவர் சீனாவின் வுஹானில் உள்ள HUST பல்கலைக்கழகத்தில் உயர் தொழில்முறை நிகழ்ச்சித்திட்டத்தை முடித்துள்ளார். அவரது கல்வி மற்றும் தொழில்சார் தகுதிகள், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்ற அவருக்கு மேலதிக பலத்தை அளிக்கின்றது.

# சிரேஸ்ட முகாமைத்துவக் குழு



**திரு. கே.டி.ஏ.பி. கருணாரத்ன**
உதவிப் பொது முகாமையாளர்
(நிதி)

திரு. கே.டி.ஏ.பி. கருணாரத்ன உதவிப் பொது முகாமையாளர் (நிதி) பதவியை வகிக்கின்றார். அவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினராக உயர் கல்வி மற்றும் தொழில்முறை தகைமைகளைப் பெற்றுள்ளார். திரு. கருணாரத்ன அவர்கள் நிதி மற்றும் கணக்கியல் துறையில் தனது திறனையும் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்துவதன் மூலம் தனது கடமைகளைச் செய்கின்றார். அவரது தொழில்துறையில் தொழில்முறை திறன் மற்றும் நெறிமுறை நடத்தை ஆகியவற்றின் உயர் தரங்களை பராமரிப்பதற்கான அவரது அர்ப்பணிப்பு மெச்சப்படுகின்றது.



# முகாமைத்துவக் குழு
(2023/12/31 ஆந் திகதியில்)

## கூட்டிணைக்கப்பட்ட அலுவலகம்

### நிதி சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள்

**திருமதி. கே. எம். டி. ஏ. யூ. குணவர்தன**
நிதி முகாமையாளர் (நிதி சேகரிப்பு)

**திருமதி. ஏ. விதானபத்திரன**
(முகாமையாளர் (நலன்கள்)

**திருமதி. ஏன். சி. ஏப்பா**
நிதி முகாமையாளர் (நிதி சேகரிப்பு)
(w.e.f.01.03.2024)

**திரு. ஏ. ஜே. ஆர். அனுர**
முகாமையாளர் (சுய-வேலைவாய்ப்பு மற்றும் இடம்பெயர்வு சேவைகள்)

### அங்கத்தவர் சேவைகள்

**திரு. எம். ரஹுப்தீன்**
முகாமையாளர் (அங்கத்துவ கணக்குகள்)

**திருமதி. ஏ. எச். என். பிரியந்தி**
நிதி முகாமையாளர் (நலன் கொடுப்பனவுகள்)

**திருமதி. ஐ. விஜேதுங்க**
முகாமையாளர் (அங்கத்துவக் கணக்குகள் - சிறிய வகை)

**திருமதி. டபிள்யு. ஆர். நந்தசீலி**
முகாமையாளர் (நலன்களைத் தீர்மானித்தல்)

**திரு. எச். கே. கே. பி. புஷ்பகுமார**
முகாமையாளர் (தண்டப்பணம்)

**திரு. டபிள்யு. ஏ. ஏ. ஸவான்ஸ்**
செயல் முகாமையாளர் (நலன் நிர்வாகம்)

### முதலீடுகள்

**திருமதி. என். ஆர். என். பெர்னாந்து**
நிதி முகாமையாளர்

**திருமதி. எச்.எம்.சி. தமயந்தி**
நிதி முகாமையாளர்

**திருமதி. டபிள்யு.ஏ.ஏ. ஹங்சமாலி**
முகாமையாளர்

### நிதிப் பிரிவு

**திருமதி. எம்.ஏ.வி. குமுதினி**
நிதி முகாமையாளர் (நிதி)

### உள்ளக கணக்காய்வு

**திரு. என்.ஜி. பிமந்த**
முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு)

**திரு. டி. எல். சி. டி. குமார**
முகாமையாளர் (உளளக் கணக்காய்வு)

## நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்

**திரு. பீ. சரத்**
முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்)

**திருமதி எஸ். வீரசிங்க**
முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்)

**திரு. டி. எம். ஐ. அமிடோன்**
முகாமையாளர் (கொள்முதல்)

**திரு. ரி. எச். சி. பி. குமார**
முகாமையாளர் (உற்பத்தித்திறன்)

## தகவல் தொழில்நுட்பம்

**திரு. பீ. டி. வடுகே**
முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்)

## சட்டம்

**திருமதி எஸ். ஆர். எஸ். புஞ்சிஹேவா**
முகாமையளார் (சட்டம்)

**திருமதி எஸ்.பி. ராஜபக்ஷ**
முகாமையாளர் (சட்டம்)

## பிராந்திய அலுவலகங்கள்

**திரு. டி. டி. குலரத்ன**
பிராந்திய முகாமையாளர்
07.06.2023 அன்று ஓய்வு பெற்றார்

**திரு. எம். ஏ. சந்திரசேன**
பிராந்திய முகாமையாளர் (கொழும்பு 1 - 7)

**திரு. கே. என். அசோக**
பிராந்திய முகாமையாளர் (கொழும்பு 8-15)

**திரு. யூ. எச். எஸ். ரஞ்சித்**
பிராந்திய முகாமையாளர் (நுவரெலியா)

**திரு. என். கே. யு. கே. நாகசிங்க**
பிராந்திய முகாமையாளர் (பதுளை)

**திருமதி. பிரியங்கி விஜேரத்ன**
பிராந்திய முகாமையாளர் (களுத்துறை)

**திரு. டி. எம். கே. ஜி. ஏ. திசாநாயக்க**
பிராந்திய முகாமையாளர் (கண்டி)

**திரு. டி. கே. எஸ். எஸ். திஸாநாயக்க**
பிராந்திய முகாமையாளர் (ஹம்பாந்தோட்டை)

**திரு. ஈ. எம். எஸ். கே. ஏகநாயக்க**
பிராந்திய முகாமையாளர் (குருநாகல்)

**திருமதி. ஏ. கே. என். பிரசாங்கனி**
முகாமையாளர் - சட்டம் (கண்டி)

**திருமதி. ஜே. எம். எஸ். பி. தென்னகோன்**
பிராந்திய முகாமையாளர் (கேகாலை)

**திரு. சாகர ஹேவாகம**
பிராந்திய முகாமையாளர் (கம்பஹா)

**திருமதி. சி. அபேகுணசேகர**
பிராந்திய முகாமையாளர் (மாத்தறை)

**திரு. பீ. ஹெட்டியாராச்சி**
பிராந்திய முகாமையாளர் (அநுராதபுரம்) பதில் கடமை

**திரு. ஜெ. தமிழழகன்**
பிராந்திய முகாமையாளர் (யாழ்ப்பாணம்)

**திரு. ஏ. ஜி. ஜி. குணேந்திரா**
பிராந்திய முகாமையாளர் (காலி)

**திருமதி.. எஸ். எம். குணசிங்க**
பிராந்திய முகாமையாளர் (வவுனியா)

**திரு. சிசிர ரஞ்சித்**
பிராந்திய முகாமையாளர் (திருகோணமலை)

**திரு. டி. டி. குலரத்ன**
பிராந்திய முகாமையாளர் (இரத்தினபுரி)

**செல்வி. ஜே. சி. ஜயசிங்கஆராச்சி**
பிராந்திய முகாமையாளர் (அம்பாறை)



# ஆளுகை அறிக்கை

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை அரசாங்க நியதிச்சட்ட நிறுவனமாக இருக்கும் நிலையில், எல்லா நியிதிச்சட்ட மற்றும் ஒழுங்குமுறை ரீதியான தேவைகளுக்கும் இணங்கக் கூடிய உறுதியான ஆளுகை நடைமுறைகள் ஊடாக அங்கத்தவர்களுக்கு உயர் பெறுமானத்தை உருவாக்குவதை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றது. சபையின் செயற்பாடுகளின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு வெளிப்படைத்தன்மையினை மிக உயர்ந்த தரத்திற்கு கடைபிடித்தல், நம்பகத்தன்மை மற்றும் இணங்கி ஒழுகுதல் என்பன நன்கு நிறுவப்பட்ட மூவகை வழிகாட்டல் நெறிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

### நிறுவன ஆளுகையின் செயல் சட்டகம்

நிர்வாக அமைப்பு கீழே வரைபடமாக விளக்கப்பட்டுள்ளது:

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிறுவன ஆளுகை அமைப்பு குறிப்பிட்ட பொறுப்புகள் மற்றும் தெளிவான அறிக்கையிடல் வரிகளைக் கொண்ட பல அடுக்கு ஆளும் குழுக்களைக் கொண்டுள்ளது. அதன் பணிப்பாளர்கள் குழு, சபையின் செயல்பாடுகள் தொடர்பான அதன் மேற்பார்வை பணியை வழங்கும் அதே வேளையில் அதன் மூலோபாய திசைமுகம், நிதி இலக்குகள், வள ஒதுக்கீடு மற்றும் இடர் நோக்குநிலை குறித்து சபையின் உயர் நிர்வாகத்துடன் தொடர்ந்து தொடர்பு கொள்கின்றது.




### சபையின் துணைக்குழுக்கள்

சபையின் துணைக்குழுக்கள் குறிப்பிட்ட பொறுப்புகள் மற்றும் தெளிவாக வரையறுக்கப்பட்ட ஆணைகளுக்குள் செயல்படுகின்றன. குழுக்கள் திறம்பட செயல்படுவதற்கும் அந்தந்த செயல்பாடுகள் குறித்து சபைக்கான பரிந்துரைகளை செய்வதற்கும் குழுவின் தலைவர்கள் பொறுப்பாக உள்ளனர்.

### முகாமைத்துவக் குழுக்கள்

செயல்பாட்டு முடிவுகளின் முகாமை பொது முகாமையாளரின் தலைமையிலான சிரேஸ்ட நிர்வாகக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாளாந்த செயல்பாட்டு முடிவுகளை எடுப்பதற்கும் தலைவர்/ பிரதம நிர்வாக அதிகாரிக்கு பரிந்துரை செய்வதற்கும் முகாமைத்துவக் குழு நிறுவப்பட்டுள்ளது.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபையின் பணிப்பாளர்கள் குழுவானது, சிறந்த நிர்வாகக் கட்டமைப்புகளை செயல்படுத்துவதற்கும், கொள்கை கட்டமைப்பை உருவாக்குவதற்கும் உச்சப் பொறுப்பைக் கொண்டுள்ளது, இதன்மூலம் ஒழுங்குமுறை மாற்றங்கள், வளர்ந்து வரும் இடர்கள் மற்றும் வாய்ப்புகள் மற்றும் உள் மாற்றங்கள் ஆகியவற்றை பிரதிபலிக்கும் வகையில் ஆளுகை நடைமுறைகள் மீளாய்வு செய்யப்பட்டு தொடர்ந்து புதுப்பிக்கப்படுகின்றன.

கீழே பட்டியலிடப்பட்டுள்ள பல வெளிப்புற மற்றும் உள்ளக மாற்றக் கருவிகளுக்கு இணங்க சபையின் ஆளுகை கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது:

- 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்.
- நிதி ஒழுங்கு விதிகள் (அரசாங்க)
- பொது தொழில்முயற்சி வழிகாட்டுதல்கள் (பொது தொழில் முயற்சிகள் திணைக்களம்)
- சிறந்த நடைமுறைகள் மற்றும் நடத்தைக் கோவை (பொது தொழில் முயற்சிகள் திணைக்களம்)
- முக்கிய பங்குதாரர் குழுக்களின் உரிமைகளை நிறைவேற்றும் போது பெரு நிறுவனங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைத் தெரிவிக்கும் CA ஸ்ரீலங்காவினால் வெளியிடப்பட்ட கூட்டாண்மை ஆளுகைக்கான சிறந்த நடைமுறைக் நடத்தைக் கோவை.
- இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு தரநிலை கண்காணிப்பு சபை சட்டம்
- தேசிய கொள்முதல் வழிகாட்டு நெறிகள் கோவை.
- ஊழியர் உரிமைகளப் பாதுகாக்கும் 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடை மற்றும் அலுவலக பணியாளர்கள் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள்
- வசூலிக்கும் முகவர்களுக்காக வரிவிதிப்பு அதிகாரிகளால் வெளியிடப்பட்ட சட்டங்கள், சுற்றறிக்கைகள், வர்த்தமானிப் பத்திரிகைகள்.
- தொடர்புடைய அரசாங்க சுற்றறிக்கைகள் (திறைச்சேரி. பொது நிர்வாக அமைச்சு)

## 1. பணிப்பாளர் சபை

### 1.1. சபை

அரசாங்க மற்றும் அதன் பங்குதாரர்கள் சார்பாக நிதியத்தின் நிர்வாகத்தில் பணிப்பாளர் சபைக்கு சட்டபூர்வமான பொறுப்பு உள்ளது. ETFB நிர்வாகமானது திறமையான செயல்பாடுகள் மற்றும் பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குவதற்கான உத்தரவாதத்தை வழங்கும் ஒரு பயனுள்ள உள் கட்டுப்பாடு அமைப்பைப் பராமரிக்கிறது என்பதை உறுதிப்படுத்த சபை முயற்சிக்கின்றது.

### 1.2 பணிப்பாளர் சபைக்கான நியமனங்கள்

பணிப்பாளர்கள் சபை பரந்த அளவிலான பின்னணியில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றது. (நிதி, வர்த்தகம், தொழில் வழங்குனர் கூட்டமைப்பு, தொழிற்சங்கம் போன்றவை) அதிக பன்முகத்தன்மையை ஊக்குவித்தல். சபைக் கூட்டங்களில் விவாதிக்கப்படும் விஷயங்கள் தொடர்பான ஒரு சுயாதீனமான பார்வையை வழங்க இது அவர்களுக்கு உதவுகின்றது.

சபையானது பின்வரும் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- அமைச்சரினால் நிமிக்கப்படும் நான்கு உறுப்பினர்கள்
- நிதி விடயம் தொடர்பாக பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் நியமிக்கப்படும் ஓரு உறுப்பினர்
- வர்த்தக விடயம் தொடர்பாக பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் நியமிக்கப்படும் ஓரு உறுப்பினர்
- இலங்கை தொழில் வழங்குநர் சங்கத்தால் நியமிக்கப்படும் ஓரு உறுப்பினர்
- ஒவ்வொன்றும் 100,000 அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட தொழிற்சங்கங்களின் நிறைவேற்றுக் குழுவுடன் ஆலோசித்து அமைச்சரினால் நியமிக்கப்படும் இரண்டு உறுப்பினர்கள்.

### 1.3 பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கள்

பணிப்பாளர் சபை தனது கட்டாய உரிமைகளையும் பொறுப்புகளையும் நேர்மையுடனும், பொது வளங்களின் பாதுகாவலராக நல்ல நம்பிக்கையுடனும் பயன்படுத்த வேண்டும். சபை எப்போதுமே அதன் பிரதான பொறுப்புகள் குறித்து விழிப்புடன் இருத்தல் வேண்டும். எந்தவொரு தீர்மானம் மற்றும் செயல்களின் முடிவுகள் இறுதியில் பொதுமக்களால் பொறுப்பேற்க வேண்டியிருப்பதனால் சரியான திட்டமிடலுடன் செயற்பாடுகளை முன்னெடுத்தல் வேண்டும். சபை கூட்டங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் பின்வருமாறு :-

- கொள்கை உருவாக்கம்
- நிதியத்தின் செயலாற்றுகையை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்
- துணை நிறுவனங்கள் / கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்களின் மற்றும் பிற முதலீடுகளின் செயல்திறனைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்

- வருடாந்த செயலாற்றுகையை மதிப்பீடு செய்தல்
- செயற்பாட்டு மூலதனத்தை முகாமை செய்தல்
- காலாண்டு, அரை ஆண்டு மற்றும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள்

### 1.4 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்

சபையானது வழமையாக ஒரு மாத இடைவெளியில் மற்றும் தேவைப்படும் போது ஒன்றுகூடும். இவ்வாண்டினுள் சபை பதினொரு 15 தடவைகள் ஒன்றுகூடியது. சபைக் கூட்டங்களின் செயல்திறனை மேம்படுத்துவதற்காக சபைக் கூட்டங்களுக்கு மூன்று நாட்களுக்குக் குறையாத வேலை நாட்களுக்கு முன்னர் மற்றும் நன்கு முன்கூட்டியே சபை குறிப்பாணைகள் வழங்கப்படுகின்றன. 2023 ஆம் ஆண்டில் சபைக் கூட்டங்களின் போதான வரவு கீழே தரப்பட்டுள்ளது.

| பெயர் | பங்கு பற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை | 2023 நிதி ஆண்டில் நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை | கலந்துகொண்ட கூட்டங்களின் சதவீதம் % |
|---|---|---|---|
| திரு. ஏ.ஆர். தேஷப்பிரிய* | 01 | 15 | 6.7% |
| திரு. டி.எல்.பி. ரோஹண அபயரத்ன | 14 | 15 | 93.3% |
| திரு. நீல் உமகிலிய | 14 | 15 | 93.3% |
| திரு. ஆரியசேன கால்லகே | 15 | 15 | 100% |
| செல்வி. கே.எஸ். தயாரத்ன | 13 | 15 | 86.6% |
| திரு. ஐ.டபிள்யு. செனவிரத்ன | 10 | 15 | 66.7% |
| செல்வி. ஈ.ஏ. ஏக்கநாயக்க | 13 | 15 | 86.6% |
| திரு. ஜூட் நிஹால் பீரிஸ் | 09 | 15 | 60% |
| திரு. எல்.எஸ். தேவேந்திர | 14 | 15 | 93.3% |
| திரு. டபிள்யு.எம். நுராஜித் சிங் | 13 | 15 | 86.7% |

** 2023.02.01 ஆம் திகதியில் இருந்து பதவி விலகியுள்ளார்.*

### 1.5 சபையின் நடுநிலைமை

நிர்வாகக் குழுவின் உறுப்பினர்கள் நிறுவனத்தை திறம்பட நிர்வகிப்பதற்கும், நல்ல நிர்வாகத்தின் மிக உயர்ந்த தரத்திற்கு இட்டுச் செல்வதற்கும், பெருநிறுவன நோக்கங்களை அடைவதற்கும் தேவையான நிபுணத்துவம், திறன்கள் மற்றும் அனுபவம் ஆகியவற்றைக் கொண்டுள்ளனர். தொலைநோக்கு, தலைமைப் பண்பு, பெற்ற திறமை, நேரடி நேர்மை ஆகிய குணங்கள் கொண்டவர்கள். குழு உறுப்பினர்களின் தனிப்பட்ட தொழில்முறை விவரங்கள் இந்த அறிக்கையின் பக்கம் 11 இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

### 1.6 பயனுள்ள சபை கூட்டத்திற்கு போதுமான நேரம்

சபை வழக்கமாக மாதாந்தம் கூடுகிறது. ஒரு குழு கூட்டத்திற்கு சராசரியாக 3 மணி நேரம் செலவிடப்படுகிறது. சபைக்கூட்ட பத்திரங்கள் ஆய்வு செய்வதற்கும் சபை உறுப்பினர்களுக்குப் போதுமான நேரம் இருப்பதை உறுதி செய்வதற்காகவும், கூட்டத்திற்கு 3 வேலை நாட்களுக்கு முன்னதாகவே சபைக்கூட்ட பத்திரங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

## 2. சபை செயலாளர்

சபை நடைமுறைகள், சட்டம் மற்றும் தொடர்புடைய விதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்க சபைக்கு ஆலோசனை வழங்குவதும் நம்பகமான மற்றும் பொருத்தமான தகவல்களை உறுதி செய்வதும் சபைக்குப் பொறுப்பான தொழில்சார் தகுதிவாய்ந்த நிறுவன செயலாளரின் பொறுப்பாகும். சபைக்குரிய ஆலோசனை சேவைகளை சபையின் அனைத்து உறுப்பினர்களும் சபை செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். சபை கூட்டங்களை நிர்வகிக்கும் நடைமுறைகள் பின்பற்றப்படுவதையும் சபை ஆவணங்களை சரியான நேரத்தில் விநியோகித்து சபையின் திறமையான செயல்பாட்டை செயலாளர் உறுதிசெய்கிறார்.

### 2.1 சபை செயலாளரின் வகிபாகம்

சபை நடைமுறைகள் பின்பற்றப்படுவதை சபை செயலாளர் உறுதி செய்ய வேண்டும். சபை நடவடிக்கைகள் தொடர்பான சட்ட தேவைகள் குறித்த வழிகாட்டுதலை வழங்க வேண்டும். செயலாளரின் பிரதான கடமைகள் பின்வருமாறு :

- சபை கூட்டங்கள், கூட்டங்களின் குறிப்புகள், சபை ஆவணங்கள் மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்களின் தகவல்களை அறிவித்தல்.
- சபை முடிவுகளின் நடவடிக்கைகளைப் பின்னூட்டம் செய்தல்.
- உள்வாரி மற்றும் வெளிவாரி தகவல்களை வழங்குவதன் மூலம் சபை அங்கத்தவர்களுக்கு உதவுதல்.

## 3. தவிசாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி

முழு நிர்வாக கட்டமைப்பினதும் முக்கிய இணைப்பாக இருக்கும் தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி பதவியணியையும் நிறுவனத்தையும் சரியான திசையில் வழிநடத்துவார். முன்னரே தீர்மானிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு முக்கிய நடவடிக்கைகள் தொடர்பான கொள்கைகளை செயல்படுத்துவதற்கும் அதற்குத் தேவையான திட்டங்களைத் தயாரிப்பதற்கும் அவர் பொறுப்புடையவர்.

### 3.1 தவிசாளரின் நியமனம்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியான தவிசாளர் அமைச்சரால் நியமிக்கப்படுவார்.

### 3.2 தவிசாளரின் பொறுப்புக்கள்

முழு நிர்வாக கட்டமைப்பினதும் முக்கிய இணைப்பாக இருக்கும் தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி பதவியணியையும் நிறுவனத்தையும் சரியான திசையில் வழிநடத்துவார். முன்னரே தீர்மானிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு முக்கிய நடவடிக்கைகள் தொடர்பான கொள்கைகளை செயல்படுத்துவதற்கும் அதற்குத் தேவையான திட்டங்களைத் தயாரிப்பதற்கும் அவர் பொறுப்புடையவர்.

### 3.3 மூலோபாய மற்றும் செயல்பாட்டு சமநிலை

பொறுப்புகளை திறம்படப் பிரிப்பதன் மூலம் அதிகாரத்தின் சரியான சமநிலை உறுதி செயயப்படுகிறது. தலைவரின் பங்கு பொது முகாமையாளரிடம் இருந்து வேறுபட்டது. தவிசாளர் ஒரு நிர்வாக பணிப்பாளராக உள்ளார் மற்றும் குழுவிற்கு தலைமைத்துவத்தை வழங்குகிறார், அதே நேரத்தில் பொது முகாமையாளர் செயல்பாட்டுத் தலைமையை வழங்குகிறார் மற்றும் பணிப்பாளர் சபையில் அங்கம் வகிக்கவில்லை. தலைவர் மற்றும் பொது முகாமையாளரின் முக்கிய பங்கு/பொறுப்புகள் கீழே தரப்பட்டுள்ளன:

#### தவிசாளர்

சபையின் ஒட்டுமொத்த மூலோபாய பார்வை

மூலோபாய தொனியை உயர்வாக பேணல்

அனைத்து மூலோபாய திசைகளுக்கும் குழுவின் செயல்திறனை உறுதி செய்தல்

இலங்கை அரசாங்கம் உட்பட அனைத்து பங்குதாரர்களுடனும் பயனுள்ள தொடர்பை பேணுதல்

அனைத்து பணிப்பாளர்களுக்கும் போதுமான தகவல்கள் கிடைப்பதை உறுதி செய்தல்

பணிப்பாளர் சபை முழுவதும் நெறிமுறை தொனியை அமைத்தல்.

#### பொது முகாமையாளர்

நோக்கங்களை எட்டுவதற்கு மூலோபாய பார்வையை செயல்படுத்துதல்

நிறுவன திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட செயல்திறன் இலக்குகளை அடைதல்

இலக்குகளை தொடர்ந்து கண்காணித்து அதன் சாதனைகளை சபைக்கு அறிவித்தல்

அங்கீகரிக்கப்பட்ட இடர் மற்றும் வலுவான உள்கட்டுப்பாட்டிற்குள் சபை செயல்படுவதை உறுதி செய்தல்.

சிரேஸ்ட முகாமைத்துவத்திற்கு செயல்பாட்டுத் தலைமைத்துவத்தை வழங்குதல்.

## 4. பொறுப்புக்கூறல் மற்றும் கணக்காய்வு

### 4.1 நிதி அறிக்கையிடல்

சபையின் நிதி அறிக்கைகள் இலங்கை கணக்கியல் தரங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. மேலும் கணக்கியல் மற்றும்

கணக்காய்வு தரநிலை கண்காணிப்பு சபை சட்டத்திற்கு இணங்குகின்றன.

### 4.1.1 சட்டரீதியான மற்றும் ஒழுங்குமுறை அறிக்கை

அரசியலமைப்பின் பிரகாரம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவின் கீழான கணக்காய்வாளர் அதிபதி சபையின் பிரதம கணக்காய்வாளராக இருப்பார்

### 4.1.2 நிதி அறிக்கைகள் தொடர்பில் கணக்காய்வாளர் அதிபதியின் பொறுப்பு

கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையைப் பார்க்க. (பக்கம் 303)

### 4.1.3 முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் ஆழமாக ஆராயப்படும் முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு அறிக்கையைப் பார்க்க. (பக்கம் 186 - 207)

## 4.2 உள்ளக கட்டுப்பாடு

### 4.2.1 உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்கு தனியான உள்ளக கணக்காய்வுப் பிரிவு உள்ளது. கணக்காய்வுக் குழுவின் மூலம் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வுக் அறிக்கைகள் மூலம் உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பின் போதுமான தன்மை மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றை மீளாய்வு செய்கிறது.

### 4.2.2. கணக்காய்வுக் குழுவின் உள்ளக கட்டுப்பாடுகளின் செயல்திறனை மீளாய்வு செய்தல்

உள்ளக கணக்காய்வுப் பிரிவு, நிதி அறிக்கையிடலுக்கான உள்ளக கட்டுப்பாடுகள் உள்ளிட்ட உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பின் செயல்திறனைப் பற்றி கணக்காய்வுக் குழுவுக்கு தவறாமல் அறிக்கை சமர்ப்பிக்கின்றது.



# துணை
# குழுக்கள்

# கணக்காய்வுக் குழு அறிக்கை

## குழு

முறையாக நியமிக்கப்பட்டுள்ள பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடும் சபையின் கணக்காய்வுக்குழு, சுயாதீன நிறைவேற்றுத்தரத்தைச் சாராத பணிப்பாளர்கள் இருவரைக் கொண்டுள்ளது.

## நோக்கம்

கணக்காய்வுக்குழு என்பது நிதி அறிக்கையிடலில் தொடர்ச்சியாக இணைந்த உள்ளக கட்டுப்பாட்டு முறைகளின் பயனுறுதி மற்றும் கணக்காய்வுச் செயன்முறையின் சுயாதீனம் மற்றும் விடயதானத்திற்குரியவாறு உருவாக்கப்பட்டுள்ள நிறுவனக் கட்டுப்பாட்டின் மிக முக்கியமான அங்கமாகும்.

## குழுவின் அமைப்பு மற்றும் கூட்டங்கள்

| பெயர் | பதவி | கலந்துகொண்ட கூட்டங்களின் எண். |
|---|---|---|
| திருமதி. கே.எஸ். தயாரத்ன | குழுவின் தலைவர் | 4/4 |
| திரு. நீல் உமகிலிய | குழு உறுப்பினர் | 4/4 |
| திருமதி. ஈ. ஏக்கநாயக்க | குழு உறுப்பினர | 4/4 |
| திரு. கே.எஸ். வெலிவிட்ட | குழுச் செயலாளர் | 4/4 |

## கணக்காய்வுக் குழுவின் கடமைப் பொறுப்பு

சபையின் நிதி அறிக்கையிடல், உள்ளக கட்டுப்பாட்டு விதிகள், உள்ளக கணக்காய்வு மற்றும் வெளிவாரிக் கணக்காய்வு அறிக்கைகள் பற்றிய முறையான மீளாய்வை மேற்கொண்டு கணக்காய்வுக் குழு, தனது பொறுப்புக்களை நிறைவேற்றும் செயற்பாட்டில் பணிப்பாளர் சபைக்குத் தேவையான ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது.

### குழுவின் பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு:

- நடைமுறையிலுள்ள உள்ளக கட்டுப்பாட்டுத் தொகுதி, நிதி அறிக்கையிடல் செயன்முறை, ஏற்புடைய கணக்கீட்டுத் தரங்களுக்கான இசைவு மற்றும் ஏற்புடைய ஒழுங்குபடுத்தல் தேவைகள் போன்ற எண்ணளவான மற்றும் பயனுறுதிமிக்க மீளாய்வை மேற்கொள்ளல்.
- முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் அர்த்தமுள்ள மதிப்பீடுகள் மற்றும் உறுதிப்பாடுகளை மீளாய்வு செய்தல்.
- பணிப்பாளர் சபைக்கு பொருத்தமான பரிந்துரைகளை செய்தல்.

## உள்ளக கணக்காய்வு

சபையின் உள்ளக கணக்காய்வுப் பணிகள், பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு) அவர்களின் தலைமையில் வழிநடாத்தப்படுகின்றதோடு, ஏற்புடைய கணக்காய்வு கண்டுபிடிப்புகள் கணக்காய்வுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும். குழுவானது பின்வரும் விடயங்களை மேற்பார்வை செய்து மீளாய்வை மேற்கொள்கின்றது.

- வருடாந்த கணக்காய்வுத் திட்டம்
- உள்ளக கணக்காய்வுச் செயன்முறையுடன் தொடர்புடைய உள்ளக கணக்காய்வு கண்டுபிடிப்புகள், அதற்கு ஏற்புடைய சிபாரிசுகள் மற்றும் அவற்றின் பயனுறுதி.

## வெளிவாரி கணக்காய்வு

கணக்காய்வுக் குழுவினால் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கைகளை முறையாக கருத்திற்கொண்டு அவற்றை மீளாய்வு செய்து கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்படுகின்றது.

## கவனம் செலுத்தப்படும் பிரதான துறைகள்

வேறுபடுத்தாத வருமதிகள், பொருள் சுற்றாய்வுச் சபை, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் புதிய கருத்திட்டங்களின் முன்னேற்றம், அங்கத்துவ நலன்களை செலுத்தும் செயன்முறை விடயத்தில் உள்ளக கட்டுப்பாட்டு விதிகள், நிதி அறிக்கையிடல் செயன்முறை மற்றும் நீதிமன்றத்தின் ஊடாக பங்களிப்புத் தொகை மற்றும் மேலதிகக் கட்டணம் சேகரித்தல் போன்ற நடவடிக்கைகள் தொடர்பில் கணக்காய்வுக் குழுவினால் வருடத்தினுள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## அறிக்கையிடல்

குழுவின் கண்டுபிடுப்புகள் மற்றும் அவற்றுக்குரிய பரிந்துரைகள், எழுத்துமூல மற்றும் வாய்மூலமாக சுருக்கமாக குறிப்பிடுதல் மற்றும் குழுக் கூட்டங்களின் போது கலந்துரையாடப்படும் விடயங்களை அறிக்கைகள் மூலம் சபைக்கு முன்வைப்பதன் மூலம் பணிப்பாளர் சபைக்கு அறிவிக்கப்படுகின்றது.

## முடிவுரை

வருடத்தில் குழுக் கூட்டங்களுக்கு சமர்ப்பிக்கப்படும் விடயங்கள் மற்றும் ஏற்புடைய கணக்காய்வு அவதானிப்புகள் பற்றிய ஆழமாக பரிசீலனைக்கு எடுத்து அவை தொடர்பில் பணிப்பாளர் சபைக்குத் தேவையான பரிந்துரைகளை சமர்ப்பித்து சபையின் சிரேட்ட முகாமைத்துவத்திற்குத் தேவையான வழிகாட்டல்கள் குழுவினால் ஏற்பாடு செய்யப்படுகின்றது. வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் ஏற்புடைய தரப்பினர்களின் அபிலாசைகளைப் பாதுகாப்பதை உறுதிப்படுத்தும் முகமாக சுயாதீன கணக்காய்வு குழுவொன்று காணப்படுவது பேருதவியாக இருப்பதோடு, அது சிறந்த தாபனக் கட்டுப்பாட்டு செயற்பாட்டின் பரீட்சயமாகக் கருதப்படும்.

கணக்காய்வு குழு சார்பாக,

**(கையொப்பமிடப்பட்டது)**
**திருமதி கே.எஸ். தயாரத்ன**
தலைவர்
கணக்காய்வுக்குழு

# இடர் முகாமைத்துவ குழுவின் அறிக்கை

### நிறைவேற்றுப் பொழிப்பு

தற்போதைய வணிக நிலப்பரப்பில் இடர்நேர்வு ஒரு முக்கிய அங்கமாகும். முகாமைத்துவ இடர் குழுவால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய முன்முயற்சிகள், சாத்தியமான எதிர்கால அபாயங்கள் மற்றும் அவற்றை திறம்பட குறைப்பதற்கான உத்திகள் பற்றிய விரிவான புரிதலுக்கு பங்களித்துள்ளன.

### நோக்கம்

தொழில்முயற்சி இடைநேர் முகாமைத்துவம் என்பது ஒரு முறையான மற்றும் விரிவான கட்டமைப்பாகும். இது அதன் தொடர்புடைய செயற்பாடுகளின் அனைத்து அம்சங்களிலும் அபாயங்களை முன்கூட்டியே நிர்வகிக்க உதவுகின்றது.

முகாமைத்துவ இடர் குழுவின் நோக்கம், ஒரு நிறுவனத்தின் ஒட்டுமொத்த நோக்கங்கள் மற்றும் செயல்திறனைப் பாதிக்கக்கூடிய அபாயங்களைக் கண்டறிதல், மதிப்பீடு செய்தல் மற்றும் குறைப்பதற்கான அணுகுமுறையைக் கண்காணித்து நிர்வகித்தல் ஆகும்.

### இடர் முகாமை

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அதன் மூலோபாய நோக்கங்களை அடைவதற்கும் அதன் பங்குதாரர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கும் அதன் பணியின் முக்கிய அங்கமாக பயனுள்ள இடர் முகாமை நடைமுறைகளை பேணி வருவதற்கு உறுதிபூண்டுள்ளது.

பணிப்பாளர் சபை இடர் முகாமைத்துவ செயல்முறைக்கு பொறுப்பாகும். இதற்கான முகாமைத்துவப் பொறுப்புகளை சுமந்துள்ள கணக்காய்வுக் குழு மற்றும் மேற்பார்வை இடர் குழு என்பன பணிப்பாளர் சபைக்கு ஒத்துழைப்பை வழங்குகின்றன.

### பிரதான ஆபத்துக்கள்

| ஆபத்து | சமாளிக்கும் உத்திகள் |
|---|---|
| **கடன் ஆபத்து**<br>தொழில் வழங்குநர் ஒருவருக்கு தனது உறுப்பினர் ஒருவரின் பங்களிப்பு பொறுப்பு மற்றும் கடப்பாடுகளை நிறைவேற்ற இயலாதவிடத்து கவனம் செலுத்தப்படும். | • அடிக்கடி மீளாய்வு<br>• தவணைக் கொடுப்பனவுத் திட்டங்கள்<br>• முனைப்புடன் அமுல்டுத்தும் செயற்பாடுகள் |
| **சட்ட மற்றும் ஒழுங்குமுறை ஆபத்து**<br>சட்டப்பூர்வ மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுக்கு இணங்காததால் எழுகிறது. | • அனைத்து கொள்கை மாற்றங்கள் மற்றும் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பில் புரிந்து வைத்திருத்தல்.<br>• ஒழுங்குமுறை விழிப்புணர்வை மேம்படுத்துதல். |
| **முதலீட்டு அபாயங்கள்**<br>எந்தவொரு முதலீட்டின் எதிர்கால இழப்பு அல்லது குறைவான செயல்திறன் அபாயத்துடன் தொடர்புடையது. | • வழக்கமான முதலீட்டுக் குழு கூட்டங்கள்.<br>• பங்கு நிறுவனங்களின் சந்தை மறு மதிப்பீட்டை அளவிடுதல்.<br>• முதலீட்டுக் கொள்கைகளை மீளாய்வு செய்தல் மற்றும் இணங்குதல்.<br>• பணிப்பாளர் சபையினால் தொடர்ந்து மீளாய்வுகளை மேற்கொள்ளல். |

| | |
|---|---|
| **வட்டி விகித ஆபத்து**<br>நிதிக் கருவிகளின் பெறுமதியைப் பாதிக்கும் வட்டி விகிதங்களில் ஏற்படும் மாற்றங்களின் ஆபத்து. | • வழக்கமான பொருளாதார மீளாய்வு<br>• இலங்கை கணக்கியல் தரநிலைகளின்படி மதிப்பீடுகள்.<br>• அறிவியல் ரீதியான முன்னறிவிப்பு முறைகளைப் பயன்படுத்துதல். |
| **மனித அபாயங்கள்**<br>சீரேட்ட மற்றும் நடுத்தர நிர்வாக மட்டத்தில் திறமையான ஊழியர்களை ஈர்க்க மற்றும் தக்கவைக்க முடியாத ஆபத்து. | • தொடர்ச்சியான திட்டமிடல்.<br>• திறன்விருத்தி மேம்பாட்டுத் திட்டங்கள்.<br>• தொழிலாளர் வருவாயைக் குறைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.<br>• நிரல் அமைச்சகத்துடன் வழக்கமான தொடர்புகள் |
| **செயல்பாட்டு அபாயங்கள்**<br>போதுமான அல்லது தோல்வியுற்ற உள் செயல்முறைகள், அமைப்புகள், நபர்கள் அல்லது வெளிப்புற நிகழ்வுகளால் ஏற்படும் இழப்பு ஆபத்து. | • செயல்முறை கண்காணிப்பு மேம்பாடுகள்.<br>• உள்ளக கட்டுப்பாடுகளின் தொடர்ச்சியான மீளாய்வு<br>• கைமுறையாக வேலை செய்வதற்குப் பதிலாக கணினி நிகழ்ச்சித்திட்டங்களைப் பயன்படுத்துதல்.<br>• உள்ளக கணக்காய்வு |
| **தொழில்நுட்பத்தின் ஆபத்து**<br>தகவல் தொடர்பாடல் தோல்விகள், முறிவுகள் மற்றும் செயலிழப்புகளுக்கான சாத்தியக்கூறுகளுடன் தொடர்புடையது, இதையொட்டி, மீட்பு இல்லாமை பற்றிய ஆரம்ப விழிப்புணர்வை ஏற்படுத்தல். | • காப்புப்பிரதிகளின் சரியான பராமரிப்பு.<br>• கணினி முறைமைகளின் பாதுகாப்பு மேம்பாடுகள். |
| **சைபர் பாதுகாப்பு ஆபத்து**<br>தகவல் தொழில்நுட்ப அமைப்புகளின் தோல்வி அல்லது சைபர் தாக்குதல்களால் சாத்தியமான நிதி இழப்புகள், செயல்பாடுகளில் இடையூறு மற்றும் நற்பெயர் சேதம் ஆகியவற்றுடன் தொடர்புடைய ஆபத்து. | • மெய்நிகர் தனியார் இணைய (vpn) சேவைகளைப் பயன்படுத்துதல்.<br>• மேம்படுத்தப்பட்ட கணினி முறைமைப் பாதுகாப்பு.<br>• நிபுணர்களின் ஆலோசனை. |

**முடிவுரை**

ஒட்டுமொத்தமாக, முகாமைத்துவ இடர் குழு நிறுவனத்திற்குள் ஆபத்து - விழிப்புணர்வு கலாச்சாரத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இதன் மூலம் நல்ல இடர் முகாமை நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் நிறுவனத்தின் நற்பெயர், நிதி ஸ்திரத்தன்மை மற்றும் நீண்டகால நிலைத்தன்மை ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கு உதவுகின்றது.

**(கையொப்பமிடப்பட்டது)**
**கே.எஸ். வெலிவிட்ட**
பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு)
இடர் முகாமைத்துவ இணைப்பாளர்

# முதலீட்டுக் குழுவின் அறிக்கை

## அமைப்பு

மீளாய்வுக்குரிய வருடத்தில் குழு உறுப்பினர்கள் பின்வருமாறு.

| | |
|---|---|
| செல்வி. கே.எஸ. தயாரத்ன | பணிப்பாளர |
| திருமதி. டி.வி.சி. தில்ருக்க்ஷி | திறைசேரிப் பிரதிநிதி |
| திரு. டி.பி.ஜி. பெர்னாந்து | பொது முகாமையாளர் |
| திரு. ஆர.கே. ஜயலத் | பொது முகாமையாளர் - வேலை |
| திரு. திரு. எம். ர' கே. அளுத்கமகே | பிரதி பொது முகாமையாளர் (முதலீடு) |
| திருமதி. ஜீ.ஏ.எஸ். சுமனசேன | பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) – ராஜினாமா செய்தார் 22.09.2023 |
| திரு. கே.எஸ். வெலிவிட்ட | பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு) அவதானிப்பாளர் |

## கூட்டங்கள்

| பெயர் | கலந்துகொண்ட கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| செல்வி. கே.எஸ. தயாரத்ன | 4/12 |
| திருமதி. டி.வி.சி. தில்ருக்க்ஷி | 11/12 |
| திரு. டி.பி.ஜி. பெர்னாந்து | 01/12 |
| திரு. ஆர.கே. ஜயலத் | 01/12 |
| திரு. திரு. எம்.ர. கே. அளுத்கமகே | 12/12 |
| திருமதி. ஜீ.ஏ.எஸ். சுமனசேன | 08/12 |
| திரு. கே.எஸ். வெலிவிட்ட | 12/12 |

* *இணைய வழியில் மற்றும் தனிப்பட்ட ரீதியில் ஆகிய இரு முறைகளிலும்*

முதலீட்டுக் குழு பொருத்தமான உள்ளக உறுப்பினர்கள் மற்றும் நிரல் அமைச்சு உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். ஆபத்து சார்ந்த முதலீடுகள் குறித்த கருத்துகளையும் பெறுவதற்காக குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு ஒருமுறை குழு கூடுகிறது.

சபையின் நிதிக் கடப்பாடுகளை செலுத்துவதற்கு திரவத்தன்மையினை நிர்வகித்தல் மற்றும் அதிகாரம் பெற்ற முதலீடுகளைப் பயன்படுத்தி உகந்த முதலீட்டு வருவாயினை வழங்குதல் ஆகியவற்றுடன் சபையின் நிதியினை முதலீடு செய்வதில் சபையின் முதன்மை நோக்கமாவது அசல் தொகையின் பாதுகாப்பினை உறுதி செய்வதாகும். எனவே முதலீட்டுக் கமிட்டி அம்மூன்று இலக்குகளையும் உறுதிப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றது.

### (அ) பாதுகாப்பு

மூலதனத்தின் பாதுகாப்பே சபையின் முதன்மைமிகு நோக்கமாகும். மூலதனத்தின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு முதலீட்டுக் கலவையின் கணிசமான பகுதியினை சிறைகாப்புடைய அரசாங்க பிணையப் பத்திரங்களில் முதலீடு செய்யப்படும்.

### (ஆ) திரவத்தன்மை

நியாயமாகத் திட்டமிடப்பட்ட எல்லா செயற்பாட்டுத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு சபையினால் முடியுமாவதற்கு முதலீட்டுக் கலவையானது போதுமான திரவமாக இருத்தல் வேண்டும்.

### (இ) முதலீடு மீதான வருவாய்

அதிகாரம்பெற்ற முதலீட்டுக் கருவிகளைப் பயன்படுத்தி இருக்கும் உயர் வருவாயினைப் பெறுவதற்கு முதலீட்டுக் கலவை வடிவமைக்கப்படுதல் வேண்டும்.

# முகாமைத்துவக் குழுவின் அறிக்கை

## அமைப்பு

மீளாய்வுக்குரிய வருடத்தில் குழு உறுப்பினர்கள் பின்வருமாறு.

## தவிசாளர், பொது முகாமையாளர் மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவம்

நிதியத்தின் செயற்பாடுகளின் முகாமைத்துவத்திற்கான பொறுப்பு தலைவர் மற்றும் சிரேக்ஷ்ட முகாமைத்துவத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபையினால் எடுக்கப்படும் தீர்மானங்களை பயனுறுதிமிக்கதாகச் செயற்படுத்துவதற்கு அவர்கள் பொறுப்பாயுள்ளனர். நன்கு கவனத்திற்கொண்ட தீர்மானங்களைப் பெறுவதற்கு இயலுமாக்க சபைக்கு தகவல்களையும் தேவையான விளக்கங்களையும் தலைவரும் சிரேக்ஷ்ட முகாமைத்துவக் குழுவும் வழங்கும். சபையின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அடைவதுடன் நிதியத்தின் பயனுறுதிமிக்க முகாமைத்துவத்திற்கு செயற்படு திட்டங்கள், வரவுசெலவுகள், முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளைப் பேணுதல் ஆகியவற்றை அவர்கள் முறைப்படுத்துவார்.

எனவே, பருவகால முன்னேற்றக் கண்காணிப்பிற்காக சபையிலுள்ள முக்கியமானதொரு கருவியாக முகாமைத்தவக் கமிட்டி உள்ளது. இக்கமிட்டி கவனஞ் செலுத்தவேண்டிய முக்கிய விடயங்களாக உள்ளடங்க வேண்டியவை:-

- இன்னும் செயற்படுத்தப்படாத முன்னைய கூட்டங்களில் எடுத்த சபைத் தீர்மானங்கள்
- மாற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கு அவசியமான விலகல்களுக்கான காரணங்களை இனங்காணல் மற்றும் இலக்குகளுக்கு எதிரான உண்மையான செயலாற்றுகைகளை மீளாய்தல்
- பணப்பாய்ச்சல்களின் விமர்சனமிக்க மதிப்பீடு மற்றும் எதிர்வரும் காலாண்டிற்கான திட்டமிடப்பட்ட தேவைகள்
- கடன் /காசு முகாமைத்தவம்
- அவசரக் கொள்வனவுகளைத் தவிர்ப்பதற்கு கொள்வனவுத் தாமதங்களை (ஏதேனும் இருப்பின்) பின்னூட்டம் செய்தல்
- EPF, ETF மற்றும் வரிகள் போன்ற சட்ட ரீதியான கட்டணங்களின் கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தல்
- சபையினால் தீர்மானங்களை எடுத்தலை எளிதாக்குவதற்கு நியாயப்படுத்துகைகளுடன் தேவையான தொழில்நுட்ப மேம்பாடு
- மேம்படுத்தல்/ திருத்தியமைத்தல் ஆகியவற்றிற்கான மாற்று நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதற்கு ஊடகங்கள் ஊடான முறைபாடுகள் உள்ளடங்கலாக வாடிக்கையாளர் திருப்தி/ அதிருப்தி குறித்து பின்னூட்டஞ் செய்தல்
- திருத்தப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய ஏதேனும் புதிய முன்மொழிவுகள்
- நிர்வாகம் மற்றும் தாபனத்துடன் தொடர்புடைய அனைத்து விடயங்களும்
- வேறு ஏதேனும் நாளாந்த செயற்பாட்டுப் பிரச்சினைகள்.

# இடர் முகாமைத்துவம்




### பின்னணி

நன்கு நிர்வகிக்கப்படும் சட்டப்பூர்வ அமைப்பாக, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அதன் பணி வெளிப்பாடுகளில் சில அதிகாரங்களைக் கொண்டுள்ளது அத்தோடு, வணிக வாய்ப்பாக ஆபத்தை எதிர்கொள்கின்றது. வணிக நோக்கங்களின் வரையறையுடன் ஆரம்பிக்கும் ஒரு தொடர்ச்சியான செயல்முறையாக இடர் முகாமைத்துவம் கருதப்படுகிறது. அதன் பிறகு அனுமானிக்கக்கூடிய பின்பற்றப்படக் கூடாத வணிக வெளிப்பாடுகள் குறித்த பின்வரும் கொள்கைகளின் சிக்கல்கள் மற்றும் ஆபத்துக் காரணிகளை அடையாளம் கண்டு மதிப்பீடு செய்தல். அத்துடன் ஒருவரின் சொந்த நடவடிக்கைகள் தொடர்பான இடர் முகாமைத்துவ முறைகள் மற்றும் நடைமுறைகளையும் அது குறிக்கும்.

ஒவ்வொரு நிறுவனமும் அதன் வெற்றியை அச்சுறுத்தும் அபாயங்களை எதிர்கொள்கிறது. அதிர்ச்சிகள் அல்லது இயற்கை நிகழ்வுகள், தொற்றுநோய் நெருக்கடிகள் மற்றும் சுற்றுச்சூழல்/சமூக/நிர்வாகச் சிக்கல்கள் ஆகியவை தேசிய மற்றும் உலகப் பொருளாதாரங்களை மோசமாகப் பாதிக்கும் நிகழ்வுகளாகும். கோவிட்-19 தொற்றுநோய் அனைத்துத் தொழில்களிலும் நிச்சயமற்ற தன்மை மற்றும் இடையூறுகளுடன் நெருக்கடியான சூழலை உருவாக்கியுள்ளது. தொழில்நுட்பம் நம் வாழ்வின் ஒரு அங்கமாகிவிட்டது. ஆனால் புதிய தொழில்நுட்பங்களின் முன்னேற்றம் பொருளாதார வளர்ச்சியை உந்தித் தள்ளும் உற்பத்தித்திறன் அளவைத் தடுக்கிறது.

இருப்பினும், (Fintech) மற்றும் ரெக்டென் (Regtech) கிரிஸ்டொஎசட்ஸ் (Cryptoassets) நிதிக் குற்றங்கள் (Financial Crimes) சய்பர் பாதுகாப்பு (Cyber Security) மற்றும் தரவுப் பாதுகாப்பு (Data Security) போன்ற சீர்குலைக்கும் புதிய கண்டுபிடிப்புகள் இடர் மேலாண்மை செயல்பாட்டில் சாதகமற்ற செயற்பாடுகளாகும்.

### பயனுள்ள கொள்கைகளுக்கான பயணப் பாதை

ஆளுமை, இடர் மற்றும் இணக்கம் அல்லது (GRC) என்ற சுருக்கப் பெயரானது மிகவும் மதிக்கப்படும் சொற்றொடர் ஆகும். மேலும் இந்த அம்சங்கள் ஒரு புதிய வகை பிரதிபலிப்பாக மாறியுள்ளன. இன்றைய நிறுவனங்கள் தங்கள் வணிக செயல்பாடுகளுக்கு ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறையை பின்பற்றுகின்றன. நிர்வாகம், இடர் மற்றும் இணக்கம் அல்லது (GRC) எவ்வாறு சிறந்த முறையில் தங்கள் நிறுவனத்தின் வளர்ச்சிக்காக பயன்படுத்தப்படலாம் என்பதற்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை சிறந்த எடுத்துக்காட்டாகும்.

### அபாயக் கட்டுப்பாடு

பணிப்பாளர் சபை இடர் முகாமைத்துவம் தொடர்பான பொறுப்பை இடர் முகாமைத்துவக் குழுவிற்கு வழங்கியுள்ளது.

அனைத்து வகையான இடர்களையும் அடையாளம் காணுதல், அளவீடு செய்தல், கண்காணித்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றை சுயாதீனமாக மீளாய்வு செய்யும் நோக்கில் இடர் முகாமைத்துவக் குழுவின் பொறுப்பாகும். மேலும், இடர் முகாமைத்துவக் குழு, நிறுவனத்தின் வணிக உத்திகளுக்கு இணங்க, ஒரு விவேகமான இடர் எடையுள்ள நிதியை அங்கீகரிக்க பணிப்பாளர் சபைக்கு பரிந்துரைக்கிறது. அபாயத்தை புரிந்துகொள்ளல் மற்றும் முகாமைத்துவத்தை உறுதிப்படுத்துவதற்காகஇடர் பகுப்பாய்வு, அளவீடு மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த மூன்று வகை உத்திகளையும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை பின்பற்றியது.


நிர்வாகம்
உள்ளக
கொள்கைகள்
செயற்பாட்டு முகாமைத்துவம்
மற்றும் ஒத்துழைப்பு மூலம்
வலுவான ஒழுக்க
நடத்தை வினைத்திறன்
மூலோபாயங்கள்
செயன்முறை
பொதுமக்கள்
தொழில்நுட்பம்
அபாய
தாக்கம்
வெளிவாரி
ஒழுங்குவிதிகள்
இடர்
முகாமைத்துவம்
இசைவு

# அபாய இணக்கம்


ஏனைய
அனைத்து பிரிவுகளும்
ஊ.ந.பொ.நி.ச.
உலகளாவிய
ஆபத்து நிறமாலை
மூலோபாய
மற்றும்
செயற்பாடுகள்
கடன்,
திரவத்தன்மை,
சந்தை முதலீடு

| உள்ளக அபாய இயக்கி | அபாயத் துறைகள் | தணிப்பு மூலோபாயங்கள் |
|---|---|---|
| **மூலோபாய அபாயம்** | வணிகச் சூழலில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் பாதகமான வணிக முடிவுகள், தவறான முடிவுகளைச் செயல்படுத்துதல் அல்லது வணிகச் சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்குப் பதிலளிக்காத தன்மை ஆகியவற்றால் எழும் வருவாய் மற்றும் மூலதனத்திற்கு தற்போதைய அல்லது எதிர்கால ஆபத்து. | தொடர்புடைய வழிகாட்டுதல்கள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு இணங்குதல், முழு நிறுவனத்திற்கான திட்டம் மற்றும் செயல் திட்டத்தை முன்கூட்டியே தயாரித்தல் மற்றும் மாறுபாடுகளை தொடர்ந்து கண்காணிப்பதன் மூலம் உள்ளக மற்றும் வெளிப்புற மூலோபாய ஆபத்து குறைக்கப்படுகிறது. |
| **செயற்படுத்தல் அபாயம்** | போதிய அல்லது தோல்வியுற்ற உள்ளக செயல்முறைகள், நபர்கள் மற்றும் அமைப்புகள் அல்லது வெளிப்புற நிகழ்வுகளால் ஏற்படும் இழப்பு ஆபத்து. | கட்டுப்பாடுகள், உத்தரவாதம் மற்றும் கணினி கணக்காய்வுகள் மற்றும் வழக்கமான தகவல் தொழில்நுட்ப அமைப்பு புதுப்பிப்புகள், வணிக தொடர்ச்சி திட்டமிடல் மற்றும் பேரழிவு மீட்பு நடைமுறைகள், தகவல் மற்றும் இணைய பாதுகாப்பு மற்றும் பௌதீக பாதுகாப்பு ஆபத்து விழிப்புணர்வு பயிற்சி ஆகியவற்றின் மூலம் செயல்பாட்டு ஆபத்து குறைக்கப்படுகிறது. |
| **கடன் அபாயம்** | தங்களது பொறுப்புகளை நிறைவேற்று வதற்காக எதிர் தரப்பு அல்லது வழங்குநரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக ஏற்படும் இழப்பு ஆபத்து. | ஒப்பந்தங்களில் கையொப்பமிடுதல், கடன் வரம்புகளை பராமரித்தல் மற்றும் கண்காணித்தல் மற்றும் பிணையத்தைப் பெறுதல் ஆகியவற்றின் மூலம் கடன் ஆபத்து குறைக்கப்படுகிறது. |
| **சந்தை அபாயம்** | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் முக்கிய நோக்கங்களில் ஒன்று உள்ளூர் நிதிச் சந்தையில் பணத்தை முதலீடு செய்வதன் மூலம் வருமானத்தை ஈட்டுவதாகும். இதன் தன்மை விலை நிச்சயமற்ற தன்மையை அடிப்படையாகக் கொண்டது. நிதிச் சான்றிதழ்களின் மதிப்பில் ஏற்படும் மாற்றங்களால் இழப்புகள் ஏற்படும். | தனித்துவமான முதலீட்டு முகாமைத்துவ முறைகள் மற்றும் கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலம் நிலையற்ற இடர் சந்தைகளில் பணப்புழக்கம் ஆபத்து, வட்டி விகித ஆபத்து மற்றும் பங்கு விலை ஆபத்து ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு சந்தை அபாயம் குறைக்கப்படுகிறது. |
| **முதலீட்டு அபாயம்** | முதலீடு என்பது தற்போதைய வளங்களைப் பயன்படுத்துவதை கைவிடுவதற்கான முடிவாகும். மாறாக, இந்த எதிர்கால வருமானங்கள் அவற்றின் தற்போதைய மதிப்புகளில் முதலீடு செய்வதன் அபாயத்தை விட அதிக எதிர்கால வருமானத்தை உருவாக்கப் பயன்படும் என்ற நம்பிக்கையில் எதிர்கால நலன்கள் செயல்படாது அல்லது தேவையான அளவை விட குறைவது ஆபத்தாகும். | சுற்றுச்சூழல், சமூக மற்றும் நிர்வாக காரணிகள் மூலம் பொறுப்பான முதலீடு என்ற கருத்தை கருத்தில் கொண்டு முதலீட்டுக் கொள்கையை பின்பற்றுவதன் மூலம் முதலீட்டு அபாயங்கள் குறைக்கப்பட்டுள்ளன. |
| **திரவத்தன்மை அபாயம்** | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் பணப்புழக்கம், மற்றவற்றுடன், உறுப்பினர் உரிமைகோரல்களைச் செலுத்து வதற்கான உடனடி பணத் தேவை, தற்போது வைத்திருக்கும் பணத்தின் அளவு மற்றும் அதன் முதலீட்டுச் சொத்துக்களை பணமாக மாற்றுவது ஆகியவற்றைப் பொறுத்தது. | பணப்புழக்க அபாயமானது முதிர்வு வரம்பின் கட்டுமானம், உண்மையான மற்றும் ஒப்பந்த பண ரசீதுகளின் பகுப்பாய்வு, 'ரெபோ' போன்ற தலைகீழ் மறு கொள்முதல் திரவச் சொத்துக்களில் முதலீடு, பன்முகப்படுத்தப்பட்ட சந்தைப்படுத்தக்கூடிய பங்குச் சந்தையில் முதலீடு போன்றவற்றால் குறைக்கப்படுகிறது. |

## செற்பாட்டு அபாய முகாமைத்துவம்

செயற்பாட்டு அபாயத்தை அடையாளம் கண்டு பல்வேறு காரணிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. செயன்முறைகள், ஆட்கள், முறைமைகள் மற்றும் வெளி நிகழ்வுகள் காரணமாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை முகம் கொடுக்கும் பல்வேறுபட்ட செயற்பாட்டு ஆபத்துகளை மதிப்பீடு செய்து பின்னர் செயற்பாட்டு அபாயத்தின் பின்விளைவு ஆபத்தை குறைப்பதற்காக முன்னுரிமை அடிப்படையில் தீர்மானிப்பதற்காக அபாயங்களை தரப்படுத்தி அபாயப் பதிவேடொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| | பிரிவு/கிளை/குழு | | | சந்தை இடைநேர்வுக் கட்டுப்பாடு - 2 ஆவது வரிசைப் பாதுகாப்பு | | | | | | 2023 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பிரதான அபாய இடைநேர்வுப் பகுதிகள் | செயற்பாடுகள் அல்லது விசேட இடைநேர்வு | அபாயத்திற்குப் பொறுப்பானவர் | ஆபாயத்தின் தாக்கம் அல்லது தீவிரம் | | | நிகழ்வதற்கான இடம்பாடு அல்லது சாத்தியம் | | | ஆபாய தணிக்கை உத்தி |
| | | | | குறைந்த | நடுத்தர | கூடிய | குறைந்த | நடுத்தர | கூடிய | |
| 1 | ஆங்கத்தவர் கணக்குகளை இற்றைப்படுத்தல் | மோசடியான இடர்நேர்வு | பிரதிப் பொது முகாமையாளர் அங்கத்தவர் சேவைகள் | | | × | × | | | தகவல் தொழில்நுட்பத் தொகுதி கட்டுப்பாட்டு விதிகள் மூலம் கடமைகளை ஒதுக்கி பணிப்புரை வழங்கல் |
| 2 | கடவுச்சொல் கட்டுப்பாடு | ஆயுளுளு முறையின் பிழையான கடவுச் சொல் ஒதுக்கீடு — மோசடியான இடர்நேர்வு | உதவிப் பொது முகாமையாளர் தகவல் தொழில்நுட்பம் | | | × | | | × | i. IT தரவுத் தளத்தைப் பராமரித்தல்<br>ii. மிக சிக்கலான கடவுச்சொற்கள் |
| 3 | தகவல் தொழில்நுட்பக் கொள்கை | செயற்பாட்டு இடைநேர்வு | உதவிப் பொது முகாமையாளர் தகவல் தொழில்நுட்பம் | | | × | | | × | i. விரிவான IT கொள்கைகள்<br>ii. IT முறையிலான கணக்காய்வு |
| 4 | அங்கத்தவர்களின் பிரதான கோப்புக் தரவுகளில் மாற்றங்கள் நிகழ்தல் | மோசடியான இடர்நேர்வு | பிரதிப் பொது முகாமையாளர் அங்கத்தவர் சேவைகள் | | | × | × | | | i. மின் பதிவு வசதி மற்றும் அங்கத்தவர் பிரதான கோப்புக்களின் தரவு மாற்றங்களை வரையறுத்தல் |
| 5 | நலன் கோரிக்கை - பற்றுச்சீட்டுக் கொடுப்பனவு | மோசடியான இடர்நேர்வு | பிரதிப் பொது முகாமையாளர் அங்கத்தவர் சேவைகள் | | | × | × | | | வங்கிகளில் பற்றுச்சீட்டுக் கொடுப்பனவுக்காக MASS முறைமையில் தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு இலக்கத்தை ஒன்றிணைத்தல் |
| 6 | நலன் கோரிக்கை — வேலைப் பத்திரம் தயாரிப்பு | மோசடியான இடர்நேர்வு | உதவிப் பொது முகாமையாளர் தகவல் தொழில்நுட்பம் | | | × | × | | | வேலைப் பத்திரங்களுக்குத் தேவையான தரவுக் குறிப்பு பிரவேசங்கள் தொடர்பில் தகவல் தொழில்நுட்ப தொகுதி கட்டுப்பாடு |
| 7 | ஒதுக்கப்படாத வருமதிகள் | மோசடியான இடர்நேர்வு | பிரதிப் பொது முகாமையாளர் அங்கத்தவர் சேவைகள் | | | × | | | × | வேறுபடுத்தாத வருமதிகள் தொடர்பில் தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு கட்டுப்பாடு |

| பிரிவு/கிளை/குழு | | | | சந்தை இடைநேர்வுக் கட்டுப்பாடு - 2 ஆவது வரிசைப் பாதுகாப்பு | | | | | | 2023 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பிரதான அபாய இடைநேர்வுப் பகுதிகள் | செயற்பாடுகள் அல்லது விசேட இடைநேர்வு | அபாயத்திற்குப் பொறுப்பானவர் | ஆபாயத்தின் தாக்கம் அல்லது தீவிரம் | | | நிகழ்வதற்கான இடம்பாடு அல்லது சாத்தியம் | | | ஆபாய தணிக்கை உத்தி |
| | | | | குறைந்த | நடுத்தர | கூடிய | குறைந்த | நடுத்தர | கூடிய | |
| 8 | அங்கத்தவரின் பெயர் மற்றும் அடையாள அட்டை இலக்கம் அற்ற அங்கத்தவர் கணக்குகள் | மோசடியான இடர்நேர்வு | பிரதிப் பொது முகாமையாளர் அங்கத்தவர் சேவைகள் | | | × | | | × | i. குடிப்பெயர்வுக் கணக்குகளை தடுத்து வைத்தல்<br>ii. 2015 ஆம் ஆண்டுக்கு முந்திய கணக்குகளை தடுத்து வைத்தல்<br>iii. 2015 ஆண்டு முதல் கணக்குகளை இற்றைப்படுத்தல் மற்றும் முன்னேற்றத்தை மாதாந்தம் குழுவுக்கு சமர்ப்பித்தல் |
| 9 | MASS முறைமையினுள் நுழைவுப் பராமரிப்பு | மோசடியான இடர்நேர்வு | உதவிப் பொது முகாமையாளர் தகவல் தொழில்நுட்பம் | | | × | × | | | backups களை 03 வருடங்கள் வரை நீடித்தல் |
| 10 | புதிய NIC உட்படுத்தும் போது பழைய NIC அழித்தல் | i. மோசடியான இடர்நேர்வு<br>ii. இருமுறை கொடுப்பனவு இடைநேர்வு<br>iii. தரவுகள் இழப்பு | உதவிப் பொது முகாமையாளர் தகவல் தொழில்நுட்பம் | | | × | × | | | தலையீடுகளை கண்டறிதல் |
| 11 | நவம் மாவத்தை வாகனத் தரிப்பிட வருமானம் | i. வருமானம் இழப்பு<br>ii. கடன் ஆபத்து / தவறுகை இடைநேர்வு<br>iii. மோசடியான இடர்நேர்வு<br>iv. நட்டஈட்டு இடைநேர்வு | உதவிப் பொது முகாமையாளர் நிர்வாகம் மற்றும் மனிதவளம் | | | × | × | | | i,ii,iii. சிறந்த மேற்பார்வை மற்றும் கடன் முகாமைத்துவம்<br>iv. செல்லுபடியான மற்றும் உறுதியான உடன்படிக்கைகள் |
| 12 | நுவரெலியா பிராந்திய அலுவலகம் - கோப்புக்களை நடைமுறைப்படுத்தல் | i. இசைவு இடைநேர்வு<br>ii. மோசடியான இடர்நேர்வு<br>iii. சட்ட இடைநேர்வு<br>iv. வருமானம் இழப்பு | பதில் கடமை பிரதிப் பொது முகாமையாளர் - அங்கத்தவர் பணம் சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள் | | | × | × | | | i. சிறந்த கண்காணிப்பு மற்றும் செயன்முறையை விரிவுபடுத்தல் |
| 13 | பொருள் பதிவேடு முகாமைத்துவம் | i. சொத்துக்களின் பிழையான ஒதுக்கீடு<br>ii. சொத்துக்கள் இழப்பு | பிரதிப் பொது முகாமையாளர் - நிதி | | | × | × | | | i. பொருள் சுற்றாய்வு<br>ii. பொருள் பதிவேட்டு முகாமைத்துவம் |

| பிரிவு/கிளை/குழு | | | | சந்தை இடைநேர்வுக் கட்டுப்பாடு - 2 ஆவது வரிசைப் பாதுகாப்பு | | | | | | 2023 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பிரதான அபாய இடைநேர்வுப் பகுதிகள் | செயற்பாடுகள் அல்லது விசேட இடைநேர்வு | அபாயத்திற்குப் பொறுப்பானவர் | ஆபாயத்தின் தாக்கம் அல்லது தீவிரம் | | | நிகழ்வதற்கான இடம்பாடு அல்லது சாத்தியம் | | | ஆபாய தணிக்கை உத்தி |
| | | | | குறைந்த | நடுத்தர | கூடிய | குறைந்த | நடுத்தர | கூடிய | |
| 14 | MASS முறையில் செலுத்தப்பட்டிருப்பினும் செலுத்தப்படவில்லை எனக் காண்பிக்கும் அங்கத்தவர் கணக்குகள் | மோசடியான இடர்நேர்வு | பிரதிப் பொது முகாமையாளர் அங்கத்தவர் சேவைகள், உதவிப் பொது முகாமையாளர் தகவல் தொழில்நுட்பம் | | | × | × | | | i. சகல இணைக் கணக்குகளையும் அடையாளம் கண்டு தடுத்தல் |
| 15 | போலியான தொழில் வழங்குநர் கணக்குகள் | மோசடியான இடர்நேர்வு | பதில் கடமை பிரதிப் பொது முகாமையாளர் - அங்கத்தவர் பணம் சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள் பிரதிப் பொது முகாமையாளர் அங்கத்தவர் சேவைகள், உதவிப் பொது முகாமையாளர் தகவல் தொழில்நுட்பம் | | | × | × | | | நிலையான தொழில் வழங்குநர் கணக்குகள் |
| 16 | சுயதொழில் - அங்கத்தவர் உரிமைகள் - குடிப்பபெயர்வு ஊழியர்கள் (புதிதாக எழுதப்பட்ட உரிமைகள்) | இருமுறை கொடுப்பனவு / மோசடியான கொடுப்பனவு | பதில் கடமை பிரதிப் பொது முகாமையாளர் - அங்கத்தவர் பணம் சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள் உதவிப் பொது முகாமையாளர் தகவல் தொழில்நுட்பம் | | × | | × | | | MASS பகுப்பாய்வு முறை ஊடாக உரிமை கோரிக்கை செயன்முறை |
| 17 | மோட்டார் வாகன காப்புறுதி | வாகன விபத்துக்கள் / களவு/ சேதம் | உதவிப் பொது முகாமையாளர் நிர்வாகம் மற்றும் மனிதவளம் | | | × | × | | | நிலவும் சந்தைப் பெறுமதிக்கு காப்புறுதி செய்தல் |
| 18 | i. கையினால் எழுதப்பட்ட சுய நலக் உரிமைக் கொடுப்பனவுகள்<br>ii. 2017 ஆம் ஆண்டுக்கு முன்னர் கையினால் செலுத்தப்பட்ட சுய அங்கத்தவர் கணக்குகள் | இருமுறை கொடுப்பனவு / மோசடியான கொடுப்பனவு | பதில் கடமை பிரதிப் பொது முகாமையாளர் - அங்கத்தவர் பணம் சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள் உதவிப் பொது முகாமையாளர் தகவல் தொழில்நுட்பம் | | | × | × | | | MASS பகுப்பாய்வு முறை ஊடாக உரிமை கோரிக்கை செயன்முறை |

| பிரிவு/கிளை/குழு | | | | சந்தை இடைநேர்வுக் கட்டுப்பாடு - 2 ஆவது வரிசைப் பாதுகாப்பு | | | | | | 2023 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பிரதான அபாய இடைநேர்வுப் பகுதிகள் | செயற்பாடுகள் அல்லது விசேட இடைநேர்வு | அபாயத்திற்குப் பொறுப்பானவர் | ஆபாயத்தின் தாக்கம் அல்லது தீவிரம் | | | நிகழ்வதற்கான இடம்பாடு அல்லது சாத்தியம் | | | ஆபாய தணிக்கை உத்தி |
| | | | | குறைந்த | நடுத்தர | கூடிய | குறைந்த | நடுத்தர | கூடிய | |
| 19 | வளாகங்களை வாடகைக்கு விடுதல் / குத்தகைக்கு வழங்குவதற்கு ஒப்பந்தம் செய்தல் | செயற்பாட்டு இடைநேர்வு | பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம் - உதவிப் பொது முகாமையாளர் நிர்வாகம் மற்றும் மனிதவளம் | | | × | × | | | செல்லுபடியான மற்றும் கடப்பாடுடைய ஒப்பந்தங்களை மேற்கொள்ளல் |
| 20 | நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம் | சொத்துக்கள் காணாமல் போதல் / சேதங்கள் | பிரதிப் பொது முகாமையாளர் - நிதி | | × | | × | | | சரியான வருடாந்த பொருள் சுற்றாய்வுச் சபை தகவல் தொழில்நுட்பப் பிரிவில் காணப்படும் தகவல் தொழில்நுட்ப சொத்துப் பதிவேடு. காலத்திற்கு அமைய அகற்றல். |
| 21 | பிராந்திய அலுவலகங்களின் காசோலைகள் / பண வைப்பு | களவு / நட்டம் / தாமதம் | பதில் கடமை பிரதிப் பொது முகாமையாளர் - அங்கத்தவர் பணம் சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள் | | × | | | × | | உரிய மேற்பார்வை மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் |

## முடிவுரை

நிறுவனம் தற்போது வெளிப்படும் ஒவ்வொரு வகையிலும் பரந்த அளவிலான அபாயங்கள் மற்றும் அமைதியான இயக்கிகள் பற்றிய புரிதலைப் பெற்றுள்ள காரணத்தினால் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தான் எதிர்கொள்ளும் உண்மையான அபாயங்களை நிர்வகிப்பதற்கான பல்வேறு வழிகள் தொடர்பில் கவனம் செலுத்துகின்றது. எனவே, ஒவ்வொரு வகையான இடர்களினதும் இடர் பதிவேடு தொகுக்கப்பட்டு ஏற்புடைய அபாயங்கள், செயற்பாடுகள் மற்றும் கட்டுப்பாடுகளைப் புரிந்து கொள்வதற்கும் அங்கீகரிப்பதற்கும் கண்காணிப்பதற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு இயலுமாகியுள்ளது.


A
B
C
D
E




# நிதிக் கூற்றுக்கள்



# இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விபரமான வருமானக் கூற்று

2023 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது

| | குறிப்பு | குழுமம் | | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|---|---|---|
| | | 2023 டிசம்பர் 31 ஆம் திகதி | 2022 டிசம்பர் 31 ஆம் திகதி | 2023 டிசம்பர் 31 ஆம் திகதி | 2022 டிசம்பர் 31 ஆம் திகதி |
| | | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| **மொத்த வருமானம்** | | | | | |
| வட்டி வருமானம் | 4 | 64,834,198 | 46,442,799 | 64,380,505 | 46,316,209 |
| தேறிய வியாபார வருமானம் | 5 | 2,148,913 | 1,296,862 | - | - |
| பங்கிலாப வருமானம் | 6 | 1,209,331 | 736,919 | 1,209,331 | 736,919 |
| இலாப / நட்டக் கணக்கின் மீது ஆரம்ப சொத்துக்கள் சாதாரண பெறுமதிக்கு செம்மையாக்கப்பட்ட இலாபம் / (நட்டம்) | 7 | 1,528,360 | (1,375,782) | 1,528,360 | (1,375,782) |
| ஏனைய வருமானங்கள் | 8 | 756,921 | 473,899 | 674,482 | 444,592 |
| | | **70,477,723** | **47,574,697** | **67,792,678** | **46,121,938** |
| | | | | | |
| **மொத்த தொழிற்பாட்டுச் செலவினங்கள்** | | | | | |
| ஆளணிச் செலவினங்கள் | 9 | 1,939,661 | 1,690,272 | 1,324,106 | 1,392,354 |
| நிர்வாகச் செலவினங்கள் | 10 | 389,856 | 346,572 | 312,763 | 252,293 |
| நிதிச் செலவினங்கள் | 11 | 4,385 | 4,314 | 4,013 | 3,697 |
| அங்கத்தவர் செலவினங்கள் | 12 | 711,058 | 577,743 | 704,507 | 574,568 |
| பெறுமானத் தேய்வு மற்றும் கடன்கழிப்பு | 13 | 61,812 | 56,103 | 40,554 | 36,063 |
| நடப்பு ஆண்டில் அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்ட வட்டி | | 499,157 | 358,411 | 499,157 | 358,411 |
| உரிமையாண்மை முதலீடுகளின் பெறுமதி இழப்பு | 14 | (51,452) | 76,820 | (51,452) | 76,820 |
| ஏனைய செலவினங்கள் | 15 | 208,011 | 121,030 | - | - |
| | | **3,762,488** | **3,231,266** | **2,833,648** | **2,694,206** |
| | | | | | |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | | **66,715,235** | **44,343,431** | **64,959,030** | **43,427,732** |
| | | | | | |
| வருமானவரிச் செலவினங்கள் | 16 | (9,582,180) | (6,663,194) | (9,016,645) | (6,449,427) |
| | | | | | |
| **வரிக்குப் பின்னரான இலாபம்** | | **57,133,055** | **37,680,237** | **55,942,384** | **36,978,305** |
| | | | | | |
| **இலாபம் குறிக்கக்கூடியது:** | | | | | |
| கம்பனி பங்குதார்கள் | | 57,013,988 | 37,610,044 | 55,942,384 | 36,978,305 |
| கட்டுப்பாடற்ற உரிமைகள் | | 119,067 | 70,193 | - | - |
| **ஆண்டிற்கான இலாபம்** | | **57,133,055** | **37,680,237** | **55,942,384** | **36,978,305** |

# இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விபரமான வருமானக் கூற்று

2023 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது

| | குறிப்பு | குழுமம் | | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|---|---|---|
| | | 2023 டிசம்பர் 31 ஆம் திகதி | 2022 டிசம்பர் 31 ஆம் திகதி | 2023 டிசம்பர் 31 ஆம் திகதி | 2022 டிசம்பர் 31 ஆம் திகதி |
| | | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| **விபரமான வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தக்கூடிய அல்லது மீள்வகைப்படுத்தப்படும் உருப்படிகள்** | | | | | |
| ஏனைய விரிவான ஒதுக்குகள் மீதான சாதாரண பெறுமதி (பங்குகள்) மாற்றம் | | 3,070,788 | (2,151,584) | 3,070,788 | (2,151,584) |
| ஏனைய விரிவான ஒதுக்குகள் மீதான சாதாரண பெறுமதி (அலகுகள்) மாற்றம் | | 29,982 | (39,196) | 29,982 | (39,196) |
| | | | | | |
| **விபரமான வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தப்படாத உருப்படிகள்** | | | | | |
| இளைப்பாற்று நலன் கடப்பாடு மீது காப்பீட்டு ஆதாயம் / (இழப்பு) | | (63,865) | 55,129 | (63,865) | 55,129 |
| **ஆண்டிற்கான வரிக்குப் பின்னரான மொத்த ஏனைய விபரமான வருமானம்** | | **3,036,905** | **(2,135,651)** | **3,036,905** | **(2,135,651)** |
| **ஆண்டிற்கான வரிக்குப் பின்னரான மொத்த விபரமான வருமானம்** | | **60,169,960** | **35,544,586** | **58,979,289** | **34,842,654** |
| | | | | | |
| **மொத்த விபரமான வருமானம் குறிக்கக் கூடியது** | | | | | |
| கம்பனி பங்குதாரர்கள் | | 60,050,893 | 35,474,393 | 58,979,289 | 34,842,654 |
| கட்டுப்பாடற்ற உரிமைகள் | | 119,067 | 70,193 | - | - |
| **வரிக்குப் பின்னரான ஆண்டிற்கான மொத்த விபரமான வருமானம்** | | **60,169,960** | **35,544,586** | **58,979,289** | **34,842,654** |
| | | | | | |
| நிறுத்தி வைத்த இலாபம் மு:கொ | | 5,928,466 | 5,230,602 | 4,812,440 | 4,732,140 |
| சொத்தின் மீதான தேறிய இலாபம் / (நட்டம்) | | 321,350 | 83,102 | 321,350 | 83,102 |
| பங்கிலாப மாற்றம் மற்றும் ஒதுக்கிற்கு மாற்றுதல் | | (10,314,164) | - | (10,314,164) | - |
| **ஒதுக்கீட்டுக்கு கிடைகக்கூடிய இலாபம்** | | 57,133,055 | 37,680,237 | 55,942,384 | 36,978,305 |
| **ஒதுக்கீட்டுக்கு கிடைகக்கூடிய மொத்த இலாபம்** | | **53,068,708** | **42,993,941** | **50,762,011** | **41,793,547** |
| கழிக்க: உத்தேசிக்கப்பட்ட பகிர்வு - பங்கிலாபம் 7% (2022 - 5.75%) | | (32,102,819) | (24,301,886) | (32,102,819) | (24,301,886) |
| வட்டி வருமானம் - 3.0% | | (13,758,500) | (12,679,221) | (13,758,500) | (12,679,221) |
| கழிக்க : பங்கிலாபம் - இலங்கை உப்புக் கம்பனி | | (315,000) | (14,175) | - | - |
| கழிக்க : கட்டுப்பாட்டற்ற உரிமைகள் | | (119,067) | (70,193) | - | - |
| **ஒதுக்கீட்டின் பின்னரான இலாபம்** | | **6,773,322** | **5,928,466** | **4,900,692** | **4,812,440** |

# நிதி நிலைமைக் கூற்று

2023 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு

| | குறிப்பு | குழுமம் | | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|---|---|---|
| | | 2023 டிசம்பர் 31 ஆம் திகதி | 2022 டிசம்பர் 31 ஆம் திகதி | 2023 டிசம்பர் 31 ஆம் திகதி | 2022 டிசம்பர் 31 ஆம் திகதி |
| | | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| **சொத்துக்கள்** | | | | | |
| காசும் காசுக்கு சமமானவையும் | | 1,226,541 | 760,157 | 898,585 | 584,266 |
| சாதாரண பெறுமதியின் மீதான நிதிச் சொத்துக்களின் இலாபம் மற்றும் நட்டம் | 17 | 4,463,977 | 2,887,168 | 4,463,977 | 2,887,168 |
| துணை நிறுவனங்களில் முதலீடு | 18 | - | - | 470,961 | 470,961 |
| சாதாரண பெறுமதியின் மீதான நிதிச் சொத்துக்களின் ஏனைய விரிவான வருமானம் | 19 | 10,764,966 | 8,646,578 | 10,764,966 | 8,646,578 |
| கடன் கழிப்புச் செலவின் கீழ் நிதிச் சொத்துக்கள் | 20 | 501,639,231 | 445,527,175 | 499,504,778 | 444,308,492 |
| ஏனைய சொத்துக்கள் | 21 | 4,210,470 | 3,851,196 | 3,503,613 | 3,206,136 |
| சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள் | 22 | 988,715 | 973,832 | 310,604 | 297,256 |
| குத்தகைச் சொத்துக்கள் | 23 | 697 | 1,394 | - | - |
| அருவச் சொத்துக்கள் | 24 | 6,163 | 9,017 | 6,163 | 9,017 |
| முதலீட்டுச் சொத்துக்கள் | 25 | 4,587,406 | 4,587,406 | 4,587,406 | 4,587,406 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **527,888,166** | **467,243,924** | **524,511,053** | **464,997,280** |
| | | | | | |
| **பொறுப்புக்கள்** | | | | | |
| கடன்களுக்கான வட்டியும் பெறப்பட்ட கடன்களும் | 26 | 7,620 | 11,049 | - | - |
| மானியங்கள் மற்றும் உதவித் தொகைகள் | 27 | 38,399 | 36,134 | 8,490 | 4,512 |
| நிலையான நலன் கடப்பாடு | 28 | 593,245 | 466,499 | 303,379 | 215,479 |
| நடப்பு வரிப் பொறுப்புக்கள் | 29 | 5,144,686 | 3,828,019 | 4,864,069 | 3,701,367 |
| ஏனைய பொறுப்புக்கள் | 30 | 680,320 | 550,467 | 115,112 | 107,206 |
| பின்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | 31 | 70,865 | 90,684 | - | - |
| ஏற்பாடுகள் | 32 | 415,163 | 407,301 | 415,163 | 407,301 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **6,950,298** | **5,390,152** | **5,706,213** | **4,435,866** |
| | | | | | |
| **பங்குரிமை** | | **520,937,868** | **461,853,772** | **518,804,839** | **460,561,415** |
| | | | | | |
| அங்கத்துவ நிதியம் | 33 | 504,434,709 | 459,630,606 | 504,434,709 | 459,630,606 |
| ஒதுக்குகள் | | 16,242,759 | 2,046,835 | 14,370,130 | 930,809 |
| கட்டுப்பாடற்ற உரிமைகள் | | 260,399 | 176,332 | - | - |
| **மொத்த சொத்துக்கள் அங்கத்தவர் உரிமையாண்மை / கட்டுப்பாடற்ற உரிமைகள்** | | **520,937,868** | **461,853,772** | **518,804,839** | **460,561,415** |

264 முதல் 300 வரையிலான பக்கங்களில் வழங்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒன்றிணைந்த பகுதியாகும்.
உண்மையானவை என உறுதிப்படுத்தியவர்கள்.

.................................
எம்.ஏ.வீ. குமுதுனீ
நிதி முகாமையாளர்

.................................
கே.ஏ.டி.பி. கருணாரத்ன
உதவிப் பொதுமுகாமையாளர் (நிதி)

.................................
எம்.ஏ.கே. அலுத்கமகே
பிரதி பொது முகாமையாளர் (நிதி) (ப.க)

.................................
ஆர்.கே. ஜயலத்
பொது முகாமையாளர் (ப.க.)

பணிப்பாளர் சபை இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் தொடர்பில் பொறுப்புடையவர்கள் சபைக்காகவும் சபை சார்பாகவும் அனுமதித்து கையொப்பமிடப்பட்டது.

.................................
டி.எல்.பி. ரோஹன அபயரத்ன
தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

# உரிமையாண்மை பங்கு மாற்றக் கூற்று

2023 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது

| குழுமம் | சபையின் பங்குதாரர்களுக்கு குறிக்கப்பட்டவை | | | | பின்னர் கையகப்படுத்தும் ஒதுக்குகள் | கட்டுப்படுத்தப்படாத வட்டி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | வைத்திருக்கும் இலாபம் | சாதரணப் பெறுமதி ஒதுக்கங்கள் மூலம் | ஏனைய ஒதுக்குகள் | பங்கிலாப சமப்படுத்தல் ஒதுக்கு நிதியம் | | | |
| **2022.01.01.ஆந் திகதியில் நிலுவை** | **4,732,140** | **(1,818,142)** | **(69,838)** | **142,000** | **498,462** | **107,714** | **3,592,336** |
| வேறு விஸ்தீரண வருமான ஒதுக்கின் சாதாரணப் பெறுமதியின் கீழ் அளவிடப்படும் மீளமைக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் மீதான தேறிய இலாபம் / நட்டம் | - | (2,190,780) | - | - | - | - | (2,190,780) |
| அங்கத்தவர் நிதிய நிலுவை மீது வட்டி 3.0% | (12,679,221) | - | - | - | - | - | (12,679,221) |
| பங்கிலாபம் 5.75% | (24,301,886) | - | - | - | - | - | (24,301,886) |
| ஆண்டிற்கான திரண்ட இலாபம் | 36,978,305 | - | - | - | - | 70,193 | 37,048,498 |
| வேறு விஸ்தீரண வருமான ஒதுக்கின் சாதாரணப் பெறுமதியின் கீழ் பெயரிடப்படும் நிதிச் சொத்துக்கள் மீதான தேறிய இலாபம் / நட்டம் | 83,102 | - | - | - | - | - | 83,102 |
| ஆயுள் மதிப்பு இலாபம் / (நட்டம்) | - | - | 55,129 | - | - | - | 55,129 |
| துணை நிறுவனங்கள் செலுத்திய பங்கிலாபம் | - | - | - | - | - | (1,575) | (1,575) |
| துணை நிறுவனங்களின் உரிமைக் பங்கு அசைவு | - | - | - | - | 617,564 | - | 617,564 |
| **2022.12.31.ஆந் திகதியில் நிலுவை** | **4,812,440** | **(4,008,922)** | **(14,709)** | **142,000** | **1,116,026** | **176,332** | **2,223,167** |
| | | | | | | | |
| **2023.01.01.ஆந் திகதியில் நிலுவை** | **4,812,440** | **(4,008,922)** | **(14,709)** | **142,000** | **1,116,026** | **176,332** | **2,223,167** |
| வேறு விஸ்தீரண வருமான ஒதுக்கின் சாதாரணப் பெறுமதியின் கீழ் அளவிடப்படும் மீளமைக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் மீதான தேறிய இலாபம் / நட்டம் | - | 3,100,770 | - | - | - | - | 3,100,770 |
| அங்கத்தவர் நிதிய நிலுவை மீது வட்டி 3.0% | (13,758,500) | - | - | - | - | - | (13,758,500) |
| பங்கிலாபம் 7% | (32,102,819) | - | - | - | - | - | (32,102,819) |
| பங்கிலாப சமப்படுத்தல் மற்றும் ஒதுக்கிற்கு மாற்றுதல் | (10,314,164) | | | 10,314,164 | | | - |
| ஆண்டிற்கான திரண்ட இலாபம் | 55,942,384 | - | - | - | - | 119,067 | 56,061,451 |
| வேறு விஸ்தீரண வருமான ஒதுக்கின் சாதாரணப் பெறுமதியின் கீழ் பெயரிடப்படும் நிதிச் சொத்துக்கள் மீதான தேறிய இலாபம் / நட்டம் | 321,350 | - | - | - | - | - | 321,350 |
| ஆயுள் மதிப்பு இலாபம் / (நட்டம்) | - | - | (63,865) | - | - | - | (63,865) |
| துணை நிறுவனங்கள் செலுத்திய பங்கிலாபம் | - | - | - | - | - | (35,000) | (35,000) |
| துணை நிறுவனங்களின் உரிமைக் பங்கு அசைவு | - | - | - | - | 756,604 | - | 756,604 |
| **2023.12.31.ஆந் திகதியில் நிலுவை** | **4,900,692** | **(908,152)** | **(78,574)** | **10,456,164** | **1,872,630** | **260,399** | **16,503,158** |

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

# உரிமையாண்மை பங்கு மாற்றக் கூற்று

2023 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது

| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை | கம்பனியின் பங்குதாரர்களுக்கு குறிக்கப்பட்டவை | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | வைத்திருக்கும் இலாபம் | வேறு விஸ்தீரண வருமானத்தின் சாதரணப் பெறுமதி ஒதுக்கங்கள் மூலம் | ஏனைய ஒதுக்குகள் | பங்கிலாப சமப்படுத்தல் ஒதுக்கு நிதியம் | |
| **2022.01.01.ஆந் திகதியில் நிலுவை** | **4,732,140** | **(1,818,142)** | **(69,838)** | **142,000** | **2,986,160** |
| வேறு விஸ்தீரண வருமான ஒதுக்கின் சாதாரணப் பெறுமதியின் கீழ் அளவிடப்படும் மீளமைக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் மீதான தேறிய இலாபம் / நட்டம் | - | (2,190,780) | - | - | (2,190,780) |
| அங்கத்தவர் நிதிய நிலுவை மீது வட்டி 3.0% | (12,679,221) | - | - | - | (12,679,221) |
| பங்கிலாபம் 5.75% | (24,301,886) | - | - | - | (24,301,886) |
| ஆண்டிற்கான திரண்ட இலாபம் - அவதானத்தின் மதிப்பு | 36,978,305 | - | - | - | 36,978,305 |
| வேறு விஸ்தீரண வருமான ஒதுக்கின் சாதாரணப் பெறுமதியின் கீழ் பெயரிடப்படும் நிதிச் சொத்துக்கள் மீதான தேறிய இலாபம் / நட்டம் | 83,102 | - | - | - | 83,102 |
| ஆயுள் மதிப்பு இலாபம் / (நட்டம்) | - | - | 55,129 | - | 55,129 |
| **2022.12.31.ஆந் திகதியில் நிலுவை** | **4,812,440** | **(4,008,922)** | **(14,709)** | **142,000** | **930,809** |
| **2023.01.01.ஆந் திகதியில் நிலுவை** | **4,812,440** | **(4,008,922)** | **(14,709)** | **142,000** | **930,809** |
| வேறு விஸ்தீரண வருமான ஒதுக்கின் சாதாரணப் பெறுமதியின் கீழ் அளவிடப்படும் மீளமைக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் மீதான தேறிய இலாபம் / நட்டம் | - | 3,100,770 | - | - | 3,100,770 |
| அங்கத்தவர் நிதிய நிலுவை மீது வட்டி 3.0% | (13,758,500) | - | - | - | (13,758,500) |
| பங்கிலாபம் 7% | (32,102,819) | - | - | - | (32,102,819) |
| பங்கிலாப சமப்படுத்தல் மற்றும் ஒதுக்கிற்கு மாற்றுதல் | (10,314,164) | | | 10,314,164 | - |
| ஆண்டிற்கான திரண்ட இலாபம் | 55,942,384 | - | - | - | 55,942,384 |
| வேறு விஸ்தீரண வருமான ஒதுக்கின் சாதாரணப் பெறுமதியின் கீழ் பெயரிடப்படும் நிதிச் சொத்துக்கள் மீதான தேறிய இலாபம் / நட்டம் | 321,350 | - | - | - | 321,350 |
| ஆயுள் மதிப்பு இலாபம் / (நட்டம்) | - | - | (63,865) | - | (63,865) |
| **2023.12.31.ஆந் திகதியில் நிலுவை** | **4,900,692** | **(908,152)** | **(78,574)** | **10,456,164** | **14,370,130** |

# காசுப் பாய்ச்சல் கூற்று

2023 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது

| | குழுமம் | | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|---|---|
| | **2023** | **2022** | **2023** | **2022** |
| | **ரூ. '000** | **ரூ. '000** | **ரூ. '000** | **ரூ. '000** |
| **செயற்பாட்டு நடவடிக்கைகள்** | | | | |
| இலாப நட்டக் கணக்கின் நிதிச் சாதனத்தின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட வருமானம் | 1,977,534 | 247,354 | 1,977,534 | 247,354 |
| முதிர்ச்சிக்கு விடப்பட்ட நிதிச் சாதனங்ளின் முதிர்வுகள் | 47,760,983 | 52,955,675 | 47,760,983 | 52,955,675 |
| நிதிச் சாதனங்கள் கடன் மற்றும் வருமதிகளின் முதிர்வுகள் | 135,921 | 155,571 | 135,921 | 155,571 |
| இலாப நட்டக் கணக்கின் நிதிச் சாதனத்தின் கொள்வனவிற்கான செலவு | (631,015) | (999,321) | (631,015) | (999,321) |
| முதிர்ச்சிக்கு விடப்பட்ட நிதிச் சாதனத்தின் கொள்வனவிற்கான கொடுப்பனவு | (99,406,414) | (103,095,316) | (99,406,414) | (103,095,316) |
| கையகப்படுத்தலுக்கு வழங்கப்பட்ட கடன் மற்றும் கிடைக்க வேண்டிய நிதிச் சாதனங்கள் | (31,202) | (140,816) | (31,202) | (140,816) |
| வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட பணங்கள் | 4,668 | 2,942 | - | - |
| வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்ட பணங்கள் | (3,148) | (2,176) | - | - |
| கிடைக்கப்பெற்ற வட்டி | 66,446,928 | 47,878,326 | 66,446,928 | 47,878,326 |
| கிடைக்கப்பெற்ற பங்கிலாபம் | 1,111,591 | 820,045 | 1,111,591 | 820,045 |
| கிடைக்கப்பெற்ற ஏனைய வருமானம் | 639,060 | 415,942 | 639,060 | 415,942 |
| செலுத்தப்பட்ட செயற்பாட்டுச் செலவினங்கள் | (7,596,563) | (4,581,404) | (7,596,563) | (4,581,404) |
| செலுத்தப்பட்ட அங்கத்தவர் செலவினங்கள் | (358,684) | (291,969) | (358,684) | (291,969) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | (7,647,524) | (2,241,332) | (7,647,524) | (2,241,332) |
| செலுத்தப்பட்ட வட்டி | (499,157) | (358,412) | (499,157) | (358,411) |
| செலுத்தப்பட்ட நிலையான நலன் திட்டச் செலவுகள் | (28) | (41) | (24) | (37) |
| பிரதேச செயலகங்களுக்கு செலுத்தப்பட்ட நில வாடகை | (8) | (13) | - | - |
| ஆண்டு 5 புலமைப்பரிசில் கொடுப்பனவு / மீளளித்தல் | (192,949) | (31,966) | (192,949) | (31,966) |
| உயர்கல்விப் புலமைப்பரிசில் கொடுப்பனவு / மீளளித்தல் | (73,776) | (76,044) | (73,776) | (76,044) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் தேறிய காசுப் பாய்ச்சல்** | **1,636,217** | **(9,342,955)** | **1,634,709** | **(9,343,703)** |
| | | | | |
| **முதலீட்டு நடவடிக்கைகள்** | | | | |
| சொத்துக்கள் மற்றும் கருவிகளின் கொள்வனவு | (44,619) | (135) | (44,495) | (87) |
| சொத்துக்கள் மற்றும் கருவிகளின் விற்பனை மூலம் வருமானம் | 8,088 | 244 | 8,088 | 242 |
| முதலீடுகளின் கையக்கப்படுத்துகை | (894) | (648) | - | - |
| கிடைக்கப் பெற்ற வட்டி | 429 | 116 | - | - |
| பணிக்குழாத்தினர் கடன்கள் மீள்கொடுப்பனவுகள் / தேறிய (ஆதாயங்கள்) | (21) | (51) | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மூலம் தேறிய காசுப் பாய்ச்சல்** | **(37,017)** | **(474)** | **(36,407)** | **155** |
| | | | | |
| **நிதியிடல் நடவடிக்கைகள்** | | | | |
| கிடைக்கப் பெற்ற பங்களிப்பு | 37,004,419 | 34,372,190 | 37,004,419 | 34,372,190 |
| மீண்டும் பணம் செலுத்தல் | (38,286,021) | (25,019,500) | (38,286,021) | (25,019,500) |
| செலுத்தப்பட்ட நிதிச் செலவினங்கள் | (2,381) | (3,635) | (2,381) | (3,635) |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | (742) | (52) | - | - |
| நிதிக் குத்தகைப் பொறுப்புக்களின் கீழ் ஆரம்ப கொடுப்பனவு | - | (2) | - | - |
| **நிதியிடல் நடவடிக்கைகள் மூலம் தேறிய காசுப் பாய்ச்சல்** | **(1,284,724)** | **9,349,002** | **(1,283,982)** | **9,349,055** |
| | | | | |
| **காசும் காசுக்கு சமமானவையில் தேறிய அதிகரிப்பு** | 314,475 | 5,573 | 314,319 | 5,508 |
| ஜனவரி 01ஆந் திகதியில் காசும் காசுக்கு சமமானவையும் | 584,431 | 578,857 | 584,266 | 578,758 |
| **டிசம்பர் 31ஆந் திகதியில் காசும் காசுக்கு சமமானவையும்** | **898,905** | **584,431** | **898,585** | **584,266** |

### வெளியிடப்பட்ட திறைசேரிப் பிணைமுறிகள் பட்டியலின் சந்தைப் பெறுமதி 2023.12.31

| வருடம் | முகப் பெறுமதி | கொள்வனவுச் செலவு | சந்தைப் பெறுமதி | கடன்கழிபபுச் செலவு |
|---|---|---|---|---|
| 2023 | - | - | - | - |
| 2024 | - | - | - | - |
| 2025 | - | - | - | - |
| 2026 | 3,553,926 | 3,269,928 | 3,560,515 | 3,468,337 |
| 2027 | 34,084,172 | 31,454,559 | 33,975,152 | 32,999,476 |
| 2028 | 50,262,069 | 44,680,558 | 47,669,876 | 46,585,619 |
| 2029 | 30,622,954 | 28,248,749 | 29,271,747 | 28,868,631 |
| 2030 | 32,959,975 | 30,330,021 | 30,616,329 | 30,653,402 |
| 2031 | 31,845,954 | 29,342,275 | 31,642,323 | 30,560,130 |
| 2032 | 30,622,954 | 28,248,749 | 29,905,673 | 29,406,936 |
| 2033 | 60,859,072 | 57,337,854 | 58,584,398 | 60,144,487 |
| 2034 | 33,447,954 | 31,065,196 | 32,323,401 | 31,975,863 |
| 2035 | 32,049,144 | 29,771,347 | 30,829,231 | 30,315,848 |
| 2036 | 30,622,954 | 28,248,749 | 29,110,762 | 28,447,053 |
| 2037 | 30,622,954 | 28,248,749 | 30,901,439 | 29,354,847 |
| 2038 | 30,622,954 | 28,248,749 | 30,237,932 | 29,351,299 |
| 2039 | 7,600,000 | 7,676,208 | 6,692,286 | 7,975,805 |
| **மொத்தம்** | **439,777,037** | **406,171,692** | **425,321,064** | **420,107,732** |

### வெளியிடப்பட்ட திறைசேரிப் பிணைமுறிகள் பட்டியலின் சந்தைப் பெறுமதி 2023.12.31

| வருடம் | முகப் பெறுமதி | கொள்வனவுச் செலவு | சந்தைப் பெறுமதி | கடன்கழிபபுச் செலவு |
|---|---|---|---|---|
| 2023 | 34,040,648 | 37,457,608 | 31,769,017 | 35,471,396 |
| 2024 | 21,001,181 | 20,832,265 | 16,404,389 | 21,494,867 |
| 2025 | 52,195,884 | 49,142,455 | 40,133,810 | 51,043,772 |
| 2026 | 40,215,741 | 37,902,717 | 27,696,424 | 39,755,815 |
| 2027 | 37,099,783 | 37,599,688 | 23,006,589 | 38,161,667 |
| 2028 | 70,020,619 | 66,849,538 | 46,668,033 | 70,199,856 |
| 2029 | 13,964,368 | 12,888,801 | 10,629,317 | 13,617,796 |
| 2030 | 10,177,461 | 10,764,475 | 5,545,790 | 10,812,077 |
| 2031 | 49,655,898 | 48,648,974 | 28,030,281 | 49,722,282 |
| 2032 | 45,540,515 | 31,479,362 | 32,458,369 | 35,206,107 |
| 2033 | 30,236,118 | 29,089,105 | 16,235,646 | 30,698,625 |
| 2034 | 2,825,000 | 2,816,447 | 1,373,196 | 2,902,915 |
| 2035 | 1,426,190 | 1,522,598 | 778,253 | 1,562,245 |
| 2036 | - | - | - | - |
| 2037 | - | - | - | - |
| 2038 | - | - | - | - |
| 2039 | 7,600,000 | 7,676,208 | 3,729,996 | 7,977,305 |
| **மொத்தம்** | **415,999,406** | **394,670,241** | **284,459,110** | **408,626,726** |

### வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல்களின் சந்தைப் பெறுமதி 2023.12.31

| வருடம் | முகப் பெறுமதி | கொள்வனவுச் செலவு | சந்தைப் பெறுமதி | கடன்கழிபபுச் செலவு |
|---|---|---|---|---|
| 2023 | - | - | - | - |
| 2024 | 63,292,846 | 55,941,271 | 59,864,320 | 59,813,248 |

### வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல்களின் சந்தைப் பெறுமதி 2023.12.31

| வருடம் | முகப் பெறுமதி | கொள்வனவுச் செலவு | சந்தைப் பெறுமதி | கடன்கழிபபுச் செலவு |
|---|---|---|---|---|
| 2023 | 23,300,000 | 21,547,877 | 22,160,993 | 22,152,226 |
| 2024 | - | - | - | - |

மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட அரசாங்க கடன் பத்திரங்களின் நியாயமான மதிப்புகள் 2023.12.31 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு மற்றும் விற்பனை சராசரியை அடிப்படையாகக் கொண்டவை.

**வெளியிடப்பட்ட கடனீபத்திர பட்டியலின் சந்தைப் பெறுமதி 2023.12.31 ஆம் திகதியன்று**

| கம்பனியின் பெயர் | கம்பனியின் பெயர் | மீட்புத் திகதி | கடன் பத்திரங்கள் | | சந்தைப் பெறுமதி | | | கடன் கழிப்புச் செலவு (ரூ. 000) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | எண்ணிக்கை | செலவு (ரூ) | ஒரு கடன் பத்திரத்திற்கு | (ரூ.000) | வீதம் (வருடாந்த) | |
| சம்பத் வங்கி பீஎல்சீ | 28.02.2019 | 28.02.2024 | 1,750,000 | 175,000 | 100.00 | 175,000 | 13.90% | 195,460 |
| DFCC வங்கி பீஎல்சீ | 28.03.2019 | 28.03.2024 | 7,500,000 | 750,000 | 100.00 | 750,000 | 13.50% | 827,394 |
| தேசிய சேமிப்பு வங்கி | 10.09.2019 | 10.09.2024 | 13,500,000 | 1,350,000 | 100.00 | 1,350,000 | 11.25% | 1,397,019 |
| ஹற்றன் நெசுஷனல் வங்கி 3 | 23.09.2019 | 22.09.2024 | 3,500,000 | 350,000 | 74.00 | 259,000 | 12.30% | 361,795 |
| தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ | 25.09.2020 | 24.09.2025 | 4,750,000 | 475,000 | 100.00 | 475,000 | 9.50% | 487,116 |
| DFCC வங்கி பீஎல்சீ | 23.10.2020 | 23.10.2025 | 5,000,000 | 500,000 | 100.00 | 500,000 | 9.00% | 508,630 |
| சம்பத் வங்கி பீஎல்சீ | 12.04.2021 | 12.04.2028 | 6,000,000 | 600,000 | 100.00 | 600,000 | 9.00% | 639,058 |
| இலங்கை மின்சார சபை | 16.04.2021 | 15.04.2026 | 20,000,000 | 2,000,000 | 98.00 | 1,960,000 | 9.35% | 2,133,205 |
| சிங்கர் பைனேன்ஸ் (லங்கா) பீஎல்சீ | 25.06.2021 | 25.06.2026 | 1,750,000 | 175,000 | 100.00 | 175,000 | 9.25% | 183,426 |
| நேசன் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ | 09.07.2021 | 09.07.2026 | 8,000,000 | 800,000 | 100.00 | 800,000 | 9.15% | 825,296 |
| பீபல்ஸ் லீசிங் பைனேன்ஸ் பீஎல்சீ | 05.08.2021 | 05.08.2026 | 10,000,000 | 1,000,000 | 100.00 | 1,000,000 | 9.00% | 1,036,740 |
| **மொத்தம்** | | | | **8,175,000** | | **8,044,000** | | **8,595,139** |

ஒன்றிணைக்கப்பட்ட கடன் பத்திரங்களின் சாதாரண பெறுமதி - கொழும்பு பங்குச் சந்தை 2023 டிசம்பர் 31 ஆம் தேதி வெளியிட்ட நிலவரப்படி பட்டியலிடப்பட்டுள்ளது.

**வெளியிடப்பட்ட கடனீபத்திர பட்டியலின் சந்தைப் பெறுமதி 2022.12.31 ஆம் திகதியன்று**

| கம்பனியின் பெயர் | கொள்வனவு செய்யப்பட்ட திகதி | மீட்புத் திகதி | கடன் பத்திரங்கள் | | சந்தைப் பெறுமதி | | | கடன் கழிப்புச் செலவு (ரூ. 000) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | எண்ணிக்கை | செலவு (ரூ) | ஒரு கடன் பத்திரத்திற்கு | ரூ. 000 | வீதம் (வருடாந்த) | |
| ஹற்றன் நெசுஷனல் வங்கி | 01.11.2016 | 01.11.2023 | 547,100 | 54,710 | 107.25 | 58,676 | 13.00% | 55,899 |
| பீபல்ஸ் லீசிங் பைனேன்ஸ் பீஎல்சீ | 18.04.2018 | 18.04.2023 | 5,000,000 | 500,000 | 98.00 | 490,000 | 12.80% | 545,238 |
| கொமர்சுஷல் வங்கி சிலோன் லிமிடட் | 23.07.2018 | 22.07.2023 | 1,859,700 | 185,970 | 100.00 | 185,970 | 12.00% | 195,936 |
| சம்பத் வங்கி பீஎல்சீ | 28.02.2019 | 28.02.2024 | 1,750,000 | 175,000 | 100.50 | 175,875 | 13.90% | 195,460 |
| DFCC வங்கி பீஎல்சீ | 28.03.2019 | 28.03.2024 | 7,500,000 | 750,000 | 100.00 | 750,000 | 13.50% | 827,394 |
| தேசிய சேமிப்பு வங்கி | 10.09.2019 | 10.09.2024 | 13,500,000 | 1,350,000 | 100.00 | 1,350,000 | 11.25% | 1,397,019 |
| ஹற்றன் நெசுஷனல் வங்கி பீஎல்சீ | 23.09.2019 | 22.09.2024 | 3,500,000 | 350,000 | 74.00 | 259,000 | 12.30% | 361,795 |
| தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ | 25.09.2020 | 24.09.2025 | 4,750,000 | 475,000 | 100.00 | 475,000 | 09.50% | 487,116 |
| DFCC வங்கி பீஎல்சீ | 23.10.2020 | 23.10.2025 | 5,000,000 | 500,000 | 100.00 | 500,000 | 09.00% | 508,630 |
| சம்பத் வங்கி பீஎல்சீ | 12.04.2021 | 12.04.2028 | 6,000,000 | 600,000 | 100.00 | 600,000 | 09.00% | 639,058 |
| இலங்கை மின்சார சபை | 16.04.2021 | 15.04.2026 | 20,000,000 | 2,000,000 | 88.61 | 1,772,200 | 09.35% | 2,133,205 |
| சிங்கர் பைனேன்ஸ் (லங்கா) பீஎல்சீ | 25.06.2021 | 25.06.2026 | 1,750,000 | 175,000 | 100.00 | 175,000 | 09.25% | 183,426 |
| நேசன் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ | 09.07.2021 | 09.07.2026 | 8,000,000 | 800,000 | 100.00 | 800,000 | 09.15% | 835,296 |
| பீபல்ஸ் லீசிங் பைனேன்ஸ் பீஎல்சீ | 05.08.2021 | 05.08.2026 | 10,000,000 | 1,000,000 | 100.00 | 1,000,000 | 09.00% | 1,036,740 |
| **மொத்தம்** | | | | **8,915,680** | | **8,591,721** | | **9,402,211** |

ஒன்றிணைக்கப்பட்ட கடன் பத்திரங்களின் சாதாரண பெறுமதி - கொழும்பு பங்குச் சந்தை 2022 டிசம்பர் 31 ஆம் தேதி வெளியிட்ட நிலவரப்படி பட்டியலிடப்பட்டுள்ளது.

**வெளியிடப்பட்ட பங்கு முதலீடுகள் - "ஏனைய விஸ்தீரண வருமானம்" என மீள் வகைப்படுத்தப்பட்டவை 2023.12.31 ஆம் திகதிக்கு பங்குச் சந்தை**

| | முதலீட்டுக் கம்பனிப் பெயர் | உண்மைச் செலவினம் (ரூ. 000) | சாதாரணப் பெறுமதி (ரூ. 000) | சந்தைப் பெறுமதி (ரூ. 000) |
|---|---|---|---|---|
| 1 | ஏகன்ஸ் ஆதனக் கம்பனி | 58,213 | 26,938 | 44,130 |
| 2 | ஏகன்ஸ் ஸ்பென்ஸ் கம்பனி | 275,623 | 246,427 | 219,889 |
| 3 | ஏகன்ஸ் ஸ்பென்ஸ் ஹோட்டல் | 206,275 | 119,721 | 149,354 |
| 4 | ஆசிரி ஹொஸ்பிடல் | 129,516 | 110,388 | 104,869 |
| 5 | ஆசிரி சேர்ஜிகல் | 66,124 | 57,444 | 57,002 |
| 6 | பைரஹா பார்ம்ஸ் | 206,974 | 149,358 | 176,665 |
| 7 | கார்சன் கியும்பர் பீஎல்சீ | 16,147 | 9,749 | 8,991 |
| 8 | சென்றல் பினேன்ஸ் | 128,840 | 73,891 | 124,729 |
| 9 | சிலோன் இன்வெஸ்ட்மன்ட் | 8,575 | 2,223 | 3,137 |
| 10 | சிலோன் காரட்டியன் | 143,302 | 30,000 | 40,753 |
| 11 | சிலோன் கிரேன் இவலேட்டர் | 96,022 | 59,056 | 117,524 |
| 12 | சென்றல் இன்டஸ்ரீஸ் | 95,431 | 50,134 | 73,980 |
| 13 | CIC ஹோல்டிங்ஸ் | 118,893 | 198,308 | 149,314 |
| 14 | கொழும்பு போட்லேண்ட் | 55,327 | 19,881 | 21,701 |
| 15 | கொமர்சல் வங்கி | 1,236,783 | 499,002 | 915,771 |
| | கொமர்சல் வங்கி (X) | 516,923 | 189,285 | 355,875 |
| 16 | DFCC வங்கி | 682,419 | 150,148 | 369,282 |
| 17 | டொக்யார்ட் | 437,865 | 102,463 | 87,701 |
| 18 | டயலொன் அக்சியாட்டா | 355,601 | 256,994 | 272,111 |
| 19 | டீப் புரொடக்ட் | 86,955 | 55,521 | 53,650 |
| 20 | ஏடன் ஹொட்டல்ஸ் | 75,885 | 27,684 | 16,136 |
| 21 | பெர்ஸ்ட் கெபிட்டல் டிரசரீஸ் | 10,841 | 609,237 | 650,717 |
| 22 | HNB வங்கி | 131,073 | 66,761 | 131,570 |
| 23 | HNB (X) வங்கி | 202,158 | 164,982 | 223,905 |
| 24 | HNB காப்புறுதி | 93,245 | 59,399 | 106,390 |
| 25 | ஹேலீஸ் பெப்ரிக் | 82,261 | 65,062 | 73,440 |
| 26 | ஹேகாப் பீஎல்சீ | 15,800 | 11,066 | 10,913 |
| 27 | ஜோன் கீல்ஸ் | 2,140,032 | 1,763,297 | 2,480,956 |
| 28 | துமுர் கம்பனி | 10,326 | 21,420 | 20,038 |
| 29 | கெலனி கேபல்ஸ் | 246,394 | 164,467 | 178,645 |
| 30 | கெலனி டயர்ஸ் | 7,847 | 7,961 | 8,193 |
| 31 | கீல்ஸ் பூட்ஸ் | 16,823 | 7,693 | 5,307 |
| 32 | லங்கெம் சிலோன் | 780 | 688 | 1,587 |
| 33 | லாப் கேஸ் | 815 | 415 | 405 |
| 34 | லாப் பவர் | 14,746 | 165,002 | 82,704 |

| | முதலீட்டுக் கம்பனிப் பெயர் | உண்மைச் செலவினம் (ரூ. 000) | சாதாரணப் பெறுமதி (ரூ. 000) | சந்தைப் பெறுமதி (ரூ. 000) |
|---|---|---|---|---|
| 35 | லங்கா IOC | | | |
| 36 | லங்கா மில்க் பூட்ஸ் | 16,745 | 15,809 | 15,430 |
| 37 | லங்கா டைல் | 25,053 | 18,415 | 15,798 |
| 38 | லங்கா வோல் டைல் | 1,438,105 | 444,795 | 880,725 |
| 39 | NDB வங்கி | 68,652 | 55,601 | 30,889 |
| 40 | நவலோக்க ஹொஸ்பிடல் | 161,143 | 155,474 | 156,207 |
| 41 | ஓவர்சீஸ் ரியலிட்டி | 182,879 | 65,249 | 136,894 |
| 42 | பீபல்ஸ் லீசிங் | 54,022 | 42,504 | 48,030 |
| 43 | பீபல்ஸ் இன்சுவரன்ஸ் | 16,214 | 12,136 | 25,191 |
| 44 | PGP கிளாஸ் PLC | 116,906 | 43,190 | 39,311 |
| 45 | ரேனுகா ஹோல்டிங்ஸ் | 49,445 | 22,869 | 28,552 |
| 46 | ரிசர்ஸ் எனர்ஜி | 115,544 | 138,671 | 116,986 |
| 47 | ரிச்சர்ட் பீரிஸ் கம்பனி | 421,670 | 249,516 | 507,070 |
| 48 | சம்பத் வங்கி | 391,259 | 158,211 | 221,403 |
| 49 | சேலான் வங்கி | 86,135 | 30,288 | 64,525 |
| | சேலான் வங்கி (X) | 23,608 | 11,927 | 13,214 |
| 50 | சிங்கர் பைனான்ஸ் | 110,326 | 224,219 | 307,103 |
| 51 | இலங்கை டெலிகொம் | 115,357 | 86,485 | 97,195 |
| 52 | டீஜெ லங்கா | 37,073 | 25,737 | 22,306 |
| 53 | டிரான்ஸ் ஏசியா | 230,952 | 117,161 | 179,654 |
| 54 | டோக்கியோ சிமெண்ட் PLC | 83,752 | 61,035 | 69,754 |
| 55 | வெலிபல் பவர் | 701 | 537 | 589 |
| 56 | விதுலங்கா PLC | 131,660 | 104,067 | 133,401 |
| | **மொத்தம்** | **11,944,860** | **7,697,247** | **10,578,443** |

## பட்டியல் படுத்தப்படாத கம்பனிகளின் பங்குகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ஆதன அபிவிருத்தி | 5 | 45 | - |

ஆதன அபிவிருத்தி பீஎல்சி 2022 ஒக்டோபர் 27 ஆம் திகதி முதல் நீக்கப்பட்டுள்ளது.

**2023.12.31 ஆம் திகதிக்கு விரிவான வருமானத்தின் ஊடாக சாதாரண பெறுமதியை மீள் வகைப்படுத்தப்படாத பங்கு முதலீடுகள்**

| | கம்பனிப் பெயர் | செலவு | தேசிய சொத்து பெறுமதி | தேசிய சொத்து பெறுமதி |
|---|---|---|---|---|
| | | (ரூ. '000) | 2022.12.31 (ரூ. '000) | 2023.012.31 (ரூ. '000) |
| 1 | பிச் ரேடிங் லங்கா லிமிடட் | 1,649 | 3,908 | 4,923 |
| | **மொத்தம்** | **1,649** | **3,908** | **4,923** |

**2023.12.31 ஆம் திகதிக்கு துணை நிறுவனங்களில் முதலீடு**

| | கம்பனிப் பெயர் | செலவு (ரூ. 000) |
|---|---|---|
| 1 | இலங்கை சோல்ட்ட லிமிடட் | 470,961 |
| | **மொத்தம்** | **470,961** |

**வெளியிடப்பட்ட பங்கு முதலீடுகள் - "இலாபம் அல்லது நட்டம் " என மீள் வகைப்படுத்தப்பட்டவை 2023.12.31**

| | கம்பனிப் பெயர் | உண்மைச் செலவு (ரூ. 000) | சாதாரணப் பெறுமதி (ரூ. 000) | சந்தைப் பெறுமதி 2023.12.31 ஆம் திகதிக்கு (ரூ. 000) |
|---|---|---|---|---|
| 1 | எக்சஸ் இன்ஜினியரிங் | 51,441 | 17,905 | 34,290 |
| 2 | ACL கேபல்ஸ் PLC | 41,664 | 35,418 | 35,944 |
| 3 | சேவோன் லுப்ரிகன்ட் | 121,847 | 121,847 | 121,585 |
| 4 | CIC ஹோல்டிங்ஸ் | 152,792 | 152,792 | 148,311 |
| | CIC ஹோல்டிங்ஸ் (X) | 53,267 | 53,267 | 42,228 |
| 5 | கொமர்சல் வங்கி | 1,317,132 | 522,514 | 958,920 |
| | கொமர்சல் வங்கி (X) | 165,809 | 69,176 | 130,058 |
| 6 | டயலொக் அக்சியாட்டா | 216,249 | 160,645 | 170,095 |
| 7 | டிப்ட் புரொடக்ட்ஸ் | 220,950 | 116,042 | 112,005 |
| 8 | HNB - வங்கி | 536,702 | 248,405 | 519,145 |
| | HNB - வங்கி (X) | 70,448 | 37,407 | 73,721 |
| 9 | ஹைகார்ப் PLC | 14,120 | 13,881 | 15,745 |
| 10 | ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் | 32,479 | 32,479 | 30,925 |
| 11 | JAT ஹோல்டிங்ஸ் | 4,385 | 4,385 | 4,297 |
| 12 | லங்கா IOC | 38,612 | 214,397 | 107,462 |
| 13 | லங்கா டைல்ஸ் பீஎல்சீ | 200,033 | 139,487 | 133,486 |
| 14 | லங்கா வோல்டைல்ஸ் | 314,486 | 215,094 | 179,792 |
| 15 | லாப் பவர் | 3,196 | 1,433 | 1,401 |
| 16 | மெல்ஸ்ராகோப் பீஎல்சீ | 32,301 | 32,301 | 34,877 |
| 17 | பீபல்ஸ் லீசிங் | 79,571 | 32,749 | 68,710 |
| 18 | பீபல்ஸ் இன்சுவரன்ஸ் | 57,882 | 34,853 | 39,384 |
| 19 | ரிச்சர்ட் பீரிஸ் கம்பனி | 64,590 | 91,490 | 77,183 |
| 20 | ரிசர்ஸ் எனர்ஜீ PLC | 32,663 | 16,684 | 20,817 |
| 21 | ரோயல் செரமிக் | 343,724 | 221,493 | 203,400 |

| | கம்பனிப் பெயர் | உண்மைச் செலவு (ரூ. 000) | சாதாரணப் பெறுமதி (ரூ. 000) | சந்தைப் பெறுமதி 2023.12.31 ஆம் திகதிக்கு (ரூ. 000) |
|---|---|---|---|---|
| 22 | சம்பத் வங்கி | 865,531 | 442,903 | 900,073 |
| 23 | சேலான் வங்கி | 86,456 | 38,367 | 53,691 |
| | சேலான் வங்கி (X) | 84,307 | 32,279 | 68,767 |
| 24 | சியெற்றா கேபல்ஸ் PLC | 34,477 | 21,567 | 27,303 |
| 25 | சிங்கர் பைனேன்ஸ் | 48,443 | 23,170 | 25,668 |
| 26 | சன்சைன் ஹோல்டிங்ஸ் | 68,231 | 68,231 | 67,808 |
| 27 | டோக்கியோ சீமெந்து | 34,293 | 34,293 | 30,667 |
| | டோக்கியோ சீமெந்து (X) | 26,573 | 26,573 | 26,220 |
| | **மொத்தம்** | **5,414,655** | **3,273,526** | **4,463,977** |

**2023.12.31 ஆம் திகதிக்கு பட்டியலிடப்பட்ட அலகு பொறுப்புக்கள்**

| | வகை | உண்மைச் செலவு (ரூ. 000) | சாதாரணப் பெறுமதி (ரூ. 000) | சந்தைப் பெறுமதி 2023.12.31 ஆம் திகதிக்கு (ரூ. 000) |
|---|---|---|---|---|
| 1 | CTCLSA எசர்ட் | 12,283 | 25,124 | 32,307 |
| 2 | தேசிய பங்கிலாப நிதியம் | 35,816 | 117,495 | 141,069 |
| 3 | நாமல் வளர்ச்சி நிதியம் | 375 | 6,882 | 8,180 |
| | **மொத்தம்** | **48,474** | **149,502** | **181,556** |

## 1. தாபனத் தகவல்கள்

### 1.1 சட்ட மற்றும் இட அமைவு

1980 ஆம் ஆண்டின் 46 ஆவது இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் கீழ் 1981 ஆம் ஆண்டு மார்ச் 01 திகதி நிறுவப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை (ETF) ஓர் அரசாங்கக் கூட்டுத்தாபனமாகும். ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றது.

இலங்கை சோல்ட் லிமிடட் எனப்படும் வரையறுக்கப்பட்ட உப்புக் கம்பனி இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு வரையறுக்கப்பட்ட பொது கம்பனியாகும். கம்பனியின் பிரதான வர்த்தகத் தளம் மற்றும் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் ஹம்பாந்தோட்டை, மகாலேவாயாவில் அமைந்துள்ளது.

### 1.2 ஒருங்கிணைந்த நிதி அறிக்கைகள்

2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் ஒருங்கிணைந்த நிதி நிலமை அறிக்கைகள் சபை (தாய் நிறுவனம்) மற்றும் அதன் முழு உரிமையுடைய துணை நிறுவனத்தை உள்ளடக்கியது (ஒன்றாக ‘குழு’ என குறிப்பிடப்படுகிறது). 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் சபையின் துணை நிறுவனமாக லங்கா சோல்ட் லிமிடெட் உள்ளது. அவ்வாறே, ETFB குழுமத்தின் இறுதித் தாய் நிறுவனமாகவும் உள்ளது.

சபையின் மற்றும் அதன் துணை நிறுவனங்களின் நிதி அறிக்கைகள் டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் பொதுவான நிதியாண்டைக் கொண்டது. ‘சபை’ மற்றும் 'குழுமம்’ ஆகியவற்றின் நிதி அறிக்கைகள் டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த 12 மாத காலத்திற்கு தயாரிக்கப்படுகின்றன.

### 1.3 பிரதான செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மை

இவ்வாண்டினுள், இந்நிதிக் கூற்றுக்களுக்குள் இருந்த வண்ணம் செயற்படுத்தப்பட்ட கம்பனியினதும் அதன் துணை நிறுவனங்களினதும் பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு :

| கம்பனியின் பெயர் | வியாபாரத்தின் தன்மை |
|---|---|
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை | அரசாங்க ஓய்வூதியத் திட்டத்திற்கு உரித்தாகாத எல்லா அரசாங்கத் துறை ஊழியர்களும் எல்லா தனியார் துறை ஊழியர்களும் இந்நிதியத்தின் உறுப்பினர்களாவதுடன், அவர்களின் தொழில்தருநர்கள் அவ்வூழியர்கின் மொத்த வருவாயில் 3% இனை மாதாந்தம் நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும். மேலும் இந்த நிதியமானது புலம்பெயர் மற்றும் சுய தொழில் துறையினரையும் உள்ளடக்குகின்றது. இது எதிர்காலத்தில் மேலும் விரிவுபடுத்தப்படவுள்ளது. நிதியத்தினை நிர்வகித்தல் தவிர, ETF சபை, அதன் உறுப்பினர்களுக்கு அவர்களது பணிபுரியும் காலப்பகுதியில் சமூக மற்றும் நலன்புரி நன்மைகள் பலவற்றை நிறைவேற்றுவதில் ஈடுபடுகின்றது. |
| இலங்கை உப்புக் கம்பனி | கம்பனியின் பிரதான செயற்பாடுகளாக உப்பு உற்பத்தியும் விநியோகித்தலும் காணப்படுகின்றது. |

### 1.4. நிதி அறிக்கைகளுக்கான பொறுப்பு

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் இலங்கை கணக்கியல் தரநிலைகள் (LKAS/SLFRS) என்பவற்றுக்கு இணங்க, குழு மற்றும் சபையின் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதும் சமர்ப்பிப்பதும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் பணிப்பாளர் சபையினது பொறுப்பாகும்.

### 1.5. வெளியிடுவதற்கான அதிகாரம் பெறும் திகதி

2023 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நுவுகு சபையின் நிதிக் கூற்றுக்களை 2024 ஏப்ரல் 08 ஆந் திகதியன்று பணிப்பாளர் சபையின் தீர்மானம் பிரகாரம் வெளியிடுவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 2. முக்கியமான கணக்கியற் கொள்கைகளின் சுருக்கம்

### 2.1. பொதுவான கொள்கைகள்

#### 2.1.1. நிதி நிலைமைக் கூற்றுக்களை முன்வைத்தல்

நிதி நிலைமைக் கூற்றில் முன்வைக்கப்பட்ட நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தன்மையைக் கொண்டு வகைப்படுத்தப்பட்டு மற்றும் அவை தொடர்பில் திரவத்தன்மையைப் பிரதிபலிக்கும் பொருட்டு பட்டியலிடப்படுகின்றன. நிதிக் கூற்றுக்களைப் பாதிக்கும் பணவீக்கக் காரணிகளுக்கு செம்மையாக்கல்கள் ஏற்படுத்தப்படவில்லை. 12 மாதங்களுக்குள் மற்றும் அறிக்கையிடும் திகதியிலிருந்து 12 மாதங்களுக்குப் பிறகு மீட்சி அல்லது தீர்த்தல் மீதான பகுப்பாய்வொன்று இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

#### 2.1.2. இணக்கக் கூற்று

2023 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மற்றும் அப்போது முடிவுற்ற ஆண்டிற்கான, நிறுவனத்தின் கணக்கியற் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் ('நிதிக் கூற்றுக்கள்') உள்ளடங்கலாக நிதி நிலைமைக் கூற்று, விபரமான வருமானக் கூற்று, உரிமையாண்மை மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (SLFRS/LKAS) இணங்குகின்றன.

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் (SME களுக்கான SLFRS) வழங்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் LSL இன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் என்பன 2007 இன் கம்பனிகள் சட்ட இல. 07 இன் தேவைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றன.

#### 2.1.3. முக்கியமான கணக்குகளின் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள்

சபை எதிர்காலத்திற்காக குறிப்பிட்ட சில மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை மேற்கொள்கின்றது. எதிர்காலத்திற்கான எதிர்பார்ப்புகள் உட்பட வரலாற்று ரீதியான அனுபவம் மற்றும் ஏனைய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புக்கள் தொடர்ச்சியாக கணிக்கப்படுகின்றன.

SME களுக்கான SLFRS உடன் இணங்குமாறு இலங்கை உப்புக் கம்பனி நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு சில தீர்க்கமான கணக்கீட்டு மதிப்பீடுகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. நிதிக் கூற்றுக்களுக்கு முக்கியமான ஊகங்கள் மற்றும் மதிப்பீடுகள் கொண்ட விடயங்கள் அல்லது உயர்ந்த அளவிலான தீர்ப்பு அல்லது சிக்கல் கொண்ட விடயங்கள் என்பன பின்வருமாறு எடுத்துக்காட்டப்படுகின்றன.

**தீர்ப்புக்கள்**

**பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்:**

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள், இழப்புக்கள் பயன்படுத்தக்கூடியதற்கு மாறாக வரிக்குட்பட்ட இலாபம் கிடைப்பதில் சாத்தியப்பாடு உள்ளது என்ற அளவிற்கு எல்லா பயன்படுத்தப்படாத வரி இழப்புக்களும் இனங்காணப்படும். முக்கியமான முகாமைத்துவத் தீர்ப்பு, எதிர்கால வரித் திட்டமிடல் உபாயங்களுடன் எதிர்கால வரிக்குட்பட்ட இலாபங்களின் வாய்ப்பு மற்றும் மட்டத்தின் அடிப்படையில் இனங்காண முடியுமான பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் அளவினைத் தீர்மானிப்பதற்கு தேவைப்படுகின்றது.

#### 2.1.4. அளவிடுதலின் அடிப்படை

நிதிநிலைமை அறிக்கைகள் நியாயமான மதிப்பில் அளவிடப்பட்ட சில சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தவிர, இலங்கை கணக்கியல் தரநியமங்கள் இலக்கம் 09 இன் கீழ் நிதிக் கருவிகளின் அவசியப்பாட்டுக்கு அமைய கடன்கழிப்பு செலவின் கீழ் முன்கொண்டு செல்லப்படும் நிதிச் சொத்துக்களுக்கும் தவிர, இலங்கைக் கணக்கியல் தரநியமங்கள் இலக்கம் 26 இன் கீழ் வரலாற்று செலவு உடன்படிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிநிலை அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பதில் இலங்கை கணக்கியல் தரநிலை இலக்கம் 26 ஆன கணக்கியல் மற்றும் ஓய்வூதிய நன்மைத் திட்டங்களின் மூலம் அறிக்கையிடல் பயன்படுத்தப்பட்டது.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை, நிதிநிலமை அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பதில், இலங்கைக் கணக்கியல் தரநியமங்கள் இலக்கம் 26 பிரகாரம் கணக்கியல் மற்றும் ஓய்வூதிய நலன் திட்டங்களின் மூலம் அறிக்கையிடுவதற்குப் பயன்படுத்தியது என்பது முன்னைய நிதிநிலமை அறிக்கைகளில் குறிப்பாக வெளிப்படுத்தப்படவில்லை. இந்த விடயத்தை வெளியிடாததால், முன்னைய நிதிநிலமை அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்ட தொகைகளை மீண்டும் வெளியிட வேண்டிய அவசியமில்லை.

இலங்கை உப்புக் கம்பனி லிமிடெட்டின் நிதி அறிக்கைகள் வரலாற்றுச் செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. நிறுவனத்தின் செயல்பாட்டு நாணயம் இலங்கை ரூபாய் மற்றும் நிதி அறிக்கைகள் இலங்கை ரூபாயில் வழங்கப்படுகின்றன.

### 2.1.5. தொழிற்படு மற்றும் முன்வைத்தல் நாணயம

கம்பனியின் புழக்கத்திலுள்ள நாணயமான இலங்கை ரூபாவில் இந்நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. சபையின் ஆரம்ப பொருளாதார சூழலில் எல்லா நிதிசார் தகவல்களும் இலங்கை ரூபாவில் முன்வைக்கப்பட்டுள்ளன.

### 2.1.6. மட்டந்தட்டல்

இலங்கை கணக்கியல் தரநிலை - LKAS 1 'நிதி அறிக்கைகளை சமர்ப்பித்தல்' (LKAS 1) இல் அனுமதிக்கப்பட்டுள்ளதைத் தவிர, நிதிநிலமை அறிக்கைகளில் உள்ள தொகைகள் கிட்டிய ஆயிரம் ரூபாவுக்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன.

### 2.1.7. அடையாளம் காண்பதன் அடிப்படை

சொத்துடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதாரப் நலன்கள் சபையை நோக்கி வரும் இடம்பாடு காணப்படுமாயின் மற்றும் சொத்தின் விலை நம்பகத்தன்மையுடன் அளவிடப்படும் சாத்தியம் இருப்பின் சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் அடையாளம் காணப்படும். ரூ.10,000 தொகைக்கும் குறைவான ஒரு பொருளின் அலகு செலவை (பயன்பாட்டு செலவு உட்பட) சொத்து, ஆலை மற்றும் உபகரணமாக அடையாளம் காணாது அந்தப் பொருட்களை செலவாக அடையாளம் காண்பதும் சபையின் கொள்கையாகும். எவ்வாறாயினும், காணி, கட்டிடங்கள் மற்றும் வாகனங்களின் விலை (பயன்பாட்டுச் செலவுகள் உட்பட) அலகு எல்லை ரூ.10,000 என்ற போதிலும் மூலதனமாக்கப்படுகின்றது.

### 2.1.8. பொருள் மற்றும் திரட்டல்

ஒத்த உருப்படிகளின் ஒவ்வொரு பொருள் வகுப்பும் நிதி அறிக்கைகளில் தனித்தனியாக வழங்கப்படுகின்றன. 2016 ஜனவரி 1 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்த LKAS 1 மற்றும் LKAS 1 இல் 'வெளிப்படுத்தல் முன்முயற்சியில்' திருத்தங்களில் அனுமதித்துள்ளபடி அவை முக்கியமற்றவை அல்லாத போது, வேறுபட்ட தன்மை அல்லது செயல்பாட்டின் உருப்படிகள் தனித்தனியாக வழங்கப்படுகின்றன.

### 2.1.9. தொடர்ச்சியான வியாபார நிலமை

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் முகாமை தொடர்ச்சியான நிலைப்பாட்டினைத் தொடர்வதற்கான சபையின் இயலுமையை மதிப்பீடு செய்துள்ளதுடன், எதிர்வரும் எதிர்காலத்திற்கு வர்த்தகத்தில தொடர்ந்தும் ஈடுபடுவதற்கான வளங்களை சபை கொண்டுள்ளது என்பதில் திருப்தியடைந்துள்ளது. மேலும், தொடர்ச்சியான நிலைப்பாட்டினைத் தொடருவதற்கு சபையின் இயலுமை மீது குறிப்பிடத்தக்க சந்தேகத்தினை ஏற்படுத்தக் கூடிய ஏதேனும் நிச்சயமற்ற தன்மைகள் குறித்து முகாமை அறியவில்லை. அதனால், நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்தும் தொடர்ச்சியான நிலைப்பாட்டின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.

இலங்கை உப்புக் கம்பனியின் பணிப்பாளர்கள் தொடர்ச்சியான நிலைப்பாட்டினைத் தொடர்வதற்கான சபையின் இயலுமையை மதிப்பீடு செய்துள்ளதுடன், அவர்கள் வர்த்தகத்தை நிறுத்தவோ அல்லது கலைப்பதற்கோ எண்ணவில்லை.

### 2.1.10. ஒப்பீட்டுத் தகவல்

கணக்கியற் கொள்கைகள் கம்பனியால் தொடர்ந்தும் செயற்படுத்தப்பட்டுள்ளதுடன் கடந்த ஆண்டுடன் இசைவானவையாகவும் உள்ளன. முன்னைய ஆண்டின் நிதிநிலமை அறிக்கைகளின் சமர்ப்பிப்பு மற்றும் வகைப்பாடு திருத்தப்பட்டது. சிறந்த சமர்ப்பித்தலுக்கு நடப்பு ஆண்டுடன் ஒப்பிடுவது பொருத்தமானது.

## 2.2. ஒருங்கிணைவின் அடிப்படை

### அ) ஒருங்கிணைவு

ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2023 டிசம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு கம்பனியினதும் அதன் துணை நிறுவனங்களினதும் நிதிக் கூற்றுக்களை உள்ளடக்குகின்றன.

துணை நிறுவனமானது, குழுமம் கட்டுப்பாட்டினைப் பெற்றுக்கொண்ட நாளாகிய, கையகப்படுத்திய நாள் முதல் ஒருங்கிணைக்கபட்டுள்ளதுடன் அத்தகைய கட்டுப்பாடு முடிவடையும் நாள் வரை தொடர்ந்தும் ஒருங்கிணைக்கபட்டிருக்கும். துணை நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் தாய் நிறுவனத்தைப் போன்றே அறிக்கையிடும் அதே காலப்பகுதியில் தயாரிக்கப்படும்.

எனினும், குழு கணக்கியற் கொள்கைகளுள் முன்னிலைப்படுத்தப்பட்ட இரு நிறுவனங்களினதும் கணக்கியற் கொள்கைகள் வித்தியாசமானவை. அவை குழுமத்திற்குரிய கணக்கீட்டுக் கொள்கைகளில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

### ஆ) துணை நிறுவனங்கள

துணை நிறுவனங்களாவன, வாக்குரிமைகளின் அரைப்பகுதிக்கும் மேலாக பங்குரிமையினைப் பொதுவாகக் கொண்ட செயற்பாட்டு மற்றும் நிதிசார் கொள்கைகளை நிர்வகிப்பதற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆற்றலைக் கொண்ட குழுமத்தாலான நிறுவனங்களாகும். குழுமம் வேறோரு நிறுவனத்தைக் கட்டுப்படுத்துகின்றதா என மதிப்பிடும் போது நடைமுறைப்படுத்தக் கூடியதும் அல்லது மாற்றக்கூடியதுமான சாத்தியமான வாக்குரிமைகளின் நிலைப்பாடு மற்றும் விளைவு கருத்திற் கொள்ளப்படும். குழுமத்திற்கு கட்டுப்பாட்டினை மாற்றப்பட்ட நாள் முதல் துணை நிறுவனங்கள் முற்றாக ஒருங்கிணைக்கப்படும். கட்டுப்பாடு நிறுத்தப்பட்ட நாளிலிருந்து அவை ஒருங்கிப்பினை இழக்கும்.

கம்பனியிதும் மற்றும் அதன் துணை நிறுவனங்களினதும் எல்லா சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களிலும் மற்றும் ஒருங்கிணைப்பிலும உள்ளடங்கிய கம்பனியின் மற்றும் ஒருங்கிணைப்பில் உள்ளடங்கிய அதன் துணை நிறுவனங்களின் வருடத்திற்கான மொத்த இலாபங்கள் மற்றும் நட்டங்கள் முறையே விபரமான வருமானத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட கூற்றில் மற்றும் நிதி நிலைமைக் கூற்றிலும் காட்டப்பட்டுள்ளன.

### இ) அறிக்கையிடும் திகதி

12 மாதங்களுடன் முடிவடையும் டிசம்பர் 31 ஆந் திகதியான பொதுவான அறிக்கையிடும் காலப்பகுதியில் துணை நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும்.

## 2.3. இலாபம் மற்றும் நட்டத்தினை அளவிடுவதன் அடிப்படை

### 2.3.1. வருமானம்

வருமானம் இனம் காணப்படுவது அதன் மூலம் பொருளாதார நலன்கள் வியாபார நிறுவனத்திற்கு வந்துசேரும் என அனுமானிக்கப்படும் மற்றும் அந்த வருமானத்தை நம்பிக்கையுடன் கணக்கிட முடியுமாக உள்ள அளவுக்காகும். வருமானத்தை இனம் காண்பதற்கு முன்னர் பின்வரும் விசேட அடையாளம் காணும் நியதிகளை பூரணப்படுத்தல் வேண்டும்.

பொருட்களின் விற்பனை மூலம் கிடைக்கப்பெறும் வருமானம் அடையாளம் காணப்படுவது பொருட்களின் விற்பனைக்காக அனுப்பப்பட்டு அதன் உரிமை கையளிக்கப்படும் போதாகும். கழிவு மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் சார்ந்த அரசாங்கம் சார்பில் சேகரிக்கப்படும் வரிகள் அற்ற கிடைக்கப்பெற்ற அல்லது கிடைக்கவுள்ள நிதியின் சாதாரண பெறுமதியின் மீது வருமானம் கணக்கிடப்படும். வருமானத்தை அடையாளம் காண்பதற்கு முன்னர் பின்னர் விசேட அடையாளம் காணும் நியதிகளையும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

**அ) பொருட்களின் விற்பனை**

பொதுவாக விற்பனைக்காக பொருட்களை ஏற்றியனுப்பும் போது பொருட்களுக்கே உரிய தனித்துவமான அபாயங்கள் மற்றும் பொருட்களின் உரிமைக்கான நலன்கள் அவற்றை கொள்வனவு செய்பவருக்கு கையளிக்கப்பட்டிருக்கும் போது பொருட்களின் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் அடையாளம் காணப்படுகின்றது.

**ஆ) சேவைகளை நிறைவேற்றல்**

ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த மனித உழைப்பு மணித்தியாலங்களின் சதவீதமாக தற்போதைய தினம் வரையில் செலவு செய்யப்பட்ட மொத்த மனித உழைப்பு மணித்தியாலங்களைக் கருத்திற்கொண்டு நிர்ணயிக்கப்படும் ஏற்புடைய பணிகள் நிறைவுசெய்யப்பட்ட கட்டத்திற்கு மதிப்பிட்டு சேவைகளை நிறைவேற்றுவதன் மூலம் கிடைக்கப்பெறும் வருமானம் அடையாளம் காணப்படும். ஏற்புடைய ஒப்பந்தப் பணியின் பெறுபேறாக நம்பகத்தன்மையுடன் கணக்கிட முடியாத போது மீள அறவிட முடியுமான செய்யப்பட்ட செலவின் அளவு வரை மாத்திரம் வருமானம் அடையாளம் காணப்படும்.

**இ) வட்டி**

சொத்தின் மீதான பயனுள்ள வட்டி வீதம் கணக்கிடப்படும் கால வீதத்தை அடிப்படையாகக் கொண்டு வருமானம் அடையாளம் காணப்படும்.

**ஈ) வேறு**

வேறு வருமானம் திரண்ட அடிப்படையில் அடையாளம் காணப்படும்.

**2.3.2. வட்டி மற்றும் ஒத்த வருமானமும் செலவும்**

கடன் தீர்ப்பனவுச் செலவில் அளவிடப்படும் எல்லா நிதிச் சாதனங்களுக்காக நிதிச் சொத்துக்களையுடைய வட்டி விற்பனைக்கு உள்ளவையாகவும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் பெயர் குறிப்பிடப்பட்ட நிதிச் சாதனங்களாகவும் வகைப்படுத்தப்படுவதுடன், வட்டி வருமானம் அல்லது செலவு பயனுறுதிமிக்க வட்டி வீதத்தைப் (EIR) பயன்படுத்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. நிதிச்சொத்துக்கள் அல்லது நிதிப் பொறுப்புக்கள் மீதான தேறிய காவுகைத் தொகைக்கு பொருத்தமான விதத்தில், மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுக் கொடுப்பனவுகள் அல்லது கிடைப்பனவுகளை நிதிச் சொத்துக்களின் குறுகிய கால அல்லது எதிர்பார்க்கப்பட்ட ஆயுட் காலத்தினூடாக EIR துல்லியமாகக் தள்ளுபடி செய்கின்றது. நிதிச் சாதனங்களின் எல்லா ஒப்பந்த ரீதியான நிபந்தனைகளையும் (உதாரணமாக, முன்கொடுப்பனவு விருப்ப படிகள்) மதிப்பீட்டுக் கணக்கில் வைப்பதுடன், எதிர்கால பற்று நட்டங்கள் அல்லாமல், EIR இன் முக்கிய அங்கமாக உள்ளதும் சாதனங்களுக்கு நேரடியான காரணிகளாக இருக்கக்கூடியதுமான ஏதேனும் கட்டணங்களை அல்லது வருமானம் சார் செலவினங்களை உள்ளடக்குகின்றது. வட்டி வருமானம் கூப்பன் வருமானத்தை மற்றும் சாதனங்களின் தவனைப்பணம் அல்லது விலைக்கழிவின் கடன்கழிப்பு மீதான ஏதேனும் இலாபத்தையோ அல்லது நட்டத்தையோ உள்ளடக்குகின்றது.

நிதிச்சொத்தொன்றின் பெறுமதி அல்லது பெறுமதி இழப்பு நட்டம் காரணமாக குறைக்கப்பட்ட ஒத்த நிதிச் சொத்துக்களின் தொகுதி பதிவு செய்யப்பட்டதும், பெறுமதி இழப்பு நட்டத்தினை அளவிடும் நோக்கத்திற்காக எதிர்கால காசுப் பாய்ச்சலை தள்ளுபடி செய்வதற்கு பயன்படும் மூல வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி வட்டி வருமானம் தொடர்ந்தும் இனங்காணப்படும்.

அவ்வருடத்தின் டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதியத்தின் ஒவ்வொரு அங்கத்தவரினதும் தனிப்பட்ட கணக்கின் பற்றுக்கான தொகை மீதான, நிதியத்தின் பண முதலீட்டிலிருந்து வருமானத்தின் மூலம், அவ்வப்போது அமைச்சரின் மற்றும் நிதிசார் விடயங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒப்புதலோடு சபை நிர்ணயிக்கும் ஒவ்வொரு வருடமும் செலுத்தப்பட வேண்டிய, மூன்று சதவீதத்திற்கு குறையாத, சபை அவ்வாறான வீதத்தில் வட்டி செலுத்த வேண்டும் என்ற ETFB சட்டத்தின் 22 ஆவது பிரிவின் பிரகாரம் வட்டிச் செலவினம் இனங்காணப்படும்.

### 2.3.3. பங்கிலாப வருமானம் மற்றும் செலவினம்

பங்கிலாப இலாபமானது கொடுப்பனவைப் பெறுவதற்கான தாபனத்தின் உரிமை ஏற்றுக்கொள்ளப்படும் போது இனங்காணப்படுகின்றது. நிதியத்தின் பண முதலீட்டினால் தேறக்கூடிய இலாபங்களில் இருந்து சபை பங்கிலாபங்களைப் பிரகடனப்படுத்த வேண்டும் என்ற ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 14 ஆவது பிரிவின் பிரகாரம் பங்கிலாபச் செலவு இனங்காணப்படும்.

### 2.3.4. ஏனைய வருமானங்கள்

ஊழியரின் சேவைக் காலம் முழுவதும் கடன் கழிப்புச் செய்யப்படும் ஊழியர் கடன்களில் சாதாரணப் பெறுமதியை மதிப்பிடுவதன் மூலம் கிடைக்கப்பெறும் வட்டி வருமானத்திற்கு மேலதிகமாக வேறு ஏற்புடைய கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளும் வியாபார நிறுவனங்களின் உரிமை உறுதிப்படுத்தப்படும் போது வேறு வருமானங்கள் இனங்காணப்படுகின்றன.

## 2.4. வரிவிதிப்பு

### 2.4.1. தற்போதைய வரிகள்

கடந்த ஆண்டுகளில் செலுத்த வேண்டிய வரிக்கு ஏதேனும் சரிப்படுத்தல்கள் மற்றும் அமுலாக்கப்பட்ட அல்லது அறிக்கையிடும் திகதியில் குறிப்பிடத் தக்க வகையில் அமுலாக்கப்பட்ட வட்டி வீதங்களைப் பயன்படுத்தி வருடத்திற்கான வசிக்குட்பட்ட வருமானம் அல்லது நட்டதின் மீதான எதிர்பார்க்கப்பட்ட வரி செலுத்த வேண்டியவை அல்லது கிடைக்க வேண்டியவையே தற்போதைய வரி ஆகும்.

கடன் கழிப்பு ஆதாயம் மற்றும் வருமான வரிச் செலவினம் குறித்து ஒரு நியாயமான நோக்கினை வழங்குவதற்கு கடன்கழிப்பு ஆதாயக் கணக்கிற்கு மீளச் சேர்ப்பதற்கு ஆண்டிறாகன திறைசேரி முறிகள் மற்றும் உண்டியல்கள் மீதான ஈட்டப்பட்ட வருமானத்திற்கு பொருந்தக்கூடிய நிறுத்தி வைப்பு வரியின் (WHT) விகிதாசாரத்தினை இனங்காண்பதற்கு சபை அதன் கணக்கியற் கொள்கைகளை மாற்றியது.

தற்போதைய செலுத்தவேண்டிய வரி வருடத்திற்கான வரிக்குட்பட்ட இலாபத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. வருமான வரிக்கான ஏற்பாடு உள்நாட்டு வருவாய் சட்டத்தின் ஏற்பாட்டின் பிரகாரம் கணக்கிடப்பட்ட மற்றும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிட்டுள்ளவாறு வருமானம் மற்றும் செலவினக் கூறுகளின் அடிப்படையில் உள்ளது.

### 2.4.2. பிற்போடப்பட்ட விரிவிதிப்பு

ஐந்தொகைத் திகதியில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடிப்படைகளுக்கு இடையிலான எல்லா தற்காலிக வித்தியாசங்கள் மற்றும் அறிக்கையிடும் காலத்திற்கான அவற்றின் காவுகைத் தொகைகள் மீது பொறுப்பு முறைமையினைப் பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி வழங்கப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் எதிர்காலத்தில் வரிக்குட்பட்ட இலாபத்தினை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் எல்லா தற்காலிக வித்தியாசங்களுக்கும் இனங்காணப்படும். பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் எதிர்காலத்தில் வரிக்குட்பட்ட இலாபத்தினை மற்றும் ஏதேனும் பயன்படுத்தப்படா வரி இழப்புக்களை அல்லது பயன்படுத்தப்படா வரிக்கடன்களைக் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் எல்லா தற்காலிக வித்தியாசங்களுக்கும் இனங்காணப்பட்டு மீட்கப்படமாட்டாது என்பதை விட வாய்ப்பு உள்ள தற்போதைய அல்லது மதிப்பிடப்பட்ட எதிர்கால வரிக்குட்பட்ட இலாபம் மீதான உயர்ந்த தொகையில் பிற்போடப்பட்ட சொத்துக்கள் அளவிடப்படும்.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் தேறிய காவுகைத் தொகை ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் எதிர்கால வரிக்குட்பட்ட இலாபங்களின் தற்போதைய மதிப்பீட்டினைப் பிரதிபலிப்பதற்கு சரிப்படுத்தப்படும். சரிப்படுத்தல்கள் இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படும்.

அமுலாக்கப்பட்ட அல்லது அறிக்கையிடும் திகதியில் குறிப்பிடத் தக்க வகையில் அமுலாக்கப்பட்ட வரி வீதங்களின் அடிப்படையில் பிற்போடப்பட்ட வரிச் சொத்து தேறப்பட வேண்டும் அல்லது பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு தீர்க்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கும் காலங்களில் வரிக்குட்பட்ட இலாபத்திற்கு (வரி இழப்பு) பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் வரி வீதங்களில் பிற்போடப்பட்ட வரி கணக்கிடப்படும்.

## 2.5. வெளிநாட்டு நாணயப் பரிமாற்றம்

கம்பனியின் புழக்கத்திலுள்ள நாணயமான இலங்கை ரூபாவில் நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. பரிவர்த்தனை திகதியில் நடைமுறையிலுள்ள தொழிற்பாட்டு நாணய விகிதத்தில் ஆரம்பத்தில் வெளிநாட்டு நாணயங்களில் பரிவர்த்தனைகள் பதிவுசெய்யப்படும். ஐந்தொகைத் திகதியில் நடைமுறையில் உள்ள பரிமாற்றத்தின் தொழிற்பாட்டு நாணய விகிதத்தில் மீள்பரிமாற்றம் செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் நாணயச் சொத்துக்களும் பொறுப்புக்களும் நிர்ணயிக்கப்படும். எல்லா வித்தியாசங்களும் இலாபம் அல்லது நட்டத்திற்கு எடுக்கப்படும். வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்றுச் செலவின் பிரகாரம் அளவிடப்படும் நாணயமற்ற உருப்படிகள் ஆரம்ப கொடுக்கல் வாங்கல்களின் திகதியகளில் உள்ளவாறு பரிமாற்ற வீதங்களைப் பயன்படுத்தி பரிமாற்றம் செய்யப்படும். வெளிநாட்டு நாணயத்தில் நியாயமான பெறுமதியில் அளவிடப்படும் நாணயமற்ற உருப்படிகள் நியாயமான பெறுமதி தீர்மானிக்கப்பட்ட திகதியில் பரிமாற்ற வீதங்களைப் பயன்படுத்தி பரிமாற்றம் செய்யப்படும்.

## 2.6. முதலீடுகள் மற்றும் ஏனைய நிதிச் சொத்துக்கள்

### 2.6.1. வகையீடு

சபையானது தனது நிதிச் சொத்துக்களை பின்வரும் அளவீட்டுத் தொகுதிக்குள் இருந்த வண்ணம் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் வகையீடு செய்கின்றது.

- சாதாரணப் பெறுமதியின் பின்னர் சமகாலத்தில் கணக்கிடப்பட வேண்டியுள்ள நிதிச் சொத்துக்கள் (வேறு விஸ்தீரண வருமானங்கள் ஊடாகவோ அல்லது இலாப நட்டத்தின் ஊடகவோ) மற்றும்
- கடன் கழிப்பு செலவின் மீது கணக்கிடப்படவுள்ள நிதிச் சொத்துக்கள்.
  இந்த வகையீடு நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பாய்ச்சலின் ஒப்பந்தம் மற்றும் நிபந்தனைகளை முகாமை செய்வதற்கான நிறுவன ரீதியான வியாபார மாதிரியின் மீது தங்கியுள்ளது.

சாதாரணப் பெறுமதியின் மீது கணக்கிடப்படும் சொத்துக்கள் தொடர்பில் நலன்கள் மற்றும் நட்டம் அடைதல் இலாபம் அல்லது நட்டத்தினுள் அல்லது வேறு விஸ்தீரண வருமானத்தினுள் அறிக்கையிடப்படும். விற்பனைக்காக தடுத்துவைக்கப்படாத பங்குரிமை செயலாற்றுகை கருவிகள் தொடர்பில் நோக்கும் போது, இது தங்கியிருப்பது வேறு விஸ்தீரண வருமானங்கள் ஊடாக சாதாரண பெறுமதியின் (FVOCI) மீது பங்குரிமை முதலீடுகளை கணக்கிடுவதற்காக ஆரம்ப இனம்காணும் சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்ய முடியாத தேர்வொன்று நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்டதா என்ற விடயத்தின் அடிப்படையிலாகும்.

அந்தச் சொத்தில் நிகழும் மாற்றங்களை முகாமை செய்யும் பொருட்டு தனது வியாபார மாதிரியை பயன்படுத்தும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் கடன் முதலீட்டு நிதியங்கள் மீள்வகையீடு செய்யப்படுகின்றன.

### 2.6.2. இனம்காணல் மற்றும் இனம்காணாப்படாமை

நிதிச் சொத்துக்களின் நிலையான கொள்வனவுகள் மற்றும் விற்பனை முறைகள் இனம்காணப்படுவது நிதியம் அந்தச் சொத்துக்களை கொள்வனவு செய்த அல்லது விற்பனை செய்த ஏற்புடைய வியாபார தினத்திற்காகும். நிதிச் சொத்துக்கள் இனம்காணப்படாமை அந்த நிதிச் சொத்துக்களின் நிதிப் பாய்ச்சலொன்றைப் பெற்றுக்கொள்ளும் உரிமை நிறைவடைந்துள்ள போது அல்லது கையளிக்கும் போது மற்றும் உரிமை பற்றிய அனைத்து ஆபத்துக்கள் மற்றும் கொடைகள் நிதியத்தினால் போதியளவு கையளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்திலாகும்.

### 2.6.3 கணக்கிடுதல்

ஆரம்ப இனங்காணலின் போது நிதியத்தினால் தனது நிதிச் சொத்தொன்றை இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சாதாரணப் பெறுமதியின் மீது அல்லாத தனது நிதிச் சொத்தொன்று தொடர்பில் கணக்கிடப்படுவது அந்த நிதிச் சொத்தை கையகப்படுத்திக்கொள்வதற்கு நேரடியாக பொறுப்பேற்க முடியுமான அங்கு கொடுக்கல் வாங்கல் செய்ய முடியுமான செலவினத்திற்கு மேலதிகமாக அதன் சாதாரண பெறுமதியின் மீதாகும். இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சாதாரண பெறுமதியின் மீது முன்கொண்டு செல்லப்படும் நிதிச் சொத்துக்களின் கொடுக்கல் வாங்கல் செலவினங்கள் செலவு வைக்கப்படுவது இலாப அல்லது நட்டக் கணக்கிலாகும். நிதிச் சொத்துக்களின் காசுப் பாய்ச்சல், வெறுமனே முதலீடு செய்யப்பட்ட ஆரம்ப நிதியின் மற்றும் வட்டியின் கொடுப்பனவுகள் மாத்திரமா என தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில் இடைதொடர்புள்ள பெறப்பட்ட நிதிச் சொத்துக்கள் அவற்றின் சராசரியாக கணிக்கப்படும்.

### 2.6.3.1 கடன் செயலாற்றுகைக் கருவி

கடன் செயலாற்றுகைக் கருவி தொடர்பில் பிற்காலத்தில் செய்யப்படும் கணக்கிடல் தங்கியிருப்பது, சொத்துக்களை முகாமை செய்வதற்காக நிதியத்தின் வியாபார மாதிரி மற்றும் சொத்துக்கு ஏற்புடைய நிதிப் பாய்ச்சலின் அடையாளங்களின் மீதாகும். நிதியத்தினால் தனது கடன் செயலாற்றுகை கருவிகளை வகையீடு செய்யும் அளவீடுகள் மூன்று வகைப்படும்.

**கடன்கழிப்புச் செலவினம்:** ஒப்பந்தம் செய்யப்பட்ட நிதிப் பாய்ச்சல்களை சேகரிப்பதற்காக தடுத்துவைக்கப்படும் சொத்துக்கள் அந்த காசுப் பாய்ச்சலில் வெறுமனே ஆரம்ப முதலீட்டு தொகையில் மற்றும் அதன் வட்டியுடன் தொடர்புடைய கொடுப்பனவுகளை மாத்திரம் பிரதிநிதித்துவம் செய்யும் சந்தர்ப்பங்களில் கடன் கழிப்பு செலவுக்கு அமைய கணக்கீடு செய்யப்படும். இந்த நிதிச் சொத்துக்கள் மூலம் உழைக்கப்படும் வட்டி வருமானம் செயலுக்கமுள்ள வட்டி வீத முறையைப் பயன்படுத்தி நிதி வருமானங்களில் உள்ளடக்கப்படும். சொத்துக்கள் இனம்காணலின் மீது எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் ஏற்படின் அது இலாபம் அல்லது நட்டத்திற்குள் நேரடியாக இனம் காணப்பட்டு அன்னியச் செலாவணி காரணமாக எழும் இலாபம் அல்லது நட்டத்துடன் வேறு இலாபம் கூநீநட்டம்ரூ இற்குள் உள்ளடக்கப்படும். சொத்துக்கள் பலவீனமடையயும் காரணத்தினால் நிகழும் நட்டம், இலாபம் அல்லது நட்டக் கூற்றில் தனியான நிரல் விடயமொன்றாக சமர்ப்பிக்கப்படும்.

**வேறு விஸ்தீரண வருமானத்தின் ஊடாக சாதாரணப் பெறுமதி FVOCI :** ஒப்பந்தம் செய்யப்பட்ட நிதிப் பாய்ச்சல்களை சேகரிப்பதற்காக மற்றும் நிதிச் சொத்துக்களை விற்பனை செய்வதற்காக தடுத்துவைக்கப்படும் சொத்துக்கள் அந்த காசுப் பாய்ச்சலில் வெறுமனே ஆரம்ப முதலீட்டு தொகையில் மற்றும் அதன் வட்டியுடன் தொடர்புடைய கொடுப்பனவுகளை மாத்திரம் பிரதிநிதித்துவம் செய்யும் சந்தர்ப்பங்களில் வேறு விஸ்தீரண வருமானத்தின் ஊடாக சாதாரண பெறுமதிக்கு அமைய கணக்கீடு செய்யப்படும். இலாபம் அல்லது நட்டம் பலவீனமடைவதை இனம் காணல், வட்டி வருமானம் மற்றும் இலாபம் அல்லது நட்டத்திற்குள் இனம் காணப்படும் அன்னியச் செலாவணி இலாபம் அல்லது நட்டம் தவிர முன்கொண்டு செல்லப்படும் பணத்தில் ஏற்படும் அசைவுகள் வேறு விஸ்தீரண வருமானங்கள் ஊடாக கணக்கிடப்படும். நிதிச் சொத்தொன்று இனம்காணப்படாத போது வேறு விஸ்தீரண வருமானத்திற்குள் ஏற்கனவே இனம்காணப்பட்ட திரண்ட இலாபம் அல்லது நட்டத்தை நோக்கி மீள்வகையீடு செய்யப்பட்டு வேறு இலாபம் / நட்டத்தில் காட்டப்படும். இந்த நிதிச் சொத்துக்கள் மூலம் உழைக்கப்படும் வட்டி வருமானம் பயனுள்ள வட்டி வீத முறையைப் பயன்படுத்தி நிதி வருமானங்களில் உள்ளடக்கப்படும். அன்னியச் செலாவணி காரணமாக எழும் இலாபம் அல்லது நட்டத்துடன் வேறு இலாபம்/ (நட்டம்) இற்குள் உள்ளடக்கப்படும். சொத்துக்கள் பலவீனமடையயும் காரணத்தினால் நிகழும் நட்டம், இலாபம் அல்லது நட்டக் கூற்றில் தனியான நிரல் விடயமொன்றாக சமர்ப்பிக்கப்படும்.

**இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சாதாரண பெறுமதி FVTPL :** கடன் கழிப்பு செலவினம் அல்லது வேறு விஸ்தீரண வருமானத்தின் ஊடாக சாதாரண பெறுமதிக்கான நியதிகளை பூரணப்படுத்தாத சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சாதாரண பெறுமதியின் கீழ் கணிப்பீடு செய்யப்படும். இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சாதாரண பெறுமதியின் கீழ் பிற்காலத்தில் கணிப்பீடு செய்யப்படும் கடன் முதலீடு ஒன்றின் இலாபம் அல்லது நட்டத்திற்குள் இனம் காணப்பட்டு அது நிகழ்ந்த காலப் பிரிவில் வேறு இலாபம் அல்லது (நட்டத்தின்) கீழ் தேறியதாக சமர்ப்பிக்கப்படும்.

### 2.6.3.2 பங்குரிமை செயலாற்றுகை கருவிகள்

நிதியம் தனது அனைத்து பங்குரிமை முதலீடுகளையும் சாதாரணப் பெறுமதிக்கு அமைய பிற்காலத்தில் கணிப்பீடு செய்யும். நிதிய முகாமைத்துவத்தினால் வேறு விஸ்தீரன வருமானத்திற்குள் பங்குரிமை முதலீடுகளை சாதாரண பெறுமதியுடன் கூடிய இலாபம் அல்லது நட்டத்தை சமர்ப்பிக்க தெரிவுசெய்யப்பட்டிருக்குமிடத்து ஏற்புடைய முதலீட்டை இனம்காணாத காரணத்தினால் நிகழும் சாதாரண பெறுமதியுடன் கூடிய இலாபம் அல்லது நட்டம், இலாபம் அல்லது நட்டத்தை நோக்கி பிற்காலத்தில் மீள்வகையீட்டுக்கு உட்படமாட்டாது. கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வது தொடர்பில் நிதியத்திற்குச் சொந்தமான தனது உரிமையை உறுதிசெய்யுமிடத்து இலாபம் அல்லது நட்டத்திற்குள் அந்த முதலீகளின் மூலம் உழைக்கப்படும் பங்கிலாபம் தொடர்ச்சியாக வேறு விஸ்தீரண வருமானமாக இனம் காணப்படும்.

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சாதாரண பெறுமதி மீது கணக்கிடப்பட்ட நிதிச் சொத்துக்களின் சாதாரண பெறுமதியில் நிகழும் மாற்றங்கள், ஏற்புடையவாறு இலாபம் அல்லது நட்டத்தின் கீழ் இனம்காணப்படும். வேறு விஸ்தீரண வருமானத்தின் ஊடாக கணிப்பிடப்படும் பங்குரிமைகள் முதலீட்டின் மீது மேற்கொள்ளப்படும் வலுக்குறை நட்டம் (மற்றும் வலுக்குறை நட்டங்களின் மாற்று) சாதாரண பெறுமதி விடயத்தில் நிகழும் மாற்றங்களினால் பிரித்தறியப்பட்டு அறிக்கையிடப்படுவதில்லை.

**அடிப்படை நிதிச் சாதனங்கள்**

நிதிச் சொத்துக்கள் வியாபரத்திற்கு விடப்பட்ட நிதிச் சொத்துக்கள், முதிர்ச்சிக்கு விடப்பட்டவை, கடன்கள் மற்றும் வருமதிகள் மற்றும் விற்பனைக்கு உள்ள நிதிச் சொத்துக்கள் என வைகப்படுத்தப்பட்டுள்ளன. கம்பனி அதன் நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தலை ஆரம்ப இனங்காணலின் போது தீர்மானிக்கின்றது.

**கடன்கள் மற்றும் வருமதிகள்**

கடன்கள் மற்றும் வருமதிகள் குறுங்கால வைப்புக்கள், நிலையான வைப்பு மற்றும் வியாபாரமும் ஏனைய வருமதிகளும் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. எல்லா நிதிச் சாதனங்களும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் தொடர்பில் தவிர அவற்றின் நியாயமான பெறுமதியில் மற்றும் கொடுக்கல் வாங்கல் செலவுகளில் ஆரம்பத்தில் அளவிடப்படும்.

கடன்களும் வருமதிகளும் செயற்படு சந்தையொன்றில் விலை குறிக்கப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான மரபு சாரா நிதிச் சொத்துக்களாகும். ஆரம்ப அளவீட்டின் பின்னர், அவ்வகை நிதிச் சொத்துக்கள் கடன்கழிப்புச் செலவில் பிற்பகுதியில் அளவிடப்படும். பெறுமதி இழப்பின் காரணமாக எழும் நட்டங்கள் விபரமான வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

**நிதிச் சொத்துக்களின் பாதிப்பு**

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் ஒரு நிதிச் சொத்து பலவீனமடைந்துள்ளது என்பதற்கு ஏதேனும் புறநிலை ஆதாரம் உள்ளதா என்பதை நிறுவனம் மதிப்பிடுகிறது. சொத்தின் ஆரம்ப அங்கீகாரத்திற்குப் பிறகு ஏற்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்வுகளின் விளைவாக சேதம் ஏற்பட்டதற்கான புறநிலை சான்றுகள் இருந்தால் மாத்திரமே நிதிச் சொத்து பலவீனமடைந்ததாகக் கருதப்படுகிறது. அவ்வாறே, அந்த இழப்பு நிகழ்வு மதிப்பிடப்பட்ட எதிர்கால பணத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. நம்பகத்தன்மையுடன் மதிப்பிடக்கூடிய நிதிச் சொத்தின் ஓட்டங்கள், கடனாளின் கணிசமான நிதிச் சிரமம், வட்டி அல்லது அசல் கொடுப்பனவுகளில் கடன் தவறுதல் அல்லது அவர்களின் வகையறவு அற்ற நிலை அல்லது பிற நிதி மறுசீரமைப்பில் நுழைவதற்குள்ள நிகழ்தகவு மற்றும் மதிப்பிடப்பட்ட எதிர்காலத்தில் அளவிடக்கூடிய குறைவு இருப்பதைக் காணக்கூடிய தரவுகள் குறிப்பிடுவது போன்ற குறைபாடுகள் காணப்படலாம். அவ்வாறே, பணப்புழக்கம், இயல்புநிலையுடன் தொடர்புடைய பொருளாதார நிலைமைகளின் நிலுவைகளில் ஏற்படும் மாற்றங்கள் போன்றவையும் தாக்கத்தை செலுத்தும்.

**நிதிப் பொறுப்புக்கள்**

நிதிப்பொறுப்புக்களின் வரையறை மற்றும் ஒப்பந்திரீதியான உடன்படிக்கையின் உள்ளடக்கத்தின் பிரகாரம் இலாபம் அல்லது நட்டம் அல்லது ஏனைய நிதிப் பொறுப்புக்கள் ஊடாக நியாயமான பெறுமதியில் நிதிப் பொறுப்புக்களாக நிதிப் பொறுப்புக்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

எல்லா நிதிச் சாதனங்களும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் தொடர்பில் தவிர அவற்றின் நியாயமான பெறுமதியில் மற்றும் கொடுக்கல் வாங்கல் செலவுகளில் ஆரம்பத்தில் அளவிடப்படும்.

வட்டிக் கடன்கள் மற்றுமு் கடன்கள் மற்றும் ஏனைய நிதிப் பொறுப்புக்கள் (வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை) உள்ளடங்கலான நிதிப் பொறுப்புக்கள் முதலில் கையகப்படுத்துவதற்கு நேரடியாகக் கரணமாயுள்ள குறைந்த கொடுக்கல் வாங்கல் செலவில் நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்டு, தொடர்நதும் EIR முறைமையினைப் பயன்படுத்தி கடன்கழிப்புச் செலவில் அளவிடப்படுகின்றன. EIR இன் ஒன்றிணைந்த பகுதியான ஏதேனும் விலைக்கழிவு அல்லது தவணைப்பணம் மற்றும் செலவுகள் ஆகியவற்றைக் கணக்கில் எடுப்பதன் மூலம் கடன்கழிப்புச் செலவு கணிக்கப்படுகின்றது.

## 2.7. சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள்

### 2.7.1 அடையாளம் காண்பதன் அடிப்படை

சொத்துடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதாரப் நலன்கள் சபையை நோக்கி வரும் இடம்பாடு காணப்படுமாயின் மற்றும் சொத்தின் விலை நம்பகத்தன்மையுடன் அளவிடப்படும் சாத்தியம் இருப்பின் சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் அடையாளம் காணப்படும். ரூ.10,000 தொகைக்கும் குறைவான ஒரு பொருளின் அலகு செலவை (பயன்பாட்டு செலவு உட்பட) சொத்து, ஆலை மற்றும் உபகரணமாக அடையாளம் காணாது அந்தப் பொருட்களை செலவாக அடையாளம் காண்பதும் சபையின் கொள்கையாகும். எவ்வாறாயினும், காணி, கட்டிடங்கள் மற்றும் வாகனங்களின் விலை (பயன்பாட்டுச் செலவுகள் உட்பட) அலகு எல்லை ரூ.10,000 என்ற போதிலும் மூலதனமாக்கப்படுகின்றது.

### 2.7.2 அளவீட்டின் அடிப்படை

சொத்துக்கள், ஆலை மற்றும் உபகரணங்களின் இலவச காணிகள் தவிர ஏனையப் பொருட்கள் குறைந்த திரட்டப்பட்ட தேய்மானம் மற்றும் ஏதேனும் குறைபாடு இழப்புகளின் மீது அளவிடப்படுகின்றன.

சொத்தின் கையகப்படுத்துதலுக்கு நேரடியாகக் காரணமான செலவினங்கள் செலவில் உள்ளடங்கும். சுயமாக நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களின் விலையில் பொருட்கள் மற்றும் நேரடி உழைப்பு, சொத்துக்களை அவற்றின் நோக்கம் கொண்ட பயன்பாட்டிற்கான செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வருவதற்கு நேரடியாகக் கூறப்படும் பிற செலவுகள் என்பன உள்ளடங்கும். பொருட்களை அகற்றுவதற்கும் மற்றும் அவை இருக்கும் தளத்தை மீட்டெடுப்பதற்கான செலவுகள் மற்றும் தகுதியான கடன் செலவுகள் ஆகியன மூலதனமாக்கப்படும்.

சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் ஒரு பொருளின் பாகங்கள் வெவ்வேறு பயனுள்ள வாழ்க்கையைக் கொண்டிருக்கும் போது, அவை தனித்தனியான சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களாகக் கணக்கிடப்படுகின்றன.

### 2.7.3 அடுத்தடுத்த செலவுகள்

ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட செயல்திறனில் இருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்கால பொருளாதார நன்மைகளை மீட்டெடுக்க அல்லது பராமரிப்பதற்காக சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களை பழுதுபார்த்தல் அல்லது பராமரிப்பதற்கான செலவினம், வருமான அறிக்கையில் செலவாக அங்கீகரிக்கப்படுகிறது.

### 2.7.4 தேய்மானம்

சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் ஒவ்வொரு அலுகுகளின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்தின் மீது ஒரு நேர்கோட்டு அடிப்படையில் இலாபம் அல்லது நட்டத்தில் தேய்மானம் அளவிடப்படுகின்றது. காணி மதிப்பிழக்கப்படவில்லை. தனிப்பட்ட சொத்துகளின் குறிப்பிடத்தக்க கூறுகள் மதிப்பிடப்படுகின்றன, மேலும் ஒரு கூறு சொத்தின் மீதமுள்ள பகுதியை விட வேறுபட்ட பயனுள்ள ஆயுளைக் கொண்டிருந்தால், அந்தக் கூறு தனித்தனியாக தேய்மானம் செய்யப்படுகின்றது.

ஒரு சொத்தின் தேய்மானம், பயன்பாட்டிற்காக வைத்திருக்கும் போது சொத்து விற்பனைக்கு வைக்கப்பட்டதாக வகைப்படுத்தப்பட்ட திகதி அல்லது சொத்து அடையாளம் காணப்படாத திகதி ஆகியவற்றில் முன்னைய திகதியில் முடிவடைகின்றது. சொத்துக்கள் தேய்மானம் ஆரம்பிக்கப்படுவது அது பயன்பாட்டுக்கு உள்ள மாதத்திலாகும். அவை நீக்கப்பட்ட் மாதத்தில் தேய்மானம் ஏற்படாது. தேய்மான முறைகள், பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் எஞ்சிய மதிப்புகள் ஆகியவை அறிக்கையிடும் திகதியில் மதிப்பிடப்பட்டு, பொருத்தமானதாக இருப்பின் சரிசெய்யப்படும்.

| | வருடங்கள் (பயனுள்ள ஆயுட்காலம்) | தேய்மான வீதம் |
|---|---|---|
| கட்டிடங்கள் | 40 வருடங்கள | 2.5% |
| மோட்டார் வாகனங்கள் | 05 வருடங்கள் | 20% |
| கணினி உதிரிப் பாகங்கள் | 05 வருடங்கள் | 20% |
| தளபாடங்கள் | 10 வருடங்கள | 10% |
| இணைப்புகள் மற்றும் பொருத்திகள் | 10 வருடங்கள் | 10% |
| ஏனைய உபகரணங்கள் | 05 வருடங்கள் | 20% |

### 2.7.5. சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் அங்கீகாரத்தை நீக்குதல்

சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் ஒரு உருப்படி மற்றும் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு குறிப்பிடத்தக்க பகுதியும் அகற்றப்படும்போது அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றலில் இருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதிர்பார்க்கப்படாதபோது அது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சொத்தின் அங்கீகாரம் நீக்கப்படும்போது ஏற்படும் எந்த இலாபமோ அல்லது நட்டமோ சொத்து அங்கீகரிக்கப்படாத இலாபம் அல்லது இழப்பு அறிக்கையில் சேர்க்கப்படும். எஞ்சிய பெறுமதிகள், பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் தேய்மானத்தின் முறைகள் ஆகியவை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் மதிப்பாய்வு செய்யப்பட்டு, பொருத்தமாக இருப்பின் எதிர்காலத்தில் சரிசெய்யப்படும்.

சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் கருவிகளின் உருப்படிகள் திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் ஏதேனும் திரண்ட பெறுமதி இழப்பு நட்டங்களைக் கழித்து வரலாற்றுச் செலவில் அளவிடப்படும். சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் பெறுமானத் தேய்விற்கு பயன்படுத்தப்படும் வருடாந்த வீதங்களைக் கழித்து சொத்துக்களின் செலவினை ஒதுக்கீடு செய்யும் பொது பெறுமானத் தேய்வு விதிக்கப்படும்:

| | | |
|---|---|---|
| கட்டிடங்கள் மற்றும் அறுதிக் காணிகள் | ... | 2.5% |
| ஆலைகள் மற்றும் இயந்திரங்கள் | | |
| - பம்பிகள் மற்றும் உபகரணங்கள் | ... | 20% |
| - வேறு (மேசை உப்பு வலு நிலையம், அயடீன் தொழிற்சாலை, பாரம்தூக்கி மற்றும் வேறு ஆலை) | ... | 10% |
| உபகரணங்கள் | ... | 10% |
| தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் | ... | 10% |
| மோட்டார் வாகனங்கள் | | |
| - பெருந் தெருக்கள் வாகனங்கள் | ... | 10% |
| - டிரக்டர் மற்றும் டேலர் | ... | 20% |
| அபிவிருத்தி வேலைகள் | ... | 20% |
| வளர்ந்த பெருந்தோட்டங்கள் - தென்னை | ... | 02% |

பெறுமானத் தேய்வு வீதம், பயன்தரு ஆயுட்காலம் அல்லது ஒரு சொத்தின் எஞ்சிய பெறுமதி ஆகியவற்றில் முக்கியமான மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளமைக்கான அறிகுறி இருப்பின், சொத்தின் பெறுமானத் தேய்வு புதிய எதிர்பார்ப்புக்களைப் பிரதிபலிப்பதற்கு எதிர்காலத்தில் திருத்தியமைக்கப்படும்.

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் ஓர் உருப்படியானது அகற்றுகை அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றுகை மூலம் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மைகள் இல்லாத போது இனங்காண்பது நிறுத்தப்படும். சொத்தினை இனங்காண்பது நிறுத்தப்படுவதால் எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் (தேறிய அகற்றுகை வருவாய்கள் மற்றும் சொத்தின் காவுகைத் தொகை ஆகியவற்றிற்கு இடையிலான வித்தயாசமாகக் கணிக்கப்பட்ட) சொத்து இனங்காண்பது நிறுத்தப்பட்ட ஆண்டில் இலாபம் அல்லது நட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

- **உயிர் சொத்துக்கள்**

உயிர் சொத்துக்கள், முதிர்ச்சி அடைந்த உயிர் சொத்துக்கள் மற்றும் முதிர்ச்சி அடையாத உயிர் சொத்துக்கள் என இரு வகைப்படும். முதிர்ச்சி அடைந்த உயிர் சொத்துக்களாக அறுவடையைப் பெற்றுக்கொள்ள முடியுமான விசேட தரத்திலுள்ள அல்லது அடிக்கடி அறுவடையயைப் பெற்றுக்கொள்ள முடியுமான சொத்துக்களாகும். முதிர்ச்சி அடையாத உயிர் சொத்துக்களாக தற்காலம் அளவில் அறுவடையைப் பெற்றுக்கொள்ள முடியாத விசேட தரத்திற்கு உட்படாத சொத்துக்களாகும். தெங்குப் பயிர்ச் செய்கை மற்றும் நாற்று மேடைகள் உயிர் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. உடமை உயிர் சொத்துக்கள் விற்பனை செய்வதற்கோ அல்லது அறுவடையைப் பெற்றுக்கொள்வதற்கோ எண்ணமில்லாத போதும் விவசாய உற்பத்திகளாக அறுவடையைப் பெற்றுக்கொள்வதற்கு பயன்படுத்தாத உயிர் சொத்துக்கள் உள்ளடக்கப்படும்.

கடந்தகால நிகழ்வொன்றின் பெறுபேறாக ஏற்புடைய சொத்துக்களுடன் பின்னிப் பிணைந்து காணப்படும் எதிர்கால பொருளாதார நலன்கள் தன்னை நோக்கி வரும் என மற்றும் அந்தச் சொத்துக்களின் சாதாரணப் பெறுமதி அல்லது செலவு நம்பகமான முறையில் அளவிட முடியுமென நிறுவனம் அனுமானிக்கும் போது மற்றும் நிறுவனத்தினால் அந்த ஏற்புடைய சொத்துக்களை கட்டுப்படுத்துகின்ற போது மாத்திரம் அந்த நிறுவனம் தனது உயிர் சொத்துக்களை இனம் காணுகின்றது. உயிர் சொத்துக்கள் தொடர்பில் நிகழும் தேய்வு முழுமையாக இலாபம் அல்லது நட்டம் பற்றிய கூற்றுக்களில் அறவீடாக காட்டப்பட்டு ஏற்புடைய நட்டத்தை உறுதியாக அறிந்துகொண்ட பின்னர் அந்த நட்டம் ஏற்பட்ட ஆண்டில் அந்த சொத்துக்களுக்குரிய தேறியவைகள் முன்கொண்டு செல்லப்படும் கணக்குகளுக்கு குறைவு செய்யப்படும்.

- **உடமையுள்ள உயிர் சொத்துக்கள்**

உடமையுள்ள உயிர் சொத்துக்கள், இல 16 இலங்கை கணக்கீட்டுத் தரங்கள் - சொத்துக்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கு அமைய அவற்றின் திரண்ட தேய்மாணம் மற்றும் மற்றும் திரண்ட குறைவு நட்டங்கள் இருப்பின் அவையும் கழிக்கப்பட்ட செலவுகளின் மீது, அளவிடப்படும். கன்றுகளை நட்டுதல் மற்றும் அறுவடையைப் பெற்றுக்கொள்ளும் (மரக் கன்றுகள் நடப்பட்ட பிரதேசம் முதிர்ச்சியடைந்து வளர்ந்த பின்னர்) காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்ட காணி சீறாக்கம், மறுசீரமைப்பு, புதிதாக கன்று நடல், மீண்டும் கன்று நடல், பயிர்களை பல்வகைப்படுத்தல், துணைப் பயிர்களை நடல் மற்றும் உரம் இடல் போன்றவற்றுக்கான செலவுகள் முதிர்ச்சியடையாத பயிர்செய்கைகள் என வகைப்படுத்தப்படும். இந்த முதிர்ச்சி அடையாத பயிர்ச் செய்கைகளுக்கான நிதியிடலுக்காக பயன்படுத்தப்படும் நீண்ட கால கடன் தொகைகளுக்குரிய வட்டி உட்பட ஏனைய ஏற்புடை அவசிய செலவுகளுக்குரிய நேரடிச் செலவுகளுக்கு அமைய எடுத்துக்காட்டப்படும். வருடத்தினுள் பயன்தரக்கூடிய உடமை உயிர்ச் சொத்துக்கள் (தெங்கு) மீது ஏற்படுத்தப்படும் செலவுகள் முதிர்ச்சியடைந்த சொத்துக்களுக்கு மாற்றப்படும்.

## 2.8. முதலீட்டுச் சொத்து

கொடுக்கல் வாங்கல் செலவுகள் உட்பட முதலீட்டுச் சொத்தக்கள் ஆரம்பத்தில் செலவில் அளவிடப்பட்டன. ஆரம்ப இனங்காணலின் பிற்பாடு, அறிக்கையிடும் தினத்தில் சந்தை நிலைமைகளைப் பிரதிபலிக்கும் நியாயமான பெறுமதியில் முதலீட்டுச் சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. முதலீட்டுச் சொத்துக்கள் மீதான நியாயமான விலையில் ஏற்படக் கூடிய மாற்றங்கள் காரணமாக எழக்கூடிய இலாபங்கள் மற்றும் நட்டங்கள் அவை ஏற்பட்ட காலப்பிரிவில் வருமானக் கூற்றில் உள்ளடங்குகின்றன.

சபையின் முதலீட்டுச் சொத்து விபரமான வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ள காவுகைப் பெறுமதியில் உள்ள மாற்றங்களுடன் திறந்த சந்தைப் பெறுமதிக்கு ஒவ்வொரு மூன்று வருடத்திலும் மீள் மதிப்பீடு செய்யப்படும்.

கிடைக்க வேண்டிய வாடகை குத்தகைக்கு விடப்பட்ட காலப்பகுதிக்குள் நேர் கோட்டு முறைமையின் அடிப்படையில் அமைக்கப்படும். வாடகைக் குடியிருப்பாளனுக்கு ஊக்குவிப்பொன்று (வாடகை அறவிடப்படாத காலப்பகுதி போன்ற) வழங்கப்படுகையில், முதலீட்டுச் சொத்தின் காவுகைப் பெறுமதி இவ்வடிப்படையில் வாடகை வருமானமாக இனங்காணப்பட்டதன் விளைவாக பிரத்தியேகமான சொத்தொன்றாக பதியப்பட்ட ஏதேனும் தொகையை நீக்கும்.

2022 ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதிய அரசாங்க மதிப்பீட்டாளரின் அறிக்கையின்படி, கொழும்பு 02, நவம் மாவத்தையில் அமைந்துள்ள 2 ஏக்கர் 1 ரூட் பேர்ச்சஸ் 28 அளவுள்ள காணி அரசாங்க மதிப்பீட்டாளரால் மதிப்பிடப்பட்டது. மேற்படி காணி மற்றும் கட்டிடத்தின் சாதாரண மதிப்பு ரூ. 4,587,406,450/= இருந்தது. மேலும், திறைசேரி செயலாளரால் வெளியிடப்பட்ட 2018 டிசம்பர் 31 ஆம் திகதிய சொத்து முகாமை சுற்றறிக்கை இலக்கம் 4/2018 இன் பிரகாரம் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2023 செப்டம்பர் 23 ஆம் திகதிய கடிதத்தின் மூலம், இந்த முதலீட்டுச் சொத்தின் மேற்குறிப்பிடப்பட்ட மதிப்பீடு 05 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் என எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2.8.1. **(அ) சபையின் முதலீட்டுச் சொத்துக்களின் விபரம் - விஸ்தீரணம் மற்றும் அமைவிடம்**

| அமைவிடம் | விஸ்தீரணம் (பேர்சஸ்) | முதலீட்டுச் சொத்தின் சாதாரணப் பெறுமதி |
|---|---|---|
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை, நவம் மாவத்தை, கொழும்பு 02. | 388 | ரூ. 4,566,000,000.00 |

| அமைவிடம் | கட்டிடம் (சதுர அடி) | முதலீட்டுச் சொத்தின் சாதாரணப் பெறுமதி |
|---|---|---|
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை, நவம் மாவத்தை, கொழும்பு 02. | 19,319 | ரூ. 21,406,450.00 |

2.8.2. **(ஆ) சபையின் முதலீட்டுச் சொத்துக்களின் விபரம் - விலைமதிப்பு**

| விலைமதிப்பீட்டாளரின் பெயர் / முகவரி மற்றும் அமைவிடம் | மதிப்பிடும் முறை மற்றும் குறிப்பிடத்தக்க விடயங்கள் கவனிக்க முடியாத உள்ளீடுகள் | மதிப்பீடுகளின் வரையறைகள் கவனிக்க முடியாத உள்ளீடுகள் ரூ. | முதலீட்டுச் சொத்தின் சாதாரணப் பெறுமதி ரூ. |
|---|---|---|---|
| அரசாங்க விலைமதிப்புத் திணைக்களம், ‘விலைமதிப்பகம்’ இல 748, மருதானை வீதி, கொழும்பு 10. | சந்தை ஒப்பீட்டு முறை<br>• ஒரு பேர்சசுக்கான விலை<br>• ஒரு சதுர அடிக்கான விலை | 11,823,212.50p.p<br>625 – 1955 p.sq.ft. | 4,566,000,000.00<br>21,406,450.00 |

2.8.3. **(இ) மதிப்பீட்டு நுட்பங்கள் மற்றும் குழுமத்தின் முதலீட்டுச் சொத்துக்களின் சாதாரணப் பெறுமதியின் உணர்திறன்**

| மதிப்பீட்டு நுட்பங்கள் | கவனிக்க முடியாத மதிப்பீட்டு உள்ளீடுகள் | சாதாரணப் பெறுமதியின் உணர்திறன் |
|---|---|---|
| சந்தை ஒப்பீட்டு முறை<br>இந்த முறையானது, மறுமதிப்பீடு செய்யப்படும் சொத்தின் நியாயமான மதிப்பை நிர்ணயிப்பதில், நியாயமான கிட்டிய காலத்திற்குள் இதேபோன்ற சொத்தின் விற்பனை விலையைக் கருதுகின்றது. இது ஒரே மாதிரியான சொத்துக்களின் கிட்டிய செயலில் உள்ள சந்தை விலைகளை மதிப்பிடுவதை உள்ளடக்குகிறது. குறிப்பிட்ட சொத்தின் அளவு, தன்மை, அமைவிடம் மற்றும் நிலை ஆகியவற்றில் உள்ள வேறுபாடுகளுக்கு பொருத்தமான மாற்றங்களைச் செய்கின்றது. | • ஒரு பேர்சசுக்கான விலை<br>• ஒரு சதுர அடிக்கான விலை | மதிப்பிடப்பட்ட நியாயமான பெறுமதி அதிகரிப்பு/(குறைதல்)<br>ஒரு பேர்ச்சஸ் விலை அதிகரிப்பு/(குறைதல்)<br>ஒரு சதுர அடி விலை அதிகரித்தல்/(குறைதல்) |

**2.9. அருவச் சொத்துக்கள்**

2.9.1. **வெளிவாரியாகப் பெறப்பட்ட அருவச் சொத்துக்கள்**

பிரத்தியேகமாகப் பெறப்பட்ட அருவச் சொத்துக்கள் ஆரம்ப இனங்காணலின் போது செலவில் அளவிடப்பட்டன. அருவச் சொத்துக்கள் மீதான பின்வரும் ஆரம்ப இனங்காணல்கள், திரண்ட கடன் தீர்ப்பனவு மற்றும் திரண்ட பெறுமதி இழப்பு நட்டங்களைக் கழித்து செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அருவச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வரையறுக்கபட்ட அல்லது வரையறுக்கப்படாத விதத்தில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

அருவச் சொத்துக்கு பெறுமதி இழப்பு ஏற்படக் கூடும் என்ற குறிகாட்டி உள்ள போதெல்லாம், வரையறைக்குள்ளான ஆயுட்காலத்தை கொண்ட அருவச் சொத்துக்கள் அவற்றின் பயன்தரு பொருளாதார ஆயுட்கலத்தினுள் கடன் தீர்ப்பனவு செய்யப்படுவதுடன், பெறுமதி இழப்புக்காக மதிப்பீடு செய்யப்படும். வரையறைக்குள்ளான பயன்தரு ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்திற்கான கடன் தீர்ப்பனவு காலம் மற்றும் கடன் தீர்ப்பனவு முறைமை குறைந்தபட்சம் ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் மீளாய்வு செய்யப்படும். எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்தில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது சொத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள எதிர்கால பொருளாதார நன்மைகளின் கொள்வனவின் எதிர்பார்க்கப்பட்ட முறைமை கடன்தீர்ப்பனவு காலம் அல்லது முறையை மாற்றுவதன் மூலம் கணிப்பீடு செய்யப்படுவதுடன், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்களாகக் கருதப்படும். வரையறைக்குள்ளான ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்கள் மீதான கடன் தீர்ப்பனவு செலவினமானது அருவச் சொத்துக்களின் தொழிற்பாட்டுடனான செலவின வகை இணக்கப்பாட்டில் வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

அருவச் சொத்து ஒன்றின் இனங்காணலை நிறுத்துவதனால் ஏற்படும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் தேறிய அகற்றுகை வருவாய்களுக்கும் சொத்தின் காவுகைத் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாக அளவிடப்படுகின்றன. மேலும் சொத்தினை இனங்காணுவதை நிறுத்தும் போது, அது வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

### 2.9.2. கணினி மென்பொருள் பொதியங்கள்

கணினி மென்பொருள் பொதியங்களைப் பெறுதல்/ தரமுயர்த்துதலால் ஏற்படும் தொகை அருவச் சொத்தக்களாக இனங்காணப்படுவதுடன், 3 வருடங்களுக்கு மேலாகக் கடன் தீர்ப்பனவு செய்யப்படும்.

## 2.10 குத்தகைச் சொத்துக்கள்

மதிப்பீட்டில் குறிக்கப்பட்ட மற்றும் சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் கீழ் முன்னர் வகைப்படுத்தப்பட்ட நிலப் பயன்பாட்டு உரிமைகளைக் கொண்ட குத்தகைச் சொத்து ‘குத்தகைச் சொத்தாக’ மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஹம்பாந்தோட்டையில் உள்ள காணிக்கு செலுத்தப்பட்ட குத்தகைத் தொகை மூலதனமாக்கப்பட்டு 30 வருட குத்தகைக் காலத்திற்கு கடன்கழிப்புச் செய்யப்பட்டுள்ளது.

### 2.10.1 தொழிற்படு குத்தகை

உடைமையுரிமைக்கு உட்பட்ட கணிசமான அளவு இடர்கள் மற்றும் வெகுமதிகள் (தொழிற்படு குத்தகை) சபைக்கு மாற்றஞ் செய்யப்படாத போது, குத்தகையின் கீழ் செலுத்த வேண்டிய மொத்த வாடகை குத்தகைத் தவணைக்குள் நேர் கோட்டு முறைமை அடிப்படையில் விபரமான வருமானக் கூற்றுக்குச் சாட்டப்படும்.

## 2.11 பொருட்பதிவேடுகள்

வழக்கற்று போன மற்றும் மெதுவாக அசையும் உருப்படிகளுக்கு உரிய முற்பணங்கள் தீர்க்கப்பட்டதன் பின்னர் பொருட் பதிவேகள் குறைந்தளவிலான செலவிலும் தேறிய பணமாக மாறக்கூடிய பெறுமதியிலும் மதிப்பிடப்படும்.

வழக்கற்று போன மற்றும் மெதுவாக அசையும் உருப்படிகளுக்கு உரிய முற்பணங்கள் தீர்க்கப்பட்டதன் பின்னர் பொருட்பதிவேகள் குறைந்தளவிலான செலவிலும் தேறிய பணமாக மாறக்கூடிய பெறுமதியிலும் மதிப்பிடப்படும். பூர்த்தி செய்தல் மதிப்பீடு செய்யப்பட்ட செலவு மற்றும் விற்பனை மேற்கொள்வதற்கு தேவையான மதிப்பீடு செய்யப்பட்ட செலவு கழித்து பொருட்பதிவேடுகளை சாதாரண வியாபாரத்தில் விற்கக்கூடிய விலையே தேறிய பணமாக மாறக்கூடிய பெறுமதி ஆகும்.

பொருட்பதிவேடுகளை அதன் தற்போதைய இடத்திற்கும் நிலைக்கும் கொண்டுவருவதில் ஏற்பட்ட செலவு பின்வரும் செலவுச் சூத்திரங்களைப் பிரயோகித்து கணக்கிடப்படும்:-

| | | |
|---|---|---|
| மூலப் பொருட்கள் | - | முதலில் வந்தது முதலில் வெளியேறல் என்ற செலவு அடிப்படையில் கொள்வனவுச் செலவில் |
| முடிவுப் பொருட்கள் | - | நேரடிப் பொருட்கள், நேரடி உழைப்பு மற்றும் பிராந்திய உற்பத்தி மேந்தலைகளின் பொருத்தமான விகிதம் ஆகியவற்றின் செலவில் |
| முடிவுறா வேலைகள் | - | 12 மற்றும் அதற்கு மேற்பட்ட அடர்த்தியான மட்டத்தில் உட்செலுத்தப்பட்ட உப்பின் கணக்கிடப்பட்ட அளவை விட பகிர்ந்தளிக்கப்பட்ட கடந்த பருவத்தில் உப்புநீர் சுத்திகரிப்பு மற்றும் உப்புப் படுக்கைகளைத் தயாரித்தல் செலவினங்கள் 25% இல் நுகர்வுகள் மற்றும் |
| உதிரிப்பாகங்கள் | - | முதலில் வந்தது முதலில் வெளியேறல் அடிப்படையில் கொள்வனவுச் செலவில் |

பூர்த்தி செய்தல் மதிப்பீடு செய்யப்பட்ட செலவு மற்றும் விற்பனை மேற்கொள்வதற்கு தேவையான மதிப்பீடு செய்யப்பட்ட செலவு கழித்து சாதாரண வியாபாரத்தில் விற்கக்கூடிய மதிப்பிடப்பட்ட விற்பனை விலையே தேறிய பணமாக மாறக்கூடிய பெறுமதி ஆகும்.

## 2.12 இளைப்பாற்று நலன் பொறுப்புக்கள்

### 2.12.1 ஊழியர் நலன்கள்

கம்பனி நிலையான நலன்கள் மற்றும் நிலையான பொறுப்புக்கள் திட்டங்களைக் கொண்டுள்ளது. நிலையான பங்களிப்புத் திட்டம் என்பது கம்பனி இன்னொரு நிறுவனத்திற்கு நிலையான பங்களிப்புக்களைச் செலுத்துகின்ற இளைப்பாற்றுத் திட்டம் ஆகும். நிலையான நலன் திட்டங்கள் சேவைக் காலம் மற்றும் இழப்பீட்டின் அடிப்படையில் இளைப்பாறுகையில் ஓர் ஊழியர் பெற்றுக் கொள்ளும் இளைப்பாற்று நலன் தொகையினை நிர்ணயிக்கின்றது.

### 2.12.2 நிலையான பங்களிப்புத் திட்டங்கள்

உரிய சட்ட விதிகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் இணங்க, சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புக்களை மேற்கொள்வதற்கு ஊழியர்கள் தகுதியுடையவர்களாவர். ஊழியர்களின் மொத்த வருவாயிலிருந்து 15% மற்றும் 3% இனை முறையே ஊழியர்கள் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புக்களை சபை வழங்குகின்றது.

வழக்கிலுள்ள சட்ட விதிகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் இணங்க, சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புக்களை மேற்கொள்வதற்கு ஊழியர்கள் தகுதியுடையவர்களாவர். ஊழியர்களின் மொத்த வருவாயிலிருந்து 12% மற்றும் 3% இனை முறையே ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புக்களை கம்பனி வழங்குகின்றது.

### 2.12.3 நிலையான நலன் திட்டங்கள் - பணிக்கொடை

ஊழியர் நன்மைகள் - இலங்கை கணக்கீட்டு நியமங்கள் LKAS 19 இன் உறுதிப்பாட்டுடன் எல்லா ஊழியர்களினதும் சேவைக்காலத்தின் முதல் வருடத்திலிருந்தே இளைப்பாற்றுப் பணிக்கொடைக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. எவ்வாறெனினும், 1983 இன் பணிக்கொடைக் கொடுப்பனவு சட்ட இல 12 இன் கீழ் ஓர் ஊழியருக்கான பொறுப்பு தொடர்ச்சியான ஐந்து வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யும் போதே எழுகின்றது. பொறுப்பானது வெளிவாரியாக நிதியிடப்படுவதில்லை.

நிலையான பங்களிப்புத் திட்டத்திற்கு மாறாக நிலையான நலன்கள் திட்டமானது தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டமாகும். நிலையான இளைப்பாற்றுத் திட்டம் தொடர்பில் தாபனத்தின் தேறிய கடப்பாடு, நடப்பு மற்றும் முன்னைய காலப்பகுதிகளில் ஊழியர்கள் தமது பணிக்காக ஈட்டிய எதிர்கால நன்மை மீதான தொகையை மதிப்பீடு செய்வதன் மூலம் கணிக்கப்படுகின்றது. அந்நன்மையானது அதன் நடப்புப் பெறுமதியைத் தீர்மானிப்பதற்கு கழிவீடு செய்யப்படும். இனங்காணப்படாத கடந்த சேவைச் செலவினங்கள் கழிக்கப்படும்.

கழிவீட்டு வீதமானது அறிக்கையிடும் காலப்பகுதியில் தாபனத்தின் கடப்பாட்டு நிபந்தனைகளைப் பெரிதும் ஒத்திருக்கக்கூடிய முதிர்ச்சி நாட்களைக் கொண்ட உயர் தரக் கூட்டு முறிகள் மீதான வருவாயாகும். மேலும் அவை நன்மைகள் செலுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் அதே நாணயத்தில் குறிக்கப்படும். நிலையான நன்மைகள் கடப்பாடு வருடாந்தம் நெறிப்படுத்தப்பட்ட அலகுப் பற்று முறைமையைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது.

ஒரு திட்டத்தின் நன்மைகள் விருத்தி செய்யப்படும் போது, ஊழியர்களால் வழங்கப்பட்ட கடந்த சேவை காலம் தொடர்பாக அதிகரிக்கப்பட்ட நன்மையில் ஒரு பகுதி, நன்மைகள் பொறுப்பில் விடப்படும் வரையிலான சராசரி காலப்பகுதிக்குள் நேர் கோட்டு முறைமை அடிப்படையில் இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படும். நன்மைகள் உடனடியாக அளிக்கப்படும் அளவின் படி செலவினம் இலாபத்தில் அல்லது நட்டத்தில் உடனடியாக இனங்காணப்படும். தாபனமானது நிலையான நலன்கள் திட்டங்களினால் எழும் எல்லா காப்புறுதி இலாபங்களையும் நட்டங்களையும் ஏனைய விபரமான வருமானத்தில் இனங்காண்கின்றது.

கம்பனி நிதியளிக்கப்படாத, சேவை செய்த வருடங்கள் மற்றும் சமீபத்திய மாதாந்த சம்பள வீதம் ஆகியவற்றின் அடிப்படையிலான நலன்கள் கொண்ட அதன் வழமையான ஊழியர்களையும் உள்ளடக்கிய பங்களிக்காத நிலையான நலன் திட்டத்தைக் கொண்டுள்ளது. மதிப்பிடப்பட்ட எதிர்கால சம்பள அதிகரிப்புகள், தற்போதைய ஊழியர்களின் எதிர்கால சேவை மற்றும் 28.19 ஆம் பிரிவின் பிரகாரம் தற்போதைய ஊழியர்களின் பணியில் உள்ளபோது இறப்பு ஆகியவற்றின் மீதான எளிமையாக்கல்கள் பொறுப்பின் பெறுமதியை கணக்கிடுவதில் பயன்படுத்தப்படும். பணிக்கொடைக்கு ஏற்புடைய பொறுப்புக்கள் தொடர்பில் நிதியங்கள் வழங்கப்படவில்லை. அத்தோடு அது ஆயுட்காலத்தை அடிப்படையாகக் கொண்டும் கணக்கிடப்படவில்லை.

## 2.13 உரிமையாண்மை

### 2.13.1 அங்கத்தவர் நிதி

அங்கத்தவர்களிடமிருந்து கிடைத்த மற்றும் கிடைக்க வேண்டிய பங்களிப்பு, ஆண்டிற்குள் அவரக்ளுக்கான சேரும் பங்கிலாபம் மற்றும் வட்டியுடனான தேறிய மீளளிப்புக்கள் அங்கத்தவர் நிதியத்தில் உள்ளடங்குகின்றன.

### 2.13.2 பங்கிலாபங்கள்

பங்கிலாபங்களாவன பெறுவதற்கான நிதியத்தின் உரிமை உறுதிப்படுத்தும் போது இனங்காணப்படுகின்றன.

### 2.13.3 ஒதுக்குகள்

மீள்மதிப்பீட்டு ஒதுக்கு இறையில் காணி மற்றும் கட்டடங்களின் மீள்மதிப்பீட்டினை தொடர்புறுத்துகின்றதுடன் மீள்மதிப்பீட்டு திகதியில் உள்ளவாறு காணி மற்றும் கட்டடங்களின் நியாயமான பெறுமதி மாற்றங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அதன்படி, நவம் மாவத்தை காணியின் கொள்வனவுக் கிரயம் மீதான சந்தைப் பெறுமதி அதிகரிப்பால் ஒதுக்கு கட்டியெழுப்பபட்டுள்ளது.

சொத்துக்களை இனங்காண்பது நிறுத்தப்படல் அல்லது மதிப்பிழக்கப்படல் வரை விற்பனைக்கு கிடைக்கக்கூடிய நிதி முதலீடுகளின் நியாயமான பெறுமதியில் திரண்ட தேறிய மாற்றத்தினை விற்பனைக்கு கிடைக்கக்கூடிய ஒதுக்கு கொண்டுள்ளது.

## 2.14 ஏற்பாடுகள்

நிச்சயமற்ற கால முன்னேற்பாடு மற்றும் தொகைகள் மீதான பொறுப்புக்களுக்கான ஏற்பாடுகளை சபை இனங்கண்டுள்ளது. ஏற்பாடானது அறிக்கையிடும் காலப்பகுதியல் கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்கு தேவைப்படும் செலவினத்தின் மிகச் சிறந்த மதிப்பீட்டில் அளவிடப்படுவதுடன், பொறுப்புக்கான குறிக்கப்பட்ட இடர்கள் மற்றும் பணத்தின் காலப் பெறுமதி மீதான நடைமுறைச் சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கக் கூடிய வரிக்கு முன்பான கழிவு வீதத்தினைப் பயன்படுத்தி அவற்றின் நடப்புப் பெறுமதிக்கு கழிவீடு செய்யப்படும்.

சட்டரீதியான கோரல்களுக்கான ஏற்பாடுகள், கடந்த கால நிகழ்வுகளின் விளைவாகக் கம்பனி தற்போதைய சட்டரீதியான அல்லது ஆக்கபூர்வமான கடப்பாட்டினைக் கொண்டுள்ள போது இனங்காணப்படும், பொருளாதார நலன்களின் மாற்றம் கடப்பாடுகளைத் தீர்ப்பதற்கு தேவைப்படும் என்பதும் தொகை நம்பகமான முறையில் மதிப்பீடு செய்யப்படலாம் என்பதும் சாத்தியமாகின்றது.

ஏற்பாடுகளானது பொறுப்புக்கான குறிக்கப்பட்ட இடர்கள் மற்றும் பணத்தின் காலப் பெறுமதி மீதான நடைமுறை மதிப்பீட்டினைப் பிரதிபலிக்கும் வரிக்கு முன்பான கழிவு வீதத்தினைப் பயன்படுத்தி கடப்பாட்டினைத் தீர்ப்பதற்குத் தேவையான எதிர்காலத் தொகையின் தற்போதைய பெறுமதியில் அளவிடப்படும். காலஎல்லை காரணமாக ஏற்பாட்டில் அதிகரிப்பானது வட்டிச் செலவினமாக இனங்காணக்கட்டுள்ளது.

## 2.15 வியாபாரம் மற்றும் வருமதிகள்

பெரும்பாலான விற்பனைகள் சாதாரண கடன் விதிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன, மற்றும் கிடைப்பனவுகள் வட்டியைக் கொண்டிருப்பதில்லை. சாதாரண கடன் விதிகளுக்கு அப்பால் கடன் நீடிக்கப்பட்டால், வருமதிகள் பயனுறுதிமிக்க வட்டி முறைமையினைப் பயன்படுத்தி கடன்கழிப்புச் செலவில் அளவிடப்படும். ஒவ்வொரு அறிக்கையிடும் இறுதிக் காலத்திலும், தொகைகள் மீட்கமுடியாதவை என்ற ஏதேனும் புறநிலை ஆதாரம் இருக்கின்றதா எனத் தீர்மனிப்பதற்கு வியாபாரம் மற்றும் ஏனைய வருமதிகளின் காவுகைத் தொகைகள் மீளாய்வு செய்ப்படும். அவ்வாறெனின், மதிப்பிழப்பு நட்டம் உடனடியாக இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படும்.

## 2.16 வியாபாரச் செலுத்தவேண்டியவை

சாதாரண கடன் விதிகளின் அடிப்படை மீதான கடப்பாடுகள் வியாபாரச் செலுத்த வேண்டியவை ஆகும், மற்றும் வட்டியைக் கொண்டிருப்பதில்லை. வெளியநாட்டு நாணயத்தில் குறிக்கப்படும் வியாபாரச் செலுத்த வேண்டியவை அறிக்கையிடும் திகதியில் பரிமாற்ற வீதத்தைப் பயன்படுத்தி இலங்கை ரூபாவிற்கு மாற்றப்படும். வெளிநாட்டு பரிமாற்ற ஆதாயங்கள் அல்லது இழப்புக்கள் ஏனைய வருடானங்கள் அல்லது ஏனைய செலவினங்களில் உள்ளடக்கப்படும்.

## 2.17 காசும் காசுக்கு சமமானவையும்

பெறுமதியில் உள்ள மாற்றங்களின் முக்கியமற்ற இடருக்கு ஆளாதல் மற்றும் காசின் அறியப்பட்ட தொகைகளுக்கு உடனடியாக மாற்றக்கூடியவை, குறுங்கால உயர் திரவ முதலீடுகள், கேள்வி வைப்புக்கள் மற்றும் கையிலுள்ள காசு என்பன காசும் காசுக்கு சமமானவையும் ஆகும்.

காசுப்பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக காசும் காசுக்கு சமமானவையும் கையிலுள்ள காசு, வங்கிகளிலுள்ள வைப்புக்கள் தேறிய நிலுவையிலுள்ள வங்கி மேலதிகப்பற்றுக்கள் என்பவற்றைக் கொண்டுள்ளன. குறுகிய முதிர்வுகளுடனான முதலீகள் அதாவது மூன்று மாதங்கள் அல்லது கையகப்படுத்திய திகதியில் இருந்து அதற்கு குறைவானவையும் காசுக்கு சமமானவையாகக் கணிக்கப்படுகின்றன.

## 2.18 கொடைகள் மற்றும் மானியங்கள்

சபையினால் சொத்துக்களுக்கு ஏற்புடைய நிதிக் கொடைகள் செலவாக அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, அவை நிதி நிலமை அறிக்கைகளில் பிற்போடப்பட்டு சொத்துக்களின் பிரயோசனம் மிக்க ஆயுட்காலம் முழுவதும் விஸ்தீரண வருமானக் கூற்றுக்கு வரவு வைக்கப்படும்.

கிடைக்கப்பெற்ற கொடைகளின் விஸ்தீரண வருமானக் கூற்றில் பின்வருமாறு கடன் கழிப்புச் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கணினி மென்பொருள் | 33.33% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |

கொடைகள் கிடைக்கும் என்ற மற்றும் அனைத்து அதனுடன் தொடர்புடைய நிபந்தனைகளுக்கு உட்பட்டதென நியாயமான சான்றிதழ் உள்ள போது கொடைகள் அடையாளம் காணப்படும். கொடை செலவின விவரக் கூற்றுக்கு ஏற்புடையதாக உள்ள போது அதனை நட்டஈடாக வழங்குவதற்கு உத்தேசிக்கும் செலவுக்கு ஒழுங்கு முறையில் கொடையை செம்மையாக்கல் செய்வதற்கு தேவையான மொத்தக் காலப்பகுதிக்கும் வருமானமொன்றாக அடையாளம் காணப்படும். கொடை சொத்தாக இருக்கும் போது அது ஏற்புடைய சொத்தின் உத்தேச பயன்பாட்டு ஆயுட் காலம் முழுவதும் பிற்போடப்பட்ட வருமானமாக கருதப்படும். சபைக்கு பணம் அல்லாத கொடைகள் கிடைக்கப்பெறும் போது சொத்து மற்றும் அந்தக் கொடை பெயரளவில் குறிக்கப்பட்டு பின்வருமாறு சமமான வருடாந்த தவணைகளில் ஏற்புடைய சொத்துக்களின் உத்தேச பயன்பாட்டு ஆயுட்காலம் முழுவதும் வருமானக் கூற்றில் குறிப்பிடப்படும்.

கிடைக்கப்பெறும் கொடைகள், கையிருப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்டு பின்வருமாறு வருமானக் கூற்றில் கடன்கழிப்புச் செய்யப்படும்.

| | |
|---|---|
| அயடீன் ஆலைக்கான கொடை | 10% |
| மோட்டார் வாகனத்திற்கான கொடை | 10% |
| கட்டிடங்களுக்கான கொடை | 2.5% |
| நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான கொடை | 2.5% |

ஊழியர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கான கொடை — வழங்கப்படும் நட்டஈட்டிலிருந்து கழிப்பனவு செய்தல்.

## 2.19 சொத்துக்களின் பெறுமதி இழப்பு

### 2.19.1 நிதிச் சொத்துக்களின் பெறுமதி இழப்பு

SLFRS 9 இன் பிரகாரம் கடன் பத்திர முதலீடுகள் மற்றும் பிற நிதிக் கருவிகளுக்கு எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளுக்கான கொடுப்பனவை சபை பதிவு செய்கின்றது.

**முன்னோக்கிய காட்சிகளை இணைத்தல்**

ஏற்படும் இழப்பு மாதிரிக்கு மாறாக SLFRS 9 அறிமுகப்படுத்திய ECL மாதிரியின் கீழ் எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் இழப்புகள் மதிப்பிடப்பட வேண்டும். இதற்கு முன்னோக்கி பார்க்கும் பேரினப் - பொருளாதார தரவு மற்றும் நிறுவனத்துடன் நேரடியாக தொடர்பில்லாத அனுமானங்களைப் பயன்படுத்தல் வேண்டும். இது பொருளாதார காரணியை சீராக்குவதன் மூலம் குறைபாடுடைய கணக்கீட்டில் இணைக்கப்பட்டுள்ளது.

**கடன் பத்திரங்களில் முதலீடுகளுக்கான குறைபாடு அணுகுமுறை (FVTPL தவிர)**

வெளிப்புறக் கடன் மதிப்பீட்டுத் தரவுகளை விதிகளை நிறுவுவதற்குப் பயன்படுத்தலாம். மேலும் கடன் மதிப்பீட்டின் சரிவு, வெளியிடப்பட்ட நிதிகள் மற்றும் பிற தகவல்கள் கடன் அபாயத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புகளை மதிப்பிடுவதற்கு மதிப்பாய்வு செய்யப்படல் வேண்டும். மேலும், கருவிகள் முதலீட்டு தரத்தில் இருக்குமிடத்து மற்றும் வாழ்நாள் முழுவதும் வழங்குவதற்கு ஏதேனும் ஏற்பாடுகள் இருப்பின் வெளிப்புற மதிப்பீட்டுத் தரவு இல்லாத நிலையிலும் ECL ஐ நிறுவுவதற்கு கட்டமைப்பு முறைகள் / கடன் பரவல் / கடன் மதிப்பெண்கள் என்பவற்றைப் பயன்படுத்தி இயல்புநிலை விகிதங்கள் நிறுவப்படல் வேண்டும்.

**ECL இன் அடிப்படை கூறுகள்**

- **இயல்புநிலையின் நிகழ்தகவை மதிப்பிடுதல்**
  கடன் பத்திரங்கள், நிலையான வைப்புத் தொகைகள் மற்றும் கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளுக்கான வரலாற்று இயல்புநிலை தரவுகள் கிடைக்காத போது ஶ்ரீ உலகத் தரநிலைகளை வெளியிட்ட வெளிப்புற உலகளாவிய இயல்புநிலை விகிதங்கள், 2018 ஆண்டு உலகளாவிய ஒன்றிணைந்த இயல்புநிலை ஆய்வு மற்றும் மதிப்பீட்டு மாற்றங்கள் குறித்த அறிக்கையில் பயன்படுத்தப்பட்டன.

- **வழங்கப்பட்ட இயல்புநிலை இழப்பை மதிப்பிடுதல் (LGD)**
  SLFRS 9 ஐ ஏற்றுக்கொள்வது தொடர்பாக உரிமம் பெற்ற வங்கிகளுக்கு இலங்கை மத்திய வங்கியின் வங்கிகள் மேற்பார்வைத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்.
  உரிமம் பெற்ற வங்கி தரவு அல்லது உள்ளீடுகள் இல்லாத காரணத்தால் LGD களைக் கணக்கிட முடியாதபோது,

அத்தகைய வெளிப்பாடுகளுக்கு அத்தகைய வங்கி குறைந்தபட்சம் 45% LGD ஐப் பயன்படுத்த வேண்டும். எனவே, குறைபாட்டைக் கணக்கிடுவதில் கடன் பத்திரங்கள் மற்றும் நிலையான வைப்புகளுக்கு 45% LGD பயன்படுத்தப்பட்டது.

- **இயல்புநிலையில் வெளிப்பாட்டைக் கணித்தல் (EAD)**

  நிறுவனம் கடன் அபாயத்திற்கு ஆளாகும் காலப்பகுதியில் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு அளவிடப்படுகிறது. EAD என்பது கடன் அபாயத்திற்கு வெளிப்படும் குறிப்பிட்ட நிதிக் கருவியில் முதலீடு செய்யப்படும் பணத்தின் அளவாகும்.

  2019 ஜனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் நிதியானது அதன் கடன் கருவிகளுடன் தொடர்புடைய எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளை (ECL) எதிர்நோக்கும் அடிப்படையில் மதிப்பிடுகின்றது. கடன் அபாயத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதைப் பொறுத்து பயன்படுத்தப்படும் குறைபாடு முறைமை தீர்மானிக்கப்படும்.

  FVTPL இல் அளவிடப்படாத பின்வரும் நிதிக் கருவிகளில் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புக்கான (ECL) இழப்புக் கொடுப்பனவுகளை சபை அங்கீகரிக்கின்றது:

  - மேற்கோள் - கடன் பத்திரம்
  - நிலையான வைப்புக்கள்
  - SMIB உடன் திட்டக் கடன் வைப்பு
  - NDB உடன் திட்டக் கடன் வைப்பு

### 2.19.2 நிதிசாரா சொத்துக்களின் பெறுமானத் தேய்வு

ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியிலும் சபை சொத்தொன்று பெறுமதி இழக்கக் கூடிய அறிகுறிகள் உள்ளதா என மதிப்பீடு செய்யும். ஏதேனும் அறிகுறி இருப்பின், அல்லது ஒரு சொத்திற்கான வருடாந்த பெறுமதி இழப்பு பரிசோதனை தேவைப்படும் போது, சொத்தின் மீளப் பெறக் கூடிய தொகையினை சபை கணிப்பீடு செய்யும். சொத்தொன்றின் மீளப் பெறக்கூடிய தொகையானது, விற்பனைச் செலவுகள் மற்றும் பாவனையில் உள்ள அதன் பெறுமதியைக் கழித்து வரும் ஒரு சொத்தின் கூடிய அல்லது CGU இன் நியாயாமான பெறுமதி ஆகும். ஒரு சொத்தின் அல்லது CGU இன் காவுகைத் தொகை அதன் மீளப் பெறக்கூடிய தொகையை விட அதிகரிக்கும் போது சொத்து பெறுமதி இழந்ததாகக் கருதப்படுவதுடன், அதன் மீளப் பெறக் கூடிய தொகையில் பதிவு செய்யப்படும்.

பாவனையில் உள்ள விலை மதிப்பீட்டுப் பெறுமதியில், மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள், சொத்திற்கான குறிக்கப்பட்ட இடர்கள் மற்றும் பணத்தின் காலப் பெறுமதி மீதான நடைமுறைச் சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கக் கூடிய வரிக்கு முன்பான தள்ளுபடி வீதத்தினைப் பயன்படுத்தி அவற்றின் நடப்புப் பெறுமதிக்கு தள்ளுபடி செய்யப்படும். விற்பனைச் செலவினங்களைக் கழித்த நியாயமான பெறுமதியினைத் தீர்மானிக்கையில், பொருத்தமான மதிப்பீட்டு மாதிரி ஒன்று பிரயோகிக்கப்படும். இம்மதிப்பீடுகள் பன்மடங்கு மதிப்பீடு மற்றும் பகிரங்கமாக வர்த்தகம் செய்யப்பட்ட கம்பனிகளுக்கான குறிக்கப்பட்ட பங்கு விலைகள் அல்லது ஏனைய கிடைக்கக் கூடிய நியாயமான பெறுமதி குறிகாட்டிகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

சொத்துக்களுக்கு, முன்னர் இனங்காணப்பட்ட பெறுமதி இழப்பு நட்டங்கள் இனிமேலும் இல்லை அல்லது குறைந்துள்ளது என ஏதேனும் குறிகாட்டி உள்ளதா என ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியிலும் மதிப்பீடு மேற்கொள்ளப்படும். அவ்வாறான குறிகாட்டி காணப்படின், சொத்தின் அல்லது CGU இன் மீளப் பெறக்கூடிய தொகையினை சபை மதிப்பீடு செய்யும். இறுதிப் பெறுமதி இழப்பு நட்டம் இனங்காணப்பட்டதிலிருந்து சொத்தின் மீளப் பெறக்கூடிய தொகையினைத் தீர்மானிப்பதற்கு பயன்படுத்திய எடுகோள்களில் மாற்றம் ஏற்பட்டிருந்தாலேயே முன்னர் இனங்காணப்பட்ட பெறுமதி இழப்பு நட்டம் திருப்பப்படும். திருப்புதலானது சொத்தின் காவுகைத் தொகை அதன் மீளப் பெறக்கூடிய தொகையை விட அதிகரிக்கவோ தீர்மானிக்கப்பட்ட காவுகைத் தொகை அதிகரிக்கவோ மாட்டாது என்ற விதத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. தேறிய பெறுமானத் தேய்வு கடந்த வருடங்களில் இனங்காணப்பட்டுள்ள பெறுமதி இழப்பு நட்டத்தினைக் கொண்டதில்லை. அவ்வாறான திருப்புகை வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

## 2.20 கணக்கியற் கொள்கைகளில் மாற்றங்கள்

### 2.20.1 முதலீட்டுச் சொத்தின் மதிப்பீடு

தாபனம் அதன் முதலீட்டுச் சொத்துக்களுக்கான நியாயமான பெறுமதியினை தீர்மானிப்பதற்காக வெளிவாரி மதிப்பீட்டாளரால் மேற்கொள்ளப்படும் விலை மதிப்பீடுகளைப் பெறுகின்றது. இவ்விலை மதிப்பீடுகள் எதிர்கால வாடகை வருமானம், எதிர்பார்க்கப்படும் பராமரிப்புச் செலவினங்கள், எதிர்கால அபிவிருத்திச் செலவினங்கள் பொருத்தமான

கழிவீட்டு வீதம் ஆகியவை உட்பட எடுகோள்களின் அடிப்படையில் அமையும். விலை மதிப்பீட்டாளர் அதற்கு ஒத்த சொத்துக்களின் கொடுக்கல் வாங்கல் விலைகளின் சந்தை ஆதாரத்தினை மேற்கோளாக எடுப்பார்.

**2.20.2 நிதிசார் சாதனங்களின் சாதாரணப் பெறுமதி**

தாபனம் விலை மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்தி விலை குறிக்கப்படாத நிதிசார் சாதனங்களின் நியாயமான பெறுமதியினைத் தீர்மானிக்கும். கழிவீட்டு வீதங்கள் மற்றும் எதிர்கால காசுப் பாய்ச்சல் மீதான மதிப்பீடுகள் உட்பட பயன்படுத்தப்பட்ட எடுகோள்களால் அந்நுட்பங்கள் குறிப்பிடத்தக்களவில் பாதிக்கப்படலாம். அவ்வகையில், சாராத சந்தைகளுடன் ஒப்பீடு செய்வதால் வழிவந்த நியாயமான பெறுமதி மதிப்பீடுகள் எப்போதும் உறுதிப்படுத்த முடியாது போவதுடன், பல சந்தர்ப்பங்களில், உடனடியாக பணமாக்க இயலாத நிலை ஏற்படக் கூடும்.

**2.20.3 சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் கருவிகளுககான பயன்தரு ஆயுட்காலம் மற்றும் மீதிப் பெறுமதிகள் ஏற்றதாக இருத்தல்.**

தாபனம் ஆயுட்காலம் மற்றும் மீதிப் பெறுமதி மதிப்பீடுகள் என்பன அதன் கணக்கியற் கொள்கைக்கு இணங்குவதாக உள்ளனவா என வருடாந்தம் பரிசீலிக்கும்.

**2.21.4 வியாபார இணைப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கு உட்படாத உறவுகளை ஈட்டிக்கொள்ளல்**

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை 1997 ஆம் ஆண்டு வரையறுக்கப்பட்ட இலங்கை உப்புக் கம்பனியின் பங்குகளிலிருந்து 90% ஆன அளவு ஈட்டிக்கொள்ளப்பட்டுள்ளது. அதன் மூலம் பெறப்பட்ட நற்பெயரின் பெறுமதி ரூ. 378,926,440.00 ஆக கணக்கிட்டு அவ்வாறு அந்தப் பங்குகள் ஈட்டப்பட்ட திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் கணக்கீட்டுப் பரீட்சயங்களின் மீது ஏற்புடைய ஈட்டப்பட்ட தினத்திலிருந்து ஆரம்பிக்கும் 05 வருட காலத்திற்குள் அந்தப் பங்குகளின் பெறுமதி குறைவடைவதாக உணரப்பட்டுள்ளது.

இந்த வியாபார இணைவுகள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| | குழுமம் | |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| பொறுப்பளிக்கப்பட்ட கிடைத்த தொகை<br>அடையாளம் காணப்பட்ட தேறிய சொத்துக்களில் | | 470,960,938 |
| ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதியில் சமவிகித பங்கு | 31,500,000 | |
| வெளியிடப்பட்ட மூலதனம் ஒதுக்குகள் | 60,534,498 | 92,034,498 |
| **நற்பெயர்** | | **378,926,440** |

நற்பெயர் பூரணமாக குறைவு செய்யப்பட்டிருந்ததனால் மீளாய்வுக்கு உட்படும் ஆண்டுக்குள் இரண்டு கணக்குகளுக்காகவும் சீறாக்கங்கள் எதுவும் செய்யப்படவில்லை.

## 3 அங்கததவர் நிதியத்திற்கான சீராக்கங்கள்

### 3.1 2023 அங்கத்துவ நிதியத்திற்கான செம்மையாக்கல்

| | ரூ. |
|---|---|
| நலன் மீளளிப்பு கொடுப்பனவு (காசோலைகள்) | 317,515.78 |
| நலன் மீளளிப்பு கொடுப்பனவு (பத்திரங்கள்) | 4,704,564.75 |
| இணக்கம் செய்யப்பட்ட பங்களிப்புத் தொகை | 515,783.56 |
| செலுத்தப்பட்ட பங்களிப்புத் தொகை மற்றும் மேலதிக கட்டணம் | 5,233,440.76 |
| மீண்டும் கிடைக்கப்பெற்ற நலன்கள் (காசோலைகள்) | 77,945.05 |
| மிகையாக செலுத்தப்பட்ட மீளளிப்பு | (2,711,786.06) |
| செலுத்தப்பட்ட பங்களிப்புத் தொகைகளுக்கான மேலதிகக் கட்டணம் | (2,794,256.11) |
| நலன்களை மீளளித்தல் (பத்திரங்கள்) | (7,141.68) |
| **மொத்தம்** | **5,336,066.05** |

| | | குறிப்பு | குழுமம் | | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2023 | 2022 | 2023 | 2022 |
| | | | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| **4** | **வட்டி வருமானம்** | | | | | |
| | முதிர்ச்சிக்கு விடப்பட்ட நிதிசாரா முதலீடுகள் | 4.1 | 64,834,198 | 46,442,799 | 64,380,505 | 46,316,209 |
| | | | **64,834,198** | **46,442,799** | **64,380,505** | **46,316,209** |
| **4.1** | **முதிர்ச்சிக்கு விடப்பட்ட நிதிசாரா முதலீடுகள்** | | | | | |
| | நிலையான வைப்பு மீதான வட்டி | | 563,082 | 243,624 | 113,593 | 119,880 |
| | தொகுதிக்கடன மூலம் மீதான வட்டி | | 868,109 | 948,986 | 868,109 | 948,986 |
| | திறைசேரி முறி மீதான நலன் | | 54,641,660 | 42,701,855 | 54,641,660 | 42,701,855 |
| | திறைசேரி உண்டியல்கள் மீதான எல்லைகள் | | 8,260,737 | 2,017,212 | 8,260,737 | 2,017,212 |
| | மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் மீதான வட்டி | | 403,480 | 430,393 | 403,480 | 430,393 |
| | பணச் சந்தை மீதான வட்டி | | 4,588 | 4,080 | 4,588 | 4,080 |
| | வியன வீட்டுக் கடன் மீதான வட்டி | | 60,136 | 71,527 | 60,136 | 71,527 |
| | SMIB வீட்டுக் கடன் திட்ட வைப்புக்கள் மீதான வட்டி | | 8,940 | 9,440 | 8,940 | 9,440 |
| | SMIB சேமிப்பு கணக்கு | | 489 | 398 | 489 | 398 |
| | **ஊழியர் கடன்கள்** | | | | | |
| | விசேட கடன் மீதான வட்டி | | 1,103 | 598 | 1,103 | 598 |
| | வாகனக் கடன் மீதான வட்டி | | 8,469 | 5,550 | 8,469 | 5,550 |
| | விசேட இடர்பாட்டுக் கடன் மீதான வட்டி | | 13,184 | 8,741 | 8,980 | 5,896 |
| | விசேட உற்சவக் கடன் மீதான வட்டி | | 219 | 180 | 219 | 180 |
| | விசேட முற்பணக் கடன் மீதான வட்டி | | 1 | 215 | 1 | 215 |
| | | | **64,834,198** | **46,442,799** | **64,380,505** | **46,316,209** |
| **5** | **தேறிய வியாபார வருமானம்** | | | | | |
| | தேறிய வருவாய் | | 4,022,659 | 2,652,579 | - | - |
| | (-) விற்பனைச் செலவு | | (1,873,746) | (1,355,717) | - | - |
| | | | **2,148,913** | **1,296,862** | **-** | **-** |
| **5.1** | **தேறிய வருவாய்** | | | | | |
| | மொத்த வருவாய் | | 4,626,058 | 2,983,285 | - | - |
| | (-) பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் நாட்டைக் கட்டியெழுப்பல் வரி | | (603,399) | (330,707) | - | - |
| | | | **4,022,659** | **2,652,579** | **-** | **-** |
| **6** | **பங்கிலாப வருமானம்** | | | | | |
| | பங்குகள் மீதான பங்கிலாபம் - பட்டியலிடப்பட்ட | | 894,331 | 722,744 | 894,331 | 722,744 |
| | பங்குகள் மீதான பங்கிலாபம் - பட்டியலிடப்படாத | | 315,000 | 14,175 | 315,000 | 14,175 |
| | | | **1,209,331** | **736,919** | **1,209,331** | **736,919** |
| **7** | **நட்டம் / இலாபத்தின் ஊடாக சாதாரண பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் மீதான ஆதாயம் / இழப்பு** | | | | | |
| | நடப்புப் பங்கு வியாபார இலாபம் | | 324,878 | 23,677 | 324,878 | 23,677 |
| | பங்குகளின் சாதாரணப் பெறுமதி சீராக்கம் | | 1,203,482 | (1,399,459) | 1,203,482 | (1,399,459) |
| | | | **1,528,360** | **(1,375,782)** | **1,528,360** | **(1,375,782)** |

| | | குறிப்பு | குழுமம் | | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2023 | 2022 | 2023 | 2022 |
| | | | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| **8** | **ஏனைய வருமானம்** | | | | | |
| | மானியங்களின் கடன்கழிப்பு | | 4,535 | 3,969 | 2,823 | 2,256 |
| | வாடகை வருமானம் | | 1,917 | 1,900 | 300 | 363 |
| | தளபாடங்கள் மற்றும் கருவிகள் விற்பனை மீது இலாபம் | | 4,380 | 1,544 | 4,380 | 105 |
| | மிகைஅறிவீடுகள் | | 598,028 | 373,436 | 598,028 | 373,436 |
| | பணிக்குழாத்தினர் கடன் வருமானம் | | 34,151 | 26,531 | 34,151 | 26,531 |
| | நானாவித வருமானங்கள் | | 59,338 | 15,391 | 847 | 5,790 |
| | வாகனத் தரிப்பிடம் மீதான இலாபம் / நட்டம் (நவம் மாவத்தை) | | 37,568 | 38,926 | 37,568 | 38,926 |
| | விடுமுறை பங்களா மீதான இலாபம் / நட்டம் | | (3,614) | (2,813) | (3,614) | (2,813) |
| | போக்குவரத்து மீள அறவீடு | | 20,618 | 15,015 | - | - |
| | | | **756,921** | **473,899** | **674,482** | **444,592** |
| | | | | | | |
| **9** | **ஆளணி செலவினங்கள்** | | | | | |
| | ஊதியங்கள் மற்றும் சம்பளங்கள் | 9.1 | 778,965 | 794,868 | 699,730 | 732,254 |
| | குறுங்கால நாணய மற்றும் நாணமற்ற நலன்கள் | 9.2 | 987,436 | 698,484 | 461,419 | 472,424 |
| | நிலையான நலன் திட்டங்கள் | 9.3 | 51,463 | 72,895 | 48,334 | 70,890 |
| | ஏனைய நீண்ட கால ஊழியர் நலன்கள் | 9.4 | 121,797 | 124,025 | 114,623 | 116,786 |
| | | | **1,939,661** | **1,690,272** | **1,324,106** | **1,392,354** |
| | | | | | | |
| **9.1** | **ஊதியங்கள் மற்றும் சம்பளங்கள்** | | | | | |
| | **ஊழியர் செலவினங்கள் (பணிப்பாளர் கட்டணங்கள் உட்பட)** | | | | | |
| | சம்பளங்கள் | | 634,934 | 655,532 | 562,996 | 598,118 |
| | பணிப்பாளர் கட்டணங்கள் | | 3,367 | 3,157 | 1,817 | 1,569 |
| | வாழ்வாதாரக் கொடுப்பனவு | | 82,437 | 87,785 | 82,437 | 87,785 |
| | உணவுக் கொடுப்பனவு | | 12,898 | 13,649 | 12,898 | 13,649 |
| | மேலதிக நேரம் | | 33,164 | 25,200 | 27,417 | 21,587 |
| | விடுமுறைக் கொடுப்பனவு | | 12,165 | 9,546 | 12,165 | 9,546 |
| | | | **778,965** | **794,868** | **699,730** | **732,254** |
| | | | | | | |
| **9.2** | **குறுங்கால நாணய மற்றும் நாணமற்ற நலன்கள்** | | | | | |
| | பயிற்சி மற்றும் அபிவிருத்திச் செலவினங்கள் | | 6,647 | 4,215 | 6,163 | 4,215 |
| | ஆட்சேர்ப்பு செலவினங்கள் | | 405 | - | 405 | - |
| | பணிக்குழாத்தினர் நலன்புரி | | 71,168 | 57,961 | 41,454 | 37,285 |
| | ஊக்குவிப்புக்கள் | | 132,183 | 137,707 | 131,941 | 137,573 |
| | பெற்றுக்கொள்ளாத விடுமுறைக்கான கொடுப்பனவு | | 28,144 | 33,775 | 28,144 | 33,775 |
| | மிகை ஊதியம் | | 575,964 | 307,984 | 80,801 | 103,408 |
| | வைத்தியச் செலவுகளை மீளப் பெறுதல் | | 128,612 | 120,385 | 128,197 | 119,713 |
| | பணிக்குழாத்தினர் கடன் செலவு | | 34,151 | 26,531 | 34,151 | 26,531 |
| | வீடமைப்புக் கடன் மீதான வட்டி | | 8,963 | 9,805 | 8,963 | 9,805 |
| | ஊழியர் விபத்துக் கொடுப்பனவு | | 1,200 | 120 | 1,200 | 120 |
| | | | **987,436** | **698,484** | **461,419** | **472,424** |

| | | குறிப்பு | குழுமம் | | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2023 | 2022 | 2023 | 2022 |
| | | | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| **9.3** | **நிலையான நலன் திட்டங்கள்** | | | | | |
| | வட்டிச் செலவு | | 38,786 | 24,872 | 38,786 | 24,872 |
| | தற்போதைய சேவைச் செலவு | | 12,677 | 48,023 | 9,548 | 46,018 |
| | | | **51,463** | **72,895** | **48,334** | **70,890** |
| **9.4** | **ஏனைய நீண்ட கால ஊழியர் நலன்கள்** | | | | | |
| | E.P.F. சபையின் பங்களிப்பு | | 101,205 | 103,040 | 95,466 | 97,249 |
| | E.T.F. சபையின் பங்களிப்பு | | 20,592 | 20,898 | 19,157 | 19,450 |
| | ஓய்வூதிய நிதிப் பங்களிப்பு | | - | 88 | - | 88 |
| | | | **121,797** | **124,025** | **114,623** | **116,786** |
| **10** | **நிர்வாகச் செலவினங்கள்** | | | | | |
| | கட்டட வாடகை | | 170,354 | 161,497 | 160,535 | 145,347 |
| | வரிப்பணம் | | 598 | 614 | - | 16 |
| | குத்தகைக் கூலி - காணி | | 1,080 | - | 1,080 | - |
| | மின்சாரக் கட்டணங்கள் | | 49,341 | 24,002 | 33,943 | 15,535 |
| | தொலைபேசிக் கட்டணங்கள் | | 10,236 | 10,539 | 8,422 | 9,047 |
| | நீர்க் கட்டணங்கள் | | 2,281 | 1,212 | 2,281 | 1,212 |
| | ஆலோசகர் கட்டணங்கள் | | 5,634 | 6,248 | 554 | 748 |
| | கணக்காய்வு கட்டணங்கள் | | 3,309 | 3,133 | 1,722 | 1,849 |
| | பாதுகாப்பு கட்டணங்கள் | | 4,643 | 4,837 | 4,643 | 4,837 |
| | சட்ட கட்டணங்கள் | | 4,308 | 876 | 1,779 | 528 |
| | வாடகை கட்டணங்கள் | | 898 | 4,199 | 898 | 4,199 |
| | செயலகச் செலவினங்கள் | | 80 | 120 | 80 | 120 |
| | தபால் மற்றும் தந்திகள் -நிர்வாகம் | | 2,905 | 2,078 | 2,139 | 1,532 |
| | பயணம் மற்றும் பிழைப்பூதியம் -நிர்வாகம் | | 1,662 | 252 | 1,662 | 252 |
| | அச்சிடல் மற்றும் காகிதாதிகள் -நிர்வாகம் | | 4,963 | 3,282 | 4,674 | 2,840 |
| | ஊடகம் மற்றும் விளம்பரம் -நிர்வாகம் | | 2,753 | 1,499 | - | - |
| | விளம்பரங்கள் மற்றும் பத்திரிகை அறிவித்தல்கள் | | 3,394 | 3,975 | 3,394 | 3,975 |
| | வாகனக் காப்புறுதி மற்றும் அனுமதிப்பத்திர கட்டணங்கள் | | 1,964 | 2,273 | 1,964 | 2,273 |
| | பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் | | 803 | 630 | 611 | 505 |
| | நன்கொடைகள் | | 979 | 72 | - | - |
| | ஏனைய காப்புறுதி | | 144 | 22 | 144 | 22 |
| | அலுவலகப் பராமரிப்பு மற்றும் தேவைகள் | | 4,587 | 3,640 | 221 | 192 |

| | | குறிப்பு | குழுமம் | | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2023 | 2022 | 2023 | 2022 |
| | | | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| | ஊழியர் இழப்பீடுகள் | | 1,173 | 33,445 | - | - |
| | முத்திரைக் கட்டணம் | | 354 | 46 | 354 | 46 |
| | நானாவிதச் செலவினங்கள் | | 8,867 | 5,712 | 8,867 | 5,712 |
| | நுகர்வுப் பொருட்கள் | | 433 | - | 433 | - |
| | ஊழியர் அறவீடுகளை பதிவழிப்புச் செய்தல் | | 152 | 792 | 152 | 792 |
| | வாகனப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு | | 37,495 | 28,037 | 11,573 | 7,294 |
| | எரிபொருள் கட்டணங்கள் | | 22,971 | 17,461 | 22,971 | 17,461 |
| | கட்டடங்களைப் பராமரித்தல் | | 30,141 | 21,449 | 30,141 | 21,449 |
| | இயந்திரங்கள், தளபாடங்கள் மற்றும் கருவிகளைப் பேணுதல் | | 11,353 | 4,632 | 7,526 | 4,510 |
| | | | **389,856** | **346,572** | **312,763** | **252,293** |
| | | | | | | |
| **11** | **நிதிச் செலவினங்கள்** | | | | | |
| | பொறுப்புக் கட்டணம் | | 1,628 | 1,539 | 1,628 | 1,539 |
| | வங்கிக் கட்டணங்கள் | | 2,664 | 2,647 | 2,386 | 2,158 |
| | வட்டிச் செலவினங்கள் | | 93 | 128 | - | - |
| | | | **4,385** | **4,314** | **4,013** | **3,697** |
| | | | | | | |
| **12** | **அங்கத்தவர் செலவினங்கள்** | | | | | |
| | அங்கத்தவர் நலன்கள் | 12.1 | 549,153 | 477,055 | 549,153 | 477,055 |
| | அங்கத்தவர் சேவைகள் | 12.2 | 82,958 | 47,609 | 76,407 | 44,434 |
| | தொழிலநுட்ப சேவைகள் | 12.3 | 78,948 | 53,079 | 78,948 | 53,079 |
| | | | **711,058** | **577,743** | **704,507** | **574,568** |
| | | | | | | |
| **12.1** | **அங்கத்தவர் நலன்கள்** | | | | | |
| | மரண நலன்கள் திட்டம் | | 156,593 | 149,236 | 156,593 | 149,236 |
| | நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் | | 22,799 | 8,762 | 22,799 | 8,762 |
| | கண் வில்லை பதியவைக்கும் திட்டம் | | 7,281 | 4,231 | 7,281 | 4,231 |
| | சிரமசுவ ரெக்கவரண திட்டம் | | 19,758 | 23,477 | 19,758 | 23,477 |
| | இதய சத்திர சிகிச்சைத் திட்டம் | | 141,660 | 98,048 | 141,660 | 98,048 |
| | சிறுநீரக மாற்று சிகிச்சைத் திட்டம் | | 5,112 | 3,646 | 5,112 | 3,646 |
| | ஆண்டு 5 புலமைப் பரிசில் திட்டம் | | 96,734 | 86,670 | 96,734 | 86,670 |
| | உயர்கல்வி புலமைப் பரிசில் திட்டம் | | 99,216 | 102,984 | 99,216 | 102,984 |
2.1.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய சபையின் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இணைந்து செல்கின்றது.

2.1.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (i) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, இந்த அறிக்கையில் 1.2 (அ) அவதானிப்புக்கள் தவிர்ந்த கடந்த ஆண்டில் என்னால் செய்யப்பட்ட சிபாரிசுகள் தவிர்ந்த கடந்த ஆண்டில் என்னால் செய்யப்பட்ட சிபாரிசுகள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சியங்களின் மீது மற்றும் எண்ணிக்கை ரீதியான விடயங்களுக்கு வரையறுத்து பின்வரும் பிரகடனங்களை செய்யுமளவுக்கு எந்தவொரு விடயமும் எனது அவதானிப்புக்கு உட்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய சபையின் ஆளுநர் சபையின் எவரேனும் உறுப்பினர் ஒருவருக்கு சபையுடன் இணைந்து ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சாதாரண வியாபார நிலமைக்கு அப்பால் தொடர்பு உள்ளதென,

2.2.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த ஏதேனும் ஏற்புடைய எழுதப்பட்ட சட்டத்திற்கு அல்லது சபையின் ஆளுநர் சபையினால் வழங்கப்படும் வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைவாக அன்றி செயற்பட்டுள்ளாரென,

| சட்டங்கள்கூகட்டளைகளுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம் | |
| (i) 08 (I) பிரிவு | நிதியாண்டின் இறுதியில் அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளுக்கு வைப்புச் செய்யப்பட்டுள்ள மீதியை அடுத்த வருடம் செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் நிதியத்தின் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் அது தொடர்பில் அறிவிக்க வேண்டியிருப்பினும் சுயதொழில் மற்றும் குடிப்பெயர்வு ஊழியர்களுக்கு 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் இது வரையில் வெளியிடப்படவில்லை. |

| | |
|---|---|
| (ii) 37 (அ) பிரிவு | பங்களிப்புத் தொகைகளுக்கு ஏற்புடைய தவணை அறிக்கையொன்றை வழங்குமாறு சபையினால் வெளியிடப்பட்ட பணிப்பின் பிரகாரம் தொழில் வழங்குநர் ஒருவரால் பணிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பிரிவுக்குள் தவணை அறிக்கைகளை வழங்க வேண்டியிருப்பினும் 2015 முதல் 2022 வரை ஏற்புடையவாறு 3,810 நிறுவனங்களினால் சபைக்கு அனுப்பப்பட்ட ரூ.மில். 262.74 தொகைக்கான தவணை அறிக்கைகள் இது வரையில் சபைக்கு அனுப்பப்படாத காரணத்தினால் அங்கத்தவர்களுக்கு 2024 மார்ச் 06 ஆம் திகதி வரை நிதி பிரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இல. 01/2020 அரச நிதிச் சுற்றறிக்கை பிரிவு 11 | 2022 ஆம் ஆண்டுக்கான பொருள் சுற்றாய்வினால் கண்டறியப்பட்ட குறைபாடுகள் மற்றும் மிகைகள் தொடர்பில் 2023 ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனினும் 2022 ஆம் ஆண்டின் பொருள் சுற்றாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் 100 அலகுகள் மற்றும் மிகை 60 அலகுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

2.2.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, சபையின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்காத வண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென.

2.2.4 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த சபையின் வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் ஏற்புடைய காலப் பிரிவில் ஏற்புடைய சட்ட விதிகளுக்கு அமைய பெறுகை மேற்கொண்டு பயன்படுத்தவில்லையென,

(அ) 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் 11 பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில் சராசரியாக 641 மில்லியன் ரூபா செலவில் செய்யப்பட்ட முதலீடுகளின் பங்குகள் தொடர்பாக 2023 ஆம் ஆண்டிற்கான பங்கிலாப வருமானம் பெறப்படவில்லை. 2015 மற்றும் 2019 முதல் 2023 வரை தொடர்ச்சியான பங்கிலாபம் பெறப்படாத ஒரு நிறுவனமும், 2020 மற்றும் 2021 முதல் 2023 வரை தொடர்ச்சியான பங்கிலாபம் பெறப்படாத தலா இரண்டு நிறுவனங்களும் அதனுள் காணப்பட்டன.

(ஆ) 2023 டிசம்பர் 31 ஆம் திகதிய நிலவரப்படி, 4,705,833 அலகுகளின் செலவினம் 142.6 மில்லியன் ரூபா தொகையை அலகுகளுக்குப் பொறுப்பான நிதியத்தில் செய்யப்பட்ட முதலீடுகளுக்கு பங்கிலாபம் பெறப்படவில்லை. அந்த பொறுப்பு நிதியத்தில் Natuional Equity Fund இல் செய்யப்பட்ட முதலீடுகளுக்கு, 2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை பங்கிலாபம் கிடைக்கப்பெறாத காரணத்தினால் பங்கிலாப வருமானம் அங்கத்தவர்களுக்கு கிடைக்கப்பெறவில்லை.

(இ) 2016 ஆம் ஆண்டில், இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரான்மைக்கும் சபைக்கும் இடையில் நிதி அமைச்சின் நிதி ஏற்பாடுகளின் கீழ், தொழில் வழங்குநர்கள் மற்றும் அங்கத்தவர் கணக்குகள், அங்கத்துவ நிதியை மிகவும் துல்லியமாகவும் நம்பகத்தன்மையுடனும் பேணும் நோக்கிலும் தொழில் வழங்குநர் மற்றும் அங்கத்தவர்களுக்கு மத்தியில் இணையவழி தொடர்பாடல் கட்டமைப்பை ஏற்படுத்தும் பொருட்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தம் கைச்சாத்திடப்பட்டது. கருத்திட்டத்தின் ஆரம்பம் முதல் இப்போது வரை, வன்பொருள் கொள்வனவு மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்காக சபை 183.28 மில்லியன் ரூபாயை செலவிட்டுள்ளது. எனினும், தற்போது கருத்திட்டத்தின் நோக்கங்களை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கும் அமைப்பின் செயல்பாட்டு செயல்முறையை உறுதிப்படுத்தவும் முடியாத நிலையில் காணப்படுகின்றது.

## 03. வேறு விடயங்கள்

(அ) 2022 ஆம் ஆண்டின் இறுதியில், சபையில் பதிவு செய்யப்பட்ட 189,850 தொழில் வழங்குநர்களில் 66 சதவீதம் அல்லது 125,850 பேர் செயலற்ற தொழில் வழங்குநர்களாக காணப்பட்டனர். பதிவுசெய்யப்பட்ட தொழில் வழங்கும் அமைப்புகளை இற்றைப்படுத்துவதற்கு சபையினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போதுமானதாக இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு உரிமைக் கோரப்படாத சாதாரண நலன் கணக்குகளில் காணப்பட்ட 20 வருடங்களுக்கும் மேற்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை 3.83 மில்லியன் ரூபாவாக இருந்ததோடு, ஏற்புடைய அங்கத்தவர்களை இனங்கண்டு இந்தத் தொகையை தீர்ப்பதற்கு இது வரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில், 1,253 பயனாளிகளுக்கு உரிமை கோரப்படாத இறப்புப் நலன்களாக 23.37 மில்லியன் ரூபா செலுத்த வேண்டியிருந்தது. அத்தோடு, 2024 மார்ச் 31 ஆம் திகதிய நிலவரப்படி 1,240 பயனாளிகளுக்கு ஏற்புடைய மீதி 23.043 மில்லியன் ரூபாவாகும். இந்த மீதியில், 07 மற்றும் 28 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியைச் சேர்ந்த 826 பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய இறப்புப் நலன் தொகை 9.9 மில்லியன் ரூபா ஆகும். இந்த நிலுவைத் தொகையை தீர்ப்பதற்கு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(ஈ) 05 வாடகை கட்டிடங்களின் செயற்பாடுகளை நடத்துவது சபையின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள வரும் இருதரப்பு ஊழியர்களுக்கும் சிரமங்களை ஏற்படுத்துவதனால் ஊழியர் சேமலாப நிதியத்துடன் ஒரே இடத்தில் சேவைகளை வழங்குவதற்கான வசதியைக் கருத்தில் கொண்டு 2020 செப்டம்பர் மாதம் முதல், மெஹவர பியஸ கட்டிடத்தின் 5 ஆம் மாடியில் சபை நிறுவப்பட்டு, அதற்காக மாதம் 10.3 மில்லியன் ரூபா வாடகையாக செலுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும், கட்டுபெத்த மற்றும் மஹரகம பிராந்திய அலுவலகங்கள் 2021 டிசம்பர் முதல் 2023 நவம்பர் வரை 3 வருட காலத்திற்கு கட்டுபெத்த மற்றும் மஹரகமவில் வாடகை கட்டிடங்களில் நிறுவப்பட்டு முறையே ரூ.120,000 மற்றும் ரூ.100,000 என்ற அடிப்படையில் வாடகை செலுத்தி கொண்டு நடாத்துவதற்கு நிர்வாகம் ஏற்பாடு செய்திருந்தது. எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 30 ஆம் திகதி முதல் கட்டுபெத்த அலுவலகம் மற்றும் 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் மஹரகம அலுவலகம் அகற்றப்பட்டு மெஹவர பியஸ கட்டிடத்தில் நிறுவப்பட்டதால், சபைக்கு மேலதிகமாக 2.04 மில்லியன் ரூபா கட்டுபெத்த அலுவலகத்திற்கும் மஹரகம அலுவலகத்திற்கு 1.7 மில்லியன் ரூபாவும் செலுத்த வேண்டியிருந்தது.

(உ) பிராந்திய அலுவலகங்களை நடத்துவதற்கு குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட 04 கட்டிடங்களின் ஒப்பந்த காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆனால் 2024 மார்ச் மாதத்திற்குள் ஒப்பந்தத்தின் பதிவு மேற்கொள்ளப்படவில்லை. செல்லுபடியான ஒப்பந்தம் இல்லாமல் இயங்கும் காலத்திற்கான வாடகை 5.26 மில்லியன் ரூபா ஆகும். 2022 ஏப்ரல் முதல் 2023 டிசம்பர் வரை நாரஹென்பிட்டி விசேட பொருளாதார மையத்தில் வாடகை அடிப்படையில் பராமரிக்கப்படும் சபையின் ஆவணக் காப்பகங்களுக்கான முறையான குத்தகை ஒப்பந்தம் சபையினால் செய்யப்படாத நிலையில், அந்தக் காலகட்டத்திற்கான வாடகை நிலுவை 4.06 மில்லியன் ரூபா ஆக காணப்பட்டது.

(ஊ) நவம் மாவத்தையில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான காணியில் இயங்கும் வாகன நிறுத்துமிடத்தில் வாகன நிறுத்துமிட வசதிகளைப் பெறும் வாடிக்கையாளர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள சபை நடவடிக்கை எடுக்காத நிலையில், 2023 டிசம்பர் 31 ஆம் திகதி அந்த வாடிக்கையாளர்களிடமிருந்து 8.096 மில்லியன் ரூபா அறவிட வேண்டியிருந்தது. அதில் 2024 ஜூலை 09 ஆம் திகதி வரை அறவிட வேண்டிய தொகை 3.73 மில்லியன் ரூபாவாகும். இதில், 2017 முதல் 2022 வரை அறவிட வேண்டிய தொகை 1.04 மில்லியன் ரூபா ஆகும். 2016 ஆம் ஆண்டுக்கும் 2023 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியைப் பொறுத்தவரை, ரூ. 912,514 நிலுவைத் தொகை 15 வாடிக்கையாளர்களர்களிடமிருந்து அறவிடப்படவில்லை. அத்தோடு, 38 வாடிக்கையாளர்களுக்கு 2.4 மில்லியன் ரூபா வாடகை நிலுவையில் காணப்பட்டது. இது பெறப்பட்ட பாதுகாப்பு வைப்புத் தொகையை விட அதிகமாக இருந்தது.

(எ) சபையின் செயலூக்கமுள்ள அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு உயர்கல்வி வாய்ப்புகளை மேம்படுத்தும் நோக்கத்திற்காக, ஆண்டுக் 7,000 மாணவர்களுக்கு. தலா ரூ.12,000 வீதம் 172.6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு மீளாய்வுக்கான ஆண்டின் இறுதியில் ஒதுக்கப்பட்டது. இதில் சேர்க்கப்பட்டுள்ள 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் உதவித்தொகை பெற விண்ணப்பித்த 7,383 மாணவர்களுக்கு நிலுவைத் தொகை இன்னும் தீர்க்கப்படவில்லை.

(ஏ) சபையின் ஊழியர்களுக்கான மருத்துவ நலன் திட்டத்தின் கீழ் பட்டியல்களை மீளளிப்புச் செய்யும் பட்சத்தில், இந்தத் திட்டத்திற்காக ஒரு அங்கத்தவரிமிருந்து அறவிடப்படும் தொகை ரூ.30 இலிருந்து ரூ.150 வரை அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில், சபை நூற்றுக்கு 97 மற்றும் 95 சதவீத மருத்துவ செலவினங்களை மீளளிப்புச் செய்வதற்கு சபையினால் வழங்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டில், சபையின் பங்களிப்பு 128.55 மில்லியன் ரூபாவாக இருந்தது. அத்தோடு, அங்கத்தவர்களின் பங்களிப்பு 6.77 மில்லியன் ரூபாவாக இருந்தது. 2023 ஆகஸ்ட் 15 ஆம் திகதி வெளியிடப்பட்ட நிர்வாக மற்றும் மனிதவளப் பிரிவு சுற்றறிக்கை கடிதம் இல 2013/14 மூலம் சாதாரண செலவினங்களை மீளளிப்புச் செய்யும் செயன்முறையின் கீழ் விசேட உபகரணங்கள் மற்றும் சரிசெய்யும் உபகரணச் செலவினங்களுக்கு வைத்தியசாலை

அனுமதிக்கான செலவின் கீழ் மீளளிப்புச் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட போது அதிகபட்ச தொகை தீர்மானிக்கப்படாத காரணத்தினால் 2023 செப்டம்பர் முதல் அந்த உபகரணங்களுக்கு கூடிய பெறுமதி கொண்ட விலைப்பட்டியல்களுக்கு மீளளிப்புச் செய்ய நேரிட்டுள்ளது.

(ஐ) நியதிச் சட்டத்தின்படி, சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி சபையின் தவிசாளர் ஆவார். ஆனால் ஒரு நிதி நிறுவனமாக, சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி அதன் தவிசாளராக இருத்தல் வேண்டுமென்ற ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் பிரிவு 5 (2) ஐ திருத்தியமைக்க வேண்டுமென 2016 ஆகஸ்ட் 26 ஆம் திகதி நடைப்பெற்ற பொது தொழில் முயற்சிகள் குழு கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் அந்தப் பணிகள் நிறைவு செய்யப்படவில்லை.

(ஒ) சபை அரசாங்கப் பிணையங்களில் நிதியங்களை முதலீடு செய்யும் முதல்தர நிறுவனமென்ற போதிலும் பிணையங்களின் ஏலத்தின் போது நேரடியாக விலை மனுக்களை சமர்ப்பிக்கும் வசதி (Direct Bidding Facility) சபையினால் இலங்கை மத்திய வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளவில்லை. 2016 ஆகஸ்ட் 26 ஆம் திகதி நடைப்பெற்ற பொதுத் தொழில் முயற்சிகள் பற்றிய குழுவில் இலங்கை மத்திய வங்கியின் ஆரம்ப வாடிக்கையாளரான (Primary Dealer) என பதிவு செய்யுமாறு கட்டளையிடப்பட்டுள்ளது. 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை.

(ஓ) 2023 டிசம்பர் 31 ஆம் திகதிய நிலவரப்படி, தோட்டக் கம்பனி ஒன்றில் 14.48 சதவீத நிலையான வட்டி விகிதத்தில் 1994 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட 15 மில்லியன் ரூபா கடனீட்டு முதலீட்டிற்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை வட்டித் தொகை 26.29 மில்லியன் ரூபா ஆகும். இது தொடர்பாக, 2023 மார்ச் 27 ஆம் திகதி சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் தலையீட்டில் நடந்த கலந்துரையாடலின் போது, நிலுவைத் தொகையை செலுத்த நடவடிக்கை எடுக்குமாறு பணிக்கப்பட்டது. எனினும், 2024 ஜூன் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு சந்தர்ப்பம் வரையில் அந்தத் தொகை சபைக்கு அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஔ) 2002 ஆம் ஆண்டில் முதிர்ச்சியடையும் ஒரு நிறுவனத்தின் உறுதிமொழித் தாள்களில் முதலீடு செய்யப்பட்ட 12.17 மில்லியன் ரூபா மற்றும் 2007 ஆம் ஆண்டில் முதிர்ச்சியடையும் கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்ட 7.45 மில்லியன் ரூபாவுக்கு அறவிட வேண்டிய வட்டித் தொகை முறையே 15.21 மில்லியன் ரூபா மற்றும் 0.37 மில்லியன் ரூபா ஆகும். 2008 அக்டோபர் 3 ஆம் திகதி மாவட்ட நீதிமன்றம் இந்த நிறுவனத்தை கலைப்பதற்கான உத்தரவுகளை வழங்கியிருந்த போதிலும், 2024 மே 04 ஆம் திகதி வரை இந்தப் பணத்தை மீட்டெடுப்பது குறித்து சபையிடம் குறிப்பிட்ட உறுதிப்படுத்தல் காணப்படவில்லை. இதன் காரணமாக அங்கத்தவர்களுக்கு வழங்க வேண்டிய நலன்கள் குறைந்திருந்தன.

(க) உறுப்பினர் பெயர் மற்றும் செல்லுபடியாகும் அடையாள இலக்கம் இன்றி பராமரிக்கப்படும் 7,566 கணக்குகள் தொடர்பாக 2023 டிசம்பர் 31 ஆம் திகதின்று 41.22 மில்லியன் ரூபா உள்ளது. மேலும் 2015 ஆம் ஆண்டு வரை கணனி அமைப்பில் அடையாளம் காண முடியாத கணக்குகளை கணினி அமைப்பில் மூடிவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென 2024 ஏப்ரல் 29 ஆம் திகதி கணக்காய்வுக்கு தெரிவிக்கப்பட்டது. தெரியவந்துள்ளன. 2024 மே 04 ஆம் திகதி வரையில் இந்தப் பணத்தை அடையாளம்கண்டு உரிய அங்கத்தவர்களின் கணக்கில் வரவு வைக்கப்படவில்லை.

(ச) ஊழியர் சேமலாப நிதியில் உறுப்பினராக சேராமல், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியில் மாத்திரம் பதிவு செய்யும் தொழில் வழங்குநர்களுக்கு AX முதல் XX வரையிலான போலி (Dummy Accounts) கணக்குகளை சபை பராமரிக்கின்றது. மேலும் 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அவ்வாறான 28,994 தொழில் வழங்குநர்களினால் அனுப்பப்பட்ட பங்களிப்புகளின் தொகை 309.97 மில்லியன் ரூபா ஆகும். இதில், 8 ஆண்டுகள் முதல் 41 ஆண்டுகள் வரையிலான மொத்த இருப்பு 209.95 மில்லியன் ரூபா ஆகும். இந்த தற்காலிக கணக்குகளில் (Dummy Accounts) உள்ள பங்களிப்புகளை சரியான தொழில் வழங்குநர் கணக்குகளில் வரவு வைப்பதற்கு பொருத்தமான முறை எதுவும் இதுவரை அறிமுகப்படுத்தப்படவில்லை.

**டபிள்யு.பி.சி.விக்கிரமரத்ன**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# 2023 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பில்

## முகாமைத்துவத்தின் கருத்துக்களை முன்வைத்தல்

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

அ) 1981-2014 வரையிலான காலப்பகுதிக்குரிய வகைப்படுத்தப்படாத பங்களிப்புத் தொகையின் மீதி 13.773 மில்லியன் ரூபா ஆகும். அந்தத் தொகையில் 10 மில்லியனுக்கும் மேற்பட்ட தொகை ஒவ்வொரு தொழில் வழங்குநர் நிறுவனத்திற்கும் வகைப்படுத்த வேண்டிய தொகைகளாகும்.

மேலும் 2015-2022 வரை மேலும் வகைப்படுத்த வேண்டிய தொகை மீதி 503.018 மில்லியன் ரூபா ஆகும். அவ்வாறு வகைப்படுத் முடியாது தொடர்ந்தும் எஞ்சியுள்ள தொகை ஏதேனும் சந்தர்ப்பத்தில் தொழில் வழங்குநரால் வைப்புச் செய்யப்பட வேண்டியஅ ங்கத்தவர்களின் தகவல்களை எமக்கு அனுப்பினால் ஏற்புடைய அங்கத்தவர்களின் கணக்குகளுக்கு வைப்பிலிடுவது தற்போதைய நடைமுறையாகும்.

அங்கத்தவர்களின் பெயர் மற்றும் செல்லுபடியாகும் அடையாள அட்டை இலக்கம் இல்லாத அங்கத்தவர் கணக்குகள் தற்போது கணினி அமைப்பில் முடக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், தொழில் வழங்குநர் அங்கத்தவரின் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும்போதோ அல்லது அங்கத்தவரின் அடையாளத்தை உறுதிப்படுத்தும்போதோ, முடக்கப்பட்ட அங்கத்தவரின் கணக்குத் தகவல் திறக்கப்பட்டு சரியான அங்கத்தவரின் கணக்கில் சேர்க்கப்படும். சரியான அங்கத்தவரின் பெயர் மற்றும் அடையாள இலக்கம் உள்ளடக்கப்பட்டு கணக்குகளை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆ) சபைக்கு அறிவிக்காது தொழில் வழங்குநர்களினால் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்களுக்கு ஏற்புடைய இலக்கம் V 999 மற்றும் V 100 எனும் எதிர்பாரா கணக்கு இரண்டிலும் ரூ. 6,525,131/- மீதி 2023.12.31 ஆம் திகதி காணப்பட்டது.

அந்தத் தொகையில் 1982 ஆம் ஆண்டு முதல் 2006 வரையிலான காலப்பகுதியில் தொழில் வழங்குநர்களினால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் மீதிகளை மாற்றியமைக்க முடியாதவாறு கணனி அமைப்பில் (AS 400) பூட்டப்பட்டுள்ளது.

மேலும், 2020 முதல் 2022 வரையிலான கோவிட் தொற்றுநோய் சூழ்நிலையின் காரணமாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிக்கு நேரடியாகப் பெறப்பட்ட வைப்புத்தொகையின் காரணமாக, 2023.12.31 ஆம் திகதிக்கு அங்கீகரிக்கப்படாத வைப்புத்தொகை ரூ. 389,412/- ஆகும். அந்த கொடுப்பனவுகள் தொடர்பான விவரங்கள் தொழில் வழங்குநர்களால் அவ்வப்போது வழங்கப்பட்டு, சரியான தொழில் வழங்குநர்களைக் கண்டறிந்த பிறகு, சரியான தொழில் வழங்குநர் கணக்குகளில் வைப்புச் செய்யப்படுகின்றது.

இ) மீளாய்வுக்குரிய வருடத்தின் இறுதியில் ஏனைய சொத்துக்களின் நிலுவை வருமானத் தலைப்பின் கீழ் (நிதி நிலமைக் கூற்று இலக்கம் 21.1) முதலீட்டுக்காக கிடைக்க வேண்டிய வட்டி வருமானமான 24.97 மில்லியன் ரூபாவுக்காக நிதியை ஒதுக்கீடு செய்தல் சரியாக செம்மையாக்கல் செய்யப்பட்டுள்ளது.

விபரம் பின்வருமாறு,

| | |
|---|---|
| எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி | 9.39 |
| எம்.பீ.எஸ்.எல். வனிக் | 0.21 |
| வனிக் இன் கோபரேஷன் | 15.00 |
| அரசாங்க வாக்குறுதிப் பத்திரங்கள் | 0.37 |
| **மொத்தம்** | **24.97** |

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 37 பிரகாரம் கிடைக்க வேண்டிய வருமானம் பற்றிய வெளிப்படுத்தல் கணக்கீட்டு குறிப்புக்கள் மூலம் குறிப்பிடுவதற்கு எதிர்வரும் நிதியாண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

ஈ) இந்த நிறுவனத்தின் கடன் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்ட தொகைக்கு 14.48% வருடாந்த வட்டி விகிதத்தில் அரையாண்டுக்கு செலுத்த வேண்டிய கடன் பத்திரங்களின் ஒரு தவணையை மட்டும் செலுத்திய பிறகு நிறுவனம் அதனை தவறிவிட்டது. அதற்கமைய, 2002.12.31 வரை இந்த நிலுவைத் தொகைக்கான வட்டித் தொகை ரூ.17,797,556/16 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிறகு, 2011, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில், திருப்பிச் செலுத்தும் திட்டத்தின் (Repayment Plan) படி தீர்க்கப்பட்ட தொகையை கழித்த பின்னர், வட்டியாக ரூ. 9,391,556/16 தொகை நிதிநிலை அறிக்கையில் 2023.12.31 ஆம் திகதிக்கு காட்டப்பட்டுள்ளது.

எனினும், முதலீட்டுத் துறையில் இந்த நிலுவைத் தொகைகளின் அறிக்கைகள் 2010 ஆம் ஆண்டு வரை அதாவது முதலீடு செய்யப்பட்ட ஆரம்பக் கடன் மூலதனத்தின் இறுதித் தவணையின் தீர்வு வரையிலான காலம் வரையில் கணக்கிடப்பட்டுள்ளன. அதன்படி, தவணைகளில் செலுத்தப்பட்ட மொத்த வட்டியைக் கழித்து, மீதமுள்ள ரூ. 26,293,485/- முதலீட்டுப் பிரிவின் அறிக்கைகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கணக்கீடுகள் முதலீட்டுப் பிரிவினால் 2010 ஆம் ஆண்டு வரை இந்த வட்டி நிலுவைத் தொகைக்காக நிறுவனத்திடம் இருந்து அறவிட முடியுமான அதிகபட்சத் தொகையை அறவிடும் நோக்கத்தில் செய்யப்பட்டுள்ளன.

இந்த வட்டி நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு மேலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதுவரை கணக்கில் காட்டப்பட்ட தொகையை விட அதிகமாக ஏதேனும் தொகை பெறப்பட்டால், அதற்கேற்ப கணக்கு காட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

உ) 2022 மார்ச் 15 ஆம் திகதிய இல. MF1/03/05/05-01 கடிதம் மூலம் நிதி அமைச்சினால் சபைக்கு வழங்கப்பட்ட காரின் விலை 6.8 மில்லியன் ரூபா ஆகும். கார் ஒப்படைக்கப்பட்ட திகதிக்கு காரின் பெறுமதியை உள்ள கணக்குகளில் சேர்ப்பதற்கு விலைமதிப்புச் செய்யப்பட்ட பெறுமதி காணப்படவில்லை. மேலும் அந்த வாகனத்தை காப்புறுதி செய்யும் போது பெறப்பட்ட மதிப்பிடப்பட்ட மதிப்பின் அடிப்படையில் இந்த சொத்து 2023 ஆகஸ்ட் மாதத்தில் கணக்கு வைக்கப்பட்டது. வாகனத்திற்கு மதிப்பிடப்பட்ட பெறுமதி இல்லாததால், இந்தச் சொத்தை கணக்கில் எடுத்துக்கொள்வதற்கு முன் பயன்படுத்திய காலத்திற்கு தேய்மானச் சரிசெய்தல்களைச் செய்ய முடியாதிருந்தது.

**2.2.2** அ) i கணினித் தொகுதியில் காணப்பட்ட தவறுகளை சீர்செய்து 2021இ 2022இ 2023 வருடங்களுக்கான வட்டி மற்றும் பங்கிலாபங்களை உள்ளடக்கி ஏற்புடைய வருடாந்த கணக்கறிக்கையை 2023 ஆம் ஆண்டுக்கு வெளியிடுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ii 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க சட்டத்தின் பிரிவு 37 (அ) இன் கீழ், தொழில் வழங்குநர்கள் காலாண்டு அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும். இதன் மூலம், காலாண்டு அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு தொழில் வழங்குநர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்படும். அத்தோடு, கடைசி நினைவூட்டலை அனுப்பிய பின்னர், இரண்டு வாரத்திற்குள் எங்களுக்கு காலாண்டு அறிக்கைகளை அனுப்பாத தொழில் வழங்குநர்கள் மீது வழக்குத் தொடர பிரிவு 37 (இ) இன் கீழ் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆனால் அவ்வாறான வழக்கை தாக்கல் செய்த பின்னர், தொழில் வழங்குநர்களுக்கு 06 மாத சிறைத்தண்டனை அல்லது ரூ. 1,000/- அபராதம் விதிக்கப்படும். அவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டாலும், காலாண்டு அறிக்கைகளை மீண்டும் பெற்றுக்கொள்ள சட்டத்தில் ஏற்பாடுகள் இல்லை.

தொழில் வழங்குநர்களுக்கு தொலைபேசி அழைப்புகள், கடிதங்கள் அனுப்புதல், களச் சோதனைகள் நடத்துதல், மின்னஞ்சல் மூலம் கடிதங்கள் அனுப்புதல் போன்றவற்றின் மூலம் அவ்வப்போது அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடுசெய்யப்படுகின்றது.

ஆ) 2022 ஆம் ஆண்டு தொடர்பில், வருடாந்த பொருள் சுற்றாய்வில் வெளிப்படுத்தப்பட்ட பற்றாக்குறைகள் மற்றும் மிகுதிகள், தொடர்பில் கணக்காய்வுக் குழுவினால் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் அவதானிப்புகளுடன் கலந்துரையாடப்பட்டது, மேலும் வெளிவரும் உண்மைகளைக் கருத்தில் கொண்டு 2023 பொருள் சுற்றாய்வின் போது நடவடிக்கை எடுக்கப்படும்.

**2.2.4** (அ) 2015 மற்றும் 2019 ஆம் ஆண்டில் இருந்து பங்கிலாபம் பெறாத இரண்டு நிறுவனங்களும் சுற்றுலா ஹோட்டல் துறையைச் சேர்ந்தவை. கடந்த காலத்தில் கோவிட் 19 தொற்றுநோய் மற்றும் அண்மைய ஆண்டுகளில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக, ஹோட்டல் வணிகத் துறை வீழ்ச்சியடைந்தது. 2023 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து, சுற்றுலா வணிகத் துறையில் மீண்டும் வளர்ச்சி காணப்படுவதால் இந்த நிறுவனங்களின் பங்குச் சந்தை விலை தற்போது அதிகரித்துள்ளதால் 2024 ஆம் ஆண்டில் இந்த நிறுவனங்களிடமிருந்து பங்கிலாபம் பெற்றுக்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2023 ஆம் ஆண்டில் பங்கிலாபம் கிடைக்கப்பெறாத கம்பனி இரண்டின் (Dialog மற்றும் Aitken Spence) பங்குகள் விற்பனை செய்யப்பட்டு மூலதன இலாபம் 16.2 மில்லியன் ரூபா உழைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே, 2024 ஆம் ஆண்டின் ஜூன் மாதம் அளவில் 3 கம்பனிகளில் (Dialog, Wind Force, Access) 72.8 மில்லியன் ரூபா பங்கிலாபமாகவும் (Cash Dividends) இன்னுமொரு கம்பனியிலிருந்து 1.06 மில்லியன் ரூபா பங்கிலாபமும் (Script Dividends) வெளியிடப்பட்டுள்ளது.

விபரங்கள் பின்வருமாறு:

| | கம்பனியும் பெயர் | மாதம் | ஒரு பகுதிக்கு பங்கிலாபம் (ரூ) | பங்கிலாபம் மொத்தத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| Cash Dividends | Dialog | ஜுன் | 1.34 | 40,514,373.00<br>25,325,226.00 |
| | Wind Force | பெப்ரவரி | 1 | 6,984,333.00 |
| | Access | பெப்ரவரி | 0.5 | 926,526.50 |
| Scrip Dividends | Peoples Insurance | மே | 0.5 | 1,062,601.00 |

இந்நிறுவனங்களின் பங்குச் சந்தை விலை உண்மையான செலவை விட அதிகமாக இருக்கும் போது, மூலதன ஆதாயங்களைப் பெறுவதற்கு மூலதன ஆதாயத்துடன் விற்கப்படும் என்பதை அன்புடன் குறிப்பிடுகிறேன்.

(ஆ) National Equity Fund அலகுப் பொறுப்புச் சந்தை விலைகள் 2020.12.31 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக உயர் பெறுமானத்தைக் காட்டியுள்ளதோடு, எதிர்காலத்தில் மூலதன இலாபங்களுடன் விற்பனை மற்றும் பங்கிலாபம் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

National Equity Fund அலகுப் பொறுப்புக்களின் சந்தை விலைகள் (2020 – 2023)

| வருடம் | அலகு விலை (ரூ) |
|---|---|
| 2020.12.31 | 31.4972 |
| 2021.12.31 | 39.2032 |
| 2022.12.31 | 32.0678 |
| 2023.12.31 | 34.7683 |

இ) 2023 ஆம் ஆண்டின் இரண்டாவது அரையாண்டில் செயற்படுத்தலை ஏற்கும் அமர்வுகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பின்வரும் விடயங்களினால் அது தடைப்பட்டது.

**i. பிரதான மூன்று (03) மாற்றங்களை அமைப்புடன் நேரடியாக இயங்குவதற்கு முன்னர் பூரணப்படுத்த வேண்டியிருந்தமை.**

கணினியுடன் தொடர்புடைய வணிகத் தேவைகளின் பகுப்பாய்வு 2017 ஆம் ஆண்டில் செய்யப்பட்டது. அத்தோடு, தற்போதைய வணிகத் தேவைகளுக்கும் அமைப்புக்கும் இடையில் இடைவெளி உள்ளது. அதற்கேற்ப மென்பொருள் தேவை விவரக்குறிப்பும் தயாரிக்கப்பட்டுள்ளது. கூடுதலாக, தொழில்நுட்பம் மற்றும் பயன்படுத்தப்படும் முறைகளில் தெளிவான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதே சமயம், தற்போதைய முறையில் சில மாற்றங்கள் ஏற்பட்டாலும், அந்த மாற்றங்கள் புதிய அமைப்பில் தொடர் நிகழ்வாக இருக்கவில்லை. எனவே, மூன்று அடையாளம் காணப்பட்ட மாற்றங்களுக்கான கோரிக்கை (Change Request) இல்லாமல் கணினியுடன் நேரலையில் செல்வது நடைமுறையில் சாத்தியமற்றது.

**ii. வியாபாரச் செயன்முறையை வரைப்படமாக்கல் மற்றும் செயற்பாட்டுச் சூழலை ஏற்படுத்தல்**

2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் கணினியின் பயனர் பயிற்சியை நடத்திய பிறகு, அமைப்பு மற்றும் அதன் செயல்பாடு குறித்த புரிதல் அந்தந்த வணிக அலகுகளின் பயனர்களுக்கு வழங்கப்படல் வேண்டும். அதற்கமைய, புதிய அமைப்பின் செயல்பாட்டு ஏற்பு அமர்வுகளைத் தொடங்குவதற்கு முன், வணிக நடவடிக்கைகள் மற்றும் செயல்பாட்டுச் சூழலின் வரைப்படமாக்கல் நிறைவடைந்திருத்தல் வேண்டும்.

இது தவிர, அப்போது அமைக்கப்படாமல் இருந்த முறைக்கு ஏற்ப புதிய வாடிக்கையாளர் சேவை பிரிவு அமைக்கப்பட வேண்டும் என்பதும் முக்கியமான தேவையாக காணப்பட்டது.

**iii. புதிய அமைப்பில் நிகழமுடியுமான சட்ட ரீதியான பிரச்சினைகள் மற்றும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் காணப்படும் இணக்கப்பாடு தொடர்பில் ஆய்வொன்றை மேற்கொள்ள வேண்டியிருந்தமை**

புதிய முறை அமலுக்கு வந்த பிறகு நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக, இந்த அமைப்பின் ஒவ்வொரு தொகுதியிலும் எழும் சட்டச் சிக்கல்களை சரியாகக் கண்டறிந்து அதற்கு தீர்வு காண வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இது தவிர, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்திற்கு இணங்குவது குறித்தும், இந்தப் புதிய முறை மற்றும் செயல்கள் குறித்தும் முழுமையான ஆய்வு நடத்தப்பட வேண்டியிருந்தது.

**iv இடைவெளிப் பகுப்பாய்வு மற்றும் செயற்பாட்டுக் கையேட்டை தயாரிக்கும் அவசியப்பாடு**

புதிய அமைப்பில், அனைத்து வேலைப் பாய்ச்சல்களையும் உள்ளடக்கும் வகையில் செயல்பாட்டுக் காட்சிகளை அமைப்பதற்கும், செயல்பாட்டு ஏற்புச் சோதனையை வெற்றிகரமாக நடத்துவதற்கான செயல்பாட்டுக் கையேட்டைத் தயாரிப்பதற்கும் வலுவான தேவை இருந்தது. ஏனெனில் செயல்பாட்டு ஏற்பு ஆவணங்களில் கையொப்பமிட கணினி 100மூ கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

எதிர்காலத்தில், செயற்படுத்தல் ஏற்புச் சோதனை மற்றும் அமைப்பின் பிற செயற்பாடுகள் நிறைவடைந்த பின்னர் கணினி நேரடி செயற்பாட்டு செயல்முறையாக மாறும் போது, இந்த அமைப்பிலிருந்து எதிர்பார்க்கப்படும் அனைத்து நோக்கங்களும் வெற்றிகரமாக முடிக்கப்பட்டு, அனைத்து அங்கத்தவர்களும் பயனடையலாம்.

**03.** அ) 2019 முதல் 2022 வரையிலான கோவிட் 19 நிலைமை காரணமாக, பொருளாதார நெருக்கடி காரணமாக, அந்த நேரத்தில் சில தொழில் வழங்கும் நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன. மேலும் தொழில் வழங்கும் நிறுவனங்களின் கள ஆய்வுகளை மேற்கொள்ளவும் முடியவில்லை. 2022 ஜூலை முதல் கள ஆய்வு நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு செயலற்ற தொழில் வழங்கும் அமைப்புகள் செயல்படுத்தப்படும்.

2022 முதல் 2024.07.31 ஆம் திகதி வரையிலான காலகட்டத்தில், களச் சோதனைகள் மூலம் செயலில் உள்ள தொழில் வழங்குநர்களின் எண்ணிக்கை 44,001 ஆகும்.

ஆ) தொலைபேசி அழைப்புகள், கடிதங்கள் அனுப்புதல் மற்றும் வாக்காளர் பட்டியல் மூலம் உறுப்பினர்களின் முகவரிகளை சரிபார்த்தல் ஆகியவற்றின் மூலம் உரிமை கோரப்படாத பொது நலன்களை பெற்றுக்கொடுக்க சபை மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக, இதுவரை எண்ணிக்கை குறைந்துள்ளது.

இ) உரிமைக் கோரப்படாத இறப்புப் நலன்களைத் தீர்ப்பதில் உள்ள முக்கியப் பிரச்சனை யாதெனில், சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் இணைக்கப்பட்ட ஆவணங்களில் உள்ள குறைபாடுகள் ஆகும், இது பயனாளிகள் கோராததற்கும் வழிவகுத்தது.

ஈ) 2020 ஆம் ஆண்டு தொடங்கிய கொரோனா தொற்று மீண்டும் 2021 ஆம் ஆண்டில் தலைதூக்கியதால், தலைமை அலுவலகத்திற்கு அதிகளவான மக்கள் செல்வது பொருத்தமற்றறுதாக இருந்த காரணத்தினால் அதற்கு மாற்றாக கட்டுபெத்த பகுதி மற்றும் மஹரகம பகுதியில் இருந்து கட்டிடங்கள் 2012.12.01 ஆம் திகதி முதல் வாடகை அடிப்படையில் பெறப்பட்டன. அபாயச் சூழல் முடிவுக்கு வந்ததையடுத்து, வாடகை அடிப்படையில் பெறப்பட்ட இரண்டு கட்டடங்களுக்கான கட்டணம், பணிப்பாளர் குழுவின் ஒப்புதலின்படி, தீர்வு காணப்பட்டு, உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பொதுமக்கள் சேவைகளை தலைமைச் செயலகத்தில் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

வாடகை அடிப்படையில் எடுக்கப்பட்ட 5 கட்டிடங்களில் இயங்கி வந்த சபையின் செயற்பாடுகளை மெஹவர பியஸ கட்டடத்திற்கு கொண்டு வருவதன் மூலம் நிதியத்தின் அங்கத்தவர்களுக்கு கூடுதல் பெறுமதியுடன் கூடிய சிநேகபூர்வ மற்றும் விரைவான சேவையை வழங்க முடிந்துள்ளது.

உ) பிராந்திய அலுவலகங்களை நடாத்துவதற்கு குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட,

- காலி பிராந்திய அலுவலகத்தின் குத்தகை ஒப்பந்தம் 2024.05.21 ஆம் திகதி கையொப்பமிடப்பட்டு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

- 44/5, நாவல அலுவலகத்தின் ஒப்பந்தம் 2023.10.13 ஆம் திகதி கைச்சாத்திட்டு பதிவுசெய்வதற்காக பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

- காசோலைகளை சேகரிக்கும் அலுவலகம் அமைந்துள்ள கோட்டை கட்டிடத்திற்கு அண்மையிலுள்ள கட்டிடத்திற்கான குத்தகை ஒப்பந்தம் 2023.10.23 ஆம் திகதி கையொப்பமிடப்பட்டு சட்டத்தரணியால் அது பதிவுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

- மாத்தறைப் பிராந்திய அலுவலகத்தின் குத்தகை ஒப்பந்தம் 2023.11.13 ஆம் திகதி கையொப்பமிடப்பட்டு பதிவுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளரின் கீழ் இருந்த நாரஹேன்பிட்டி விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் முகாமைத்துவ அறக்கட்டளை 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் கையகப்படுத்தப்பட்டதுடன் அது தொடர்பான குத்தகை ஒப்பந்தங்கள் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டு வருகின்றன. 2023.04.10 ஆம் திகதி விசாரணைக் கடிதங்களை அனுப்பி தொடர்புடைய வரி ஒப்பந்தங்களைத் தயாரித்து அனுப்புமாறு தெரிவித்துள்ளோம். அதற்கமைய, 2023.09.21 ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபையால் பல திருத்தங்கள் செய்யப்பட இருந்ததால், அதைக் குறிப்பிட்டு கடிதம் அனுப்பியுள்ளோம். 2024.01.02 ஆம் திகதி எமது சபையின் தவிசாளர் முதல் கடிதத்தை நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவருக்கு அனுப்பி வைத்தார். பதில் வராததால் மீண்டும் 2024.02.12 ஆம் திகதி கடிதம் அனுப்பப்பட்டது. நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் 2024.03.07 ஆம் திகதி எமக்கு பதில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதில் தாமதக் கட்டணத்திற்கு அபராதம் விதிக்க வேண்டாம் என்ற எங்கள் கோரிக்கை மேல் நிர்வாகத்திற்கு அனுப்பப்பட்டு, உரிய முடிவு கிடைத்த பிறகு, குத்தகை ஒப்பந்தங்கள் ஏற்படுத்திக்கொள்ளபபடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அது தொடர்பில் பதில் கிடைக்காத காரணத்தினால் 2024.04.19 ஆம் திகதி மீண்டும் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

ஊ) நவம் மாவத்தை வாகனத் தரிப்பிடத்தில் 2024.05.31 ஆம் திகதிக்கு 48 நிறுவனங்களுக்கு தரிப்பிட வசதி வழங்கப்பட்டிருந்ததோடு, Indoor 128 மற்றும் Outdoor 229 வசதிகள் செய்யப்பட்டிருந்தன. மேலும் இரவு நேரங்களில் நிறுத்தப்படும் மோட்டார் வாகனங்கள் 11, முச்சக்கர வண்டிகள் 2 மற்றும் துவிச்சக்கர வண்டிகள் 61 க்கான வசதிகளும் வழங்கப்பட்டிருந்தன.

நவம் மாவத்தை வாகன தரிப்பிடத்தை பயன்படுத்தும் வாடிக்கையாளர்களுடன் சரியான எழுத்துப்பூர்வ உடன்படிக்கை செய்து கொள்ளப்படவில்லை, எதிர்காலத்தில் சட்டப் பிரிவின் ஒத்துழைப்புடன் செல்லுபடியாகும் உடன்படிக்கையை தயாரித்து நடைமுறை பயன்பாட்டிற்கு கொண்டு வர எதிர்பார்க்கிறோம்.

2023.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்கு, 2015 முதல் அறவிட வேண்டிய தொகை ரூ. 3,726,584/83 ஆகவும், 2017 முதல் 2023 வரை அறவிட வேண்டிய தொகை ரூ. 1,007,624/83 ஆகவும் காணப்படுகின்றது.

நிலுவைத் தொகையை அறவிடுமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குத் தொடர்ந்து அறிவிக்கப்பட்டும், இதுவரை பதிலளிக்கவில்லை, நிறுவனங்களுக்கு விசேட கவனம் செலுத்தி, விசேட திட்டத்தின் கீழ் நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எ) 'நிபுநாத சவிய' கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் உயர்தரத்தில் சித்தியடைந்த பிள்ளைகளுக்கு தொழிற் திறன்களை வழங்குவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஒரு குறிப்பிட்ட கல்விச் செயற்பாட்டுக்கு அல்லது தொழில் பயிற்சிக்கு சபையால் நிதியளிப்பது மிகவும் அர்த்தமுள்ளதாக இருக்கும் என்பது எமது நம்பிக்கையாகும்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முதல் ஆண்டில், கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தது. ஆனால் எதிர்காலத்தில் அதிகமான விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏ) 2019-2020 காலப் பகுதியில் உள்நாட்டு பொருளாதார நெருக்கடி காரணமாக பணவீக்கம் மற்றும் கோவிட் 19 சூழ்நிலை காரணமாக மருத்துவக் கட்டணம், மருந்துகள் மற்றும் உபகரணச் செலவுகளில் அசாதாரண அதிகரிப்பு காரணமாக பொது மருத்துவச் செலவுகள் அதிகபட்சமாக ரூ. 60,000/-, ஐ செலுத்துவது போதுமானதாக இல்லாத போது விசேட உபகரணங்கள் மற்றும் சரிசெய்தல் உபகரணங்கள் கொடுப்பனவு செலவுகள், என்பன மருத்துவமனை அனுமதிச் செலவின் கீழ் மீளளிப்புச் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

அனைத்து மருத்துவ விலைப் பட்டியல்களும் முழுமையாக முன் கணக்காய்வுக்குப் பின்னர் செலுத்தப்படுவதோடு, அத்தோடு, ரூ. 20,000/-க்கு மேற்பட்ட பட்டியல்கள் முன் கணக்காய்வுக்குப் பிறகு மருத்துவக் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும்.

மூக்குக் கண்ணாடிகளுக்கு அதிகபட்சமாக ரூ. 50,000/-க்கு உட்பட்டு, ஒரு நபருக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே செலவினங்களைத் திரும்பப் பெற முடியும், மேலும் ரூ.50,000/-க்கு மேல் பல் சிகிச்சைக்கு மருத்துவக் குழுவின் முன் அனுமதி பெறுதல் வேண்டும்.

அதிக பெறுமதியுடன்கூடிய போலியான மருத்துவ விலைப்பட்டியல்களை சமர்ப்பித்த தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்பதையும் குறிப்பிடுகின்றேன்.

ஒ) i. சட்ட விதிகளின்படி தற்போதைய நிலை மற்றும் அதன் அடுத்தடுத்த திருத்தங்களின் விளைவாக தற்போதைய நிலை.

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் பிரிவு 5(2) இல், 'அமைச்சரால் சபையின் தவிசாளர் நியமிக்கப்படுவார்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அந்தப் பிரிவு, 'சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியான தவிசாளர், அமைச்சரால் நியமிக்கப்படுவார்' என 1988 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டது. இந்தச் சட்டத்திருத்தத்தின் பிரகாரம் தவிசாளர் பதவியை மாத்திரம் வகித்தவருக்கு, தவிசாளர் பதவிக்கு மேலதிகமாக பிரதம நிறைவேற்று அதிகாரி பதவியும் வழங்கப்பட்டுள்ளது.

ii இந்த விடயம் தொடர்பாக, 2016 ஆகஸ்ட் 26 ஆம் திகதி நடைபெற்ற பொது தொழில் முயற்சிகள் குழுக் கூட்டத்தில் பின்வரும் பரிந்துரை செய்யப்பட்டது.

'நிதி நிறுவனமொன்றின் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் தவிசாளர் ஆகிய இரு பதவிகளையும் ஒரே நபர் வகிப்பது ஏற்புடையதல்ல என்றும், இது தொடர்பில் சட்டத்தில் திருத்தம் கொண்டு இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டும் என்றும் குழு கருத்து தெரிவித்தது.'

iii. பொது தொழில் முயற்சிகள் குழுவின் பரிந்துரை தொடர்பாக சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

சபை இதை விரிவாக ஆய்வு செய்து, மேற்படி பரிந்துரையின்படி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் பிரிவு 5(2) ஐத் திருத்துவதற்கு பின்வரும் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அ) சபையின் தவிசாளர் பதவி மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி பதவியை ஒரே நபர் வகிக்காமல் இருவர் வகிக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் செய்தல்.

ஆ) தற்போது சபையின் பொது முகாமையாளர் பதவியில் இருப்பவரை சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக நியமித்தல்.

iv. சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கு சபையினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம் கடந்த 1993 ஆம் ஆண்டு திருத்தப்பட்டு, அதன்படி 2016 ஆம் ஆண்டிற்குள் சட்டத்தின் பல பிரிவுகளில் திருத்தம் செய்ய முன்மொழியப்பட்டது.

மேற்கூறிய பரிந்துரையைப் பெற்ற பின்னர், 2016 ஆம் ஆண்டு முதல், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை உள்ளடங்கும் பொறுப்பான அமைச்சரும், பொறுப்பான அமைச்சும் பல சந்தர்ப்பங்களில் மாறியுள்ளது, இதற்கிடையில், பதவிகளில் இருந்த பணிப்பாளர்கள் மற்றும் தவிசாளர்கள். பல சந்தர்ப்பங்களில் மாற்றமடைந்துள்ளனர்.

பொது தொழில் முயற்சிகள் குழுவின் பரிந்துரையின்படி, சட்டத்தின் பிரிவு 5(2) ஐ திருத்துவதற்கான முன்மொழிவு உள்ளிட்ட திருத்தம் 2021.07.26 ஆம் திகதி சபை கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. மேற்படி பணிப்பாளர் சபையின் தீர்மானம் மற்றும் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் 2021.08.11 தேதியிட்ட கடிதம் மூலம் நிதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டது.

v. நிதியமைச்சின் பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அழைப்பின் பேரில் 2021.11.23 ஆம் திகதி நிதியமைச்சில் இந்த முன்மொழியப்பட்ட திருத்தங்கள் பறறிய கலந்துரையாடல் நடைபெற்றதுடன், பெறப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் தொடர்புடைய முன்மொழிவுகள் மீண்டும் திருத்தப்பட்டன.

vi. அதற்கிணங்க, உத்தேச திருத்தம் 2022.05.30 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டது. அங்கு, அவசரத் தேவையாகக் கருதி பங்களிப்புகள் மற்றும் மாதாந்த அறிக்கைகளை மின்னணு சமர்ப்பித்தல் தொடர்பான உத்தேச திருத்தங்களுக்கான விதிமுறைகளைத் தயாரிப்பதற்கான அறிவுறுத்தல்கள் பெறப்பட்டன. மேலும் அந்த நேரத்தில் நாட்டில் நிலவும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, மற்ற முன்மொழியப்பட்ட திருத்தங்களை பரிசீலிப்பதை 06 மாத காலத்திற்கு ஒத்திவைக்க பணிப்பாளர் சபை முடிவு செய்தது.

vii. 2022.06.27 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில், மேற்கூறிய சில திருத்தங்களுக்கு விதிமுறைகளைத் தயாரிப்பதற்கு ஒப்புதல் பெறப்பட்டு, அந்த முடிவு திறைசேரிச் செயலாளருக்கு அனுப்பி தேவையான ஒழுங்கு விதிகளை தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறு 2022.08.04 மற்றும் 2022.12.14 ஆம் திகதிய கடிதங்கள் மூலம் கோரப்பட்டது. அதற்கமைய, 2022.12.22 ஆம் திகதி ஏற்புடைய ஒழுங்கு விதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டன.

viii. 2022.12.19 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில், நிதி அமைச்சரின் 2023 வரவுசெலவுத்திட்ட உரையில்சேர்க்கப்பட்டிருந்தசபைபற்றிமுன்மொழியப்பட்டதிருத்தங்களைஉள்ளடக்கிமீண்டும்தயாரிக்கப்பட்ட உத்தேச சட்டத் திருத்தங்களுக்கு பணிப்பாளர் சபை ஒப்புதல் அளித்தது. சட்டத்தின் பிரிவு 5(2) ஐ திருத்துவது தொடர்பில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அறிவுறுத்தல்களைப் பெற்று அந்த அறிவுறுத்தல்களுக்கு இணங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க பணிப்பாளர் சபை முடிவு செய்துள்ளது. அந்தத் தீர்மானம் தொடர்பில் தவிசாளரினால் 2022.12.21 ஆம் திகதி நிதி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 2022.12.19 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட உத்தேச திருத்தங்கள் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு, அந்தத் திருத்தங்கள் தொடர்பான பூர்வாங்க வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

ix. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத் திருத்தத்துடன், பொது தொழில் முயற்சிகள் குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரையின்படி, திருத்தங்களைச் செயல்படுத்துவது குறித்து 2023.04.24 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில், இது தொடர்பான கருத்துகள் மற்றும் அறிவுறுத்தல்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. அது தொடர்பான மேலதிக பணிகளை மேற்கொள்வது குறித்து நிதியமைச்சின் செயலாளரிடம் எழுத்துப்பூர்வமாக பெறப்பட்டு மேல் நடவடிக்கை எடுப்பதற்கு சபையினால் முடிவெடுக்கப்பட்டது.

x. அதற்கமைய, 2023.04.24 ஆம் திகதி நடைபெற்ற சபை கூட்டத்தில், மேற்படி விடயம் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானம் மற்றும் உத்தேச திருத்தங்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு 2023.05.02 ஆம் திகதிய கடிதம் மூலம் சபையின் தவிசாளரினால் நிதியமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

xi. 2023.05.15 ஆம் திகதிய கடிதத்தின்படி, திறைசேரி பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், திறைசேரி சட்ட விவகாரங்கள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகத்திற்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் தலைவருக்கு நகலுடன் அனுப்பிய கடிதத்தின்படி, சட்ட வரைஞர் திணைக்களம் தற்போது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை சட்டத்தை திருத்தம் செய்துள்ள பூர்வாங்க வரைவில் சட்டப்பிரிவு 5(2) க்கான முன்மொழியப்பட்ட திருத்தத்தை சேர்ப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இது தொடர்பான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தச் செயன்முறையின் முன்னேற்றம் குறித்து சபையினால் தொடர்ந்தும் பின்னூட்டம் செய்யப்பட்டு வருகின்றது என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

ஓ) இந்த வசதிகளுக்கு அனுமதி பெறுவதில் உள்ள சிரமங்கள், மூலதனச் செலவில் காணப்படும் எல்லைகள், புதிய நியமனங்களில் உள்ள சிரமம், தற்போதுள்ள சம்பள அளவுகளின் கீழ் தகுதி வாய்ந்த மற்றும் திறமையான அதிகாரிகளை பணியமர்த்துவதில் உள்ள சிரமம் மற்றும் இது தொடர்பான பிற உள்கட்டமைப்புகளை வழங்கும் பணி கடினமாக உள்ளது. இதன்படி, இந்த வசதி தற்போது அரச வங்கியான மக்கள் வங்கியினால் எவ்வித கட்டணமும் இன்றியும் மேலதிக பணியாளர்களை நியமிக்காமலும் பெற்றுக் கொள்ளப்படுவதுடன், இத்திட்டம் தொடர்ந்தும் அவ்வாறே செயற்படுகின்றது.

ஔ) நிதியமைச்சின் பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் தலையீட்டின் ஊடாக குறித்த நிறுவனத்துடன் வட்டி நிலுவைத் தொகையை அறவிடுவது தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றதுடன், நிறுவனத்தின் தற்போதைய நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்த வட்டித் தொகையை தீர்ப்பதற்கு சிறிது காலம் தேவைப்படும் என்றும் அத்தோடு சம்பந்தப்பட்ட நிரல் அமைச்சகத்துடன் கலந்தாலோசித்து ஒரு திட்டம் முன்வைக்கப்படும் என்றும் கலந்துரையாடலில் கலந்துகொண்ட நிறுவனத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். ஆனால், இதுவரை இந்த நிலுவைத் தொகையை செலுத்துவதற்கான புதிய திட்டத்தை அந்நிறுவனம் முன்வைக்கவில்லை.

அதன்பிறகு, இந்தப் பணத்தை மீட்பது குறித்து நிறுவனத்திற்கு எழுத்து மூலமாகவும், வாய்மொழியாகவும் அவ்வப்போது தெரிவிக்கப்பட்டு, இனிவரும் காலங்களில் பொது தொழில் முயற்சிகள் திணைக்களம் மீண்டும் தலையிட்டு பணத்தை மீட்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் குறிப்பிடுகின்றேன்.

க) இந்த நிறுவனத்தை கலைக்க நீதிமன்றம் கடந்த 2008 ஆம் ஆண்டு உத்தரவு பிறப்பித்த நிலையில், இதுவரை கலைப்பாளர் நியமிக்கப்படவில்லை.

பின்னர், இந்த நிறுவனத்தின் கடனாளி தரப்பினர், நீதிமன்ற உத்தரவின் பேரில், பிணைய வழக்கின் வரவுக்கு 42.6 மில்லியன் ரூபா தொகையை வைப்புச் செய்துள்ளனர். அந்தத் தொகையிலிருந்து ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிக்கு ஏதேனும் உரிமைகள் இருப்பின் அந்தத் தொகையை அறவிடுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து 2024.03.12 ஆம் திகதி சட்டமா அதிபருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

ச) 1.2 (அ) பதில் ஏற்புடையதன்று.

த) ஊழியர் சேமலாப நிதியில் பதிவு செய்யப்படாத நிறுவனங்களைச் சரிபார்த்த பிறகு, 2015 ஆம் ஆண்டுக்கு முன்பு XX மற்றும் ZZ விநியோகிக்கப்பட்டுள்ளதோடு, 2015 ஆம் ஆண்டின் பிறகு AX – WX இலக்கங்கள் வழங்கப்படுவதோடு, அவ்வாறு அறவிடப்படும் தொகை அந்தக் கணக்கின் கீழ் பேணப்படுகின்றன. மேலும், அந்த நிறுவனங்கள் ஊ.சே.நி. பதிவு செய்யப்படும் வரை அங்கத்தவர் நலன்களும் அதே எண்ணின் கீழ் செய்யப்படுகின்றது.

அந்தக் கணக்குகளின் கீழ் அறவிடப்படும் அனைத்துக் கட்டணங்களும் அந்தந்த உறுப்பினர் கணக்குகளில் வரவு வைக்கப்படும். அதே சமயம் வழக்கமான தொழில் வழங்குநர் கணக்குகளின் கீழ் பணம் செலுத்திய அங்கத்தவர்களுக்கு அந்த அங்கத்தவர்களுக்குத் தகுதியான அனைத்து சலுகைகளும் சலுகைகளும் வழங்கப்படும்.

மேலும், அந்த எண்களின் கீழ் கணக்கில் உள்ள பணம் தொடர்பாக ஊ.சே.நி. அடையாளம் காணல் தொடர்ந்தும் செய்யப்படுகிறது மற்றும் அதற்கு பின்வரும் செயன்முறைகள் பின்பற்றப்படுகின்றன.

i ஊ.சே.நி. இன் கீழ் நிறுவனத்தைப் பதிவுசெய்த பிறகு, சரியான தொழில் வழங்குநர் எண்ணைக் கண்டறியும் முறையை நாங்கள் செயல்படுத்துவோம், மேலும் பிராந்திய அலுவலகங்கள் மற்றும் தொழில் வழங்குநர்களின் கோரிக்கைகளின்படி, தொடர்புடைய எண்களின் கீழ் செலுத்தப்பட்ட பணம் பற்றிய தகவல் ஊ.சே.நி. க்கு அனுப்பப்படும்.

ii ஒவ்வொரு பிராந்திய அலுவலகமும் அந்தந்த பிராந்திய அலுவலகப் பகுதியில் அமைந்துள்ள தொழில் அலுவலகங்களுக்கு அந்தந்த எண்களின் கீழ் பணம் செலுத்தும் தொழில் வழங்கும் நிறுவனங்களைப் பற்றிய தகவல்களைக் கொண்ட அறிக்கையை வழங்கும். அந்த எண்களுக்கு ஊ.சே.நி. எண்களைப் பெறுவதே இதன் நோக்கமாகும்.

டி.எல்.பி. ரோஹன அபயரத்ன
தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி

වාර්ෂික වාර්තාව
வருடாந்த அறிக்கை
ANNUAL REPORT
**2023**


## EMPLOYEES' TRUST FUND BOARD

19 - 23 Floors, "MEHEWARA PIYESA",
P.O.Box 807, Kirula Road, Narahenpita, Colombo 05.
Tel: 011 7747201 | Fax: 011 2503917
Email: finance@etfb.lk
Web: www.etfb.lk